# தாரிகைப் பெண்ணே!

கலைவாணி சொக்கலிங்கம்

## நூல் குறிப்பு


| | |
|---|---|
| • நூல் தலைப்பு | தூரிகைப் பெண்ணே! |
| • ஆசிரியர் | கலைவாணி சொக்கலிங்கம் |
| • மொழி | தமிழ் |
| • முதற் பதிப்பு | மே, 2012 |
| • உரிமை | ஆசிரியருக்கு |
| • தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| • நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| • அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| • மொத்தப் பக்கங்கள் | 444 |
| • பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 200.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.

அச்சிட்டோர் கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.


# தூரிகைப் பெண்ணே!

# தூரிகைப் பெண்ணே!

1

அதிகாலை நேரத்தின் குளிர்ச்சியின் கதகதப்பில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள் திலோத்தமா. சாம்பல் நிறக் கம்பளிப் போர்வை கழுத்து வரை மூடப்பட்டிருக்க, அவளது நிலவு முகம் மட்டும் பளிச்செனத் தெரிந்தது. உறக்கத்திலும் புன்னகையோடு இருக்கும் குழந்தை முகம்.

மின்விசிறியின் சுழற்சிக்கேற்ப நெற்றியில் புரளும் கார் கூந்தல். சரி செய்யப்படாமலே வில்லாய் வளைந்த புருவங்கள். ஒப்பனையற்ற களங்கமற்ற மாசு மரு இல்லாத பளிங்கு முகம். கீழுதட்டின் அருகே சின்னதாய் ஒரு கடுகு மச்சம். சின்னஞ்சிறு உதடுகள்.

தூக்கத்திலேயே மலர்ந்த புன்னகையில் ஒட்டியிருந்த இதழ்கள் பிரிந்து வரிசையாய் இருந்த வெண்முத்துப் பற்களைக் காட்டின. உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

"தேங்க்யூ ஸார்! தேங்க்யூ ஸோ மச். தேங்க்யூ ஸார்."

கட்டிலின் அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்து மேஜை விளக்கின் ஒளியில் பரிட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த திலோத்தமாவின் தம்பி விஷ்ணு தமக்கையின் குரலில் கலைந்து திரும்பினான்.

திலோத்தமா கண்களைத் திறவாமலேயே முகம் நிறைந்த பெருமிதத்துடன் அதே வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டிருக்க, இருக்கையை விட்டு எழுந்தான். கட்டிலை நெருங்கியவாறே குரல் கொடுத்தான்.

"அக்கா! அக்கா!"

"ம்..." - மெல்லப் புரண்டு படுத்தாள்.

"என்னக்கா! யாருக்குத் தேங்க்யூ சொல்ற? அதுவும் இவ்வளவு காலையில...!" - தம்பியின் குரலில் உறக்கம் கலைந்து கண்களைத் திறந்தவள், சுற்றுப்புறத்தைப் பார்த்துவிட்டு விசுக்கென எழுந்து அமர்ந்தாள்.

"என்னக்கா?"

"அவங்க எல்லாம் எங்கே?" - என்றவாறு தன் கையால் கழுத்தை வருடினாள். பதட்டமானான் விஷ்ணு.

"அக்கா! என்னாச்சு? ஏதும் கெட்ட கனவு கண்டியா?" - தோளைப் பற்றி அசைத்துக் கொண்டே தம்பி கேட்க, திடுக்கிட்டு விழித்தாள். இப்போது இது தன் அறை, இது தங்களது வீடு என்பது புரிபட, அவஸ்தையாய் நெற்றியைத் தேய்த்தவாறே தம்பியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.



"ஆமா! கனவுதான். ச்சே!"

"என்ன கனவுக்கா?"

"தம்பி! ரொம்ப அருமையான கனவுடா. இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் புல்லரிக்குது. ச்சே! எவ்வளவு கூட்டம் தெரியுமா? அவ்வளவு பேரும் கைதட்டினாங்க. நான் மேடையில ஏறி பர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கினேன். எனக்கு மெடல்கூடத் தந்தாங்க, தெரியுமா?"

"எதுக்கு? நீ வரைஞ்ச பெயிண்டிங்குக்கா?"

"ஆமாண்டா! என்னோட படங்களைத்தான் தேர்ந்தெடுத்தாங்க."

"கனவுலதானே!" - விஷ்ணு கேட்க, சட்டென முகம் வாடினாள்.

"என்னடா தம்பி! இப்படிக் கேட்கிற?"

"பின்னே! கனவுல வர்றதெல்லாம் உண்மை ஆகிடாதுக்கா. நம்ம அடி மனசுல உள்ள ஆசைகள்தான் கனவா வருமாம். ஒரு புக்ல படிச்சேன்."

"அப்போ... நான் கண்ட கனவு பலிக்காதா?"

"பலிக்கும்... உன்னைவிட மோசமா வரையுறவங்க உன் கூடப் போட்டியில இருந்தா நிச்சயமா உன் கனவு பலிக்கும். இல்லேன்னா காம்பெடிஷன்ல நீ மட்டும் கலந்துக்கிட்டாலும் பலிக்கலாம்."

"விஷ்ணு! என்னடா இப்படிச் சொல்றே? நான் வரைஞ்ச படமெல்லாம் அவ்வளவு மோசமாவா இருக்கு?"

"படம் மட்டும் நல்லா இருந்தா போதுமாக்கா?"

"வேற என்ன?"

"அக்கா! நீ எல்லாப் படமும் நல்லாத்தான் வரைஞ்சிருக்க. ஆனா நீ தேர்ந்தெடுத்த தீம்தான் சரியில்ல!"

"ஏன்?"

"அக்கா... இது கம்ப்யூட்டர் காலம். ஏதாவது மாடர்ன் ஆர்ட் பண்ணினா ஜெயிக்க சான்ஸ் இருக்கு. நீ என்னன்னா...!"

"ஏன்டா! நான் என்ன வேண்டாத படமா வரைஞ்சிருக்கேன். எல்லாமே அர்த்தமுள்ள படங்கள்தான். சமுதாயத்தோட ஒன்றிப்போன கருத்தையும் சொல்லணும்... அதே சமயம் நாம சொல்லாமலே அந்தப் படத்தோட பொருள் புரியணும். இந்தப் போட்டியோட முக்கிய விதிமுறையே இதுதான். அதனால நான் வரைஞ்சதுதான் சரி. நிச்சயமா நான் ஜெயிப்பேன். அதுவும் முதல் பரிசு எனக்குத்தான்!" என்றாள் உறுதியாய்.

காபியின் மணம் வீச, அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் சகுந்தலா. கையில் காபிக் கோப்பை. மகனுக்காகக் கொண்டு வந்தவள், தன் மகளும் விழித்திருப்பதைக் கண்டு புன்னகைத்தாள்.

"அடடா! நீயும் எழுந்திட்டியாம்மா! நான் தம்பி மட்டும்தான் படிச்சிட்டு இருக்கான்னு அவனுக்கு மட்டும்தான் காபி கொண்டு வந்தேன்."

"பரவாயில்லம்மா... தம்பிக்குக் கொடுங்க. நான் இன்னும் பிரஷ் பண்ணல."

"சரி... பல்லைத் தேய்ச்சிட்டு வா. விஷ்ணு... இந்தாப்பா காபி!"



"தேங்க்யூம்மா!" - என்றவாறு வாங்கிக் கொண்டான்.

"திலோம்மா! நைட் எத்தனை மணிக்குத் தூங்குன? எல்லாத்தையும் வரைஞ்சி முடிச்சிட்டியா?" - கேட்ட அன்னையை நோக்கிச் சத்தமாய்ச் சிரித்தான் விஷ்ணு.

"அம்மா! உங்களுக்கு விஷயமே தெரியாதா?"

"என்னடா?"

"அக்கா நைட்டே படம் வரைஞ்சி முடிச்சு அதை ஆடிட்டோரியத்துல கொண்டு போய் வெச்சு எல்லாரும் பார்த்து கடைசியா ஜட்ஜ் நம்ம அக்காவுக்கு முதல் பரிசு கொடுத்து கோல்டு மெடல் எல்லாம் போட்டார். எல்லாரும் கைதட்டினாங்க. அக்கா தேங்க்யூ... தேங்க்யூன்னு சொல்லிட்டே இருந்தாள்."

"என்னடா சொல்ற? திலோம்மா! இவன் என்ன சொல்றான்?" குழப்பமாய்க் கேட்ட சகுந்தலாவைத் தோளோடு அணைத்துத் தன் அறையின் ஓரமாய் இருந்த சிறு அறைக்குள் அழைத்துச் சென்றாள் திலோத்தமா. அறையின் விளக்கைப் போட்டதும் அன்னையின் விழிகள் விரிந்தன.

பெரிது பெரிதாய் நான்கு போர்டுகள். அறை முழுக்க வண்ணம் தீட்டும் தூரிகைகளும், வண்ணக் கலவைகளும், நின்று கொண்டே வரைவதற்கு வசதியான தடுப்புடன் கூடிய மேஜைகளும் இருக்க, அவற்றைக் கடந்து சுவரோரமாய்ச் சாய்த்து நிறுத்தி வைத்திருந்த ஓவியங்களை அன்னையிடம் காட்டினாள் திலோத்தமா.

"பாருங்கம்மா... எப்படி இருக்கு?" - பெருமையைக் காட்டிய மகளை ஒருமுறை பார்த்துவிட்டு அவள் வரைந்து

வைத்திருந்த ஓவியங்களை ரசனையாய் நோக்கினாள் சகுந்தலா.

வற்றிய வயிறோடு மெலிந்த தேகத்தோடு பசியில் அழும் குழந்தை. குருவிக் கூட்டிற்குள் வசிக்கும் இரண்டு குருவிக் குஞ்சுகள் உணவிற்காக வாயைத் திறந்து வைத்துக் கொண்டு கத்தும் காட்சி. உடல் முழுக்கக் கந்தலான ஆடையோடு கையில் அலுமினியப் பாத்திரத்தோடு கண்களில் பசியோடு ஒட்டிய வயிற்றோடு தெருவில் பிச்சை கேட்கும் முதியவர்.

ஓட்டை விழுந்த குடிசையில் அடுப்பில் பூனை படுத்திருக்க, அருகே காலியான பாத்திரங்கள் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்க, தாயை நோக்கிப் பாலுக்காக அழும் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு வற்றிய தேகத்தோடு ஒட்டிய மார்போடு தாயும் கண்ணீர் சிந்தும் காட்சி.

நான்கு படங்களையும் மாறி மாறிப் பார்த்த சகுந்தலாவின் கண்கள் கசிந்தன. பசியின் கொடுமையை இதைவிட அற்புதமாய்ச் சொல்ல முடியுமா? அந்தக் குழந்தையின் முகம், அதில் தெரிந்த பசி, அந்தக் கண்களில் வழியும் கண்ணீர், ஏக்கம், அந்தத் தாயின் முகத்தில் தெரிந்த ஏழ்மை, வருத்தம், அனைத்தும் வெகு தத்ரூபமாய் வரைந்திருந்தாள் திலோத்தமா.

உடல் முழுக்கப் புல்லரிக்க, கண்களில் கசிந்த கண்ணீரோடு தன் மகளிடம் திரும்பினாள்.

"திலோம்மா...!"

"என்னம்மா! எப்படியிருக்கு? நல்லா இருக்கா?"



"அற்புதமா... ரொம்ப அற்புதமா இருக்கு. எப்படிடா இவ்வளவு அருமையா வரைஞ்ச? அப்படியே... நேர்ல பார்க்கிற மாதிரியே..." - அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டை அடைத்தது.

"நிஜமாவே நல்லா இருக்காம்மா?"

"நான் என்ன சும்மாவா சொல்றேன்? கண்டிப்பா இந்தப் படத்தைத்தான் சிறந்த படமா தேர்வு பண்ணுவாங்க. நாலு படமும் அவ்வளவு அருமையா இருக்கு. அதிலயும் இந்த நாலாவது படம்... ப்பா! பார்க்கும்போதே கண்ல கண்ணீர் வந்திடுது."

"தேங்க்யூம்மா. எனக்கும் ரொம்பத் திருப்தியா இருக்குதும்மா. ஆனா தம்பிதான் ரொம்பக் கிண்டல் பண்றான்."

"அவன் கிடக்கிறான் சின்னப் பயல். அவனுக்கு என்ன தெரியும்? இதையெல்லாம் அனுபவித்து உணரும் வயது அவனுக்கு இன்னும் வரலையே!"

"அம்மா! இந்தப் படத்தைப் பார்த்தா உங்களுக்கு என்ன தோணுது?" - ஆர்வமாய்க் கேட்டாள் திலோத்தமா. சகுந்தலா அந்தப் படங்களைக் கூர்ந்து பார்த்தாள்.

"பசி எவ்வளவு கொடுமையானதுன்னு புரியுது. ஆண், பெண், குழந்தை, பறவையினம், விலங்கினம் எல்லாருக்கும் பொதுவான உணர்வு இந்தப் பசிதான்னு புரியுது. பசியைவிடக் கொடுமையான விஷயம் வேற எதுவுமே இல்லன்னு தோணுது!" - என்ற தாயை உற்சாகமாய்க் கட்டிக் கொண்டாள்.

"வாவ்! தேங்க்யூம்மா! இந்தப் பதிலைத்தான் எதிர்பார்த்தேன். நீங்க சொன்ன பதிலை எல்லாரும் உணர்ந்தா போதும். குறிப்பா இதைப் பார்வையிட வரப்போகிற ஓவியர் கிருஷ்ணன் உணர்ந்தா போதும். எப்படியும் பர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கிடுவேன்."

"நிலோம்மா! அந்த ஆள் பெரிய ஓவியரா?"

"ஆமாம்மா! அவர் வரையுற ஓவியமெல்லாம் ரொம்பப் பிரபலம். அப்படியே நேர்ல நிற்கிற மாதிரியே வரைவார். அவரை ஒருமுறையாவது நேர்ல பார்க்க மாட்டோமான்னு எங்க காலேஜே ஏங்குது. ரொம்பக் கஷ்டப்பட்டு அவரைக் கூட்டிட்டு வர ஏற்பாடு பண்ணியிருக்கார் எங்க பிரின்ஸிபால்."

"வயசுப் பையனா? வயதானவரா?"

"யாருக்குத் தெரியும்? அவருடைய ஓவியம்தான் வெளியே தெரியுமே தவிர, அவரோட முகம் யாருக்குமே தெரியாது. ஆனா இன்னிக்குத் தெரிஞ்சிடும்."

"சரிடா! நீ சீக்கிரம் போகணும்னு சொன்னியே! நான் போய்ச் சமையல் வேலையைக் கவனிக்கிறேன். நீ குளிச்சிட்டுக் கிளம்பு. இன்னிக்கு சூரிதார் வேண்டாம். நல்லதா ஒரு புடவை எடுத்துக் கட்டிக்கோ!"

"இன்னிக்குக் கண்டிப்பா புடவைதான் கட்டணும்ன்றது எங்க மேடத்தோட ஆர்டர். அதனால இன்னிக்கு கட்டிகிட்டுப் போகப் புடவை எடுத்து வெச்சிட்டேன். அம்மா! அப்பா எழுந்ததும் சொல்லுங்க. இந்தப் படத்தை எல்லாம் காட்டிட்டுப் பேக் பண்ணணும்."

"ஆமா! எல்லாம் பெரிசா இருக்கே! எப்படி எடுத்துட்டுப் போறது?"



"ஆட்டோவில எடுத்திட்டுப் போகணும்மா. எட்டு மணிக்கெல்லாம் ரெடியாகணும். நான் போய்க் குளிச்சிட்டு வந்திடுறேன்.

"ம்.... சரிடா! நானும் சமையல் வேலையைக் கவனிக்கிறேன்." - என்றவாறு வெளியே வர, தூக்கக் கலக்கத்தோடு எதிரே வந்தார் ராகவன்.

"குழந்தைங்க எழுந்தாச்சா சகுந்தலா?"

"எப்பவோ எழுந்தாச்சுங்க. சின்னவன் படிச்சிட்டு இருக்கான். பெரியவ குளிக்கப் போயிருக்கா."

"சரி... எனக்குக் காபி கொடேன்."

"இதோ தர்றேங்க!" - என்றவாறு பக்கவாட்டில் இருந்த சமையலறைக்குள் நுழைய, ராகவன் பிள்ளைகளின் அறைக்குள் நுழைந்தார். விஷ்ணு கண்களை மூடிக்கொண்டு, மனப்பாடம் செய்த பாடத்தை ஒப்பித்துப் பார்த்துக் கொண்டிருக்க, அவனைக் கலைக்க விரும்பாமல் மகளின் வரையும் அறைக்குள் நுழைந்தார்.

இரவு வெகு நேரம்வரை வரைந்து கொண்டிருந்தாளே! வரைந்து முடித்து விட்டாளா? யோசனையாய் அறைக்குள் பார்வையைப் படரவிட்டவர் பிரமித்துப் போய் நின்றார். மகளின் கைவண்ணத்தில் ஜொலித்த காட்சிகள் நெஞ்சை உருக்கின.

"கல்லூரியின் இறுதியாண்டில் நடக்கும் ஓவியப் போட்டிப்பா. இதுல மட்டும் நான் ஜெயிச்சிட்டாப் போதும். ரொம்பப் பிரபலமாகிடும். பெரிய பெரிய தொழிலதிபர்கள் எல்லாம் வர்றாங்க. அதனால பத்திரிகையில போட்டோ வெல்லாம் வரும். முதல் பரிசு ஐம்பதாயிரம் ரூபாய்ப்பா.

"செகண்ட் பிரைஸ் இருபதாயிரம் ரூபாய். இதையெல்லாம் விடப் பெரிய விஷயம் எங்க ஓவியத்தைப் பார்வையிட யார் வர்றாங்க தெரியுமா? தி பேமஸ் கிருஷ்ணன் வர்றாருப்பா. அவர் கையால பரிசு வாங்கக் கொடுத்து வெச்சிருக்கணும். நான் எப்படியும் ஜெயிச்சிடுவேன்.

"அவர் கையால பிரைஸும் வாங்கிடுவேன். நீங்களும் அம்மாவும் கண்டிப்பா வந்திடணும். விஷ்ணுவுக்கு இந்த நேரம் பார்த்து எக்ஸாம் இருக்கு. இல்லாட்டி நம்ம மொத்த பேமிலியும் வந்திருக்கும். நீங்க எப்படியாவது கம்பெனிக்கு லீவு சொல்லிடுங்கப்பா." - நான்கு நாட்களுக்கு முன்பிருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறாள். அவளது கனவு இன்று மெய்ப்படப் போகின்றது.

இந்தப் படத்தில் உயிர்த் துடிப்பு இருக்கின்றது. தெளிவாய் - சிறு குறையும் இல்லாமல் மிகத் தெளிவாய் வரைந்திருந்தாள் திலோத்தமா. நிச்சயம் இவை சிறந்த ஓவியமாகத் தேர்ந்தெடுக்கப்படும். மனம் நெகிழ அதை நெருங்கினார்.

மெல்ல வருடினார். வர்ணங்கள் நன்றாய் உலர்ந்திருக்க, கீழே அமர்ந்து படங்களை எடுத்து வைத்து டேபிளின் மீதிருந்த பாலிதீன் பேப்பரை விரித்து அவற்றைப் பாதுகாப்பாய்ச் சுற்றிப் பொதிந்து கொண்டிருந்த போது கையில் காபியோடு வந்தாள் சகுந்தலா.

"என்னங்க பண்றீங்க?"

"இதை யெல்லாம் பத்திரமா கொண்டு போகணும் சகுந்தலா. தூசியோ தண்ணியோ பட்டுடக் கூடாதில்ல. அதான் பேக் பண்ணிட்டு இருக்கேன்."



"சரி... காபியக் குடிச்சிட்டுப் பண்ணுங்க."

"வேணாம். காபி சிந்தினாப் போச்சு. புள்ள பட்ட கஷ்டமெல்லாம் வீணாகிடும். காபிய எடுத்துட்டுப் போயிடு. நான் இதைக் கட்டி வெச்சுட்டு வந்து குடிக்கிறேன்."

"சரிங்க..." - மனைவி விலகியதும் கவனமாய் நான்கு படங்களையும் பாலிதீன் கவரால் சுற்றிக் கட்டி முடிக்கும்போது தலைக்குக் குளித்துவிட்டு வந்தாள் திலோத்தமா.

"அப்பா! எப்போ எழுந்தீங்க?"

"நீ குளிக்கப் போனதும் வந்திட்டேம்மா. இதோ எல்லாம் பத்திரப்படுத்தியாச்சு."

"அப்பா! படமெல்லாம் எப்படியப்பா இருந்தது?"

"ரொம்ப அருமையா இருக்குதும்மா. தத்ரூபமா இருக்குது. அனுபவிச்சு உணர்ந்து வரைஞ்சிருக்கம்மா. நேர்ல பார்க்கிற காட்சி மாதிரியே இருந்தது."

"நான் ஜெயிச்சிடுவேனாப்பா?"

"இது என்னம்மா கேள்வி? ஜெயிச்சுடுவேன்னு தன்னம்பிக்கையோட சொல்லு!"

"ஜெயிச்சிடுவேம்ப்பா. நிச்சயமா ஜெயிச்சிடுவேன்."

"ம்... இந்த நம்பிக்கைய மட்டும் எப்பவும் விட்டுடாதே!"

"சரிப்பா...!"

"அப்புறம்... திலோம்மா! போட்டியில எத்தனை பேர் கலந்திருக்காங்க?"

"மொத்தம் பதினைஞ்சு பேருப்பா."

"எல்லாருமே உன்னைப் போல நல்லா வரைவாங்களா?"

"ம்... வரைவாங்கன்னு நினைக்கிறேன். நான் பார்த்ததில்ல!"

"திலோம்மா! வெற்றியோ தோல்வியோ அதை நாம ஈஸியா எடுத்துக்கணும். வெற்றியில ரொம்பக் குதிச்சிடவும் கூடாது. தோல்வியைக் கண்டு துவண்டும் போயிடக்கூடாது."

"சரிப்பா!"

"இதை அப்பா எதுக்காகச் சொல்றேன்னு புரியுதா?"

"புரியுதுப்பா. ஆனா நிச்சயம் நான் ஜெயிப்பேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு."

"இதே நம்பிக்கையில படுத்து அக்கா கனவுலயே மெடல் வாங்கிட்டாப்பா!" - என்றவாறு வந்து நின்றான் விஷ்ணு.

"என்ன... கனவுலயா?"

"ஆமாப்பா! கனவு கண்டு புலம்பி என் படிப்பையே கெடுத்திட்டா."

"டேய்! போதும்டா. இவர் பெரிய மாமேதை. இவரோட படிப்பை நாங்க கெடுத்துட்டோமாம். அப்பா! இவன் ஒன்னும் படிக்கிறதுக்காகக் காலங்கார்த்தால எழுந்துக்கல..."

"பின்னே?"

"அம்மா போடுற பில்டர் காபிய குடிக்கிறதுக்காகத்தான் எழுந்துக்குறான். இதுவரைக்கும் மூனு காபி குடிச்சிட்டான்."

"அடிப்பாவி! நீ மட்டும் நேத்து நைட் முழுக்கப் படம் வரையுறேன்னு சொல்லி நாலஞ்சு காபி குடிச்சியே! அதை நான் கணக்குப் பண்ணினேனா?"



"விஷ்ணு! அக்காவை அப்படி யெல்லாம் சொல்லக் கூடாது."

"போங்கப்பா! நீங்க எப்பவுமே இவளுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவீங்க."

"இல்லடா கண்ணா! எனக்கு ரெண்டு பேருமே ஒன்னுதான்."

"நான் நம்ப மாட்டேன். அவ கேட்டவுடனே ரூமை ரெண்டாப் பிரிச்சி இவளுக்காகத் தனியா ட்ராயிங் ரூம் ரெடி பண்ணிக் கொடுத்திட்டீங்க. உங்க சம்பளத்தில பாதிப் பணம் இவளுக்குப் பெயிண்ட்டும் பிரஷ்ஷும் வாங்கிக்கவே போயிடுது."

"டேய்! உனக்கு மட்டும் கிரிக்கெட் பேட் ஸ்டம்ப்புன்னு அப்பா வாங்கித் தரலியா? நீ என்ன பெரிய சச்சினாகப் போறியா?"

"நீ மட்டும் பெரிய ரவிவர்மா ஆகப் போறியாக்கும்? இப்படிப் படம் வரையச் செலவு பண்ணின காசுல உன் கல்யாணத்துக்கு நகையாவது சேர்த்திருக்கலாம்."

"விஷ்ணு! காலையிலயே என்னைக் கடுப்பேத்தாதே!" - ஒற்றை விரலை நீட்டித் திலோத்தமா எச்சரிக்க, அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள் சகுந்தலா.

"என்ன இங்க சத்தம்? காலையிலே ஆரம்பிச்சிட்டீங்களா உங்க சண்டையை!"

"அம்மா... இந்தப் பய என்ன சொல்றான் தெரியுமா? நான்..."

"திலோ! நீ இன்னிக்குச் சீக்கிரமா காலேஜுக்குப் போகணும்னு சொன்னியே! கிளம்பு... முதல்ல தலைய

உலர்த்து. விஷ்ணு! நீ என்ன அவகூட மல்லுக்கட்டிட்டு நிக்கிற. எக்ஸாம் இருக்குல்ல... படிச்சிட்டியா?"

"ம்... ம்..."

"புக்ஸ எல்லாம் எடுத்து வை. குளிச்சிட்டு ஸ்கூலுக்குக் கிளம்பு."

"என்னை விரட்டுறதுலயே குறியா இருங்க. அவளை ஒன்னும் சொல்லிடாதீங்க." - முனகிக் கொண்டே நகர்ந்தான் விஷ்ணு.

"என்ன பிள்ளைங்க நீங்க? உனக்கு இருக்கிறது ஒரே அக்கா. திலோ! உனக்கு இருக்கிறது ஒரே ஒரு தம்பி. உங்க ரெண்டு பேருக்குள்ள ஒற்றுமை வேண்டாமா? இப்படியா எலியும் பூனையும் மாதிரி சண்டை போட்டுட்டே இருப்பீங்க?"

"நான் ஒன்னும் சண்டைக்குப் போகல்ல. அவதாம்மா ஆரம்பிச்சா! நான் காபி குடிக்கத்தான் சீக்கிரமா எழுந்தேன்னு அப்பாகிட்ட போட்டுக் கொடுக்கிறாம்மா!"

"திலோ...!"

"அவன் மட்டும் நான் கனவு கண்டுட்டு உளறினேன்னு சொல்லலாமா?"

"கனவா? யாரு கனவு கண்டது?"

"இவதாம்மா! நைட்டெல்லாம் விழிச்சு இருந்துட்டு அதிகாலையில கனவு கண்டுட்டு என்னவெல்லாமோ பேசினா!"

"திலோ! என்ன கனவும்மா? அம்மாகிட்ட சொல்லேன்."

"அம்மா! அது ஒரு அருமையான கனவும்மா. இன்னிக்குக் கிருஷ்ணன் ஸார் வர்றார். வரிசையா எல்லா



டிராயிங்கையும் பார்க்கிறார். பட்! என்னோட படத்தைத்தான் தேர்ந்தெடுக்கிறார். எல்லாரும் கைதட்டி ஆரவாரம் செய்யுறாங்க. நான் ஸ்டேஜ்ல ஏறிப் பரிசு வாங்குறேன்.

"கிருஷ்ணன் ஸார் என்னைப் புகழ்ந்து பேசுறார். நான் மேலும் முன்னேறணும்னு வாழ்த்துறாரு. எனக்குச் சந்தோஷத்தில கண்ணீரே வந்திடுச்சு." - மனக் கண்முன் கொண்டு வந்த காட்சியை விழிகளில் ரசனையோடு திலோத்தமா சொல்லிக் கொண்டிருக்க, விஷ்ணு குறுக்கிட்டான்.

"அக்கா! அந்த கோல்டு மெடலை விட்டுட்டியே!"

"ம்... கோல்டு மெடல்கூட வாங்கினேம்மா. என்னோட கனவு பலிக்குமாம்மா?"

"நிச்சயம் பலிக்கும்மா. நீ தைரியமா இரு."

"அம்மா! நீங்க வேற! அவ வரைஞ்ச படங்களையெல்லாம் பார்த்தீங்கள்ல?"

"ஆமா! ஏன்டா?"

"எனக்கென்னவோ நம்பிக்கையில்ல!"

"ஏன்டா?"

"மாடர்ன் யுகத்துக்கு ஏத்த மாதிரி ஏதாவது வரைஞ்சிருந்தா பரவாயில்ல. இவ என்னன்னா பசி பட்டினின்னு வரைஞ்சிருக்காளே!"

"விஷ்ணு! இந்த மாடர்ன் உலகத்திலயும் பசி பட்டினி இருக்குதுடா. இந்தச் சமுதாயத்தோட கடைசி எல்லை வரை இருக்கிறது இந்தப் பசிதான். இந்த நிலை மாறணும்னு ஒரு எய்ம்மோடதான் இந்தத் தீமை சூஸ் பண்ணினேன்."

"திலோம்மா! அவன் வயசுக்கு இது புரியாதும்மா. அவன் வயசில பார்க்கிறதெல்லாம் இளமையா புதுமையா இருக்கணும்னு நினைப்பான். ஆனா இதைத் தேர்ந்தெடுக்க வரப்போறது அனுபவஸ்தர். வயதானவர். அவருக்குத் தெரியாதா எதைத் தேர்ந்தெடுக்கணும்னு."

"என்னவோ சொல்றீங்க. எப்படியோ இவ ஜெயிச்சா எனக்கும் பெருமைதான். எனிவே! அக்கா! பெஸ்ட் ஆஃப் லக்!" என்றவாறு தமக்கையின் கைகளைப் பற்றிக் குலுக்கினான் விஷ்ணு.

"தேங்க்யூ தம்பி! நீயும் எக்ஸாம் நல்லா எழுது. சாமி கும்பிட்டுட்டுப் போ!"

"ம்... அம்மா! எனக்கு வெந்நீர் ரெடியா?" - என்றவாறு விஷ்ணு குளிக்கக் கிளம்ப...

திலோத்தமா தான் வரைந்திருந்த படங்களைக் கவனமாய் எடுத்து வந்து பூஜையறையில் வைத்தாள். கண்மூடி வேண்டிக் கொள்ளத் துவங்கினாள்.

"இந்த நாள் என் வாழ்நாளின் மிக முக்கியமான நாள். இந்த நாள் முழுக்க நடப்பதெல்லாம் நல்லதாகவே நடக்கணும். சந்தோஷமான நாளா இருக்கணும்."

ஆனால் அவள் நினைத்ததைப் போல் அந்த நாள் அத்தனை இனிமையாய் அமையவில்லை.

அந்த நாள் முழுக்கத் துயரத்தை மட்டுமே அனுபவிக்கப் போகிறோம் என்பதை அவள் உணர்ந்திருக்கவில்லை.



## 2

நதியில் விளையாடிக் கொடியில்
தலைசீவி நடந்த இளம் தென்றலே!
வளர் பொதிகை மலைதோன்றி
மதுரை நகர்கண்டு பொலிந்த
தமிழ் மன்றமே!

குளித்து முடித்துக் கண்ணாடி முன் அமர்ந்து ஒப்பனை செய்து கொண்டிருந்தாள் பிரியங்கா. முதுகுவரை படர்ந்திருந்த கூந்தலை முடி உலர்த்தும் கருவி மூலம் உலர்த்திப் பறக்க விட்டிருந்தாள். கண்களுக்கு புருவங்களுக்கு உதட்டுக்கு என நிதானமாய் ஒப்பனை செய்து முடித்தபோது அறைக்குள் நுழைந்தாள் வரலட்சுமி.

"என்னம்மா! இன்னும் புறப்படலியா?"

"ஒரு டென் மினிட்ஸ் மம்மி!"

"அண்ணன் ரெடியாகி காருக்குப் போயாச்சு. நான்கூடக் கிளம்பிட்டேன். நீதான் சீக்கிரமாய்ப் போகணும்னு சொன்னே. நீயே லேட்டானா எப்படி?"

"மெதுவாய் போலாம்மா. என்ன அவசரம்? எல்லாரும் வெயிட் பண்ணுவாங்க." - அலட்சியமாய்ச் சொல்லிவிட்டு உதட்டுச் சாயத்தை எடுத்து இன்னும் ஒரு முறை பூசிக் கொண்டாள்.

"இன்னும் தலை பின்னலியா? அந்தச் சீப்பை எடு. நான் பின்னி விடுறேன்."

"நோ மம்மி. டோன்ட் டச்!"

"ஏன்டி?"

"எவ்வளவு கஷ்டப்பட்டு ஒரே சீரா வாரி விட்டிருக்கேன். நீங்க கலைச்சிடாதீங்க. திரும்ப அதைச் சரிபண்ண அரை மணி நேரமாகும்."

"என்ன? தலை வாரிட்டியா?"

"ம்... நல்லா இருக்கா மம்மி?" - எழுந்து நின்று கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டே கேட்டாள் பிரியங்கா.

"என்ன பிரியா இது? காலேஜுக்குப் போகும்போது இப்படித் தலைவிரி கோலமா போலாமா? அதுவும் இன்னிக்கு ஓவியப் போட்டி. நிறையப் பேர் வருவாங்கன்னு சொன்னியே! இன்னிக்காவது தலையைப் பின்னி அழகாப் போட்டுக்கம்மா!"

"ம்மா! இடுப்புக்குக் கீழே வரை கூந்தல் வளர்ந்தாத்தான் பின்னல் போட்டா அழகா இருக்கும். இந்த மாதிரி இருந்தா ஷாம்பூ பாத் எடுத்து லூஸ் ஹேரா விட்டாத்தான் ஸ்டைலிஷா லுக்கா இருக்கும். இந்த ஹேர்ஸ்டைலுக்கு காக்ரா சோளி போட்டா இன்னும் சூப்பரா இருக்கும். ஆனா புடவைதான் கட்டிட்டு வரணும்னு எங்க பிரின்சி சொல்லிடுச்சி. மம்மி! இந்த ஸாரி ஓ.கே.வா?"

"ம்... நல்லா இருக்கு. இவ்வளவு இறக்கமா கட்டாதேம்மா. பெரிய மனுஷங்க வர்ற இடத்துல நாமளும் கண்ணியமாப் போகணும். அப்பத்தான் நம்ம மேல அவங்களுக்கும் ஒரு மதிப்பு வரும். நல்ல எண்ணம் வரும்."

"போம்மா! நீங்க சுத்த போர். இப்படிப் போனாத்தான் பார்க்கிறவங்க அப்படியே சொக்கிப் போயிடுவாங்க. அந்தக் கிறக்கத்தில என்னோட பெயிண்டிங்ஸ பார்க்காமலே மார்க்



போட்டுடுவாங்க தெரியுமா?" - அலட்சியமாய்ச் சொன்ன மகளைப் பார்க்கையில் கொஞ்சம் பயமாகவே இருந்தது.

என்ன பெண் இவள்? தனது திறமையைக் காட்டியல்லவா வெற்றி பெற நினைக்க வேண்டும்? இந்த வயதில் இந்த எண்ணங்கள் வரலாமா? தன்னைத் தவிர மற்ற அனைவரையும் அலட்சியமாய் எண்ணுவதை எப்போதுதான் விடப் போகிறாளோ? இருக்கும் அழகைக் கண்ணியமாய்க் காட்ட வேண்டுமே தவிர இப்படிக் காட்சிப் பொருளாய்க் காட்ட நினைக்கக் கூடாது.

இதுவே ஆபத்தான பின் விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடும். ஆனால் சொன்னால் கேட்பவளல்ல பிரியங்கா. அவளது அண்ணனின் செல்லமும் தந்தையின் கொஞ்சலும் அவளை யாரிடமும் இதுவரை பணிய வைத்ததில்லை.

"சின்னம்மா! நீங்க வரைஞ்ச படத்தையெல்லாம் கார்ல வெச்சுடவா?" - என்றவாறே வந்த பணியாளிடம் அவசரமாய்த் தலையசைத்து மறுத்தாள்.

"நோ... நோ! இன்னும் அண்ணன் பார்க்கல்ல. அண்ணன் பார்த்த பிறகு கொண்டு போகலாம். அம்மா! அண்ணன் எங்கே?"

"அவன் அப்பவே ரெடியாகி கார்ல ஏறிட்டான். நீதான் வரணும்."

"மூர்த்தி! நீ போய் அண்ணனை வரச் சொல்லு!"

"சரிங்கம்மா!"

"பிரியா! இப்ப ஏன் அவனைக் கூப்பிடுற? உனக்கு டயமாகலையா?"

"எவ்வளவு டயமானாலும் பரவாயில்ல. அண்ணன் என் படத்தைப் பார்க்கணும். அதற்குப் பிறகு போய்க் கொள்ளலாம்."

"மணி இப்பவே ஒன்பதாகப் போகுதும்மா!"

"நீங்க ஏம்மா டென்ஷனாகுறீங்க? போலாம்... அண்ணன் வரட்டும்." - பிரியங்கா சொல்லிக் கொண்டிருக்கும்போதே படிக்கட்டில் ஷு சப்திக்கும் ஓசை கேட்டது. இருவரும் திரும்பிப் பார்க்க, ரஞ்சித் குமார் வந்து கொண்டிருந்தான்.

"பிரியாம்மா! இன்னும் ரெடியாகலையா நீ?"

"நான் ரெடிண்ணா! நீ என்னோட ட்ராயிங் எல்லாம் பார்த்திட்டா உடனே கிளம்பிடலாம்."

"அதை யெல்லாம் நேத்து நைட்டே நான் பார்த் திட்டேன். டயமாச்சு... வாடா போலாம்."

"எப்போ அண்ணா பார்த்தாய்?"

"நைட் நீ தூங்கும்போது வந்து பார்த்தேன். எல்லாமே ரொம்ப கலர்ஃபுல்லா இருந்தது."

"அண்ணா! நான் வின் பண்ணிடுவேனா?"

"கன்பார்ம்டா. அதுல என்ன சந்தேகம் உனக்கு?"

"நான் எப்படியும் ஜெயிக்கணும் அண்ணா. என் ஃபிரெண்ட்ஸ் கிட்ட எல்லாம் சவால் விட்டிருக்கேன்."

"கண்டிப்பா ஜெயிச்சிடுவடா!"

"அண்ணா! நீயும் அந்த கிருஷ்ணன் கூடத்தானே உட்கார்ந்திருப்பே?"

"ஆமா!"



"அவர் எல்லாப் படங்களையும் பார்க்கும்போது அவர்கிட்டப் பேச்சுக் கொடுத்திட்டே இரு. அவரது கவனத்தை டைவர்ட் பண்ணிடு."

"ஏன்?"

"நான் ஃபைனல் இயர் ஸ்டுடண்ட். அதனால என்னோட படம்தான் லாஸ்ட்ல இருக்கும். அதைப் பார்க்கும்போது மட்டும் அவரை டிஸ்டர்ப் பண்ணாதே. நிச்சயமா என் படத்தைத்தான் தேர்வு செய்வார். நான்தான் பர்ஸ்ட் பிரைஸ் வாங்குவேன். எப்படி என் ஐடியா?"

"தப்புடி! எப்பவுமே நேர்வழியில போய்த்தான் ஜெயிக்கணும். நீ நல்லா வரைஞ்சிருந்தா உனக்குப் பரிசு கிடைக்கும். இல்லேன்னா உன்னை விட நல்லா வரைஞ்சவங்களுக்குக் கிடைக்கட்டும்."

"அம்மா! என்னை விட யாரும் நல்லா வரைய மாட்டாளுங்க. நான் நாலு வருஷமா ட்ராயிங் கிளாஸ் போயிட்டு இருக்கேன்."

"பிறகென்ன? அப்போ உன் திறமை மேல நம்பிக்கை வை. அதை விட்டுட்டு..." - என்று தொடங்கிய தாயை அமர்த்தினான் ரஞ்சித்.

"அம்மா! அவ கண்டிப்பா ஜெயிப்பா. இது வரைக்கும் அவ எதிலயும் தோற்றதில்லை. அவ ஜெயிக்கப் பிறந்தவ!"

"இப்படியே சொல்லிச் சொல்லி அவளைப் பிடிவாதக்காரியா வளர்த்திட்டு இருக்கீங்க நீயும் உன் அப்பாவும். இது தப்புடா!"

"அம்மா! நம்ம விவாதத்தை அப்புறம் வெச்சுக்கலாம். இப்ப டயமாகுது. வாங்க போலாம். ஸ்பெஷல் கெஸ்ட்டா

என்னைக் கூப்பிட்டிருக்காங்க. நானே லேட்டாப் போனா அது மரியாதையா இருக்காது. பிரியா! போலாமாடா?"

"ஐ'ம் ரெடிண்ணா!" - என்றவாறு காலில் செருப்பை மாட்டிக் கொண்டாள்.

"மூர்த்தி!"

"ஐயா!"

"இந்தப் பெயிண்டிங்ஸ் எல்லாம் பத்திரமா கார்ல எடுத்து வை!"

"சரிங்கய்யா!"

"அம்மா! நீங்க ரெண்டு பேரும் போய்க் கார்ல ஏறுங்க. நான் அப்பாவுக்கு ஒரு போன் பண்ணிட்டு வர்றேன்."

"எதுக்கு அண்ணா?"

"புறப்பட்டுட்டாங்களான்னு கேட்கத்தான்."

"இப்பத்தான் எனக்கு போன் பண்ணினாங்க. புறப்பட்டாச்சாம். பத்து மணிக்கெல்லாம் நேரே காலேஜுக்கே வந்திடுறேன்னு சொல்லிட்டாங்க."

"அப்பச் சரி! ஓ.கே. வாங்க போலாம்." - மூவருமாய் வெளியேறிக் காரை நெருங்க, ரஞ்சித்தின் செல்போன் சிணுங்கியது. எடுத்துக் காதில் வைத்தான்.

"ஹலோ!"

"மிஸ்டர் ரஞ்சித் குமார்!"

"யெஸ் ஸ்பீக்கிங்!"



"ஸார்! நான் மணியம்மை கல்லூரி புரொபஸர் லட்சுமணன் பேசுறேன்."

"சொல்லுங்க ஸார்!"

"நீங்க புறப்பட்டாச்சா ஸார்?"

"யா! இதோ கார்ல ஏறிட்டேன். இன்னும் இருபது நிமிஷத்தில அங்கே இருப்பேன்."

"ஸார்! இன்னிக்குப் புரோக்ராம்ல ஒரு சின்ன மாற்றம்."

"என்ன?"

"எங்க ஸ்டுடண்ட்ஸோட ஓவியங்களை மேற்பார்வையிட்டு ஜட்ஜ்மெண்ட் பண்ண வர்றதா இருந்த ஓவியர் கிருஷ்ணன் தவிர்க்க முடியாத சூழ்நிலையில வர முடியாமல் போச்சு!"

"வாட்?"

"அவரோட மனைவிக்கு உடம்பு முடியாம ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருக்காங்களாம். ஸோ! தன்னால வர முடியாதுன்னு இப்பத்தான் போன் பண்ணினார்."

"ஓ! இப்ப என்ன ஸார் பண்ணப் போறீங்க? காம்பெடிஷனை மாத்தி வைக்கப் போறீங்களா?"

"நோ ஸார்! இங்க எல்லா அரேஞ்ச்மெண்ட்டும் செய்தாச்சு. இன்னிக்கு ஓவியப் போட்டி மட்டுமில்ல... கல்ச்சுரல் ப்ரோக்ராமும் இருக்கு. கல்லூரியோட ஆண்டு விழா! ஸோ... எல்லா கெஸ்ட்டும் ஆல்மோஸ்ட் வந்தாச்சு. இனிமே ப்ரோகிராம கேன்ஸல் பண்ண முடியாது."

"அப்போ என்ன விஷயமா எனக்கு போன் பண்ணீங்க?"

"ரஞ்சித் குமார் ஸார். எங்க கரெஸ்பாண்டண்ட் தான் உங்களுக்குப் போன் பண்ணி இதைக் கேட்கச் சொன்னாங்க."

"என்ன சொன்னாங்க?"

"ஏற்கெனவே உங்களை ஸ்பெஷல் கெஸ்ட்டா கூப்பிட்டிருந்தோம் இல்லையா?"

"ஆமா!"

"இப்போ உங்களை சீஃப் கெஸ்ட்டா வெச்சிடலாம்னு சொல்றாங்க. உங்களுக்கு டயம் கிடைக்குமான்னு கேட்கச் சொன்னாங்க."

ரஞ்சித்தின் முகம் மலர்ந்தது. "என்ன? நானா? நான்.. எப்படி?"

"யெஸ் ஸார்! சின்ன வயசுலயே பிஸ்னெஸ்ல நிறைய சாதனை செய்துட்டு வர்ற உங்களை சீஃப் கெஸ்ட்டா வெச்சா எங்க ஸ்டுடண்ட்ஸுக்கெல்லாம் நீங்க ஒரு ரோல் மாடலா இருப்பீங்கன்னு முடிவு பண்ணியிருக்கோம். உங்களுக்கு இதுல சம்மதம்னா உடனே ரெடி பண்ணிடுவோம். என்ன ஸார் சொல்றீங்க?"

"நான்... நான் என்ன சொல்றது? எனக்கு இந்த மாதிரி மேடை ஏறிப் பழக்கம் இல்ல. ராமகிருஷ்ணன் ஸார் எங்க பேமிலி பிரெண்ட். அவர் ரொம்ப கம்ப்பெல் பண்ணிக் கேட்டதாலதான் ஒத்துக்கிட்டேன்."

"இப்பவும் அவங்கதான் ஸார் கேட்கச் சொன்னாங்க. அவங்களே கேட்கணும்னு இருந்தாங்க. வந்திருக்கிறவங் களைக் கவனிச்சிட்டு இருக்காங்க. நான் வேணா போனை அவங்ககிட்ட கொடுக்கட்டுமா?"



"இல்ல. இருக்கட்டும். அவங்களை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்."

"அப்போ வர்றீங்களா ஸார்?"

"வர்றேன். எவ்வளவு நேரம் ப்ரோகிராம் நடக்கும்?"

"அது முடிய மதியம் ஆகிடும் ஸார். நீங்க ஜஸ்ட் கொஞ்ச நேரம் பேசிட்டு ஓவியப் போட்டியில வின் பண்றவங்களுக்குப் பரிசு கொடுத்திட்டுக் கிளம்பிடலாம். ஒரு ஒன் அவர் இருந்தா போதும் ஸார்."

"ஓ.கே. அப்ப நான் வர்றேன்."

"தேங்க்யூ ஸார்."

"இட்ஸ் ஓ.கே. நான்தான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும். நான் படிச்ச கல்லூரியில என்னை சீஃப் கெஸ்ட்டா உட்கார வெக்கிறீங்களே!" - அண்ணனின் குரலில் முகத்தின் ஒப்பனையைச் சரிசெய்து கொண்டிருந்த பிரியங்கா திரும்பினாள்.

"அண்ணா! என்ன சொல்ற நீ?"

"ஷ்! ஒரு நிமிஷம் வெயிட் பண்ணு. பேசிட்டு வந்து சொல்றேன்," - என்றவன், "ஓ.கே. ஸார். அப்போ நான் புறப்பட்டு வர்றேன்," - என்றான்.

"தேங்க்யூ ஸார். ஸார்! ஒன் செகண்ட்... கரஸ்பாண்டெண்ட் பேசுறாங்க."

"கொடுங்க!" - போன் கை மாறியதும் ராம கிருஷ்ணனின் குரல் கேட்டது.

"ஹலோ! ரஞ்சித்."

"குட் மார்னிங் அங்கிள்!"

"வெரி குட்மார்னிங். என்ன... லட்சுமணன் எல்லாம் சொன்னாரா?"

"சொன்னார் அங்கிள்."

"உனக்குச் சம்மதம்தானே!"

"ஃபுள் ஓ.கே. அங்கிள்."

"உடனே புறப்பட்டு வா. உன் அப்பன் ஹாங்காங் போயிருக்கிறதாச் சொன்னியே... வந்திட்டானா?"

"ஆன் தி வே அங்கிள். ஏர்போர்ட்ல இருந்து நேரே ஃபங்க்ஷனுக்கு வந்திடுவாங்க."

"அதானே பார்த்தேன். எங்கே வராம இருந்திடு வானோன்னு நினைச்சேன்."

"அதெப்படி? அப்பா இருந்தாலும் பிரியா விட மாட்டாளே! கண்டிப்பா வந்தே ஆகணும்னு ஆர்டர் போட்ட பிறகுதான் அனுப்பினாள்."

"சரிப்பா... சீக்கிரமா வந்திடு. லேட் பண்ணிடாதே!"

"இதோ புறப்பட்டுட்டேன் அங்கிள்."

"சரி, போனை வெச்சிடவா?"

"பை அங்கிள்!" - என்றவாறு போனை அணைத்தவன் காரில் ஏறி ஸ்டார்ட் செய்தான். கார் புறப்பட்டதும் பிரியங்கா பொறுமையின்றிக் கேட்டாள்.

"அண்ணா! போன்ல யாரு? என்ன பேசின?"

"பிரியா! உங்க காலேஜ்ல இருந்துதான் போன் வந்தது."



"என்னப்பா! எல்லாரும் வந்தாச்சா? நாமதான் லேட்டா?" - கேட்ட வரலட்சுமியைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"இல்லம்மா! இது எதிர்பாராத கிப்ட். அதிர்ஷ்டம்னு கூடச் சொல்லலாம்."

"அண்ணா! சொல்றதப் புரியும்படி சொல்லேன்."

"சொல்றேன் பிரியா! இன்னிக்கு உன் காலேஜ் பங்க்ஷன்ல ஐயாதான் சீஃப் கெஸ்ட்." - காலரை உயர்த்திவிட்டவாறே ரஞ்சித் சொல்ல, விழிகளை விரித்தாள் பிரியங்கா.

"என்ன?"

"ம்... இப்பத்தான் உங்க புரொபஸர் சொன்னார். அதோட ராமகிருஷ்ணன் அங்கிளும் பேசினார்."

"வாவ்! அண்ணா! அப்போ நீதான் ஸ்டேஜ்ல மெயின் ஹீரோவா?"

"யா... யா!"

"அப்போ... அந்தக் கிருஷ்ணன்...?"

"அவர் வரலையாம். ஸோ! இன்னிக்கு நான்தான் ஜட்ஜ்!"

"ஹய்யோ! சூப்பர் அம்மா! அப்போ பர்ஸ்ட் பிரைஸ் எனக்குத்தான். அதுவும் அண்ணன் கையால வாங்குவேன். நினைக்கும்போதே எவ்வளவு சந்தோஷமா இருக்கு!" - தங்கையின் உற்சாகம் ரஞ்சித்தின் முகத்தில் புன்னகையையும் தாயின் முகத்தில் கலவரத்தையும் உண்டாக்கியது.

"கண்டிப்பாடா! நம்ம போட்டோ நாளைக்கு எல்லா பேப்பர்லயும் வரப் போகுது. என் கையால என் தங்கைக்கு பரிசு கொடுக்கப் போற அந்த நிமிஷத்துக்காக வெயி பண்றேன்."

"ரஞ்சித்! ரெண்டு பேருமே யோசிக்காமப் பேசுறீங்க." பதட்டக் குரல் கொடுத்தாள் வரலட்சுமி.

"என்னம்மா சொல்றீங்க?"

"ஆமா! உன் தங்கைதான் ஜெயிப்பான்னு எப்படிப்ப முடிவு பண்ணினே? அதுல எத்தனை பேர் கலந்து பாங்களோ! அதையெல்லாம் பொறுமையாப் பார்த்து தேர்ந்தெடுக்கிறதுதானே உன் பொறுப்பு!"

"அம்மா! இப்ப என்ன சொல்ல வர்றீங்க? நான் வரைஞ்சது நல்லாயில்லையா? எனக்குப் பரிசு கொடுக்க கூடாதா?" - கோபமாய்க் கேட்ட மகளின் கையைப் பற்றிக் கொண்டாள் அன்னை.

"கோபப்படாதே பிரியாம்மா. நாம ஜெயிக்கணும்னு நினைக்கிறது தன்னம்பிக்கை. நான் மட்டும்தான் ஜெயிப்பேன்றது கர்வம், தலைக்கனம்."

"அம்மா!"

"திறமை யார்கிட்ட இருக்கோ, அவங்களுக்கு வெற்றி தானா கிடைக்கும். உன்னோட படங்கள் நல்லா இருந்தா நீ ஜெயிப்பே. ஒருவேளை உன்னைவிட நல்லா யாராவது வரைஞ்சிருந்தா நியாயப்படி அவங்கதானே ஜெயிக்கணும்."

"உங்க நியாய அநியாயத்தை எல்லாம் தூக்கிக் குப்பையில போடுங்க. நான்தான் ஜெயிப்பேன். நான்தான் ஜெயிக்கணும்."



"பிரியா... சொன்னாக் கேளு."

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். இந்தப் பிரியங்கா எப்பவும் எதிலயும் தோற்கமாட்டா. என்கிட்ட போட்டி போடப் பயந்துதான் எவளும் போட்டியில கலந்துக்கல்ல. ஆனா என்னைச் சீண்டிப் பார்க்கணும்னே அந்த திலோத்தமா தன்னோட பேரைக் கொடுத்திருக்கா.

"ஒரு மிடில் கிளாஸ் பொண்ணுகிட்ட நான் தோற்பதா? நெவர். அண்ணா! நீ என்ன செய்வியோ தெரியாது. நான்தான் ஜெயிக்கணும். எனக்குத்தான் நீ பரிசு தரணும்." - உத்தரவாய்ச் சொன்னவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"என்னம்மா இது? எதுக்கு இவ்வளவு கோபம் வருது? கண்டிப்பா நீதான் ஜெயிப்பே! ஆமா... மொத்தம் எத்தனை பேர் கலந்துக்கிறீங்க?"

"மொத்தமா, பதினைஞ்சு பேர் அண்ணா! என்னோட செக்ஷன்ல நானும் திலோத்தமாவும்தான். மத்தவங்க எல்லாம் ஜூனியர்ஸ்."

"எல்லாரும் என்ன தீம்ல வரைஞ்சீங்க? ஐ மீன் உங்களுக்கு விருப்பமான எது வேணும்னாலும் வரையலாமா? இல்ல..."

"சமூகத்தோட ஒன்றிப்போன ஏதாவது ஒரு கருத்தைச் சொல்றமாதிரி வரையணும். அது எந்த சப்ஜெக்ட்டாவும் இருக்கலாம். அரசியல், நாட்டின் பொருளாதாரம், வறட்சி, செழிப்பு... ஏன் சுனாமி பத்திகூட வரையலாம்."

"நீ எந்த ஐடியாவிலம்மா வரைஞ்சே?"

"நானா? நான் மாடர்ன் ஆர்ட் வரைஞ்சேன் அண்ணா. எல்லாமே இயற்கைக் காட்சிகள்தான். நம்ம நாடு

எப்பவும் பசுமையா இருக்கணும்கிற மாதிரி வரைஞ்சேன். நீதான் பார்த்தியே!"

"ம்... பார்த்தேன்!" - என்றவனின் மனம் நேற்று இரவு பார்த்த தங்கையின் ஓவியங்களை நினைவுகூர்ந்தது. தீற்றல் தீற்றலாய் அடர்பச்சையில் புல்வெளிகள். இரத்தச் சிவப்பில் ரோஜாக்கள். நீலநிற மலை முகடுகள். ஆனால் எதிலும் ஒரு நேர்த்தி இல்லாமல் சிறு குழந்தையின் தீற்றல் போல் இருந்தது.

ஒருவேளை இதுதான் மாடர்ன் ஆர்ட்டா? இதைத்தான் நான்கு வருடங்களாய்க் கற்றுக் கொண்டிருக்கிறாளா? எது எப்படியோ? தங்கை வரைந்த ஓவியம் அவன் கண்களுக்கு அழகாய்த்தான் தெரிந்தது. அது அந்த வீட்டில் எழுதப்படாத சட்டம்.

பிரியங்கா எது செய்தாலும் அதுதான் பெஸ்ட்டாக இருக்கும். எதைத் தொட்டாலும் அது பொன்னாக மாறும். அவளது விருப்பம் மட்டுமே தங்களது விருப்பம். அவளது பேச்சிற்கு மறுப்போ எதிர்ப்போ சொல்லக்கூடாது என்பது ரஞ்சித்தும் அவன் தந்தை கண்ணபிரானும் போட்ட சட்டம்.

இதை அடிக்கடி மீறுவது வரலட்சுமி மட்டுமே. பெண் பிள்ளையை இப்படிப் பொறுப்பில்லாமல் அவள் விருப்பம்போல் வளரவிடக்கூடாது. நாளை அதுவே நமக்கு வினையாகிவிடும். இன்னொரு வீட்டில் வாழப்போகும் பெண் ஆயிற்றே எனக் காரணங்களைச் சொல்லும் போதெல்லாம் மனைவியை அதட்டி அடக்கி விடுவார்.

"லட்சுமி! நடக்கப் போறத நினைச்சி இப்பவே எம் பொண்ணை அடக்கி வைக்காதே. அவ, அவ இஷ்டப்படிதான் இருப்பா. நம்மால அவ கண்ல ஒரு



சொட்டுக் கண்ணீர் கூட வரக்கூடாது. கண்ணீர் மட்டுமில்ல, ஒரு சின்ன வருத்தமோ மன உளைச்சலோ கூட ஏற்படக் கூடாது.

"உன் கட்டுப்பெட்டித் தனமெல்லாம் உன்னோடவே இருக்கட்டும். அதை எம் பொண்ணு தலையில ஏத்தாதே. என்னை மீறி அவளை நீ ஒரு வார்த்தைகூடச் சொல்லக் கூடாது!" - என எச்சரித்திருந்தார் கண்ணபிரான்.

பொருமுவாள் வரலட்சுமி. "ம்... இப்படியே தலை மேல தூக்கி வெச்சிக் கொண்டாடுங்க. ஒரு நாள் உங்களையே தூக்கியெறிஞ்சு பேசப் போகிறாள். அப்போது தெரியும் நான் ஏன் இப்படிப் பேசுறேன்னு."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. அப்படியே நடந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன்," - என அடக்கி விடுவார். ரஞ்சித் தந்தை சொல்லைத் தட்டாத பிள்ளை. இருவரின் சலுகையிலும் பிரியங்காவின் பிடிவாதமும் கர்வமும் அலட்சியமும் தாராளமாய் வளர்ந்து வந்ததை நன்றாய் உணர்ந்தும் இருந்தனர்.

ஆனால் அவளைத் தட்டிக் கேட்கவோ அதட்டவோ இருவரும் அனுமதிக்க மாட்டார்கள். தாயைச் சமாதானம் செய்து விடுவான் ரஞ்சித். ஆனால் இன்று அப்படிச் சமாதானம் செய்ய முடியவில்லை.

இதுநாள் வரை வீட்டிற்குள் நடக்கும் வாக்கு வாதங்களைத் தங்கையின் பிடிவாதத்தைக் கண்டும் காணாமலும் இருந்தது போல் இன்று இருக்க முடியாது. இது கல்லூரியில் நடக்கும் பொதுவான போட்டி. கூடியிருக்கும் அனைவருமே பார்த்து முடிவெடுக்கும் இடம்.

ஒருவேளை தங்கையை விட வேறு யாரேனும் நன்றாய் வரைந்திருந்தால் அவர்களை விட்டுவிட்டு இவளை எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்? அப்படி வேறு யாரையோ தேர்ந்தெடுத்தால் இவள் சும்மாயிருப்பாளா? வாழ்வில் முதல் முறையாய் ஏற்படும் தோல்வியை இவளால் தாங்கிக் கொள்ள இயலுமா?

கடவுளே! தர்மசங்கடமாய் மாட்டிக் கொண்டேனே! எந்தப் பிரச்சனையும் இல்லாமல் இன்றைய நிகழ்ச்சி நடந்து முடிய வேண்டும். போட்டியில் கலந்து கொண்டவர்களில் யாரும் தன் தங்கையை விட அழகாய்ப் படம் வரைந் திருக்கக் கூடாது. என் தங்கை தோற்கக்கூடாது.

"அண்ணா! காலேஜ் வந்தாச்சு. எங்கே போற?" - தங்கை கேட்ட பிறகே சட்டெனச் சுதாரித்துக் காரை நிதானமாக்கினான். பிரதான வாயிலருகேயே நின்று கொண்டிருந்த பேராசிரியர்கள் சிரித்த முகமாய் வணங்கி வரவேற்க, பதிலுக்குப் புன்னகைத்துக் காரைக் கல்லூரிக் குள் செலுத்தினான்.

அண்ணனின் மனக் கலக்கத்தை உணர்ந்திராத பிரியங்கா, இப்போதே போட்டியில் வென்று விட்டதைப் போல் கர்வமாய்க் காரை விட்டு இறங்கினாள்.

## 3

வாசமான முல்லையோ
வானவில்லின் பிள்ளையோ
பூவில் நெய்த சேலையோ
நடந்து வந்த சோலையோ!



ஆட்டோவை விட்டு இறங்கித் தந்தையுடன் சேர்ந்து படம் வரைந்த போர்டுகளை நிகழ்ச்சி நடைபெறும் ஹாலில் வைத்துவிட்டு நிமிர்ந்தபோது தோழியருடன் வந்து சேர்ந்தாள் உமா. திலோத்தமாவின் தோழி.

"திலோ! உனக்கு விஷயம் தெரியுமா?"

"என்ன?"

"இன்னிக்கு வரப்போறதா சொன்ன கிருஷ்ணன் வரலையாம்."

"என்ன? என்ன சொல்ற உமா?" - திகைப்பாய்க் கேட்டாள்.

"இரு... நான் போய் அம்மா அப்பாவையெல்லாம் உட்கார வெச்சுட்டு வர்றேன். நீ அதுக்குள்ள இந்த பேப்பர்ஸ எல்லாம் பிரிச்சிட்டு இந்த ட்ராயிங்ஸ எல்லாம் ஸ்டாண்டில் நிற்கவை. இன்னும் அரை மணி நேரத்தில இதைப் பார்க்க வருவாங்களாம்."

"யார் வர்றாங்களாம்?"

"இரு. வர்றேன்! அப்பா, வாங்க. அம்மா, வாங்கம்மா!" உமா அழைக்க, திலோத்தமா தாயை நெருங்கினாள்.

"அம்மா! நீங்களும் அப்பாவும் போய் உட்காருங் கம்மா. நான் இங்கேதான் நிற்கணும். அப்புறமா வந்து பார்க்கிறேன்."

"சரிடா! நாங்க போறோம். நீ பார்த்துக்கம்மா!" - என்றவாறு உமாவின் பின்னே இருவரும் செல்ல, தனக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்த மர ஸ்டாண்டில் படங்களைப் பொருத்தி வைத்தாள். ஏதேனும் திருத்தல்

இருக்கின்றதா எனக் கவனமாய் ஆராய்ந்து கொண்டிருந்த போது தோழியர் புடைசூழ வந்து கொண்டிருந்தாள் பிரியங்கா.

ஒரு சாண் அளவிற்கு உயரமான ஹை-ஹீல்ஸுடன் 'டாக் டாக்' என்ற ஒலியுடன் ஹாலினுள் நுழைந்தவள் வரிசையாய் வைக்கப்பட்டிருந்த வரைபடங்களைப் பார்த்து விட்டு வெகு அலட்சியமாய்த் தோளைக் குலுக்கிக் கொண்டே வந்தாள்.

"சியாமளா! என்னடி இது? எல்லாம் எல்.கே.ஜி. பசங்க பண்ணின டிராயிங் மாதிரி இருக்கு. வாட் எ ஷேம்!"

"எப்படியும் நீதான் வின் பண்ணப் போற. அது நல்லாத் தெரிஞ்சு போச்சு. இவங்கள்லாம் எதுக்காக இவ்வளவு மெனக்கெடுறாங்களோ தெரியல." - தனது படங்களைப் பார்த்துச் சரி செய்து கொண்டிருந்த திலோத்தமாவைப் பார்த்துக் கொண்டே சியாமளா சொல்ல, பிரியங்காவின் நடை தடைப்பட்டது.

நின்று நிதானமாய் அவளது ஓவியங்களைப் பார்த்தவள், அடக்க மாட்டாமல் சிரித்தாள். அவளது சிரிப்பின் காரணம் புரியாமலேயே மற்றவர்களும் சிரிக்க, திலோத்தமா திரும்பி அனைவரையும் பார்த்தாள்.

"என்னாச்சு? லாப்பர் தெரபியா? இதை வீட்ல வெச்சுப் பண்ணலாமே!"

பிரியங்காவின் சிரிப்பு சட்டென மறைந்தது. "ஏய்! என்னடி திமிரா?"

"லுக் பிரியங்கா! இந்த வாடி போடின்ற பேச்சையெல்லாம் உங்கூட சுத்துற கூட்டத்தோட நிறுத்திக்க. எங்கிட்ட வேண்டாம்."



"லோ கிளாஸ்காரியான உனக்கு இவ்வளவு திமிரா? என்னையே எதிர்த்துப் பேசுற அளவுக்குப் பெரிய ஆளா கிட்டியா?"

"என்னவோ பெரிய குபேரன் வீட்டுப் பொண்ணு மாதிரி அலட்டிக்கிற... உன்னையும் உன் மேக்-அப்பையும் பார்த்தாலே தெரியுதே நீ என்னைவிட லோ கிளாஸ்ன்னு!"

"ஹேய்! யார்கிட்ட பேசுறன்னு தெரிஞ்சுதான் பேசுறியா?"

"ஏன் தெரியாம? எச்சில் கைய உதறினா பொறுக்க வர்ற காக்கா கூட்டத்தைக் கூட வெச்சிக்கிட்டா நீ பெரிய இவளா? இந்த அலம்பலை எல்லாம் எங்கிட்ட காட்டாதே!"

"ஏய் திலோ! யாரைக் காக்கா கூட்டம்ன்ற?" - எனப் பிரியங்காவின் பின்னே இருந்தவர்கள் சீற, உமா ஓடி வந்தாள்.

"ஏய் திலோ! என்ன இங்க பிரச்சனை?"

"பிரச்சனை தனியாவா வரும்? இவ வந்தாலே பிரச்சனைதானே!" - எரிச்சலாய்ச் சொல்லிவிட்டுத் தன் படத்தைப் பார்த்தவாறு திரும்பிக் கொண்டவளது தோளைப் பற்றி ஆத்திரமாய்த் தன் புறம் திருப்பினாள் பிரியங்கா.

"யாரைடி பிரச்சனை என்கிறாய்?"

"பிரியங்கா! என்ன இது? குழாயடிச் சண்டை மாதிரி. பிரின்ஸிபல் வர்ற நேரம். போ... உன் இடத்துக்குப் போ!" உமா இருவரின் இடையே புகுந்தாள்.

"ஏய் உமா! உன் பிரெண்ட்கிட்ட சொல்லி வை. இந்தத் துள்ளல் எல்லாம் எங்கிட்ட வேண்டாம்."

"ஏய்! சும்மா அலட்டாதே. போ. உன் வேலையைப் பார்த்துக்கிட்டு..."

"என்னடி? இன்னிக்கு ஓவரா சவுண்ட் கொடுக்கிற? ஓ! இன்னிக்குப் போட்டியில ஜெயிச்சி என்னைத் தோற் கடிச்சிடலாம்னு கனவு எதுவும் கண்டியா?"

"நான் ஏன் கனவு காண வேண்டும்? திறமை இருக்கிறவங்க ஜெயிக்கப் போறோம்."

"ஹும்... திறமையா? அது இருந்தா மட்டும் போதுமா? அதிர்ஷ்டம் வேணும்டி. எனக்கு அது கொட்டிக் கிடக்கு. இன்னிக்கு நான்தான் ஜெயிக்கப் போறேன்... பார்க்கிறியா?"

"பார்க்கலாம்... முதல்ல ஜட்ஜ் வரட்டும். பிறகு பார்க்கலாம், யார் ஜெயிக்கிறாங்கன்னு."

வாய் விட்டுச் சிரித்தாள் பிரியங்கா. "அட! உனக்கு விஷயமே தெரியாதா? இன்னிக்கு ஜட்ஜா வரப்போறது என்னோட அண்ணன். ஜட்ஜ் மட்டுமில்ல. சீஃப் கெஸ்ட்டும் அவர்தான். அவர் கையால பரிசு வாங்கப் போறதும் நான்தான்." - பிரியங்கா இறுமாப்போடு சொல்ல, திலோத்தமா திடுக்கிட்டுப் போனவளாய் உமாவைப் பார்த்தாள்.

"ஆமா திலோ! கிருஷ்ணன் ஸாரோட வொய்ப்புக்கு உடம்பு முடியாமப் போயிடுச்சாம். அவர் வரல்ல. அதனால அதற்குப் பதிலா..."

"இளம் தொழிலதிபர் தி பேமஸ் ரஞ்சித் குமார் இந்த காலேஜோட ஓல்டு ஸ்டுடண்ட் அண்ட் கரஸ்பாண்ட் டெண்டோட பேமிலி பிரெண்ட் என் அண்ணன்தான் தலைமை தாங்குறார்.



"இப்பப் புரியுதா...? யார் ஜெயிக்கப் போறதுன்னு. என்னைக் கேட்டா நீ இங்கே நிற்கிறதே வேஸ்ட். நீயா கிளம்பிட்டா கொஞ்சம் கௌரவமா இருக்கும். இல்லன்னா எல்லார் முன்னாலும் தோற்றுப் போகணும். எப்படி வசதி?" - அலட்சியமாய்க் கேட்டவளிடம் உமா பதிலளித்தாள்.

"போதும் பிரியங்கா! உன் அண்ணன வர்றதுல எங்களுக்கும் சந்தோஷம்தான். பட்! அவர் உன்னைத்தான் தேர்ந்தெடுப்பார்ன்னு எப்படி இவ்வளவு உறுதியா நம்புற?"

"என்ன? என்ன கேட்டே?"

"அண்ணன் தங்கை உறவெல்லாம் உங்க வீட்டோடதான் இருக்கணும். இது காலேஜ். இங்க நடக்கிற போட்டியில ஜட்ஜா வர்றவர் எல்லாப் பெயிண்டிங்ஸயும் பார்த்திட்டுத்தானே முடிவெடுக்கணும். அதோட... இதை யெல்லாம் பார்வையிட உன் அண்ணன் மட்டும் வரல்ல... நம்ம புரொபஸர்ஸ், பிரின்சிபால் எல்லாரும்தான் வருவாங்க."

"ஆயிரம் பேர் வரலாம். ஆனா முடிவை அறிவிக்கப் போறது மை பிரதர்."

"வரட்டும்!" - என்றாள் திலோத்தமா.

"வரட்டும்... வந்து பார்க்கட்டும். அவருக்குக் கண்ணு தெரியுமில்ல?"

"ஏய்...!"

"கண்ணு தெரியுறவங்களுக்கு எதைத் தேர்ந்தெடுக் கணும்னு தெரியும். எனக்கு என் திறமை மேல நம்பிக்கை இருக்கு. நீ கிளம்பு!"

"எது? திறமையா? பாருங்கடி இந்த அம்மாவோட திறமையை. ஒட்டிய வயிறு... கண்ல கண்ணீர்... ஹேய்! திலோ... இதையெல்லாம் பார்க்கும்போது நீ ரொம்ப அனுபவிச்சு வரைந்த மாதிரி இருக்குதே!

"ஒருவேளை... இதெல்லாம் உங்க பேமிலியோட கடந்த கால ஆல்பமா? அதைப் பார்த்துதான் வரைஞ்சியா? இது யார் உன் அம்மாவா?" - எனக் கடைசிப் படத்தைக் காட்டிக் கேட்க, திலோத்தமா தனது ஆத்திரத்தை எல்லாம் திரட்டிப் 'பளார்' என அறைந்தாள்.

சட்டென்று அனைவரின் சத்தமும் அடங்கிவிட, பிரியங்காவின் கண்களில் அனல் தெறித்தது. அதற்குள் இரண்டு பேராசிரியைகள் அங்கு வந்துவிட மற்றவர்கள் அவசரமாய்க் கலைந்து சென்றனர். பிரியங்கா அசையாமல் நின்றாள்.

"என்னையா அடிச்சே? பிச்சைக்கார நாயே! இந்த நிமிஷத்தில இருந்து உன் அழிவு ஆரம்பமாகிடுச்சுடி. என்னை விட நாலு மார்க் முன்னே இருக்கிறதாலதானே உனக்கு இவ்வளவு ஆணவம்?

"அடக்குறேன்டி. உன் ஆணவம், ஆட்டம், துள்ளல், சந்தோஷம் எல்லாத்தையும் அடக்கி மண்ணாக்குறேன்டி. இந்த நாளைக் குறிச்சி வெச்சுக்க. இனிமே உன் வாழ்நாள் முழுக்க சிரிக்கவே மாட்டாய். உன்னை எப்படிக் கதறடிக்கிறேன் பார்!

"ஏன்டா இவகிட்ட மோதினோம்...? ஏன்டா பிரியங்காவைப் பகைச்சிக்கிட்டோம்னு நீ தினம் தினம் துடிக்கணும். நான் துடிக்க வைப்பேன். நிம்மதியில்லாம



துடிச்சி, என்னை மன்னிச்சிடு பிரியங்கான்னு என் கால்ல வந்து உன்னை விழ வைப்பேன். இது நடக்கும்." - கண்களில் வெறி மின்ன ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தவளை மிரண்டு போய்ப் பார்த்தாள் திலோத்தமா.

காலையில் கண்ட கனவு... அது ஏற்படுத்தியிருந்த உற்சாகம்... சற்று முன் வரை இருந்த நம்பிக்கை அனைத்தும் சுத்தமாய் மறைந்து போனது. எப்போதும் தன்னைக் கண்டால் அலட்சியமாய் முகம் சுழிப்பதும், ஏளனமாய்ப் பேசுவதும் பிரியங்காவின் இயல்பு.

ஆனால் நான் ஏன் இன்று கை நீட்டினேன்? இவளுடன் சரிக்குச் சரியாய் ஏன் சண்டைக்குப் போனேன்? துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பார்களே அம்மா! அது தெரிந்தும் ஏன் இவளிடம் பேசினேன்? எப்போதும் போல் ஒதுங்கிப் போயிருக்கலாமோ!

இல்லை! அது தவறு. ஒதுங்கியே போவதால்தானே தேடி வந்து வம்பிழுக்கிறாள். இவளுக்குக் கொடுத்ததுதான் சரி. இனி இப்படி வம்புக்கு வரமாட்டாள். இவள் எப்படித் தன் குடும்பத்தைப் பழிக்கலாம்? முதலில் இருந்தே இப்படி திருப்பிக் கொடுத்திருந்தால் விலகிப் போயிருப்பாள்.

இவளால் என்னை என்ன செய்துவிட முடியும்? இவளது மிரட்டலுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்? இன்னும் ஒரே மாதத்தில் படிப்பு முடிகிறது. அதன்பிறகு இவளை ஏன் சந்திக்கப் போகிறோம்? இவள் யாரோ... நாம் யாரோ? இவளது உருட்டல் மிரட்டலை எண்ணி வருத்தப்படுவது சுத்த முட்டாள்தனம்! - தன்னைத்தானே தேற்றிக் கொண்டு அமைதியாய் நின்று கொண்டாள்.

பேராசிரியைகள் இருவரும் அனைவரின் வரையு[illegible] திறனைக் கண்டு திருப்தியாய்ப் புன்னகைத்துக் கொண்டன[illegible]

"இதோ பாருங்கம்மா! எல்லாரும் அவங்க அவங்[illegible] டிராயிங் பக்கத்தில நின்னுக்கங்க. இன்னும் பைவ் மினிட்ஸ்ல பார்க்கிறவங்க வந்திடுவாங்க. சரியா...?"

"ஓ.கே. மேம்."

"திலோ! வாவ்! சூப்பரா வரைஞ்சிருக்கியே! வெரி நைஸ்!"

"தேங்க்யூ மேம்!"

"வரையுறத விட்டுடாதே திலோ. இந்தத் திறமை எல்லாருக்கும் அமைஞ்சிடாது. அப்பப்ப ஏதாவது வரைஞ்சிகிட்டே இரு."

"ஓ.கே. மேம்."

"இது நீயாவே கற்பனை பண்ணி வரைஞ்சியா? இல்லை, ஏதாவது புக்ஸப் பார்த்து வரைஞ்சியா?"

"நோ மேம். நானா கற்பனை செய்து வரைந்தது."

"சிம்ப்ளி சூப்பர்ப். ராதா! பாரேன். இந்தக் கண்ணீர்த் துளிகூட எவ்வளவு தெளிவா இருக்கு. இந்தக் குழந்தை யோட அழுகை எத்தனை தத்ரூபம்! வாவ்!" - தன்னுடன் வந்த சக ஆசிரியையிடம் சொல்லிக் கொண்டிருந்ததைப் பற்றி யெரியும் மனதோடு பார்த்துக் கொண்டிருந்தாள் பிரியங்கா.

"ம்... நிஜமாவே ரொம்ப அருமையா இருக்கு. நாம ஜட்ஜா இருந்தா இதையே தேர்ந்தெடுத்திடலாம். வர்றவர் எப்படி செலக்ட் பண்ணுவாரோ? அவருக்கு என்ன டேஸ்ட்டோ?"



"கண்ணு இருக்கிற யாருமே இந்த ஓவியத்தை ஒதுக்க மாட்டாங்க. ஓ.கே. பெஸ்ட் ஆப் லக். எல்லாரும் சைலண்ட்டா இருக்கணும். அவங்க எல்லாரும் வரும்போது குட்மார்னிங் சொல்லுங்க. உங்க படத்தைப் பார்க்கும்போது உங்களை நீங்களே அறிமுகம் செய்திடுங்க. ஓ.கே.?"

"ஓ.கே. மேம்!" - அனைவரும் ஒரே குரலில் சொல்ல, பேராசிரியைகள் புன்னகையோடு விலகிச் செல்ல, அதற்காகவே காத்திருந்த உமா திலோத்தமாவை நெருங்கி வந்தாள். மெல்லிய குரலில் கிசுகிசுத்தாள்.

"என்ன திலோ! இப்படிப் பண்ணிட்ட?"

"என்ன?"

"பிரியாகிட்ட போய்ப் பிரச்சனை பண்ணலாமா? அவளே ஒரு ரௌடி!"

"உமா! நானா வம்புக்குப் போனேன்?"

"நீ போகல்ல திலோ! ஆனா எப்பவும் போல அமைதியா இருக்க வேண்டியதுதானே! இன்னிக்கு ஏன் உனக்கு அவ்வளவு கோபம் வந்திச்சு?"

"நானும் எத்தனை நாள்தான் ஒதுங்கிப் போறது உமா? நான் அம்மா அப்பாவோட உள்ளே நுழையும்போது இவ அந்த சியாமிகிட்ட என்ன சொன்னா தெரியுமா?"

"என்ன சொன்னாள்?"

"ஐம்பதாயிரம் ரூபா பரிசுப் பணம் கிடைக்கும்னு கலெக்டர் உத்தியோகத்துக்கு லீவு போட்டுட்டுக் குடும்பமே வந்திருக்கு சியாமி. வேலைக்குப் போயிருந்தா இன்னிக்கு உள்ள சம்பளமாவது கிடைச்சிருக்கும். இப்ப அந்தப் பணமும் போயி ஆட்டோவுக்குத் தண்டமும் அழுதிருக்கா...

"கண்டிப்பா இவ ஜெயிக்கப் போறதில்ல. பிறகெதுக்கு குடும்பத்தோட வந்திருக்கா? இன்னிக்கு நம்ம காலேஜில அன்னதானம் பண்றாங்களா என்னன்னு கேட்கிறா! என் காதுல விழணும்னு சத்தமாச் சொன்னா, தெரியுமா?"

"அச்சோ!"

"அப்பவே பளார்ன்னு அறையணும்னு தோணிச்சு. அம்மா அப்பா கூட இருந்ததால காது கேட்காத மாதிரி வந்திட்டேன். திரும்பவும் இங்கே வந்து வம்பு பண்ணினா என்னால சும்மா இருக்க முடியுமா? நானும் மனுஷிதானே!"

"அதுக்கில்லை திலோ... அவ குணம்தான் நமக்குத் தெரியுமே!"

"அதனாலதான் உமா அவ என்ன பேசினாலும் காதுல விழாத மாதிரி ஒதுங்கிப் போனேன். அவ என்னைச் சொல்லியிருந்தாக்கூட விட்டிருப்பேன். என் அம்மாவை எப்படிச் சொல்லலாம்? என் குடும்பத்தை எப்படிப் பழிக்கலாம்?

"அடங்கிப் போறதால நம்மை என்ன மண்ணுன்னு நினைச்சாளா? நமக்கெல்லாம் கோபம் வராதா? இவளை இப்படியே விட்டதுதான் பெரிய தப்பு உமா!"

"ஷ்... சத்தமாப் பேசாதே! அவ நம்மளைத்தான் பார்க்கிறா!"

"பார்க்கட்டுமே! நான் இனிமே எதுக்கும் பயப்படுறதா இல்லை! நான் என்ன தப்பு பண்ணினேன்?"

"தப்பு திலோ! அவளைக் கைநீட்டி அடிச்சது தப்பு. உனக்கு நினைவிருக்கா? அவ லேட்டா வந்தான்னு திட்டின



புரொபஸரை வேலையை விட்டே தூக்க வெச்சாளே! உனக்கு மறந்து போச்சா?"

"உமா!"

"அவ ஒரு ராட்சஸி. காலேஜ் கரெஸ்பாண்டெண்ட் அவங்க ரிலேஷன்றதால இந்தக் காலேஜே தன் கைப்பிடிக்குள்ள இருக்கிறதா நினைச்சிட்டு இருக்கா!"

"அதுக்கு?"

"ஒரு வேளை உம் மேல் உள்ள கோபத்தில ஏதாவது செய்திட்டா?" - உமா சற்றுப் பயமாகவே கேட்க, திலோத்தமாவின் இதயம் திடுக்கென அதிர்ந்தது. மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"இது வீண் பயம் உமா. என்னைப் பற்றி நம் கல்லூரியில் எல்லோருக்கும் தெரியும். அதிலும் படிப்பிலயும் நான்தான் பர்ஸ்ட். இவளால என்னை ஒன்னும் பண்ண முடியாது. சும்மா மிரட்டிப் பார்க்கிறா!"

"என்னவோ திலோ! நான் உன் நல்லதிற்குத்தான் சொல்றேன். இனிமே இவகிட்ட எந்த வம்பும் வெச்சிக்காதே!"

"சரி..."

"இன்னும் ஒரு மாதம்தான் நாம எல்லாரும் ஒன்னா இருக்கப் போறோம். அதுக்குள்ள யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வரக்கூடாது திலோ. அதிலயும் நீ என் பெஸ்ட் பிரெண்ட். உனக்கு ஒரு கஷ்டமும் வரக் கூடாதுன்னு நினைக்கிறேன்."

"சரி உமா. இனி அவ இருக்கிற பக்கமே திரும்ப மாட்டேன்... போதுமா?"

"போதும். ஆமா! விஷ்ணு வரலையா?"

"அவனுக்கு எக்ஸாம் இருக்கு. அதனால வர முடியல்ல. ரொம்ப ஆசைப்பட்டான்."

"திலோ! அவங்க வர்றாங்க பாரு. அதோ நடுவில பிங்க் கலர்ல ஃபுல்ஹேண்ட் சர்ட் போட்டுட்டு வர்றாரே... அவர்தான் பிரியங்காவோட அண்ணனாம்!" - உமா கிசுகிசுப்பாய்ச் சொல்ல, நிமிர்ந்து பார்த்தாள்.

சுற்றிலும் கல்லூரியின் பேராசிரியர்கள் வர, நடுவே கம்பீரமாய் நிமிர்ந்த நடையோடு மற்றவர்களின் பேச்சிற்குச் செவி சாய்த்துக் கொண்டும் ஆமோதிப்பாய்த் தலையசைத்துக் கொண்டும் வந்து கொண்டிருந்தான் ரஞ்சித் குமார். முகத்திலும் நடையிலும் வெகு சுறுசுறுப்பு.

புன்னகைக்கும்போது பேரழகாய் மின்னிய முகம். வரிசையாய் நின்ற பெண்களின் காலை வணக்கத்தை நாகரிகமாய் ஏற்றுக் கொண்ட தன்மை, அவன் மீது மரியாதையை ஏற்படுத்தியது. அநாவசியமாய் யாரிடமும் நின்று வழியவில்லை. ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அனைத்து ஓவியங்களையும் இயல்பாய்ப் பார்த்துக்கொண்டே நடந்தான். தன்னை நெருங்கியதும் தயாராய் நின்றாள் திலோத்தமா. ஆனால் வந்தவன் அவளைக் கவனியாதது போல, மற்றவர்களுடன் பேசிக்கொண்டே தன்னைக் கடந்து செல்லவும் சற்றுப் பதறிக் குரல் கொடுத்தாள்.

"எக்ஸ்கியூஸ் மீ ஸார்..." - அவளது குரலில் மற்றவர்களின் நடை தடைப்பட, தானும் நின்றான் ரஞ்சித். பிரின்ஸிபால்தான் குரல் கொடுத்தார்.



"யெஸ்!"

"ஸார்! என்னோட பெயிண்டிங்ஸ பார்க்கவே இல்லையே!" - மெல்லிய குரலில் திலோத்தமா சொல்ல, கோபமாய்ப் பற்களைக் கடித்தார். ஆங்கிலத்தில் திட்டத் துவங்கினார்.

"எல்லாத்தையும் பார்த்திட்டுத்தானே வர்றோம். உனக்கென்ன அவசரம்? அவருக்கு ஆயிரம் வேலை இருக்கும். இங்க வரச் சம்மதிச்சதே பெரிய விஷயம். இதுல உங்க பக்கத்தில நின்னு பேசுறதுக்கு அவருக்கு டைம் இருக்குமா? பேசாம நில்லு. நீங்க வாங்க ஸார்!" - என அவரிடம் புன்னகை முகமாய்ச் சொல்ல, ரஞ்சித் குமார் திரும்பியும் பாராமல் ஓர் அலட்சியப் புன்னகையோடு முன்னே செல்ல, அவமானத்தில் முகம் சிவந்து போனாள் திலோத்தமா.

அடுத்து நின்ற இரண்டு பெண்களிடமும் சில நொடிகள் நின்று பார்த்துவிட்டுச் சென்றவர்கள் கடைசியாய் நின்ற பிரியங்காவின் ஓவியங்களை வெகு நேரம் நின்று சிலாகித்துக் கொண்டிருக்க, திலோத்தமா தவிப்பாய் உமாவைப் பார்த்தாள்.

"அமைதியாய் இரு!" - என அவள் பார்வையால் ஜாடை செய்ய, பற்களைக் கடித்துப் பொறுமையாய் நின்றாள் திலோத்தமா. முழுதாய்ப் பதினைந்து நிமிடங்கள் கழிந்த பிறகு கல்லூரியின் தாளாளர் தொண்டையைச் செருமிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"டியர் ஸ்டூடண்ட்ஸ்... இன்று நமது ஓவியப் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டுகள். அனைத்து

ஓவியங்களுமே கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. ஆனாலும் இரண்டு மட்டுமே பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் என்பதால் இப்போது நமது பெருமைக்குரிய இளம் தொழிலதிபர் வெற்றி பெற்றவர்களது பெயர்களை அறிவிப்பார்.

"வெற்றி பெற்றவர் மேடைக்கு அருகில் சென்று நிற்கவும். முடிவை அறிவித்ததும் பரிசு வழங்கப்படும். அதனால் உடனடியாக மேடையை நெருங்கிச் சென்று நின்று கொள்ளவும். இப்போது வெற்றி பெற்றவர்கள் விபரம்..." - என ரஞ்சித் குமாரிடம் அவர் சொல்ல, திலோத்தமா உமாவைப் பார்த்தாள்.

"என்ன உமா இது? எம் பேரை அவங்க கேட்கவே யில்லையே!"

"சைலண்ட்ஸ்! அங்கே என்ன பேச்சு?"

"ஸ... ஸாரி ஸார்!" - குரல் நடுங்கச் சொன்னவளை லேசான ஏளனத்தோடு பார்த்துவிட்டு ரஞ்சித் குமார் பேச ஆரம்பித்தான்.

"டியர் ஸ்டூடண்ட்ஸ். இப்போ வின்னர்ஸ் பேரைச் சொல்லப் போறேன். அதுக்கு முன்னால ஒரு விஷயம். உங்க யாரையுமே எனக்கு இதுக்கு முன்னால தெரியாது. அதனால என்னோட தேர்வை நீங்க முழு மனசோட ஏத்துக்கணும். யாரும் மனவருத்தப்படக் கூடாது. ஓ.கே.வா?

"இப்போ வின்னர்ஸ் நேம், முதல் பரிசு, கே. பிரியங்கா எம்.பி.ஏ. ஃபைனல் இயர்." - அவன் சொல்லி முடிப்ப தற்குள் கரகோஷம் காதைப் பிளக்க, திலோத்தமாவின் முகம் பொலிவையிழந்தது. தவிப்பாய் அடுத்த பெயருக்காக அவனைப் பார்த்தாள்.



"இரண்டாவது பரிசு எம். சுசித்ரா, செகண்ட் இயர் பி.காம்." - மீண்டும் கரகோஷம் ஒலிக்க, சுத்தமாய் நொறுங்கிப் போனாள் திலோத்தமா. கண்களில் நீர் திரண்டது. மறைக்க இயலாமல் வேறுபுறமாய்த் திரும்பிக் கொண்டாள்.

தன்னை வேண்டுமென்றே புறக்கணித்து விட்டான் என்று புரிந்தது. ஆனால் ஏன் எதற்காக என்று புரியவில்லை. இதை எப்படிச் சென்று கேட்பது? வெற்றி பெற்றவர்களது பெயரை அறிவிக்கும் முன்பே பெரிய உத்தமனாய்ச் சொன்னானே!

உங்களை எனக்கு முன்பின் தெரியாது என்று. பிறகெப்படி என்னை என் ஓவியங்களை மட்டும் உதாசீனப்படுத்த முடிந்தது. பேராசிரியர்கள், தாளாளர் என அனைவரும் கைகளைத் தட்டிக் கொண்டிருக்க, இவர்களிடம் என்ன கேட்பது? அப்படியே கேட்டாலும் அவப் பெயர்தான் மிஞ்சும் எனத் தலையைக் குனிந்து கண்ணீரைக் கட்டுப்படுத்தினாள்.

"ஓ.கே. ஸ்டூடண்ட்ஸ். எல்லாரும் ப்ரோக்கிராம் நடக்குற இடத்துக்குப் போகலாம்," - என்றவாறே வந்தவர்கள் வெளியேற, நிமிர்ந்தும் பாராமல் நின்றவளைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டே வெளியேறினான் ரஞ்சித் குமார்.

அனைத்து மாணவிகளும் வெளியேறிக் கொண் டிருக்க, அசையாமல் நின்ற திலோத்தமாவை அழைத்தாள் உமா. "வா திலகா... போலாம்."

"நீ போ... வர்றேன்."

"வா... சேர்ந்தே போலாம்."

"என்னைக் கொஞ்சம் தனியா விடு உமா. மூனு நாளா கண்விழிச்சி கை நோக வரைஞ்ச படம். இனி இது குப்பைக்குத்தானே போகும். கொஞ்ச நேரம் பார்த்திட்டு வர்றேன். நீ போ." - கண்ணீரோடு கடுப்பாய்ச் சொன்னவளின் பின்னே கை தட்டும் ஓசை கேட்டது. இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப, முகம் முழுக்க வன்மத்துடன் ஏளனச் சிரிப்போடு நின்று கொண்டிருந்தாள் பிரியங்கா.

"என்னடி... அழறியா? அழு. இதுதான் ஆரம்பம். இனி தினம் தினம் இதே மாதிரி அழப்போற. என்னையா அறைஞ்ச? உன் வாழ்நாள் முழுக்க இதை மறக்க முடியாதுடி. வரட்டுமா?

"ஆங்! என்னடா... வந்தவன் நம்ம படத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கலையேன்னு குழப்பமா இருக்குமே! உன் குழப்பத்தை நான் தீர்த்து வைக்கிறேன். இதோ பார்த்தியா? இதுல ஒரே ஒரு போன்தான் பண்ணினேன். நான் என்ன சொன்னேனோ என் அண்ணன் அதை அப்படியே செய்திட்டான். எனக்காக என் அண்ணன் எதையும் செய்வான்!" - இறுமாப்புடன் தன் கையிலிருந்த செல்போனை அவளது முகத்தின் முன்னே ஆட்டிக் காட்டினாள் பிரியங்கா.

## 4

எந்தன் பொன்வண்ணமே - அன்புப்
பூ வண்ணமே! நெஞ்சில் போராட்டமா
கண்ணில் நீரோட்டமா - அதை
நான் காணவோ மனம் தாங்காதம்மா!



**வி**டிந்து வெகுநேரமான பின்னும் படுக்கையை விட்டு எழாமல் கண்ணை மூடிப் படுத்திருந்தாள் திலோத்தமா. கண்கள் மட்டுமே மூடியிருக்க மனம் விழித்துக் கொண்டு நேற்றைய நிகழ்ச்சியை நினைத்துக் குமுறிக் கொண்டு இருந்தது.

எத்தனை அலட்சியம்! என்ன ஒரு ஆணவம்! அவளோட அண்ணன்தானே! அவளைப் போலத்தான் இருப்பான்! இவனெல்லாம் என்ன படித்தான்? பெரிதாய் என்ன சாதித்து விட்டான்! இரும்புப் பொருட்களைத் தயாரிப்பவனுக்கு ஓவியத்தைப் பற்றி என்ன தெரியும்?

அவனைத் தலைமை தாங்க அழைத்தவர்களைச் சொல்ல வேண்டும். கொஞ்சம் பணக்காரனாய் இருந்தால் போதும்... வாலாட்டிக் கொண்டு அவன் பின்னால் சென்று விடுவார்கள். பிறகேன் அவனுக்கு அத்தனை ஆணவம் வராது?

கடைசி வரை தன் ஓவியத்தைப் பார்க்கவே இல்லையே! அதற்கு அவன் கூறிய காரணம் இன்னும் அவமானமாய் இருந்தது. பிரியங்காவிற்குப் பரிசைக் கொடுத்துவிட்டு அவன் பேசியது தெளிவாகவே கேட்டது.

"பசி, பட்டினிக் கொடுமை, வறுமை யெல்லாம் மொத்தமாய் அழிய வேண்டும். அதை ஓவிய வடிவில் கூட நான் பார்க்க விரும்புவதில்லை. மனதைத் திடமாக்கும், உற்சாகப்படுத்தும், கண்ணுக்கு இனிய காட்சிகளைத்தான் எல்லோரும் விரும்புவோம். இனி நடக்கும் போட்டிகளில்கூட நீங்கள் மனதிற்கு இனிய காட்சிகளையே வரையுங்கள்.

"இருந்தாலும் எல்லா மாணவியும் ரொம்பக் கஷ்டப்பட்டு வரைஞ்சிருப்பீங்க. என்னோட சார்பா தேர்வு

பெறாத மாணவிகளுக்கு ஆறுதல் பரிசாக ஐயாயிரம் ரூபாய் தரலாம் என்று நினைக்கிறேன். இதற்கு ராமகிருஷ்ணன் ஸார் சம்மதிக்கணும்," - என்றதும் மேடை முன் இருந்தவர்கள் உற்சாகமாய்க் கரகோஷம் எழுப்பினர்.

கல்லூரியின் தாளாளர் முகம் முழுக்கப் பூரிப்போடு மைக்கின் முன்னால் வந்து, "இது ரொம்ப சந்தோஷப்பட வேண்டிய விஷயம். தாராளமாய்ச் செய்யுங்கள்!" - என்றதும் மீண்டும் கரகோஷம் எழுந்தது.

போட்டி நடந்த ஹாலில் கண்ணீரோடு நின்று கொண்டிருந்த திலோத்தமாவிற்குள் பொசுபொசுவெனப் புகைந்தது. பிச்சை போடுகிறானாக்கும். இவனிடம் கைநீட்டிப் பணம் வாங்குவதா! அதைவிட அவமானம் ஒன்று உள்ளதா? என்ன ஆனாலும் சரி. இன்று மேடை ஏறப் போவதில்லை. இவனிடம் ஆறுதல் பரிசு பெறப் போவதில்லை. அவன் கண்ணில் படப் போவதுமில்லை. கண்ணீரைத் துடைத்து விட்டுக் கல்லாய் நின்று கொண்டாள்.

மேடையில் பேசுவது ஒலிபெருக்கியின் உதவியால் இங்கு வரை கேட்டது. "ஓவியப் போட்டியில் கலந்து கொண்ட மாணவியர் மேடைக்கு வந்து பரிசை வாங்கிச் செல்லவும். வரிசையா வாங்கம்மா."

உமா வேகமாய் வந்தாள். "திலோ! இங்க நின்னு என்ன பண்ணிட்டு இருக்க? அங்கே அனௌன்ஸ் பண்றது கேட்கலையா?"

"கேட்குது!"

"பிறகேன் வரல்ல? வா! மேம் உன்னைக் கூப்பிட் டாங்க."



"நான் வரல்ல!"

"என்ன திலோ?"

"நான் வரல உமா! அவன் போடுற பிச்சைக்காசு எனக்கு வேண்டாம்."

"விளையாடாதே திலோ! அவர் உனக்கு மட்டும் தரல்ல. உங்க எல்லாருடைய ஓவியத்தையும் பார்த்திட்டு அதைப் பாராட்டித் தர்ற ஆறுதல் பரிசு இது!"

"யார் கேட்டது இவன்கிட்ட? இவன் பணக்காரன்னு எல்லாருக்கும் தெரியணுமாம். அதோட இப்படிப் பணத்தை வாரியிறைச்சா சுய விளம்பரம் பண்ணின மாதிரியும் ஆயிடுச்சே! அதுக்குத்தான் இந்த ஆறுதல் பரிசு ட்ராமா எல்லாம்."

"திலோ! இது பிடிவாதம் பண்ற நேரம் இல்ல. அங்க எல்லாரும் வாங்கிட்டு இருக்காங்க. நீ மட்டும் வரலன்னா எப்படி? கரஸ்பாண்டெண்டுக்குத் தெரிஞ்சா என்னாகும்? வா என்கூட!" - கையைப் பற்றி அழைத்த உமாவை உதறினாள் திலோத்தமா.

"விடு உமா! நான் வரல்ல. அந்த ஆளோட மூஞ்சியப் பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கல்ல. எவ்வளவு அலட்சியமா முகத்தைத் திருப்பிட்டுப் போனான் பார்த்தியா? என் படங்களைப் பார்க்காமலே என்னை ரிஜெக்ட் பண்ணினா என்ன அர்த்தம்?"

"அதான் அந்த அடங்காப்பிடாரி தன் வாயாலயே எல்லாத்தையும் சொல்லிட்டாளே! நீ அவளை அறைஞ்சது தப்பு. அதை அவ உடனே போன் பண்ணி அண்ணன்கிட்ட சொல்லியிருப்பா போல. அதான் அப்படி நடந்திருக்கார்."

"தங்கச்சி சொன்னா இவன் என்ன ஏதுன்னு விசாரிக்க மாட்டானா? அவன் தங்கச்சியோட பேச்சைக் கேட்டு நடக்க இது ஒன்னும் அவன் வீடு இல்ல."

மைக்கில் பேராசிரியரின் குரல் கணீரென்று ஒலித்தது. "ஓவியப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் ஒரு ஸ்டூடண்ட் இன்னும் வரவில்லை. யார் அது?"

"திலோத்தமா. எம்.பி.ஏ. ஸ்டூடண்ட்."

"திலோத்தமா எம்.பி.ஏ. எங்கிருந்தாலும் உடனே மேடைக்கு வரவும்."

"போச்சு! உன் பேரைச் சொல்லியாச்சி. சீக்கிரம் வா!"

"திலோத்தமா! ப்ளீஸ் கம் டு த ஸ்டேஜ். குவிக்!" - மீண்டும் குரல் வர, அவசரமாய் ஹாலை விட்டு வெளியே வந்தாள். எதிரே வந்த பேராசிரியை அதட்டினாள்.

"உனக்கு மட்டும் தனியாக் கூப்பிடணுமா? சீக்கிரம் போ!"

"ஸாரி மேம்!" - என்றவள் விறுவிறுவென மேடையை நெருங்க, மேடையில் இருந்தவர்களின் முகம் கறுத்தது. உள்ளே எழுந்த நடுக்கத்தை மறைத்து இயல்பாய் மேடையேறினாள். கையில் பணம் அடங்கிய கவரோடு நின்று கொண்டிருந்த ரஞ்சித் குமாரை ஏறிட்டும் பாராமல் மைக் முன் நின்று கொண்டிருந்த பேராசிரியரை நெருங்கினாள்.

"எக்ஸ்கியூஸ் மீ ஸார்!"

"அவர்கிட்ட போய்ப் பரிசை வாங்கிட்டுப் போம்மா!"



"வேண்டாம் ஸார்."

"வ்வாட்?"

"ஒன் மினிட் ஸார்!" - என்றவள் மைக்கை லேசாய்த் தன்புறம் திருப்பி, "தயவு செய்து என்னை யாரும் தப்பா நினைச்சுக்காதீங்க. மிஸ்டர் ரஞ்சித் குமார் சொன்னது போல் வறுமை பசி பட்டினி எல்லாம் ஒழிவது சாத்தியமில்லை. என்றாலும் எனக்குத் தரப்போகும் இந்த ஆறுதல் பரிசுத் தொகையை அவர் சாலையோரம் இருக்கும் பிச்சைக்காரர்களுக்குப் பகிர்ந்து அளித்தால் அவர்களது ஒரு நாள் பசியையாவது போக்கலாமே!

"அதனால இந்தத் தொகையை நான் அவரிடமே கொடுத்து விடுகிறேன். இந்த நல்ல காரியத்தை அவர் செய்தால் விளம்பரம் கிடைக்காவிட்டாலும் மனநிறைவும் புண்ணியமும் நிச்சயம் கிடைக்கும். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். தேங்க்யூ ஸார்!" - சிரித்த முகமாகவே திலோத்தமா சொல்ல, கையில் பணத்தோடு நின்ற ரஞ்சித்தின் முகம் வாடியது. புருவங்களை உயர்த்தி அவளை வியப்பாய்ப் பார்த்தான். அதற்குள் சக மாணவிகள் உற்சாகமாய்க் கரகோஷம் எழுப்பினர்.

"நான் இந்தப் போட்டியில கலந்துகிட்டது பணமோ பரிசோ கிடைக்கும்ன்ற ஆசையில இல்ல. என்னோட திறமையை வெளிக்காட்டுறதுக்குத்தான். அந்த வகையில எனக்கு வெற்றிதான். என்னோட பெயிண்டிங்ஸ பார்த்த என் அம்மாவோட கண்ல கண்ணீரைப் பார்த்தேன்.

"அதைவிட விலை மதிக்க முடியாத பரிசு எதுவுமே இல்லை. அதைத்தான் நான் பெரிய வெற்றியா

நினைக்கிறேன். வெற்றியடைஞ்ச எனக்கு ஆறுதல் பரிசு எதற்கு? மிஸ்டர் ரஞ்சித் குமார் சொன்ன மாதிரி வறுமை பசி பட்டினி மொத்தமாய் அழிந்தால் நம்ம எல்லாருக்குமே சந்தோஷம்தான். தேங்க்யூ ஸார்!" - என்றபடி கைகூப்பியவாறே மேடையை விட்டு நிமிர்வுடன் இறங்க, ரஞ்சித் குமாரிடம் எந்த அசைவும் இல்லை.

தாளாளர்தான் திணறிப் போனார். மற்றவர்களின் முகத்தில் ஈயாடவில்லை. ஆனால் திலோத்தமாவின் நடையைப் படிப்படியாய்க் கைதட்டி வரவேற்றனர் மாணவியர். சகுந்தலாவும் ராகவனும் மிரண்டு போயிருக்க, பெற்றவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள் திலோத்தமா.

வீடு வந்து சேர்ந்த பிறகே, தான் செய்து விட்டு வந்த காரியம் உறுத்த, யாரிடமும் எதுவும் பேசாமல் படுத்து விட்டாள். மனதில் இருந்த ஆத்திரத்தைக் கொஞ்சம் திருப்பியடித்ததில் ஏற்பட்ட நிம்மதியைவிடக் காலையில் கல்லூரியில் ஆசிரியர்களை எப்படி எதிர் கொள்ளப் போக்றோம் என்ற பயம் தூங்க விடாமல் செய்தது.

இதில் பிரியங்காவின் பேச்சு வேறு அவ்வப்போது இடறிக் கொண்டிருந்தது. இரவு முழுக்கத் தூக்கமின்றிக் கிடந்தது தலையை வலித்தது. வழக்கமாய் விடியும் முன் எழும் மகள் இன்று இன்னும் படுக்கையை விட்டு எழாமல் இருக்கவே, ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்தவாறே அறைக்குள் நுழைந்தாள்.

"திலோம்மா!" - தாயின் பரிவான குரலில் கண்களைத் திறந்தாள்.



"ம்மா!" - என்றவாறு எழுந்து அமர்ந்தாள்.

"என்னடா இது? காலேஜுக்குக் கிளம்ப வேண்டாம்? எழுந்திரும்மா."

"அம்மா! இப்படி உட்காருங்களேன்!"

"என்னம்மா?" - என்றவாறு மகளின் அருகே அமர்ந்து கொண்டாள்.

"நான் செய்தது சரிதானேம்மா!"

"எதைக் கேட்கிறாய்?"

"நேற்றுக் காலேஜில் பேசியது. ஆறுதல் பரிசை மறுத்தது."

"பெரிய தப்பு!" - என்றவாறு அறைக்குள் நுழைந்தான் விஷ்ணு. பள்ளிச் சீருடையோடு கண்ணாடி முன் தலைவாரிக் கொண்டே தமக்கையிடம் கேட்டான்.

"அக்கா! நீ ஏன் இப்படி இருக்கிறாய்?"

"ஏன்டா?"

"பிழைக்கத் தெரியாத பெண்ணாய் இருக்கிறாயே! ஐயாயிரம் ருபாய் வேணாம்னு சொல்லிட்டு வந்திருக்கிறாயே! பணத்தின் அருமை தெரிகிறதா உனக்கு?"

"விஷ்ணு! நீ பேசாம ஸ்கூலுக்குக் கிளம்பு!" - அதட்டிய அன்னையைக் கோபமாய்ப் பார்த்தான்.

"எல்லாம் நீங்க கொடுக்கிற இடந்தாம்மா. இவ படம் வரையும்போதே எனக்குத் தெரியும். நிச்சயமா இது தேறாதுன்னு. காலத்துக்கு ஏத்த மாதிரி வரைன்னு சொன்னேன். கேட்டாளா? சரி. ஏதோ அவளுக்குத்

தோணினதை வரைஞ்சா. கிடைச்ச பரிசை எல்லாரையும் மாதிரி வாங்கிட்டு வந்திருக்கலாமில்ல.

"ஏங்கா! உனக்கென்ன ஐயாயிரம் ரூபா அவ்வளவு சீப்பா போச்சா? நம்ம அப்பாவோட இருபத்தஞ்சு நாள் சம்பளம் அது. நம்ம குடும்பத்தோட ஒரு மாச மளிகைக்கான செலவு. நம்ம நாலு பேருக்கும் ஒரு செட் ட்ரஸ் எடுத்திருக்கலாம். உன் காலேஜ் பீஸ் கட்டியிருக்கலாம்.

"இல்லன்னா இந்தப் பணத்தில உனக்கு ஒரு மோதிரமோ கம்மலோ வாங்கியிருக்கலாம். இப்படி ஏதாவது ஒரு வகையில யூஸ் பண்றத விட்டுட்டு பிச்சைக் காரங்களுக்குப் போடச் சொன்னியா? உம் மனசுல என்ன பெரிய கர்ண மகாராஜான்னு நினைப்பா?"

"டேய்! எவனோ ஒருத்தனோட பைசாவில நம்ம வீட்டுத் தேவைகளை ஏன்டா நிவர்த்தி பண்ணணும்? நாம என்ன காசுக்கு வக்கற்றுப் போயா இருக்கோம்?"

"அக்கா! நாமளா யார்கிட்டயும் போய்க் கையேந்த வில்லை. அது உன் திறமைக்குக் கிடைச்ச பரிசு!"

"இல்ல... அது என் திறமைக்குக் கிடைச்ச பரிசு இல்ல. என்னை அவமதிக்கக் கொடுக்கப்பட்ட பணம். அதனாலதான் அதை அவனுக்குத் திருப்பிக் கொடுத்தேன்."

"அவர் ஏன் உன்னை அவமதிக்கணும்?"

"என்னோட படங்களை அந்த ஆள் பார்க்கவே இல்லை. பார்த்துட்டு ரிஜெக்ட் பண்ணியிருந்தாக்கூட என் மனம் ஆறியிருக்கும்!"

சகுந்தலா நிமிர்ந்தாள். "திலோம்மா... என்ன சொல்ற? உன் படத்தைப் பார்க்கவே இல்லையா? ஏன்?"



சட்டென்று தடுமாறிப் போனாள். "அது... அம்மா! அதான் சொன்னேனே... அந்த ஆளோட தங்கையும் போட்டியில கலந்திருந்தா. அதனால வேறு யாரோட ஓவியங்களையும் அவர் நின்னு நிதானமாப் பார்க்கல்ல. சும்மா பேருக்கு வந்திட்டுப் போய் அவர் தங்கையை செலக்ட் பண்ணிட்டார்ம்மா!"

"இதெல்லாம் பெரிய இடத்துல சகஜம்மா. இதுக் கெல்லாம் கோபப்பட்டா முடியுமா? இவ கோபத்தால யாருக்கு நஷ்டம்?"

"கண்டிப்பா நமக்கு நஷ்டமில்ல!"

"எது நஷ்டமில்ல? நீ படம் வரையுறதுக்கு வாங்கின பொருள், இங்கே இருந்து ஆட்டோவில எடுத்திட்டுப் போனது, தினமும் நடுச்சாமம் தாண்டியும் உட்கார்ந்து விளக்கைப் போட்டுட்டு வரைஞ்சியே - இதெல்லாம் நஷ்டமில்லையா?" - விஷ்ணு கேட்க, திலோத்தமாவின் முகம் மாறியது. விழிகளில் நீர் தளும்பியது.

"தம்பி! நீ... நீ என்ன சொல்றே?"

"நீ படம் வரையுறதுக்கான செலவைச் சொல்றேன்!"

"கணக்குப் பார்க்கிறியா?"

"இல்ல... உனக்குத் தெரியப்படுத்துறேன். அக்கா! உனக்கு நம்ம கஷ்டம் தெரியக் கூடாதுன்னு அப்பா நீ கேட்கிறதெல்லாம் வாங்கித் தர்றாங்க. ஆனா ஒவ்வொரு செலவுக்கும் அவங்க படுற கஷ்டம் தெரியுமா உனக்கு?"

"த... தம்பி!"

"நம்ம மாதிரி மிடில் கிளாஸ்காரங்களுக்கெல்லாம் ரோஷம் இருக்கக் கூடாதுக்கா!"

"விஷ்ணு! நீ ஸ்கூலுக்குப் போன்னு சொன்னேன்!" - சகுந்தலாவின் குரல் உயர, கோபமாய்ச் சீப்பை எறிந்தான்.

"இப்படியே என் வாயை அடைச்சிடுங்க. துட்டு வேண்டாம்னு வந்தது கூடத் தப்பில்ல. ஸ்டேஜ்ல ஏறிப் பெரிய அரசியல்வாதி மாதிரி பேசிட்டு வந்திருக்கா. அந்த ரஞ்சித் குமாரை இன்சல்ட் பண்றதா நினைச்சிக்கிட்டு இவளுக்கு இவளே சூனியம் வெச்சிட்டு வந்திருக்கா!"

"என்னடா சொல்ற?"

"இவ காலேஜ் கரஸ்பாண்டண்ட் யார் தெரியுமா? அந்த ரஞ்சித் குமாரோட வருங்கால மாமனார். அவரோட பெண்ணைத்தான் இந்த ரஞ்சித் குமாருக்குக் கட்டிக் கொடுக்கப் போறாராம். இவ என்னன்னா அவர் முன்னாலயே அவரோட மருமகனை அலட்சியமாப் பேசிட்டு வந்திருக்கா!

"இவ மேல ஏகப்பட்ட கடுப்புல இருக்கிறாராம். ஏதாவது காரணத்தைச் சொல்லி இவளைக் காலேஜில இருந்தே டிஸ்மிஸ் பண்ணக்கூட சான்ஸ் இருக்குதாம்!" - விஷ்ணு சொல்ல, திலோத்தமாவின் உடல் ஒருமுறை நடுங்கியது.

சகுந்தலா பதறி எழுந்து மகனைப் பற்றிக் கொண்டாள். "டேய்! என்னடா சொல்ற? இதெல்லாம் உனக்கு யார் சொன்னாங்க?"

"என் பிரெண்ட் ரவியோட அக்கா இவ காலேஜில தாம்மா படிக்கிறாங்க. அவங்கதான் சொன்னாங்களாம். நேத்து நைட் அவன்கிட்ட கைடு வாங்கப் போனேன். அப்பத் தான் சொன்னான்."



"ஐயோ!"

"நேத்து நைட்டே சொல்லியிருப்பேன். அப்பா இருந்தாங்களே... அவங்க காதுல விழுந்தா என்னாகும்? அதான் சொல்லல. இதோ பாருக்கா! இத்தனை வருஷம் அப்பா பட்ட கஷ்டமெல்லாம் வீணாகிப் போகுது. நாமல்லாம் எல்லாத்தையும் சகிச்சிக்கிட்டு அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகக் கத்துக்கணும்.

"நமக்கெதுக்கு பெரிய இடத்துப் பொல்லாப்பு. அவர் வீட்டுப் பொண்ணை அவர் விட்டுக் கொடுப்பாரா? அதனால தன்னோட தங்கையை ஜெயிக்க வெச்சிருக்கலாம். நமக்கென்னன்னு விட்டுட்டுப் போவியா? உனக்கேன் அவ்வளவு ரோஷம் வருது?

"பணம் போனா பரவாயில்லக்கா. ஆனா படிப்பு? அது போனா வாழ்க்கையே போயிடாதா? இந்தப் படிப்பை முடிச்சிட்டு வேலைக்குப் போகணும்னு சொன்னியே! எப்படிப் போவ? அந்த ஆளுக்கு எல்லா இடத்திலேயும் செல்வாக்கு இருக்கு. அவங்க நினைச்சா என்ன வேணாலும் பண்ணலாம்."

"டேய்... சும்மா நிறுத்துடா! நான் என்ன பெரிய தப்பு பண்ணிட்டேன்? சும்மா பயமுறுத்தாதே!"

"நான் ஒன்னும் பயமுறுத்தல! இதெல்லாம் நடந்திடக் கூடாதுன்னு பயப்படுறேன். அப்பாவுக்குத் தெரியுறதுக்குள்ள இதை எப்படியாவது சரி பண்ணிடணும்னு பதறிட்டு இருக்கேன்."

"விஷ்ணு! இப்ப என்னப்பா பண்றது?" - சகுந்தலா பரிதவித்தாள்.

"அம்மா! பயப்படாதீங்கம்மா! இன்னிக்கு அக்கா காலேஜுக்குப் போக வேண்டாம்."

"ஏன்?"

"சொல்றதைக் கேளுக்கா. நீ வீட்ல அமைதியா இரு. எனக்கு இன்னிக்கு ஆப்-டே தான். மதியத்திற்குப் பிறகு நானும் ரவியும் அந்த ரஞ்சித் குமாரைப் போய்ப் பார்த்திட்டு வரணும்னு பிளான் பண்ணியிருக்கோம்."

"நீ ஏன்டா அவரைப் பார்க்கப் போகணும்?"

"ம்...! நீ செய்துட்டு வந்த காரியத்திற்குப் பரிகாரம் பண்ண!"

"விஷ்ணு! நீ ஏன் இப்படிக் குதிக்கிற? நான் என்ன பாவம் பண்ணிட்டேன்? நீ அந்த ஆளைப் போய்ப் பார்க்கிறது எனக்குச் சுத்தமாப் பிடிக்கல."

"நீ செய்யுறது எங்க யாருக்குமே பிடிக்கல்ல. நான் என்ன உன்னையா போய் மன்னிப்புக் கேட்கச் சொன்னேன்? நான்தானே போறேன்னு சொன்னேன்!"

"என்ன? மன்னிப்பா? அவன்கிட்டயா? எதுக்கு... எதுக்குக் கேட்கணும்?"

"எதுக்கா? ஒரு பிரபல தொழிலதிபரை - உங்க கல்லூரி விழாவைத் தலைமை தாங்க வந்தவரை அத்தனை பேர் முன்னால அலட்சியமாப் பேசியிருக்க. அதுவும் மேடை ஏறி... இது தப்பில்லையா?"

"டேய்! அந்த ஆள்தான் என்னை அலட்சியமாப் பேசினான். அதுக்கு நான் பதிலடி கொடுத்தேன். தட்ஸ் ஆல்!"



"அவர் உன் பேரைச் சொல்லி நீ வரைஞ்சதைப் பத்தி அலட்சியமாப் பேசினாரா?"

"இ... இல்ல..."

"பின்னே? நீ எப்படி அவரை நேருக்கு நேராய் நின்று அலட்சியப்படுத்தலாம். உனக்கு எதுவுமே புரியலக்கா. ஒரு சில வார்த்தைகள்தான் சிலரோட வாழ்க்கையையே அடியோட புரட்டிப் போட்டுடுது. எத்தனை இடத்தில பார்க்கிறோம்."

"விஷ்ணு! நீ சொல்லு... என்ன பண்ணப் போற?" - எனக் கேட்ட தாயைத் திரும்பிப் பார்த்தான்.

"அம்மா! அவரோட கம்பெனி ரவிக்குத் தெரியுமாம். நாங்க ரெண்டு பேரும் போய் அவரைப் பார்த்துப் பேசி ஸாரி கேட்டுட்டு வர்றோம்."

"விஷ்ணு..."

"திலோ! நீ சும்மா இரு. விஷ்ணு! போயிட்டுப் பொறுமையாப் பேசிட்டு வாடா. எதுவும் தப்பாப் பேசிடாதே! அக்காவோட படிப்புக்கு எந்த ஆபத்தும் வந்திடக் கூடாது."

"அம்மா! அவன்தான் சின்னப்பையன். கண்ட கண்ட சினிமாவையும் பார்த்திட்டு ஏதேதோ கற்பனை பண்ணிட்டுப் பேசுறான்னா... நீங்களும் அதை நம்புறீங்களா?"

"ஏய்! வாயை மூடுடி. நீ நேத்து மேடையில பேசும்போதே சுத்தியிருந்த எல்லாரும் பயந்துதான் பேசினாங்க. டீச்சர்ஸ்கூட பயந்திட்டாங்க. ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா அப்பாவால தாங்கிக்க முடியுமா? பேசாம இரு. எல்லாத்தையும் தம்பி பார்த்துப்பான்.

"விஷ்ணு! நீ பார்த்துப் பேசிட்டு வா. பொறுமையாப் பேசு! அக்கா வேணும்னு பேசல்ல... இயல்பாவே அவளுக்கு உதவுற குணம் உண்டுன்னு சொல்லு. அவரைப் பத்தி எல்லாரும் ரொம்பப் பெருமையாச் சொன்னாங்கடா. ரொம்ப நல்லவராம். நீ சொன்னா புரிஞ்சுப்பார்."

"சரிம்மா! நான் ஸ்கூலுக்குக் கிளம்புறேன். இந்த விஷயம் அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்," – என்றவாறு ஸ்கூல் பேக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டான் விஷ்ணு.

"அம்மா! நானும் காலேஜுக்குக் கிளம்புறேன்!" – என எழுந்தவளை அதட்டினாள் சகுந்தலா.

"என்ன... விளையாடுறியா? இவ்வளவு நேரமா அவன் என்ன சொல்லிட்டுப் போறான்?"

"ம்மா! சின்னப் பய அவன் சொல்றதக் கேட்டுட்டு நான் வீட்ல இருக்கணுமா?"

"நல்லதை யார் சொன்னாலும் கேட்டுக்கணும். பேசாம வீட்ல இரு."

"அம்ம்மா! தேவையில்லாம நீங்களும் பயந்து என்னையும் ஏன் பயமுறுத்துறீங்க? இது ஒரு சாதாரண விஷயம். இதுக்குப் போய்க் காலேஜுக்கு லீவு போடணுமா?"

"எதுடி சாதாரண விஷயம்? அவங்கள்லாம் பெரிய இடம். அவங்ககிட்ட சரிக்குச் சரியா மோதினது சாதாரண விஷயமா?"

நெற்றியில் அறைந்து கொண்டாள் திலோத்தமா. "கடவுளே! ஏம்மா இப்படி ஒன்றுமில்லாத விஷயத்திற்கெல்லாம் பயந்து சாகுறீங்க? அவர் என்ன எங்க



கல்லூரியின் பிரின்சியா? என்னைப் படிப்பை விட்டு நிறுத்த? தம்பிதான் புரியாமப் பேசுறான்னா..." – திலோத்தமா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் உமாவின் இரு சக்கர வாகனம் வந்து நின்றது.

"இதோ உமாவே ரெடியாகி வந்துட்டா. டயமாச்சு. என்னை விடுங்கம்மா... நான் கிளம்பணும்."

"நீ வர வேண்டாம் திலோ!" – என்றவாறு உள்ளே வந்த உமாவின் முகம் இருண்டு போயிருந்தது. குரலில் பதட்டம் தொனித்தது. திலோவின் முகம் மாறியது.

"உமா! நீ என்ன சொல்றே?"

"திலோ! நீ இன்னிக்கு காலேஜுக்கு வர வேண்டாம். வீட்ல இரு. உடம்பு முடியலன்னு என்கிட்ட லீவு லட்டர் எழுதித் தா. அதற்காகத்தான் வந்தேன். சீக்கிரம்!"

"உமா! என்னாச்சு உனக்கு? நான் ஏன் லீவு லட்டர் தரணும்?"

"திலோ! இப்பப் பேசறதுக்கு டயம் இல்ல. எல்லாம் ஈவினிங் வந்து சொல்றேன்."

"நோ... எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். சொல்லு... இல்லன்னா நானும் கிளம்பி வர்றேன்."

"ஐயோ! திலோ... சொன்னாக் கேளு. நம்ம காலேஜ்ல எல்லா சாரும் உம் மேல கடுமையான கோபத்தில இருக்காங்க. பிரியங்கா அவங்க கோபத் தீயில நெய்ய ஊத்திட்டு இருக்கா. நீ பாட்டுக்குப் பேசிட்டுக் கிளம்பி வந்திட்டே. அவங்க எல்லாரும் என்ன பேசிட்டு இருக்காங்க தெரியுமா?"

"ஏ... என்ன பேசறாங்க...?" - கேட்கும்போதே குரல் இடறியது.

"கல்லூரி முதல்வரையும் சிறப்பு விருந்தினர்களையும் பேராசிரியர்களையும் அவமதிச்சதுக்காகக் கல்லூரியை விட்டே நீக்குறதாப் பேசிக்கிறாங்க." - உமா சொல்ல, திலோத்தமாவின் உடல் அதிர்ச்சியில் உறைந்து போனது. அருகே நின்ற சகுந்தலாவிற்குப் பூமியே தலை கீழாய்ச் சுற்றுவது போலிருக்க, தள்ளாடினாள்.

## 5

விழியிலே மலர்ந்தது
உயிரிலே கலந்தது - பெண்
என்னும் பொன்னழகே - அடடா
எங்கெங்கும் உன்னழகே!

'பிரியங்கா ஸ்டீல் வொர்க்ஸ்' - எனப் பெரிதாய்ப் பளிச்சிட்ட பெயர்ப் பலகையைப் பார்த்துவிட்டு நண்பனிடம் குரல் கொடுத்தான் ரவி.

"விஷ்ணு! இதுதான் அவரோட கம்பெனி."

விஷ்ணு விழிகளை விரித்துப் பார்த்தான். மிக உயரமான மதில் சுவருடன் கனமான இரும்பு கேட்டுடன் தெரிந்த கம்பெனியைக் கண்டு பிரமித்தான்.

"ரவி! என்னடா இவ்வளவு பெரிய கம்பெனியா இருக்கு? நம்மையெல்லாம் உள்ளே விடுவாங்களா?"

"விடுவாங்க. நாமதான் ஸ்கூல் யூனிபார்ம்மோட வந்திருக்கோமே. கண்டிப்பா உள்ளே விடுவாங்க. வா! அந்த



கூர்க்காகிட்ட போய்க் கேட்போம்." - இருவருமாய் நெருங்கி கேட் முன்னே விரைப்பாய் நின்று கொண்டிருந்த கூர்க்காவை அழைத்தனர்.

"ஸார்...!"

"யாருப்பா நீங்க? என்னா வேணும்?"

"நாங்க ரஞ்சித் குமார் சாரைப் பார்க்கணும்."

"என்னா விஷயமா?"

"அது... வந்து... அவர்கிட்டதான் சொல்லணும்."

"என்ன? டொனேஷனா?"

"ம்... அப்படியும் சொல்லலாம்."

"ஒன் மினிட்..." - என்றவன் சுவரை ஒட்டியிருந்த கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு இண்டர்காமில் ரஞ்சித் குமாரைத் தொடர்பு கொண்டான்.

"ஸாப்! உங்களைப் பார்க்க ரெண்டு சின்னப் பசங்க வந்திருக்காங்க!"

"யாரு?"

"ஏதோ ஸ்கூல் பசங்க ஸாப். டொனேஷன் விஷயமாப் பார்க்கணுமாம்."

"வரச் சொல்!" - ரிஸீவரை வைத்துவிட்டு வெளியே வந்தான்.

"வரச் சொல்றார். நேரே போயி லெப்ட்ல கட் பண்ணினா பர்ஸ்ட் ரூம். வாசல்ல அவரோட நேம் பிளேட் இருக்கும். கதவைத் தட்டி பர்மிஷன் கேட்டுட்டு உள்ளே போங்க."

"தேங்க் யூ ஸார்!" - என்றதும் இருவர் மட்டுமே நுழையும் அளவிற்குக் கொஞ்சமாய் கேட்டைத் திறந்தான் கூர்க்கா. இருவரும் உள்ளே நுழைந்ததும் மீண்டும் கேட்டை இழுத்து மூடிக் கொள்ள, இருவரும் சற்றுப் பயமாய்க் கண்களைச் சுழற்றினர்.

"ரவி! என்னடா இது? எவ்ளோ பெரிய கிரௌண்ட். நம்ம ஸ்கூல விடப் பெரிய இடமா இருக்கும் போலிருக்கே!"

"விஷ்ணு! இது முன்பக்கம்தான். பின்னால ரொம்ப தூரம் வரை இடம் இருக்குதாம். சில்வர், அலுமினியம், இரும்புன்னு தனித்தனியா பிரிவு இருக்குதாம். எல்லா ப்ராடக்ட்டும் இவங்களே தயார் பண்றாங்களாம்."

"உனக்கு எப்படிடா தெரியும்?"

"எங்க பக்கத்து வீட்டு அங்கிள் இங்கதான் வொர்க் பண்றாங்க. அவங்கதான் சொன்னாங்க. ஏய்! இந்தப் பக்கமா வா!" - என்றவாறு ரவி முன்னே நடக்க, விஷ்ணு சுற்றிப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

ராட்சத இயந்திரங்களின் ஓசையும் சுறுசுறுப்பான பணியாளர்களும் வலப் பக்கக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்க, எல்லாம் வெகு சுத்தமாய் இருந்தது. பாதையின் இருபுறமும் பசேலென்ற புல் வெளிகள் வரிசையாய் அலங்கரிக்க, சுவரோரமாய் மரங்கள் உயர்ந்து நின்றன.

"விஷ்ணு! இந்த ரூம்தான்." - ரவி சொல்ல, விஷ்ணு நிமிர்ந்து பார்த்தான். பொன்னிற எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்த கதவைத் தயக்கமாய்த் தட்ட



முயன்றபோது, அறைக் கதவைத் திறந்து கொண்டு நாகரிக உடையோடு வெளியே வந்தான் ஒரு இளைஞன்.

"யாருப்பா நீங்க?"

"நாங்க ரஞ்சித் குமார் ஸாரைப் பார்க்கணும்!"

"ஸார் ஒரு முக்கியமான பைலைப் பார்த்திட்டு இருக்கார். ஒரு பைவ் மினிட்ஸ் வெயிட் பண்றீங்களா?"

"சரிங்க ஸார்!"

"இந்தச் சேர்ல உட்காருங்க. நான் சொல்லும்போது உள்ளே போங்க."

"ம்..."

"அர்ஜுன்!" - உள்ளே இருந்து கம்பீரமான குரல் கேட்டது.

"எஸ் ஸார்!" - அந்த இளைஞன் அவசரமாய்க் கதவைத் திறந்து உள்ளே நுழைய, "அந்தப் பசங்களை உள்ளே வரச்சொல்லு!" - என்றான் ரஞ்சித் குமார்.

"எஸ் ஸார்!" - என்றவன், "தம்பிகளா! உள்ளே வாங்க!" - என அழைத்தான். இருவரும் உள்ளே நுழைந்து வணக்கம் சொல்ல, பார்த்துக் கொண்டிருந்த பைலில் இருந்து பார்வையை நிமிர்த்தியவன் லேசாய் வியந்தான்.

விஷ்ணுவின் முகத்தைப் பார்த்ததும் புரிந்து போனது. இது... அந்தப் பெண்ணின் முகச்சாயலாய்த் தெரிகிறதே. அவளது தம்பியாய் இருக்குமோ?

"வணக்கம் ஸார்!"

"வணக்கம்! ப்ளீஸ் ஸிட் டவுன். அர்ஜுன்! ரெண்டு கூல் ட்ரிங்க்ஸ் கொண்டு வரச் சொல்லு!"

"எஸ் ஸார்!" - அவன் விலகிவிட, இருவரையும் பார்த்துப் புன்னகைத்தான்.

"சொல்லுங்க! யார் நீங்க?" - கம்பீரமாய் களையாய் நிமிர்வோடு அமர்ந்திருந்தவனைப் பார்த்து அசந்து போயிருந்தான் விஷ்ணு. பேச்சின்றி அவனையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்க, ரவி மெல்ல வாய் திறந்தான்.

"சார்! எம் பேர் ரவி. இவன் எம் பிரெண்ட் விஷ்ணு. நாங்க ரெண்டு பேரும் ஸ்ரீராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில ப்ளஸ் டு படிக்கிறோம்."

"சரி!"

"இவன் உங்களைப் பார்க்கணும்னு சொன்னான். டேய்! விஷ்ணு! பேசுடா!" - ரகசியமாய்க் கிசுகிசுக்க, விஷ்ணு திடுக்கிட்டு விழித்தான்.

"ம்...! என்னடா?"

"சொல்ல வேண்டியதைச் சொல்லு!"

"ஸா... ஸார்! நான்... எம் பேர் விஷ்ணு."

"சொல்லுங்க விஷ்ணு! என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்தீங்க?"

"ஸார்... வந்து... உங்ககிட்ட ஸாரி கேட்கணும்."

"எதுக்கு?"

"நேத்து காலேஜ் பங்ஷன்ல என் அக்கா உங்களைக் கொஞ்சம் மரியாதைக் குறைவாப் பேசிட்டா!"

"யாரு? யார் உங்க அக்கா?"

"திலோத்தமான்னு... ஓவியப் போட்டியில கலந்து கிட்டு..."



"ஓ! அந்தப் புதுமைப் பெண்ணா?" - புன்னகை முகமாய் அவன் கேட்க, அவஸ்தையாய்த் தலையாட்டினான் விஷ்ணு.

"ஸாரி ஸார்... அக்கா எப்பவும் யாரையும் அப்படி எடுத்தெறிஞ்சு பேச மாட்டாள். ரொம்ப அமைதியான பொண்ணு."

"ம்... ம்..."

"நேற்று என்னமோ தன்னோட திறமை ஜெயிக்கலன்ற டென்ஷன்ல கொஞ்சம் கோபமாப் பேசிட்டா. ஸாரி ஸார்!"

"நீ எதுக்குப்பா ஸாரி கேட்கிற?"

"இல்ல ஸார்... அக்காவுக்குத் தான் பேசினது தப்புன்னு தோணல்ல..."

"அது தப்பு இல்ல விஷ்ணு!" - ரஞ்சித் இயல்பான புன்னகையோடு சொல்ல, திக்கென விழித்தான் விஷ்ணு.

"ஸ... ஸார்!"

"யெஸ்! அவங்க மனசுல உள்ளதை அவங்க சொன்னாங்க. இதுல எந்தத் தப்பும் இல்லையே! பரிசு கொடுக்கணும்னு நினைச்சது என்னோட விருப்பம். அதை நாசூக்கா மறுத்தது அவங்க விருப்பம். இதுல ஸாரி கேட்கிற அளவுக்கு என்ன இருக்கு?"

ஆச்சர்யமாய் நாற்காலியை விட்டு எழுந்தான் விஷ்ணு. "ஸார்! நிஜமாவா சொல்றீங்க?"

"ஆமா! அதை யெல்லாம் நான் அப்பவே மறந்திட்டேன். இதுக்காகவா ஸ்கூல் டைம்ல இவ்வளவு தூரம் வந்தீங்க?"

"ஸாரி ஸார்! நாங்க என்னவோ நினைச்சிட்டு வந்தோம். ஆனா நீங்க நாங்க நினைச்ச மாதிரி இல்ல ஸார்!"

"நீங்க என்ன நினைச்சீங்க?"

"அது... வந்து... ஸாரி ஸார்!"

"பரவாயில்ல... சும்மா சொல்லுங்க ஸார்!"

"மன்னிச்சிடுங்க ஸார். அக்கா சொன்னதையும் இவங்க அக்கா சொன்னதையும் வெச்சு உங்களைத் திமிர் பிடிச்ச வில்லனா கற்பனை பண்ணி வெச்சிருந்தோம்."

"ஓஹோ! இப்போ?" - அவன் புருவங்களை உயர்த்திக் கேட்க, பளிச்செனப் புன்னகைத்தான் விஷ்ணு.

"ஹீரோ ஸார்!"

"என்ன?"

"உருவத்திலயும் பேச்சிலயும் நீங்க ஹீரோதான் ஸார்!"

மென்மையாய்ச் சிரித்தான். "நீங்க சின்னப் பசங்க. இந்த வயசுல இப்படிப் படிப்பைக் கட் பண்ணிட்டு வெளியே வரக்கூடாது. சரியா? ஸ்கூலுக்குக் கிளம்புங்க."

"எக்ஸ்கியூஸ் மீ ஸார்."

"கம் இன்!"

இரண்டு குளிர்பான பாட்டில்களை ட்ரேயில் ஏந்திக் கொண்டு உள்ளே வந்த பணியாளரிடம் எடுத்துக் கொள்ளும்படி சொன்னதும் தயக்கமாய் எடுத்துக் கொண்டனர். இருவரும் குடித்து முடிக்கும் வரை அமைதியாய் இருந்தான்.



இருவரும் பாட்டிலைக் கீழே வைத்ததும் எழுந்தான். "ஓ.கே. நீங்க கிளம்புங்க. எனக்கும் கொஞ்சம் வொர்க் இருக்கு."

ரவி தயங்கினான். "ஸார்...!"

"சொல்லுப்பா!"

"இல்ல... தீலோ அக்காவைக் காலேஜ்ல இருந்தே டிஸ்மிஸ் பண்றதா நேத்து காலேஜ்ல பேசினாங்களாம்."

"வாட்? யார் சொன்னது?"

"எங்க அக்கா சொன்னாங்க. உங்களை அவமானப் படுத்தினதாலதான் அப்படிச் சொன்னாங்கன்னு சொன்னா. அப்படி எதுவும் இல்லையே ஸார்?"

"சேச்சே! இந்தச் சாதாரண விஷயத்துக்காக யாராவது படிப்பையே கெடுப்பாங்களா? யாரோ உங்களைப் பயமுறுத்துற நோக்கத்தோடு சொல்லியிருக்காங்க."

"அம்மாவும் அக்காவும் ரொம்பப் பயந்திட்டாங்க ஸார். அக்காவுக்கு இதுதான் பைனல் இயர். அவளோட படிப்புக்காக அப்பா ரொம்பக் கஷ்டப்பட்டிருக்காங்க. அதான் பயந்து போய் உங்ககிட்ட பேச, மன்னிப்புக் கேட்க வந்தோம்."

"விஷ்ணு! அப்படியெல்லாம் எதுவும் நடக்கல்ல. நடக்காது. படிப்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் எவ்வளவு முக்கியம்னு எனக்கும் தெரியும். அதைக் கெடுப்பேனா? நீங்க தைரியமாப் போங்க. நீங்க கேள்விப்பட்டது எதுவுமே உண்மையில்ல. யாரும் வருத்தப்பட வேண்டாம்னு வீட்ல போய்ச் சொல்லுங்க."

"தேங்க்யூ ஸார்."

"இட்ஸ் ஓ.கே. பார்த்துப் போங்க!" - புன்னகையோடு அவர்களை வழியனுப்பிவிட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தான். தன் முன் இருந்த கோப்புகளைப் பிரித்தான். மனம் அதில் பதியவில்லை. நேற்றைய தினம் கடுத்த முகமாய்ச் சற்றும் பயமில்லாமல் மேடையில் நின்று பேசிய அந்தப் பெண்ணின் முகம் கண்முன் தோன்றி இம்சித்தது.

"மிஸ்டர் ரஞ்சித் குமார் சொன்னது போல் வறுமை, பசி, பட்டினி எல்லாம் ஒழிவது சாத்தியமில்லை!"

"மிஸ்டர் ரஞ்சித் குமார் சொன்ன மாதிரி வறுமை, பசி, பட்டினி மொத்தமாய் அழிந்தால் நம்ம எல்லாருக்குமே சந்தோஷம்தான்!"

அவள் தனது பெயரை உச்சரித்த விதமும் மிடுக்கும் இன்னும் மறவாமல் ரசிக்க வைத்தது. அவள் சொன்னது போல் சாலையோரமாய் இருந்த வறியவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுத்தபோது மனநிறைவு ஏற்பட்டது உண்மைதான்.

இதுவரை இது தனக்குத் தோன்றாமல் போனதே! வேறு என்ன சொன்னாள்?

"என்னோட பெயிண்டிங்க்ஸ பார்த்த என் அம்மாவோட கண்ல கண்ணீரைப் பார்த்தேன். அதைவிட விலை மதிக்க முடியாத பரிசு எதுவும் இல்லை."

"நான் இந்தப் போட்டியில கலந்துக்கிட்டது பணமோ பரிசோ கிடைக்கிற ஆசையில இல்ல..."

"வெற்றியடைஞ்ச எனக்கு ஆறுதல் பரிசு எதற்கு?"



ம்... அசாத்தியத் துணிச்சல்தான். கல்லூரியின் மொத்த ஆசிரியர்களுக்கும் அசராமல் நேராய் மைக்கைப் பிடித்துப் பேசினாளே! கடைசி வரை பணத்தை வாங்காமலே போய்விட்டாளே! துணிச்சல்காரி மட்டுமல்ல, மானஸ்தியும்தான்.

பிரியா சொன்னதைக் கேட்டு அந்தப் பெண்ணை அப்படி அவமதித்திருக்க வேண்டாம். ஜஸ்ட் அந்தப் படங்களைப் பார்த்திருக்கலாம். ஆனால்... பார்த்திருந்தால் இதை ரிஜெக்ட் செய்ய மனம் வந்திருக்குமா? எத்தனை அற்புதமாய் வரைந்திருந்தாள். எங்கே இருந்து கற்றுக் கொண்டாள் இந்தத் திறமையை?

நியாயமாய் அவளுக்குத்தான் முதல் பரிசைக் கொடுத்திருக்க வேண்டும். தங்கைக்காக என்றாலும் நான் செய்தது பெரிய தவறு. தன் தங்கையின் மனம் நோகக் கூடாது என்று இன்னொரு பெண்ணை அதுவும் திறமையுள்ள ஒரு பெண்ணை அவமதித்தது எத்தனை பெரிய தவறு!

அந்தப் பெண்ணை என்றாவது நேரில் பார்த்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும். எங்கே பார்ப்பது? ஒரு வாரம் போகட்டும். ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு அவளது கல்லூரிக்கே சென்று பார்த்துப் பேசிவிடலாம். இந்த எண்ணம் தோன்றியதும் மனம் லேசாகிவிட, புன்னகையோடு தன் வேலையைத் தொடர முயன்றபோது ஆர்ப்பாட்டமாய் வந்து நின்றாள் பிரியங்கா.

"அண்ணா!"

"ஹேய் பிரியா குட்டி! நீ என்ன இங்கே? அதுவும் இப்போ?"

"ஏண்ணா? வரக் கூடாதா?"

"சேச்சே! இது உன்னோட பேக்டரி. உன்னை வரக்கூடாதுன்னு சொல்ல முடியுமா? காலேஜ் டைமாச்சே! இப்போ வந்திருக்கியே... அதான் கேட்டேன்."

"சொல்றேன் அண்ணா! ஆமா... யாரு அண்ணா அந்தப் பசங்க?"

"எந்தப் பசங்க?"

"நான் வரும்போது வெளியே போனானுங்களே! ஸ்கூல் யூனிபார்ம்மோடு."

"ஓ! அதுவா? உன் பிரெண்டோட தம்பிதான்."

புருவம் சுருக்கினாள் பிரியங்கா. "என் பிரெண்டா? யாரைச் சொல்றே?"

"அதாம்மா! நேற்றுகூட நீ சொன்னேன்னு ஒரு பெண்ணை அவாய்ட் பண்ணினேனே! நான் கொடுத்த பரிசுப் பணத்தை வேண்டாம்னு சொன்னாளே!"

"யாரு? திலோத்தமாவா?" - முகம் கடுக்கக் கேட்டாள்.

"ம்... அவ தம்பியும் அவன் பிரெண்டும்..."

"அவங்க ஏன் இங்கே வந்திட்டுப் போறாங்க?" - தங்கையின் முகத்தில் தெரிந்த குரோதத்தைக் கவனியாமல் புன்னகையோடே பேசினான் ரஞ்சித் குமார்.

"அதையேன் கேட்கிறம்மா! அந்தப் பொண்ணு பேசினதுக்காக நான் கோபப்பட்டு அவளைக் காலேஜ்ல இருந்து டிஸ்மிஸ் பண்ணச் சொன்னதா யாரோ புரளிய கிளப்பி விட்டுட்டாங்க போலிருக்கு. பாவம்! பையன் பதறிப்போய் என்னைப் பார்க்க வந்திருக்கான்."



"உன்னை ஏன் பார்க்கணும்?"

"ஸாரி கேட்கணுமாம். அவ அக்கா சார்பா தம்பி வந்து ஸாரி கேட்கிறான்."

"நீ என்ன சொன்னே?"

"தம்பி! நீ கேள்விப்பட்டது எதுவுமே உண்மையில்லன்னு சொல்லித் தைரியமா போகச் சொன்னேன்."

"என்ன? ஏன் அப்படிச் சொன்ன?" - கோபமாய்க் கேட்டவளை நிதானமாய்ப் பார்த்தான்.

"என்ன ப்ரியா? அதுதானே உண்மை! பாவம், அவங்க வீட்ல எல்லாரும் ரொம்பப் பயந்து போயிட்டாங்களாம். அதான்..."

"இந்தப் பயமெல்லாம் அந்தப் பிச்சைக்காரி மைக்கைப் பிடிச்சிட்டுப் பேசும்போது இருந்திருக்கணும். பெரிய வீராங்கனை மாதிரிப் பேசிட்டு இப்போ தம்பிக்காரனைத் தூது அனுப்பினாளா? அதுவும் உன் கிட்ட!" - தங்கையின் கோபாவேசத்தைக் கண்டு மிரண்டு போனான்.

"பி...ரி...யாம்மா!"

"நீ ஏன் உண்மையில்லன்னு சொல்லி அனுப்பின? ஆமா... உன் அக்காவோட டி.சி.ய கிழிச்சாச்சுன்னு சொல்ல வேண்டியதுதானே!"

"நோ... நோ... என்ன பேசுற நீ? எதுக்காகப் பொய் சொல்லி ஒரு சின்னப் பையனைக் கலங்க வைக்கணும்."

"பொய் இல்லண்ணா... நான் சொல்றது உண்மை!" - பிரியங்கா அழுத்தமாய்ச் சொல்ல, திகைப்பாய் இருக்கையை விட்டு எழுந்தான் ரஞ்சித்.

"ப்ரியா! என்ன சொல்ற?"

"என்னைக் கை நீட்டி அறைஞ்சவ, உன்னை அவமதிச்சவ. இனிமே அந்தக் காலேஜ்ல இருக்கக்கூடாது இருக்க விட மாட்டேன்."

"வாட் யூ மீன்?"

"அவளை வெளியே அனுப்ப என்ன செய்யணுமோ அதைச் செய்துட்டுத்தான் வர்றேன். இனி அவ என்னை மட்டுமில்ல, யாரையுமே எதிர்த்துப் பேச முடியாது."

"ப்ரியா! என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கே? எதுலதான் விளையாடணும்னு இல்ல உனக்கு? இது ஒரு பெண்ணோட படிப்பு, லைப். இதுலயா விளையாடுவாய்?"

"அண்ணா! எப்பவுமே அவ எனக்கு எதிரிதான். என்னைப் பார்த்து என் காலேஜே நடுங்குது. ஆனா இவ மட்டும் என்னை எதிர்த்துப் பேசிட்டே இருக்கா. நேத்து என்னை அத்தனை பேர் முன்னால கைநீட்டி அடிச்சாள். நான் திருப்பி அடிக்க வேண்டாமா?"

"பிரியா! உங்களுக்குள்ள என்ன வாக்குவாதம் நடந்ததுன்னு எனக்குத் தெரியாது. அந்தப் பொண்ணு கைநீட்டியது தப்புதான். அதுக்குப் பதிலடியாத்தான் நீ சொன்ன மாதிரி நடந்துகிட்டேனே! பிறகென்ன? அந்தப் பிரச்சனையை அப்படியே விட்டுடு."

"நோ... என்னால முடியாது. நம்ம வீட்லகூட யாரும் என்னை அடிச்சது கிடையாது. அவ எப்படி அடிக்கலாம்?



இந்தப் பிரியங்காவை அறைஞ்சவளுக்கு வாழ்நாள் பூரா வலிக்கணும். அவ அழணும்.

"என்னை அறைஞ்சதை நினைச்சி அவ வாழ்நாள் முழுக்க அழணும். என்னை விட நல்லாப் படிக்கிறோம்ன்ற திமிர்லதானே என்னையே எதிர்த்திட்டு இருந்தா? இனிமே எதிர்க்க முடியுமா? அவளால எழுந்து நிற்கவே முடியாது." - தங்கையின் கோபத்தில் வெகுவாய்ப் பயந்து போனான் ரஞ்சித்.

தங்கையின் கோபம் பற்றி நன்கு அறிந்தவன். இந்தச் சமயத்தில் அறிவுரை கூறுவதோ பதில் பேசுவதோ அவளது கோபத்தை அதிகரிக்குமே தவிரக் குறைக்காது. பணிந்து போவதுதான் உத்தமம். சட்டெனக் குரலைத் தழைத்துக் கொண்டான்.

"என்ன பிரியாம்மா இது? அவ செய்தது பெரிய தப்புதான். அதுக்கான தண்டனையைத்தான் நேற்றே கொடுத்திட்டோமே!"

"அந்தத் தண்டனை அவளுக்குப் பத்தாதுண்ணா! அவளை மொத்தமா அடக்கணும். அதுக்காகத்தான் அவளை டிஸ்மிஸ் பண்ண வெச்சேன்!"

"நோடா... இது ரொம்ப அதிகம். இத்தனை வருஷமா படிச்ச படிப்பு நம்மால வீணாகக்கூடாதும்மா. நீ உடனே போய்..."

"நோ...! நான் முடிவு பண்ணினா பண்ணினதுதான்!"

"சரி... இப்போ என்னதான் பண்ணியிருக்க?"

"அண்ணா! ராமகிருஷ்ணன் அங்கிளோட எல்லாம் பேசிட்டேன். இது ஒன்னும் பெரிய காரியம் இல்ல...

செய்திடலாம்னு சொல்லிட்டார். எதுக்கும் நீயும் ஒரு வார்த்தை சொன்னா நல்லா இருக்கும். அதுக்காகத்தான் வந்தேன்."

"நா... நானா? நான் என்ன செய்யணும்?"

"என் தங்கை சொன்ன மாதிரி செய்திடுங்கன்னு சொன்னாப் போதும். நானே போன் பண்ணித் தர்றேன்." - என்றவாறு பிரியங்கா தனது செல்லை உயிர்ப்பிக்க, அவசரமாய்த் தடுத்தான்.

"இ... இல்ல... வேண்டாம்."

"ஏண்ணா?"

"இதையெல்லாம் போன்ல பேச வேண்டாம். நானே நேர்ல போய்ப் பேசிக்கிறேன்." - என்றவனை நம்பிக்கையில்லாமல் பார்த்தாள்.

"ஏன்? போனில் பேசினால் என்ன?"

"பிரியா! இது விளையாட்டுக் காரியம் இல்லை. ஒரு பெண்ணைப் படிப்பு முடியும் தறுவாயில் கல்லூரியை விட்டு நீக்குவது சுலபமான காரியமில்ல. அதுல எத்தனையோ பிரச்சனை இருக்கு."

"அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? அது அங்கிளோட வேலை!"

"அப்படியெல்லாம் விடமுடியாது. நம்மால அவருக்கு ஏன் தர்மசங்கடம்?"

"இதுல என்ன தர்மசங்கடம் இருக்கு? உனக்கு ஒரு அவமானம்னா அது அவருக்கும்தானே! உண்மையைச்



சொல்ல வேண்டுமென்றால் என்னை விடவும் திலோத்தமா மீது அவர்தான் அதிகமான கோபத்தில் இருக்கிறார்."

"ஏன்?"

"பின்னே! அவர் காலேஜ்லயே படிச்சிக்கிட்டு அவரோட மருமகனை அத்தனை பேர் முன்னால அவமதிச்சா அவருக்குக் கோபம் வராதா?"

"என்ன சொல்ற? மருமகனா? யாரு?"

"என்ன அண்ணா... தெரியாத மாதிரி கேட்கிற? நீதான்...!" - தங்கையின் பதிலில் மீண்டும் அதிர்ந்தான்.

"எ... என்ன? நானா?"

"ஆமா! இது ஏற்கெனவே பேசி முடித்ததுதானே! சுஹாசினியோட படிப்பு இன்னும் ஆறு மாசத்தில முடியுதாம். வந்ததும் கல்யாணம்தான்னு பேசிக்கிட்டாங்க."

"யாரு?"

"நம்ம அப்பாவும் ராமகிருஷ்ணன் அங்கிளும்தான்!"

"எ... எப்போ?"

"நேத்துகூடப் பேசினாங்களே! நீ கவனிக்கலையா? ஓ! நீதான் பரிசு கொடுத்திட்டு இருந்தியே! கவனித்திருக்க மாட்டாய்."

"என் கல்யாணத்திற்கு இப்ப என்ன அவசரம்?" - முகம் மாறினான்.

"அண்ணா! உனக்கு இருபத்தேழு வயது முடியப் போகிறது. நினைவிருக்கட்டும். இந்த வயதில் கல்யாணம் பண்ணாமல்..."

"சரி... அந்தப் பேச்சை விடு. நீ காலேஜுக்குப் போ. நான் நேரில் பேசிக் கொள்கிறேன். நீ கிளம்பு."

"அண்ணா! உன் முகமே சரியில்ல. எனக்கு எதிரா ஏதாவது செய்யுணும்னு நினைச்சா அப்புறம் நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது."

"உன் விருப்பத்திற்கு மாறா நான் ஏதாவது செய்திருக்கேனா? போம்மா... நான் பேசிக்கிறேன்."

"சரிண்ணா! நான் கிளம்புறேன். பை..." - என்றவாறு பிரியங்கா போய்விட, அவசரமாய் யோசித்தான் ரஞ்சித் குமார். இது நடக்கக்கூடாது. தன்னால் ஒரு பெண்ணின் படிப்பு வீணாகிவிடக் கூடாது. எதிர்காலம் பாழாகிவிடக் கூடாது. இதைத் தடுத்தே ஆக வேண்டும். பிரியங்கா கல்லூரிக்கு போய்ச் சேர்வதற்குள் ராமகிருஷ்ணனிடம் பேசி இதைத் தடுக்க வேண்டும்.

அவசரமாய்த் தனது செல்போனை எடுக்க, அதுவே பாடி அழைத்தது. யார்? செல்போன் திரையில் பார்த்தான். புதிய எண். சற்று நீளமான எண்கள். குழப்பமாய் போனை ஆன் செய்து காதில் வைத்தான்.

"ஹலோ!"

மறுமுனையில் பெண் குரல் கேட்டது. "ஹலோ! ரஞ்சித்?"

"யா... ஸ்பீக்கிங்..."

"ரஞ்சித்! நான் சுஹா... சுஹாசினி பேசுறேன். லண்டன்ல இருந்து..." எனப் பேச, ரஞ்சித் குமாரின் முகம் திடுக்கிட்டது.



# 6

பக்கத்தில் நீயும் இல்லை
பார்வையில் ஈரம் இல்லை
சொந்தத்தில் பாதை இல்லை
சுவாசிக்க ஆசை இல்லை!

இவளா? இவளிடம் யார் என் எண்ணைக் கொடுத்தது? எனக்குத் தெரியாமல் இன்னும் என்னவெல்லாம் நடக்கின்றது? இப்போது இவளிடம் என்ன பேசுவது? எதற்காகப் போன் செய்தாள்? இப்போது என்ன செய்யலாம்? போனைக் கட் பண்ணி விடலாமா?

ரஞ்சித் யோசித்துக் கொண்டிருக்கும்போதே சுஹாசினி குரல் கொடுத்தாள்.

"ரஞ்சித்! லைன்ல இருக்கீங்களா? ஹலோ! ரஞ்சித்!"

"ம்... இருக்கேன்!"

"ரஞ்சித்! இப்போ நீங்க ப்ரீயா இருக்கீங்களா?"

"எதற்கு?"

"நான் உங்ககிட்ட அவசரமா முக்கியமான விஷயம் பேசணும். தனியாப் பேசணும்... ப்ளீஸ் ரஞ்சித்! எந்த வேலையிருந்தாலும் எனக்காக ஒரு டென் மினிட்ஸ் ஒதுக்க முடியுமா? ப்ளீஸ்!" - அவளது குரலில் தெரிந்த அவசரமும் பதட்டமும் உணர்ந்து கொண்டவனாய்...

"சொல்லு! என்ன விஷயம்?" - என்றான்.

"தேங்க்யூ ரஞ்சித்."

"ஒரு நிமிஷம். என்னோட போன் நம்பர் உனக்கெப்படித் தெரியும்?"

"இப்பத்தான் அப்பாகிட்ட கேட்டு வாங்கினேன். ரஞ்சித் அங்கே என்னதான் நடக்குது? அப்பா ஏதேதோ சொல்றார்.

"எனக்கும் எதுவும் புரியல்ல."

"ரஞ்சித்! இப்போ அதைவிட முக்கியமான மேட்டர் பேசணும். நான் இங்கே ஒரு சிக்கல்ல மாட்டிட்டு இருக்கேன்."

"என்ன?"

"ஆமா! இதை யார்கிட்ட சொல்லன்னு திணறிட்டு இருந்தப்பதான் அப்பா போன் பண்ணி நமக்குக் கல்யாணம் ஏற்பாடு பண்றதா சொல்றாரு. அதான் உங்க நம்பர் கேட்டு வாங்கினேன்."

"என்ன சிக்கல் உனக்கு?"

"எல்லாம் தெளிவா நேர்ல சொல்றேன் ரஞ்சித். நீங்க கொஞ்சம் உடனே புறப்பட்டு லண்டன் வர முடியுமா? ப்ளீஸ்"

"என்ன? லண்டனுக்கா?"

"யா... ரஞ்சித்! எனக்காக இந்த உதவியை நீங்கதான் செய்யணும்."

"என்ன உதவி?"

"ரஞ்சித்! இங்கே அமர்னு ஒரு பையன். நம்ம ஊர்க்காரன்தான். சும்மா எம் பின்னாடியே சுத்திட்டு இருந்தான். எத்தனை முறை திட்டினாலும் நிறுத்தல்ல. அதனால ஒரு நாள் கோபத்துல ஈவ்டீஸிங் கேஸ்ல மாட்டிவிட்டுட்டேன்."

"அப்புறம்?"



"இப்போ பிரச்சனை பெரிசாகிடுச்சி ரஞ்சித். அந்தப் பையன் சூஸைட் அட்டெம்ப்ட் பண்ணிக்கிட்டான்."

"வ்வாட்?"

"ஆமா! இப்ப ஹாஸ்பிடல்ல ஐ.சீ.யு.வில இருக்கான். அவன் பேரண்ட்ஸ் எல்லாம், என்னாலதான் அவன் இப்படிப் பண்ணிக்கிட்டான்னு ரொம்பக் கோபமா இருக்காங்க. அவனுக்கு ஏதாவது ஒன்னு ஆச்சுன்னா எம் மேல கேஸ் போடப் போறாங்களாம். என்னால இப்பக் கிளம்பி ஊருக்கும் வர முடியாது.

"ஹாஸ்பிடல்லயே பிடிச்சி வெச்சிருக்காங்க. எனக்கு இங்கே ஹெல்ப் பண்ண யாருமே இல்ல ரஞ்சித். நீங்க உடனே புறப்பட்டு வர்றீங்களா? ப்ளீஸ்!"

"இதை நீ உன் அப்பாகிட்ட சொன்னியா?"

"ஐயோ... இல்ல. நீங்களும் சொல்லிடாதீங்க!"

"ஏன்?"

"ஏற்கெனவே என்னை இங்கே அனுப்பிப் படிக்க வைக்க அப்பாவுக்கு விருப்பம் கிடையாது. இதுல இந்த விஷயம் தெரிஞ்சா அவ்வளவுதான். எனக்குப் பயமா இருக்கு."

"அதுக்காக அவருக்குத் தெரியாம நான் எப்படி?"

"ப்ளீஸ் ரஞ்சித்! நீங்க என்னோட பேமிலி பிரெண்ட். நமம பேமிலியில யூத்தா கொஞ்சம் படிச்சவர் தைரியமானவர் நீங்க மட்டும்தான். அதனாலதான் உங்களை ஹெல்ப் கேட்டேன்.

"ஒருவேளை எனக்கு ஒரு அண்ணனோ தம்பியோ இருந்திருந்தா உங்களைத் தொந்தரவு பண்ணியிருக்க மாட்டேன். ப்ளீஸ் ரஞ்சித்! இந்த நிமிஷம் எனக்கு உங்க உதவி வேணும். என்னை உங்க தங்கையா நினைச்சி இந்த ஹெல்ப்பை பண்ணுங்க. ப்ளீஸ்!" - அவளது வார்த்தையில் சற்று முன் தோன்றிய பாரம் விலகிவிட, புன்னகையோடு கேட்டான்.

"இப்ப என்ன சொன்னே? தங்கையா?"

"ஆமா ரஞ்சித்! அப்பா சொல்ற காரியத்தில எனக்கு உடன்பாடு இல்ல. அதுவும் எம் மேல உள்ள பிரியத்தில உயிரையே விடத் துணிஞ்ச அமர் இந்த நிலையில இருக்கும்போது எனக்கு வேற எந்த எண்ணமும் வராது."

"வெயிட் சுஹா! நீ... அந்த அமரை விரும்புகிறாயா?"

"அது... இல்லை ரஞ்சித். அவனை விரும்பவில்லை. ஆனால் அப்பா பார்க்கும் மாப்பிள்ளை இந்த அமர் என்றால் மறுக்க மாட்டேன்."

"அட! அப்போ உனக்கு அமரைப் பிடிச்சிருக்கு!"

"ம்... அவன் நல்லவன்தான் ரஞ்சித். ஆனா இப்படி படிக்கிற நேரத்தில எம் பின்னாடி சுத்துறதுதான் எனக்குப் பிடிக்கல்ல."

"அப்போ நீயே இதை அவன்கிட்ட சொல்லியிருக்கலாமே!"

"எதை?"

"முதல்ல படிடா. படிப்பு முடிஞ்சதும் முறைப்படி வந்து பெண் கேள் என்று!"



"அச்சோ! எனக்கு இது தோணவே இல்லையே! அவனை விரட்டியடித்தேனே தவிர, இதை யோசிக்கவே இல்லை ரஞ்சித்!"

"இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடல்ல. போனை வைத்துவிட்டு நான் சொன்னதை அவனிடம் போய்ச் சொல்!"

"சொன்னால்..."

"நீ சொல்லு! பய துள்ளிக் குதிச்சி எழுந்திடுவான் பார்!"

"நிஜமாவா?"

"சொல்லித்தான் பாரேன்!"

"ஆனா... ரஞ்சித்... அவனை இப்போ தீவிர சிகிச்சைப் பிரிவுல வெச்சிருக்கு. ஏதாவது ஒன்னு ஆகிட்டா!"

"ஒன்னும் ஆகாது. நான் இன்னிக்கே புறப்பட்டு வர்றேன். அதற்குள் அவன் கண்விழித்து விட்டால் நீ நான் சொன்னதைச் சொல். மற்றவற்றை நேரில் பேசிக் கொள்ளலாம்."

"தேங்க்யூ ரஞ்சித். தேங்க்யூ ஸோ மச்!"

"நான்தான் உனக்கு நன்றி சொல்லணும்."

"என்ன?"

"என்னைப் பெரிய தர்ம சங்கடத்தில் இருந்து காப்பாற்றியிருக்கிறாயே... அதுக்கு!"

"புரியலை!"

"எல்லாம் நேரில் வந்து சொல்கிறேன்."

"ஓ! தேங்க்யூ ரஞ்சித். எப்போ வர்றீங்க?"

"இன்றே!"

"ஓ...! வெரி நைஸ். இப்பத்தான் என் மனசுக்கு தெம்பா இருக்கு ரஞ்சித். அப்புறம் நீங்க இங்க வந்து யாருக்கும் தெரிய வேண்டாம்."

"தெரியாது."

"குறிப்பா அப்பாவுக்கு இந்தப் பிரச்சனை எதுவு தெரிய வேண்டாம்."

"நான் பார்த்துக் கொள்கிறேன்."

"சரி ரஞ்சித். நீங்கள் சீக்கிரமாய்ப் புறப்பட்டு வாருங்கள். போகவர உண்டாகும் செலவுகளை நான் தந்து விடுகிறேன்."

"அண்ணன் என்றாயே! அண்ணனிடமே செலவுக்கு பணம் தருவாயா?"

"ஸாரி ரஞ்சித். நான் அப்படிச் சொல்லவில்லை."

"எப்படியும் சொல்ல வேண்டாம். அவரைக் கவனித்துக் கொள். அவனது பெற்றோரிடம் பேசு. அவர்களது கோபத்தைக் குறை!"

"சரி... சரி!" - சுஹாசினியின் குரலில் உற்சாகம் தெறித்தது.

"சரி... போனை வெச்சிடவா?"

"ஓ.கே. பை ரஞ்சித்!" - அவள் போனை வைத்து விட, தானும் புன்னகையோடு போனை கட் செய்தான். சுஹாசினியால் தனக்கு எந்த இடையூறும் இல்லை என்று தெரிந்ததும் மனம் வெகு உற்சாகமாய் இருந்தது. சிறு வயது முதல் பார்த்துப் பழகியவள். அவளுக்கு ஒன்று என்றால் ஓடிச் சென்று உதவ வேண்டாமா?



புறப்படத் தயாரானான். புதிதாய் ஏற்பட்ட உற்சாகத்தில் சற்று முன் தன் தங்கையின் மூலமாய் நடந்த நிகழ்வுகள் சுத்தமாய் மறந்து போனது. அவனது மறதியால் ஒன்றும் அறியாத பெண்ணின் வாழ்வில் ஏற்படவிருக்கும் துன்பங்களையும் துயரங்களையும் அவன் அறிந்திருக்க வில்லை. தன்னை அழைப்பது வித்யா சத்யா என்றும் உணரவில்லை.

**"நி**ஜமாவாடா சொல்றே?" - நம்ப முடியாத வியப்புடன் கேட்டாள் திலோத்தமா.

"ஆமாங்க்கா! அவர் ரொம்ப நல்லவர், தெரியுமா? நீ பேசின எதையுமே தப்பு இல்லைன்னு சொன்னார்."

"இதைத்தானே நானும் சொன்னேன்!"

"நீ சொல்றதும் அவர் சொல்றதும் ஒன்றா? சொல்வதைப் பொறுமையாய்க் கேளு!"

"சரிப்பா... சொல்லு!" - திலோத்தமா பணிவாய்க் கைகளைக் கட்டிக் கொள்ள, புன்னகைத்தான் விஷ்ணு.

"ம்... இப்படியே நின்னு கேளு. பொண்ணுங்களுக்குப் படிப்பு ரொம்ப முக்கியமாம். அதை அவர் ஒரு நாளும் கெடுக்க மாட்டாராம். தைரியமா இருக்கச் சொன்னார். நீ பேசினதையெல்லாம் எப்பவோ மறந்திட்டாராம்.

"வேறு யாரோதான் புரளியக் கிளப்பி விட்டிருக்கணும் அக்கா. அந்த ரஞ்சித் ரொம்ப நல்லவருக்கா. எங்களை எவ்வளவு மரியாதையா உட்கார வெச்சிப் பேசினார் தெரியுமா? கூல்டிரிங்க்ஸ் கூட தந்தார்."

"ஏன்டா... ஒரு கூல்ட்ரிங்க் கொடுத்ததும் அந்த ஆள் நல்லவரா மாறிட்டாரா?"

"விளையாடாதே அக்கா! நான் எவ்வளவு சீரியஸா... பேசிக் கொண்டிருக்கிறேன்."

"இப்ப என்னடா? அந்த ஆள் நல்லவர் என்ப... நான் ஒத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதானே! சரி... திருவாளர் ரஞ்சித் அவர்கள் மிக மிக நல்லவர். இதை நா... முழுமனதோடு ஒப்புக் கொள்கிறேன். போதுமா?"

"அக்கா! வரவர உனக்கு நக்கல் ஜாஸ்தியாப் போச்... இனிமேலாவது நான் சொன்ன பேச்சைக் கேட்டு நட!"

"சொல்லுங்க ஸார்!"

"இனிமே படிப்பு முடியுற வரைக்கும் நீ உண்டு, உ... படிப்பு உண்டுன்னு இருக்கணும். யார்கிட்டயும் அநாவசி... மாய் ஒரு வார்த்தை பேசாதே!"

"சரிங்க ஸார்!"

"படிப்பு முடிஞ்சதும் நல்லதா ஒரு வேலையை... தேடிக்கோ. நான் படிச்சு வேலைக்குப் போக ஆரம்பிச்சது... உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துக் கல்யாண... பண்ணி வெச்சிடுறேன்."

"ஸார்! எனக்கு ஒரு சின்னச் சந்தேகம்!"

"என்ன?"

"நீங்க எனக்கு அண்ணனா? தம்பியா?"

"வயசுல தம்பி... பொறுப்பிலயும் அனுபவத்திலயும் அண்ணன். அதனால ஒழுங்கா அண்ணன் பேச்சைக் கேட்டு நடந்துக்க!"



"அடி...! யாருக்கு யாருடா அண்ணன்?" - என்றவள், தம்பியின் காதைப் பிடித்துத் திருக, மகனின் சத்தம் கேட்டு ஓடி வந்தாள் சகுந்தலா.

"ஏய் திலோ! என்ன இது? சின்னப் பையன் காதைத் திருகிட்டு... விடு அவனை!"

"யாரு? இவனா சின்னப் பையன்? என்னையே அதிகாரம் பண்றாம்மா! இவன் எனக்கு அண்ணனாம்... எனக்கே அட்வைஸ் பண்றான்."

"அதில என்ன தப்பு? இன்னிக்கு அவனாலதான் நம்ம வீட்ல உலை கொதிக்குது. இல்லன்னா நம்ம மனசும் வயிறும்தான் கொதிச்சிருக்கும்."

"அம்மா! நீங்க என்ன அவனுக்கு சப்போர்ட்டா?"

"பண்ணினா என்னடி? காலையில அந்த உமாப் பொண்ணு வந்து சொல்லிட்டுப் போனதில இருந்து எனக்கு உசுரே போயிடுச்சு. எம் புள்ளதான் இந்தச் சின்ன வயசிலேயே பொறுப்பா தைரியமா அந்தப் பையனை நேர்ல பார்த்துப் பேசி எல்லாப் பிரச்சனையையும் சரி பண்ணினான். அவன் சொன்ன பேச்சைக் கேட்டு நட. இனியாவது எந்தப் பிரச்சனையையும் விலை கொடுத்து வாங்கிட்டு வராதே!"

"அப்படிச் சொல்லுங்கம்மா! அம்மான்னா அம்மாதான்!"

"போதும்... போதும்! ரொம்ப அலட்டிக்காதே!"

"என்ன? வீடெல்லாம் ஒரே களேபரமா இருக்கு!" - என்றவாறே வீட்டிற்குள் நுழைந்தார் ராகவன். கையில் காலையில் கொண்டு போன சாப்பாட்டுக் கூடை

"ஏய்! அப்பா வந்தாச்சு!" - என இருவரும் ஓட, சகுந்தலா பின்னே வந்தாள்.

"வளர்ந்தாச்சே தவிர இன்னும் குழந்தைங்களாத்தான் இருக்காங்க!"

"எத்தனை வளர்ந்தாலும் நமக்கு இவங்க குழந்தைங்க தானே சகுந்தலா!" - என்றவாறு மனைவியின் கையில் கூடையைக் கொடுத்தார்.

"சமோசா வாங்கிட்டு வந்தேன். சூடா இருக்கு... புள்ளைங்களுக்குக் கொடுத்திட்டு நீயும் சாப்பிடு."

"அப்பா! நீங்களும் கைகால் அலம்பிட்டு வாங்கப்பா. சேர்ந்தே சாப்பிடலாம்!"

"நீங்க சாப்பிடுங்கம்மா! அப்பாவுக்குக் காபி மட்டும் போதும்!"

"என்னங்க! சாப்பாட்டுப் பாத்திரம் வெயிட்டா இருக்கு... சாப்பிடலையா?"

"இல்லம்மா! நேத்து லீவு போட்டதுக்கும் சேர்த்து இன்னிக்கு வேலை தந்துட்டாங்க. சாப்பிட நேரமும் இல்ல... பசியும் இல்ல...!" - என்றவாறு முகம் கழுவித் துடைத்தவாறே ஹாலில் கிடந்த சாய்வு நாற்காலியில் வந்து சாய்ந்தார்.

சகுந்தலா மனம் தாளாமல் பொருமினாள். "எத்தனை வருஷமா அந்தக் கம்பெனிக்காக உழைக்கிறீங்க! இப்படிச் சாப்பிடக்கூட விடாமலா வேலை வாங்குவாங்க! அவங்களுக்கெல்லாம் மனச்சாட்சியே கிடையாதா?"

"விடும்மா! சம்பளம் கொடுக்கிறவங்க வேலை வாங்கத்தானே செய்வாங்க!"



"வேலை வாங்கட்டும். நான் தப்புன்னு சொல்லல. அதுக்காக இத்தனை வயசுக்கப்புறம் சாப்பிடாம வேலை செய்தா உடம்பு என்னாகும்? எத்தனை நாள் ராத்திரி வரை நின்னு வேலை செய்திட்டு வர்றீங்க? அதுக்கெல்லாம் தனிச் சம்பளமா தர்றாங்க?"

"சரி விடு... அதைப் பேசி என்னாகப் போகுது? காபி கொடும்மா... உடம்பெல்லாம் சோர்வா இருக்குது!" - சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

"இதோ எடுத்துட்டு வர்றேங்க!" - சகுந்தலா கூடையோடு உள்ளே செல்ல, பிள்ளைகள் இருவரும் ராகவனின் காலடியில் அமர்ந்து ஆளுக்கொரு காலைப் பற்றி, மெல்லப் பிடித்து விட்டனர். சட்டெனக் கண்களைத் திறந்தவர், பதறிக் காலை இழுத்துக் கொண்டார்.

"என்னம்மா இது? எழுந்திருங்க... சமோசா சாப்பிடுங்க!"

"பொறுமையாச் சாப்பிடலாம்ப்பா. நீங்க காலை நீட்டுங்க... பிடிச்சு விடுறோம்!"

"வேண்டாம்டா கண்ணுங்களா?"

"ஏம்ப்பா! காலையில இருந்து ராத்திரி வரை எங்களுக்காக உழைக்கிறீங்க! உங்களுக்கு நாங்க இதைக்கூடப் பண்ணக் கூடாதா?"

"அதுக்கில்லடா...!"

"பேசாம அமைதியா சாய்ந்து உட்காருங்க!" - என அதட்டினான் விஷ்ணு. ராகவன் சாய்ந்து கொள்ள, அவரது காலைப் பற்றித் தங்கள் மடி மீது வைத்துக் கொண்டு

இதமாய்ப் பிடித்து விட்டனர். பிள்ளைகளின் பரிவில் கண்கள் கசிந்தார் ராகவன்.

சூடான காபியோடு வந்த சகுந்தலாவும் நெகிழ்ந்து திலோத்தமா தந்தையை அழைத்தாள். "அப்பா...!"

"என்னடா கண்ணு?"

"இன்னும் ஒரு மாசம். ஒரே மாசம் பொறுத்து கங்கப்பா!"

"எதுக்குடா?"

"என்னோட படிப்பு முடிஞ்சதும் நான் வேலைக்குப் போயிடுவேன். நான் சம்பாதிக்க ஆரம்பிச்சதும் நீங்க இந்த வேலையை விட்டுடுங்கப்பா!"

"ஏம்மா?"

"நீங்க இதுவரை உழைச்சது போதும்ப்பா! உங்களை உட்கார வெச்சுச் சாப்பாடு போட நாங்க இருக்கோம்!"

"அம்மாடி! பொண்ணு சம்பாத்தியத்தில அப்பன் உட்கார்ந்து சாப்பிடுறதா? வேண்டாம்டா கண்ணு!"

"ஏம்ப்பா! எங்களுக்காக நீங்க ஓடாத் தேய்றீங்களே! உங்களை உட்கார வெச்சு நாங்க சாப்பாடு போட்டா என்ன?"

"அப்பாவுக்கு இன்னும் நிறையக் கடமை இருக்கும்மா. தம்பியைப் படிக்க வைக்கணும்... அவனுக்கு வேலை வாங்கிக் கொடுக்கணும்..."

"இதெல்லாம் நான் செய்யுறேம்ப்பா!"

"இரும்மா... என்னோட கடமைய நான் சொல்லியே முடிக்கலையே!"



"வேறு என்ன கடமை இருக்கு?"

"ரொம்ப முக்கியமான கடமையெல்லாம் இருக்கும்மா. எம் பொண்ணுக்கு அருமையான மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வெக்கணும். அவளுக்கு சீர்செனத்தி. மறுவீடுச் சடங்கு. சீமந்தம் பேறுகாலம்னு எவ்வளவு கடமைகள் இருக்கு...

"அடுத்தபடியா விஷ்ணு! அவனுக்கு ஒரு நல்ல குணவதியாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிப் பேரன் பேத்திகளைப் பார்க்கணும். அவனுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்கணும். அப்புறம்..."

"வேற என்னப்பா?"

"இந்தக் கடமையெல்லாம் முடிஞ்சப்புறம் உங்க அம்மாவைக் கவனிக்கணும். அதுக்குப் பிறகுதான் அவளுக்குத் தேவையானதெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியும்."

"எனக்கு என்னங்க தேவை? புள்ளைங்க வாழுறதப் பார்க்கிறதுதான் நம்ம நிம்மதி, சந்தோஷம் எல்லாமே!"

"இல்ல சகுந்தலா! உனக்குன்னு நான் எதுவுமே செய்யலையே! புள்ளைங்க படிப்புக்கு, செலவுக்குப் பணம் இல்லாமத் தவிச்சப்போ எல்லாம் தயங்காம ஒவ்வொரு நகையாக் கழட்டிக் கொடுத்தியே... அதையெல்லாம் நான் உனக்குத் திருப்பிச் செய்ய வேண்டாமா?"

"வாவ்! அம்மாவுக்கு நகையாப்பா?"

"ஆமா! உங்க அம்மா கழுத்தில தாலியத் தவிர வேற நகை இல்லையே! அதனால அவளுக்கு ஒரு இரட்டை வடச்

சங்கிலி. கைக்கு இரண்டு வளையல், அப்புறம் வெள்ளையும் சிவப்புக் கலரும் சேர்த்துச் செய்த ஒரு கல் தோடு இதெல்லாம் செய்து போட்டு அழகு பார்க்கணும்."

"என்னங்க நீங்க?" - சகுந்தலாவின் முகம் பூரிப்பில் மின்னியது.

"இதையெல்லாம் செய்து பார்க்க அந்த ஆண்டவன் எனக்கு ஆயுளையும் ஆரோக்கியத்தையும் தந்தாப் போதும். கடைசி வரை ஓய்வே இல்லாம உழைச்சிட்டே இருப்பேன்!" - என்ற தந்தையின் மடியில் இருவரும் சாய்ந்து கொண்டனர். கண்களில் நீர் கசிந்து ராகவனின் வேட்டியை நனைத்தது.

பதறினார். பிள்ளைகளின் கண்களைத் துடைத்தார். "ஏங்கண்ணுங்களா கலங்குறீங்க? அப்பா உசுரோட இருக்கிற வரைக்கும் நீங்க யாரும் அழக்கூடாது. சரியா?"

"அப்பா! உங்க கடமைகளை யெல்லாம் நான் நிறைவேத்துறேம்ப்பா. இந்த முறை எப்படியும் ஸ்டேட் பர்ஸ்ட் வந்திடுவேன். அப்படி வந்திட்டா என்னோட படிப்புச் செலவை எங்க ஸ்கூலே ஏத்துக்கும். உங்க சம்பாத்தியத்தை வெச்சு சீக்கிரமே அக்கா கல்யாணத்தை முடிச்சிடலாம்.

"எனக்கு வேலை கிடைச்சதும் உங்களோட மத்த கடமைகளை நான் நிறைவேத்தி வைப்பேன். நீங்க ஆசைப்பட்ட எல்லா நகையும் செய்து உங்க கையால அம்மாவுக்குப் போட்டுவிடச் சொல்வேன். அம்மா கை கழுத்து நிறைஞ்ச நகையோட நின்னுதான் என்னோட கல்யாணத்தை நடத்தணும். சரியா அக்கா?" - எனக் கேட்ட விஷ்ணுவை மூவருமே அணைத்துக் கொண்டனர்.

"தம்பி! கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குடா!"



"நீதான்யா என்னைப் பெத்த ஐயா. என் குல தெய்வம் நீதான் சாமி!"

"ராஜா! அம்மாவுக்கு நகை நட்டு மேல் ஆசை இல்லப்பா. எப்பவுமே நீயும் அக்காவும் சந்தோஷமா வாழணும். கடைசி வரை எங்களை உன் நிழல்ல வெச்சுக்கிட்டாப் போதும்."

"அம்மா! அப்படிச் சொல்லாதீங்கம்மா... நாங்கதாம்மா உங்க நிழல்ல இருக்கணும். எத்தனை வயசானாலும் உங்க நிழல்தாம்மா எங்க பாதுகாப்பு. எங்க சொர்க்கம்!" - விஷ்ணுவின் கண்களில் நீர் சுரந்தது.

"வேண்டாம்யா... உன் கண்ல எப்பவும் ஈரம் வரக்கூடாது. பேசினது போதும்... சகுந்தலா! குழந்தைங் களுக்கு சமோசா கொடும்மா. ஆறிப் போயிருக்குமே!"

"உங்க காபியும் ஆறிப் போச்சுங்க. இதோ சூடு பண்ணி எடுத்திட்டு வர்றேன்!"

"அம்மா! நீங்க உட்காருங்கம்மா! நான் போய்ச் சூடு பண்ணிட்டு வர்றேன்."

"அக்கா! அப்படியே எல்லாருக்கும் எடுத்திட்டு வா. இன்னிக்குக் குடும்பத்தோட உட்கார்ந்து காபி டிபன் சாப்பிடலாம்."

"வெரிகுட் ஐடியா! இதோ எடுத்திட்டு வர்றேன்." - திலோத்தமா உற்சாகமாய் உள்ளே செல்ல, மகனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார் ராகவன்.

"என்னங்க!"

"புள்ள ரொம்ப ஆசைப்பட்டது... முதல் பரிசு வாங்கணும்னு... அது நடக்கலையே!"

"அது பெரிய பிரச்சனை இல்லப்பா... அக்காவே மனசைத் தேத்திக்கிட்டா... இதைவிட நல்ல வாய்ப்பு கிடைக்கும். அப்போ கண்டிப்பா ஜெயிப்பா!"

கையில் சூடான காபியோடும் இன்னொரு தட்டில் சமோசாவோடும் வந்தாள் திலோத்தமா.

"அப்பா! எனக்கு ஒரு ஆசைப்பா!"

"என்னடா கண்ணு?"

"நம்ம அனைவரையும் கற்பனையாவே வரைஞ்சு பெரிய ஸ்டில்லா நம்ம வீட்டு ஹால்ல மாட்டணும்."

"அதுக்கென்ன... மாட்டிட்டாப் போச்சு!"

"அக்கா! உனக்கேன் இந்த விபரீத ஆசை?"

"ஏன்டா?"

"நீ நேர்ல பார்த்து வரைஞ்சாலே சகிக்காது. இதுல கற்பனையிலேயே வரைஞ்சா அதை யார் பார்க்கிறது? உன்னைப் பார்க்க வர்ற மாப்பிள்ளை ஓடிட மாட்டார்?"

"டேய்...!" ஆத்திரமாய்த் தம்பியைப் பிடித்து மொத்த, தாயும் தந்தையும் அவளிடமிருந்து பிள்ளையைப் பாதுகாக்க, வீடு முழுக்கக் கலகலத்தது.

அந்த அழகான குருவிக்கூட்டைக் கலைப்பதற்காக, சிதைப்பதற்காக மறுநாள் காலையிலேயே வந்து நின்றாள் பிரியங்கா.



# 7

கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் மேகங்கள்
துடுப்பு கூட பாரம் என்று
கரையைத் தேடும் ஓடங்கள்!

இரவு வெகு நேரம்வரை விழித்துப் பேசிவிட்டு தாமதமாக உறங்கியதால் காலையில் வழக்கத்தைவிட தாமதமாகவே கண் விழித்தாள் சகுந்தலா. எழுந்ததும் கடிகாரத்தைப் பார்த்துப் பதறியவள், மற்றவர்களை அவசரமாய் எழுப்பிவிட்டு மளமளவெனத் தனது வேலைகளைத் துவக்கினாள்.

ஒரு அடுப்பில் இட்லியும் மறு அடுப்பில் சாம்பாரையும் வைத்துக் காலை டிபனை ரெடி செய்து, மீண்டும் மதிய உணவிற்குச் சாதம் சமைத்து உருளைக்கிழங்குப் பொரியல் செய்து முடித்தபோது மணி எட்டு.

காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு புறப்பட்டவர்களைத் தடுத்து நிறுத்தி வலுக்கட்டாயமாகச் சாப்பிட வைத்து, அவரவர் சாப்பாட்டுப் பாத்திரங்களில் உணவை அடைத்துக் கொடுத்த பிறகே, நிதானமாய் மூச்சு விட்டாள்.

ராகவன் பிளாஸ்டிக் கம்பெனிக்கும், திலோத்தமா கல்லூரிக்கும், விஷ்ணு பள்ளிக்கும் தயாராய்த் தங்களது உடைமைகளுடன் வெளியேற, அவர்களை வழியனுப்பும் பொருட்டுச் சகுந்தலாவும் வெளியே வர, வாசலை ஒட்டித் தன் காரைக் கொண்டு வந்து நிறுத்தினாள் பிரியங்கா.

நால்வருமே சட்டெனச் சுதாரித்து நிமிர்ந்து பார்க்க, காரை விட்டு இறங்கியவளைப் பார்த்ததும் திலோத்தமாவின் முகம் மாறியது.

சகுந்தலாவும் ராகவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"யாரு இந்தப் பொண்ணு?"

"தெரியலங்க... ஏதோ பெரிய இடத்துப் பொண்ணு மாதிரித் தெரியுது!" - சகுந்தலா சொல்லும்போதே, கார் கதவை அறைந்து சாத்திவிட்டு வெகு அலட்சியமான பார்வையோடு அவர்களை நெருங்கினாள் பிரியங்கா.

"என்ன? குடும்பத்தோட எங்கே கிளம்பிட்டீங்க?" - நக்கலாய்க் கேட்டவளைப் பொறுமையாய் நிமிர்ந்து பார்த்தார் ராகவன்.

"யாரம்மா நீ?"

"என்ன? நான் யாரா? என்னைத் தெரியலையா?"

"தெரியலையே!"

"உங்க பொண்ணு படிக்கிற காலேஜ்லதான் படிக்கிறேன். அன்னிக்கு ஓவியப் போட்டியில முதல் பரிசை மேடையேறி வாங்கினேனே... நீங்க பார்க்கல்ல?" - அவளது கேள்வியில் ராகவனைத் தவிர மற்ற மூவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். சகுந்தலாவிற்குள் லேசான பயம் எட்டிப் பார்த்தது.

"பார்த்து ரெண்டு நாள்தான் ஆச்சு! அதுக்குள்ள மறந்திட்டீங்களா?"



"இல்லம்மா! எனக்குச் சரியா நினைவுல வரல்ல... அதான். திலோத்தமா! உன் தோழி வந்திருக்கா... என்னம்மா, ஒன்னும் பேசாம அமைதியா நிக்கிற?" - என மகளிடம் சொன்னவரை, அவசரமாய்க் கை உயர்த்தித் தடுத்தாள் பிரியங்கா.

"வெயிட் வெயிட்! என்ன...? பிரெண்ட்டா? நானா? இவளுக்கா?" - கலகலவென நகைத்தாள். அவளது சிரிப்பில் தெருவில் நடந்து கொண்டிருந்தவர்கள், தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் திரும்பினர்.

திலோத்தமா பொறுமையின்றி முன்னே வந்தாள். "எதுக்காக இப்படி வழியை மறிச்சிட்டு நிக்கிற? என்ன வேணும் உனக்கு?" - பிரியங்காவின் சிரிப்பு நின்றது.

"என்னடி கேட்டே? என்ன வேணுமா? நான் யார்கிட்டயும் எதையும் கேட்டுப் பழக்கமில்லை. பிச்சை போட்டுத்தான் பழக்கம்."

"அப்போ நீ உன்கூட சுத்திட்டு இருப்பாளுங்களே... அவங்க வீட்டுக்குத்தான் போயிருக்கணும். இது எங்க வீடு!"

"என்ன? இது உங்க வீடா?" - மீண்டும் அடக்க மாட்டாமல் சிரிக்கத் துவங்கினாள். ராகவன் குழப்பமாய் மகளைப் பார்த்தார்.

"என்னம்மா இது?"

"அப்பா! இது எப்பவுமே இப்படித்தான். கொஞ்சம் கழன்ற கேஸ். வாங்க நாம போகலாம்!" - என நடக்க முயன்றவளைத் தோளைப் பற்றி அழுத்தமாய் நிறுத்தினாள்.

"என்னடி சொன்ன? நான் வழன்ற கேஸா? எத்தனை திமிரு உனக்கு!" - என்றவாறே அடிப்பதற்குக் கையை ஓங்க, கப்பென்று [illegible] [illegible] [illegible] கடுமையோடு பற்களைக் கடித்தான்.

"எங்க வீட்டுக்கே வந்து என் கண்ணு முன்னாடியே எங்க அக்காவை அடிக்கக் கை ஓங்கிறியா? ரெண்டு துண்டா உடைச்சிடுவேன்... ஜாக்கிரதை!"

சகுந்தலா பதறினாள். "விட்ரு! கைய விடுடா! விடுன்னு சொல்றேனில்ல!"

நாயின் குரலில் பணிந்து வேகமாய் உதறினான். அவன் பற்றிய கரம் வலித்தது. அதைவிட அவமானம் தகித்தது. ஒரு பொடிப்பய என் கையைப் பிடித்துக் கொண்டு என்னை மிரட்டுவதா? ஆங்காரமாய்த் திரும்பினாள்.

"ஏன்டா! பிச்சைக்கார நாயே! என்னை மிரட்டுற அளவுக்கு நீ பெரியவனா?"

"பிரியங்கா! ஒழுங்கா மரியாதையாப் பேசு. உனக்கு இங்க என்ன வேலை? உன்னை யாரும் இங்கு அழைக்கவில்லையே! கிளம்பு... எங்களுக்கு வேலை இருக்கு!"

"ஆமா... பெரிய கழட்டுற வேலை! உன் அப்பன் கலைக்டர்... உன் தம்பி கான்வெண்ட்ல படிக்கிறான். அவங்கள்ளாம் வெளியே கிளம்புறாங்க. சரி... நீ எங்கே கிளம்பிட்ட?"

"காலேஜுக்குத்தான்!"

"என்ன? காலேஜா? அட! உனக்கு அங்கே என்ன வேலை?"



"என்ன உளர்ற? படிப்பதற்குத்தானே போவாங்க!"

"அது என்னை மாதிரி உள்ள பொண்ணுங்க. உனக்கு அங்க என்ன வேலைன்னு கேட்டேன்."

"இதோ பார் பிரியங்கா! உன்கிட்டப் பேசி டயத்தை வீணாக்க விரும்பல்ல. அம்மா! நீங்க கதவைப் பூட்டிக்கங்க. அப்பா...! வாங்க, போலாம்!"

"அட நில்லுடி! நான் சொல்ல வந்த விஷயத்தை இன்னும் சொல்லவே இல்லையே!"

"என்ன விஷயம்?"

"முந்தா நாள் நீ பண்ணிட்டு வந்த கூத்துக்கப்புறம் உனக்கு அந்தக் காலேஜ்ல இடம் கொடுக்க ராமகிருஷ்ணன் அங்கிள் ஒன்னும் கேணையன் இல்லையே!"

ராகவனும் சகுந்தலாவும் பதறினர். "அம்மாடி...! நீ என்னம்மா சொல்ற?"

"ம்... உம் பொண்ணோட சீட்டைக் கிழிச்சாச்சுன்னு சொல்றேன்."

"ஐயோ!" - பதறியவரின் கையிலிருந்த சாப்பாட்டுக் கூடை நழுவியது.

"அப்பா! இவ ஒரு விஷ ஜந்து. இவ சொல்றதை நம்பாதீங்கப்பா!"

"தெரியும்! நீ நம்பமாட்டேன்னு தெரிஞ்சிதான் உன் டி.சி.யைக் கையோட கொண்டுட்டு வந்தேன். பார்க்கிறியா?" - என்றவாறு தோளில் கிடந்த ஹேண்ட்பேகைத் திறந்து சில பேப்பர்களை நீட்டினாள்.

"இல்ல... நான் நம்பமாட்டேன். நீ ஏதோ நாடகம் போடுற. அதைக் கொடு என்கிட்ட!" - எனத் திலோத்தமா கைநீட்ட, வெடுக்கென அதைத் தன் பின்னே மறைத்துக் கொண்டாள்.

"நோகாம இதை உன் கையில கொடுக்கிறதுக்கா வாங்கிட்டு வந்தேன். பொறுடி. இந்த டி.சி. உனக்குத் தரணும்னா நீ ஒன்னு பண்ணனுமே!"

"எ... என்ன பண்ணணும்?"

"ம்... அப்படி வா வழிக்கு! ஒன் மினிட்!" - என்றவள், தெருப்பக்கமாய்த் திரும்பினாள். "ஹாய் காய்ஸ்... எல்லாரும் ஒரு நிமிஷம் அவங்கவங்க வேலையை விட்டுட்டு வாங்க. இப்போ ஒரு சூப்பர் சீன் நடக்கப் போகுது. அதையெல்லாம் பார்த்து எல்லாரும் கைதட்டி உற்சாகப்படுத்தணும்... சரியா?"

"யாரும்மா நீ? சினிமாக்காரி மாதிரி வந்து நின்னுட்டு என்னவெல்லாமோ சொல்றே! என்ன நடக்கப் போகுது?"

"பொறுத்திருந்து பாரு கிழவி. குறுக்கே பேசினா எனக்குப் பிடிக்காது."

ராகவனின் இதயத்திற்குள் ஏதோ பிசைவது போல் இருந்தது. உடல் முழுக்கத் தள்ளாடியது. வியர்த்த முகமாய் மகளை ஏறிட்டார்.

"தி... திலோம்மா! என்ன இதெல்லாம்?"

"நான் சொல்றேன் பெரியவரே! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. இன்னும் கொஞ்சம் கூட்டம் சேரட்டும். அப்பத்தானே கைதட்டுப் பலமாய் இருக்கும்."

"இதோ பாரும்மா... நீ யாரோ எவரோ? நாங்க இங்க கவுரவமா வாழ்ந்திட்டு இருக்கோம். இப்படி..."



"அந்தக் கவுரவத்தைக் காத்துல பறக்க விடத்தானே வந்திருக்கேன்!" - பிரியங்காவின் குரலில் பதறியவரைப் பின்னால் நின்ற சகுந்தலா பற்றிக் கொண்டாள். தந்தையின் நிலையைக் கண்டு ஆவேசமாய்ப் புத்தகப் பையைக் கழற்றினான் விஷ்ணு.

"ஏய்! யார் நீ? பொம்பளை ரௌடியா? என்ன தெருவில நின்னு ஃபிலிம் காட்டிட்டு இருக்கே? மகளே! ஒழுங்கா இடத்தைக் காலி பண்ணிடு. இல்ல, பொம்பளைன்னு கூடப் பார்க்க மாட்டேன்."

"என்னடா பண்ணுவ?"

"நல்லா வெயிட்டா கிரிக்கெட் பேட் வெச்சிருக்கேன். ஓங்கி ஒற்றை அடி அடிச்சேன்னு வை. தலை கூழாகிடும்."

"விஷ்ணு... வாயை மூடுடா!"

"நீங்க சும்மா இருங்கம்மா. எவளோ ஒருத்தி வந்து பஜாரித்தனம் பண்ணிட்டு இருக்கா. அதைப் பார்த்துட்டு நான் சும்மா இருக்கணுமா?" விஷ்ணு சொல்லி முடிக்கும் முன் அவனது கன்னத்தில் பளாரென அறைந்தாள் பிரியங்கா.

"யாரைடா பஜாரின்ற? பல்லைப் பேத்திடுவேன் நாயே!" - ஒற்றை விரலை நீட்டி எச்சரிக்க, திலோத்தமா சீறிப் பாய்ந்தாள்.

"யார் மேலடி கைவைக்கிற? போடி வெளியே! உன் ரௌடித்தனத்தை வேற எங்கயாவது வெச்சிக்க. போடி!" - ஆவேசமாய்ப் பிடித்துத் தள்ள, வெகு அலட்சியமாய் நின்று கொண்டிருந்த பிரியங்கா நிலை தடுமாறித் தெருவில் விழுந்தாள்.

கூடி நின்ற கூட்டத்தினர் இதைத்தான் சூப்பர் சீ... எனக் கருதிப் படபடவெனக் கைதட்டி ஆர்ப்பரிக்க, விழுந்த வேகத்தில் எழுந்தாள் பிரியங்கா. கையில் வைத்திருந்த பேப்பர்களைப் பரபரவெனச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தாள்.

மகளின் கோபத்தில் சற்று மிரண்டு நின்ற பெற்றவர்கள் பதறினர்.

"அய்யோ! என்ன பண்ற? இது எம் பொண்ணோட படிப்பு!" - அவர்கள் பதறிக் கொண்டே ஓடிவர, கிழித்த குப்பைகளைச் சாலையோரமாய் ஓடிக் கொண்டிருந்த சாக்கடைக்குள் வீசியெறிந்தாள்.

"வேண்டாம்... வேண்டாம்..." - ராகவன் கத்திக் கொண்டே குனிந்து சாக்கடையைப் பார்க்க, சிறு துண்டான காகிதங்கள் கழிவு நீரோடு கலந்து ஓடிச் சென்று கொண்டிருந்தன. நிலைத்துப் போன பார்வையோடு அப்படியே நின்றார்.

"என்னங்க! என்னங்க!" - பதறி அழுதபடி கணவரைத் தொட்டாள் சகுந்தலா.

"போச்சு! நாம பட்ட பாடெல்லாம் போச்சு... எல்லாமே போச்சு!"

திலோத்தமா ஓடி வந்தாள். "அப்பா! பதறாதீங்கப்பா. இது ஒரு ஃப்ராடுப்பா! இவ கிழிச்சிப் போட்டது என்னோட படிப்பு இல்லைப்பா... அப்பா!"

"போடி. போய் காலேஜ்ல போய்க் கேட்டுப் பாரு! நீ யாருன்னு கேட்பாங்க!"

"உ...ன்னை?"



"நீ எப்போ என்னைக் கைநீட்டி அடிச்சியோ அந்த நிமிஷமே உன் சீட்டு கிழிஞ்சு போச்சு. இதுல என் அண்ணனை வேற அவமானப்படுத்தினியா? என் அண்ணனை யாருன்னு நினைச்சே! அந்தக் கல்லூரியோட ஓனராகப் போகிறவன். அவனை அவமதிச்சா உன்னைச் சும்மா விடுவானா?"

"ஏய்! பொய் சொல்லாதடி. ரஞ்சித் ஸார் நல்லவர். நீதான்டி ஏதோ பிராடு பண்றே!" - என்ற விஷ்ணுவின் வலக்கரத்தைப் பற்றி பின்புறமாய்த் திருகினாள்.

"வாடா! என் மன்மதா! இன்னும் மீசைகூடச் சரியா முளைக்கல்ல... அதுக்குள்ள என்னையே மிரட்டுற அளவுக்குத் துணிச்சல் வந்திடுச்சா?"

"விடுடி என்னை! இன்னிக்கு உன் சாவு என் கையில தான்!" - என்றவன், தலையைக் குனிந்து மூர்க்கமாய் அவளது முகத்தில் மோத, தாடை எலும்புகள் நொறுங்க, அலறியவாறே தன் பிடியை விட்டாள் பிரியங்கா.

முன் பற்களில் இரண்டு உடைந்து இரத்தம் சொட்ட 'ஆ ஆ' என அலறினாள். "யாராவது போலீஸுக்குப் போன் பண்ணுங்க. இவன் என்னக் கொல்லப் போறான்!" - எனக் கத்தினாள். திலோத்தமா தம்பியைப் பற்றி இழுக்க, அவனை உதறிக் கொண்டு போய்த் தாறுமாறாய் உதைக்கத் துவங்கினான் விஷ்ணு.

கூடியிருந்தவர்கள் இருவரையும் விலக்க முயற்சிக்க, ராகவனுக்கு நெஞ்சை அடைத்தது. மூளைக்குள் ஏதேதோ மின்னல் வெட்டியது. எதற்காக இத்தனை போராட்டம் என்று அறிவதற்குள் உடல் முழுக்கத் தள்ளாடத் தரையில் விழுந்தார்.

தன் மகளின் படிப்பு, தன் மகனின் எதிர்காலம், த மனைவியின் கண்ணீர் பரிதவிப்பு மூன்றும் மாறி மாறி கண் முன்னே வந்து போக, தரையில் விழுந்த உட துடிக்க ஆரம்பித்தது. கையும் காலும் இழுத்துக் கொள்ள யாரோ ஒருவர் கத்தினார்.

"ஐயோ! ராகவன் ஸாரைப் பாருங்க!"

தன் பிள்ளைகளை இரு கையாலும் தன்புறமா இழுத்துக் கொண்டிருந்த சகுந்தலாவின் காதில் அந்த வார்த்தைகள் விழ, பதறியடித்துக் கொண்டு, சுற்றியிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடிவந்தாள்.

"ஐயோ! என்னாங்க? என்னாச்சு உங்களுக்கு? திலோ...! அப்பாவைப் பாருடி. விஷ்ணு! விஷ்ணு!" - தாயின் கதறலில் இருவரும் துடித்துப் பிரியங்காவை உதறித் தள்ளிவிட்டு ஓடி வர, அதற்குள் தன் நினைவைச் சுத்தமாய் இழந்திருந்தார் ராகவன்.

குடும்பம் மொத்தமும் கதறிக் கொண்டிருக்க, தனியாய் விடப்பட்ட பிரியங்கா தனது செல்போனை எடுத்து மெல்லிய குரலில் யாரிடமோ பேச, கூட்டம் மொத்தமும் ராகவனைச் சூழ்ந்து கொண்டது.

"ஏய்! யாராவது ஒரு ஆட்டோ பிடிச்சிட்டு வாங்கப்பா!"

"சகுந்தலாம்மா... வூட்ல பணம் இருந்தா எடுத்து வெச்சுக்க! ஆஸ்பத்திரிக்குக் கொண்டுட்டுப் போவோம்!"

"ராகவன் சாரோட துணி யெல்லாம் மண்ணும் குப்பையுமா இருக்கு. ரெண்டு துணியும் எடுத்து வெச்சுக்கங்க. திலோ! நீ போய் எடுத்திட்டு வா. அம்மா பாவம், அழுதிட்டு இருக்கு!"



"விஷ்ணு! அப்பாவை ஒரு கை பிடிடா! அந்தத் திண்ணையில படுக்க வைப்போம். ஏய்! ஆட்டோ வந்திடுச்சுப்பா. வழி விடுங்க!" - ஒவ்வொருவராய்க் குரல் கொடுக்க, லேசான உறுமலோடு ஆட்டோ வந்து நின்றது. நான்கு பேர் சேர்ந்து ராகவனைத் தூக்கி ஆட்டோவில் கிடத்த, சகுந்தலா கண்ணீரோடு ஏறிக் கொண்டாள்.

திலோத்தமா கதவைப் பூட்டிக் கொண்டு தந்தைக்கான மாற்றுத் துணியோடு வர, சைரனுடன் வந்து நின்றது போலீஸ் வேன். கூட்டத்தினர் அனைவரும் மிரண்டு விலக, திலோத்தமா அதிர்ந்து நின்றாள்.

இரண்டு போலீசார் இறங்கினர். "என்னய்யா இங்கே கூட்டம்? யார் எங்களுக்குப் போன் பண்ணினது?"

"நான்தான் ஸார்!" - வாயில் வழியும் இரத்தத்தோடு முன்னே வந்தாள் பிரியங்கா. போலீசார் பதறினர்.

"என்னம்மா இது இரத்தம்?"

"ஸார்! இதோ இந்தப் பையன்தான் ஸார்... என்னைக் கொலை பண்ணப் போறானாம். என்னைக் கொல்ல வர்றான்!" - விஷ்ணுவின் பக்கமாய்க் கைநீட்ட, திலோத்தமா பதறி மறுத்தாள்.

"இல்ல ஸார்... பொய் சொல்றா! ஸ்கூலுக்குக் கிளம்பிட்டு இருந்தவனை இவதான் வந்து வம்புக்கு இழுத்தாள். என் தம்பி கையப் பிடிச்சி முறுக்கி..."

"ஏம்மா! படிக்கிற வயசுலயே இப்படி ரௌடித்தனமா நடந்து ஒரு பொண்ணை இரத்தம் வர்ற அளவுக்கு அடிச்சிருக்கான். நீ இவனுக்கு வக்காலத்து வாங்கிறியா?"

ஆட்டோவிற்குள் அமர்ந்திருந்த சகுந்தலா கண்ணீரோடு கைகூப்பினாள். "ஐயா! இந்தப் பொண்ணு சொல்றது எதுவுமே உண்மையில்லை. இவதான் வீடு தேடி வந்து பிரச்சனை பண்ணினா. இதோ எம் புருஷன் இப்படி விழுந்து கிடக்குறாரே... எம் புருஷனைக் காப்பாத்தனும். எம் புள்ளைங்கள விட்டுடுங்கய்யா!"

"என்னாச்சு இவருக்கு?"

"இங்கே நடந்த ரகளையில நெஞ்சைப் புடிச்சிக்கிட்டு விழுந்துட்டாருய்யா. என்னன்னு தெரியல!"

"ஆட்டோ! நீ கிளம்பு. ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போ."

"ஐயா! எம் புள்ளைங்க..."

"முதல்ல உம் புருஷனைக் காப்பாத்தும்மா. நாங்க விசாரிக்க வேண்டியிருக்கு. ஆட்டோ! கிளம்பு." - போலீஸ் அதிகாரி உத்தரவாய்ச் சொல்ல, ஆட்டோ விருட்டெனப் புறப்பட்டது.

கண்களில் கண்ணீரோடு அநாதையாய் நின்ற இருவரையும் பார்த்துத் திருப்தியாய்ப் புன்னகைத்தவாறே கர்ச்சீப்பால் வாயை மூடிக் கொண்டாள் பிரியங்கா.

போலீஸாரைக் கண்டதும் பீதியில் சிலர் கலைந்து சென்றுவிட, தம்பியின் தோளை இறுகப் பற்றிக் கொண்டாள் திலோத்தமா. போலீசார் நெருங்கினர்.

"யாரும்மா இது?"

"எ... என் தம்பி ஸார்!"



"எத்தனைடா படிக்கிற?"

"பன்னிரண்டாவது ஸார்."

"ஏன்டா! இந்த வயசுலயே இப்படி ரௌடித்தனம் பண்றியா?"

"இல்ல ஸார்! இவதான் வந்து எங்களையெல்லாம் அசிங்கமாப் பேசினா. என் அக்காவை அடிக்கப் போனா!"

"ஐயோ! இல்ல ஸார். சுத்தப் பொய்! இவன்தான் என்னைக் கொல்லணும்னு வந்தான்."

"ஏம்மா! இந்தப் பையன் ஏன் உங்களைக் கொல்லணும்?"

"ஸார்! நானும் இவளும் ஒரே காலேஜ்லதான் படிக்கிறோம். முந்தாநாள் எங்க காலேஜ்ல ஓவியப் போட்டி நடந்தது. நாங்க ரெண்டு பேருமே கலந்துகிட்டோம். நான் முதல் பரிசு வாங்கினேன். இவ தோத்துட்டா. நான் ஜெயிச்சிட்டேன்ற வெறியில இவ தம்பியத் தூண்டிவிட்டு என்னை அடிக்க வெச்சா.

"சும்மா போனவ காரை நிறுத்திப் பிரச்சனை பண்ணி எங்க ஃபேமிலிய அசிங்கப்படுத்திட்டாங்க. நான் போலீஸுக்குப் போன் பண்ணினது தெரிஞ்சதும்தான் அந்த ஆள் மயங்கி விழுந்த மாதிரி நடிச்சித் தப்பிட்டார்!"

"அடிப்பாவி! இப்படிப் பொய்யாச் சொல்லிட்டுப் போறியே! இது உனக்கே அடுக்குமா? என் அப்பா நடிச்சாரா? உன் நாக்கு அழுகிடும்டி!"

"இந்தாம்மா! நாங்கதான் விசாரிச்சிட்டு இருக்கோமில்ல?"

"ஸார்! நான் படிக்கிறவ. என் படிப்பு மீது ஆசையுட சொல்றேன். இவ சொல்றது எதுவுமே உண்மையில்லை என்னை நம்புங்க!"

"எது உண்மையில்லை? நான் ஜெயித்ததா? தோற்றதா? ஸார்! என் வார்த்தையில நம்பிக்கை இல்லன்னா எங்க காலேஜ்ல வந்து விசாரிங்க. அதுக் முன்னால என் அப்பாவுக்குத் தகவல் கொடுங்க."

"யாரும்மா உங்க அப்பா?"

"தொழிலதிபர் கண்ணபிரான்!" - மிடுக்காய் சொன்னவளின் பதிலில் அதிகாரிகளிடம் மாற்றம் தெரிந்த

"அட! கண்ணபிரான் ஸார் பொண்ணா நீங்க என்னம்மா இது? இதை முதல்லயே சொல்லக்கூடாதா?"

"ஸாரி ஸார்! எனக்குப் பப்ளிசிடி பிடிக்காது."

"முதல்ல ஹாஸ்பிடலுக்குப் போங்கம்மா! காயத்துக் மருந்து போடுங்க."

"இவங்க?"

"இவங்களை நாங்க பார்த்துக்கிறோம்."

"பார்த்து ஸார்! நாலு சொட்டுக் கண்ணீர் விட்டதும் நம்பி விட்டுட்டுப் போயிடாதீங்க. இவனால எனக்கு எப்பவுமே ஆபத்துதான்! நாலு தட்டுத் தட்டி உள்ளே போடுங்க!"

"நாங்க பார்த்துக்கிறோம். நீங்க கிளம்புங்கம்மா!"

"ம்... ம்..." - என்றவள் தன் காரில் ஏறினாள் உறைந்து போய் நின்றிருந்த திலோத்தமாவைப் பார்த்து ஒ வெற்றிச் சிரிப்போடு காரைக் கிளப்பிக் கொண்டு போனாள்



"ஒன் நாட் த்ரீ. இந்தப் பையனை வண்டியில ஏத்துங்க!" - என்ற பிறகே உணர்வுக்கு மீண்டாள் திலோத்தமா.

"ஸார்! எதுக்காக என் தம்பியைக் கூட்டிட்டுப் போறீங்க?"

"ஒரு பொண்ணை இரத்தம் வர்ற அளவுக்கு அடிச்சிருக்கான். ஸ்டேஷன்ல வெச்சி விசாரிக்கணும். அதான் கூட்டிட்டுப் போறோம்!"

"ஸார்! தயவு செய்து நாங்க சொல்றதை நம்புங்க. என் தம்பி மேல எந்தத் தப்பும் கிடையாது."

"இதோ பாரும்மா! நீதான் உன் தம்பிய தூண்டி விட்டதா சொல்லுது அந்தப் பொண்ணு. அப்படிப் பார்த்தா உன்னையும் சேர்த்துத்தான் கூட்டிட்டுப் போகணும். சின்னப் பொண்ணா இருக்கியே... அதுவும் படிக்கிற பொண்ணுன்ற தால விட்டுட்டுப் போறேன். பிரச்சனை பண்ணாம உன் தம்பியை அனுப்பு. இல்லன்னா ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போக வேண்டியதிருக்கும்."

"ஸார்! என் தம்பி சின்னப் பையன் ஸார். அவனோட படிப்பு, எதிர்காலம் எல்லாமே வீணாகிடும் ஸார்!"

"இதெல்லாம் கோபப்பட்டுக் கை நீட்டும் முன்னால யோசிச்சிருக்கணும்!"

திலோத்தமா கண்ணீரோடு அந்த அதிகாரியின் காலில் விழுந்தாள். "ஸார்! ப்ளீஸ் ஸார்... என் தம்பிய விட்டுடுங்க ஸார். அவன் லைப்பே வீணாகிடும் ஸார். ப்ளீஸ் ஸார்... அவன் நிறையப் படிக்கணும்; முன்னேறணும்.

"எங்க அம்மா அப்பாவைக் காப்பாத்தணும் அவனோட கடமைகளைச் சாகடிச்சிடாதீங்க ஸார்! எங்களை மாதிரி நடுத்தர வர்க்கத்தில உள்ளவங்க சொல்ற உண்மையை ஏத்துக்க மாட்டீங்களா? பணக்காரங்க சொல்ற உண்மையைத்தான் நம்புவீங்களா?

"மக்களைக் காக்கிற காவலர்கள் ஸார் நீங்க... எங்க தம்பியைக் காப்பாத்துங்க. எங்க குடும்பத்தைக் காப்பாத்துங்க. ப்ளீஸ் ஸார்! என் தம்பி எந்தத் தப்பும் செய்யலை..." - காலைப் பற்றிக் கொண்டு கதறியவளைக் கண்டு மனம் கலங்கி நின்றனர் இருவரும்.

"இதோ பாரும்மா! எங்க காலைப் பிடிக்கிறதைவிட அந்தப் பொண்ணுகிட்டப் போய் பேசிப் பாரும்மா. எழுத்து மூலமா எந்தப் புகாரும் அவங்க தரலை. அதனால உன் தம்பி மேல கேஸ் போடலை. சும்மா ஒரு விசாரணைக்காகக் கூட்டிட்டுப் போறோம். பிரச்சனை பெரிசாகாம இருக்கணும்னா... நீ போய் அவங்ககிட்ட பேசிச் சமாதானம் செய்.

"அவங்க வீட்டில இருந்து யாராவது ஒருத்தர் சொன்னாலும் போதும். போம்மா... போய்ப் பேசு. எங்க கடமையைச் செய்ய விடு. எழுந்திரும்மா... தம்பி! நீ வண்டியில ஏறுப்பா..." - சொல்லிவிட்டு அவர்கள் வேனில் ஏறி அமர, முகம் முழுக்க வேதனையோடு திலோத்தமாவைப் பார்த்துக் கொண்டே ஏறினான் விஷ்ணு.

வேன் புறப்பட்டுப் போக, தன் உயிரே பிரிந்து போவதைப் போல் துடித்துப் போனாள்.



# 8

தேடித் தேடிப் பார்க்கிறேன்
என் கால்கள் ஓய்ந்ததே
வாராமலே என்னாகுமோ
என் ஆசைக் காவியம்!

உமாவின் உதவியோடு அந்த அலுவலகத்தில் வந்து நின்றபோது உடலும் உள்ளமும் கூசிப் போனது. பொங்கி வந்த கண்ணீரை அடைத்துக் கொண்டு தலையைக் கவிழ்ந்தவாறு அமர்ந்து கொண்டாள்.

"யெஸ்! வாட் யூ வாண்ட்?" - என்ற மென்மையான குரலில் உமா நிமிர்ந்தாள். டை கட்டிய இளைஞன் புன்னகையோடு நின்றிருக்க, குழப்பமாகக் கேட்டாள்.

"யார் நீங்க?"

"ஐ'ம் அர்ஜுன்... ரஞ்சித் சாரோட பி.ஏ."

"அ... அவர் இல்லையா?"

"யார் மேடம்?"

"அதான்... ரஞ்சித் குமார்."

"ஸார் ஒரு அவசர வேலையா வெளியூர் போயிருக்கார்!"

மேஜை மீதிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. "எக்ஸ்கியூஸ் மீ!" - என்றவாறு ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்தான்.

"ஹலோ! பிரியங்கா ஸ்டீல் வொர்க்ஸ்!"

"பேசறது யாரு? அர்ஜுனா?" - பிரியங்காவின் கேள்வியில் விரைப்பானான்.

"யெஸ் மேம்!"

"அர்ஜுன்! அண்ணன் போன் எதுவும் பண்ணலையா?"

"இல்ல மேம்!"

"சரி... அண்ணனைத் தேடி யாரும் வந்தா வீட்டுக்கு அனுப்பி வை. நான் பேசிக்கிறேன்."

"ஓ.கே. மேம்!"

"அப்புறம்... அண்ணனோட செல் நம்பரை யாரு வந்து கேட்டாலும் கொடுக்காதே! என்னைக் கேட்காம அங்க ஒரு தூசு கூட அசையக்கூடாது. புரியுதா?"

"புரியுது மேம்!"

"ம்... போனை வெச்சிட்டு வேலையைப் பார்!" - என்றவாறு வைத்து விட்டாள். ஒரு சின்ன அலுப் போடு தானும் ரிஸீவரை வைத்துவிட்டு, வந்தவர்களிடம் திரும்பினான்.

"சொல்லுங்கள் மேடம். உங்களுக்கு யார் வேணும்?"

உமா தயக்கமாய்த் திலோத்தமாவை ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

"ஸார்! நாங்க ரஞ்சித் குமாரைப் பார்க்கணும்னு வந்தோம்!"

அர்ஜுனின் புருவம் சுருங்கியது. "என்ன விஷயமாய்?"

"அதை அவர்கிட்டதான் சொல்லணும்."



"அப்போ அவர் வர்றவரை நீங்க வெயிட் பண்ணித்தான் ஆகணும்."

"வந்து... எப்போ வருவார்?"

"ஸாரி மேடம்... அதைச் சொல்லிவிட்டுப் போகவில்லை!"

"எங்கே போயிருக்கார்?"

"அதையும் சொல்லிவிட்டுப் போகவில்லை. பட்... ஏதோ பர்ஸனல் வேலையாய்ப் போயிருக்கிறார்!"

"நாங்க கொஞ்சம் அவசரமாய் அவரைப் பார்க்கணும்."

"தாராளமாய் பாருங்கள். இதோ இருக்கிறாரே!" - என அவன் கைநீட்ட அதுவரை குனிந்தே இருந்த திலோத்தமா அவசரமாய் நிமிர்ந்தாள். அவனது கை காட்டிய திசையில் இருந்தது ரஞ்சித் குமாரின் புகைப்படம்.

எதிர்ப்பக்கச் சுவரில் பெரிதாய் பிரேம் செய்யப்பட்ட புகைப்படம். டை, கோட், சூட்டுடன் கம்பீரமான பார்வையுடன் இருந்த புகைப்படத்தைப் பார்க்கையில் அவனே எதிரில் நிற்பது போலத்தான் தோன்றியது. அவசரமாய்ப் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

உமா கோபமாய் அவனை ஏறிட்டாள். "என்ன, நக்கலா?"

"இல்ல மேடம். பார்க்கணும்னுதானே சொன்னீங்க!" - சிரிக்காமல் சொன்னான்.

"ம்... உங்க எம்.டி.யோட குடும்பத்தில இருக்கிற அதே திமிர் உங்களுக்கும் இருக்கு!"

"நோ மேடம். நீங்க கேட்ட விதம் தவறு!"

"ஓ.கே. இப்போ சரியாக் கேட்கிறேன். நாங்க ஒரு அவசர வேலையா உங்க எம்.டி.யைப் பார்த்துப் பேசணும். முடியுமா?"

"இப்போ முடியாது மேம். அவர் வந்த பிறகு வந்து பாருங்க!"

"அவரோட செல் நம்பராவது தாங்களேன். நாங்க பேசியே ஆகணும்!"

சட்டென்று உஷாரானான் அர்ஜுன். 'இவர்களை மனதில் வைத்துக் கொண்டுதான் போன் நம்பரைக் கொடுக்காதே என்று உத்தரவு வந்ததோ!'

"ஸாரி மேம்! சாரோட அனுமதியில்லாம நாங்க யாருக்கும் செல் நம்பர் தர்றது இல்ல."

"மிஸ்டர் அர்ஜுன்... என் பிரெண்ட் இப்ப ஒரு பெரிய இக்கட்டுல மாட்டிட்டு இருக்கா. அவளுக்கு உங்க எம்.டி.யோட உதவி கண்டிப்பாத் தேவைப்படுது. ப்ளீஸ்... உங்க விதிமுறைகளைக் கொஞ்சம் தளர்த்திகிட்டு நம்பர் கொடுங்க ஸார்!"

"ஸாரி மேடம்... என்னோட வேலை போயிடும்."

"ஏன் ஸார்... நாங்க என்ன..." - என வேகமாகத் தொடங்கிய உமாவின் கையைப் பிடித்து அழுத்தினாள் திலோத்தமா.

"என்ன திலோ?"

"வா உமா, போகலாம்!" - என்றவாறு எழுந்தாள்.



"திலோ! இரு... நான் கேட்கிறேன்."

"வேண்டாம் உமா! பாவம்... அவரும் ஒரு மாதச் சம்பளக்காரர். அவரை ஏன் கஷ்டப்படுத்த வேண்டும். வா, போகலாம்!"

"இனிமே என்ன செய்யுறது?"

"நடப்பது நடக்கட்டும்... வா!" - திலோத்தமா முன்னே நடக்க, உமா ஒரு பெருமூச்சோடு தொடர்ந்தாள். இருவரது உரையாடல்களையும் கேட்டவன் தயக்கமாய் அழைத்தான்.

"ஒன் மினிட் மேடம்!"

"என்ன?"

"நீங்க ஏதோ அவசரத்துல இருக்கீங்கன்னு புரியுது. பட்... என்னால உதவ முடியல்ல."

"இதைச் சொல்லத்தான் கூப்பிட்டீங்களாக்கும்!" - வெடுக்கெனக் கேட்டாள் உமா.

"இல்லங்க மேடம்... சாரோட செல் நம்பரைத் தரக்கூடாதுன்னு உத்தரவு போட்டது எங்க சின்ன மேடம். அதான்..."

"யாரு? பிரியங்காவா?"

"உங்களுக்கு அவங்க தெரியுமா?"

"தெரியும்... தெரியும்! நாங்க இங்க வந்த காரணமே அவதானே!"

"நீங்க இங்க வர்றது அவங்களுக்கும் தெரியும் போலிருக்கு. உங்கள வீட்ல வந்து பார்க்கச் சொன்னாங்க!"

திலோத்தமா திடுக்கென நிமிர்ந்து உமாவைப் பார்த்தாள்.

"யாரு? பிரியங்காவா சொன்னாள்?"

"ஆமாம் மேடம்! இப்பத்தான்... நீங்க உட்கார்ந்திருக்கும் போதுதான் போன் வந்தது."

"பார்த்தியா திலோ! உட்கார்ந்த இடத்தில இருந்தே நாம வந்ததைக் கண்டுபிடிச்சிட்டா. இப்ப என்ன பண்றது?"

"அவங்க வீட்டுக்கு எப்படிப் போகணும்னு கேளு உமா!"

"என்ன?"

"போகலாம்! அவகிட்டயே கேட்டுப் பார்க்கலாம்!"

"திலோ!"

"எனக்கு என் தம்பி வேணும் உமா. உடனே வேணும். அதுக்காக நான் எந்தக் கழுதையோட காலையும் பிடிக்கத் தயாரா இருக்கேன். எனக்கு என்னோட தன்மானத்தை விட என் தம்பியும் அவனோட லைப்பும் முக்கியம் உமா!" - என்னும்போதே கண்ணீர் பெருகியது.

"சரி... போலாம்! ஸார்... வீட்டு அட்ரஸ் சொல்ல முடியுமா?"

"யா... ஷ்யூர். நீங்க எதில வந்தீங்க?"

"என்னோட ஸ்கூட்டியில."

"அது இங்கேயே நிற்கட்டும். நான் இப்போ சில பேப்பர்ஸ்ல ஸைன் வாங்கிறதுக்காக மேடமைப் பார்க்கப் போறேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லன்னா கம்பெனி கார்ல என்கூடவே வரலாம்."

"நாங்க வர்றது இருக்கட்டும். உங்களுக்கு இந்த வேலையில தொடர விருப்பமில்லையா?"



"வாட்?"

"எங்களைக் கம்பெனி கார்ல கூட்டிட்டு வந்தீங்கன்னு தெரிஞ்சா முதல்ல உங்க சீட்டுதான் கிழியும். அப்புறம் கூட்டிட்டுப் போன டிரைவரோட வேலையும் போகும். எதுக்கு ஸார் எங்களுக்கு அந்தப் பாவம் சேரணும்? பேசாம அட்ரஸைச் சொல்லுங்க. நாங்களே போய்க்குவோம். திலோ! இவருக்கு இன்னும் இவரோட சின்ன மேடத்தோட குணம் தெரியலன்னு நினைக்கிறேன்."

"ஸாரி மேடம்! இந்தாங்க... இதுல அட்ரஸ் இருக்கு!" - என்றவாறு முகவரி அட்டையை நீட்டினான்.

"தேங்க்ஸ்!" - என்றவாறு பெற்றுக் கொண்டாள்.

"மேடம்!"

"என்ன?"

"நீங்க ஏதோ பிரச்சனையில இருக்கீங்கன்னு தோணுது. அது என்னன்னு சொன்னீங்கன்னா...!"

"நீங்க ஸால்வ் பண்ணிடுவீங்களா?"

"இல்ல... ஸார் போன் பண்ணினா அவர்கிட்டச் சொல்லுவேன்."

"தேவையில்லை. நாங்களே பேசித் தீர்த்திடுவோம். உங்கள் உதவிக்கு நன்றி! வா திலோ!" - இருவரும் திரும்பியும் பாராமல் வெளியேற, ஒரு இயல்பான புன்னகையோடு தன் வேலையில் கவனத்தைத் திருப்பினான் அர்ஜுன்.

மீண்டும் உமாவின் வாகனத்தில் ஏறி இருவரும் புறப்பட, உமா அலுத்துக் கொண்டாள். "ச்சே! இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்து வேஸ்ட்டாப் போச்சே!"

"நாம இங்க வந்திருக்கவே கூடாது உமா!"

"ஏன்?"

"இந்த ஆளுகிட்ட உதவி கிடைக்கும்னு நினைக்கிறியா?"

"கண்டிப்பாக் கிடைக்கும் திலோ! அன்னிக்கு நீ ஃபங்க்ஷன் முடியுறதுக்குள்ள கிளம்பிட்ட இல்ல... அதான் உனக்கு இவரைப் பத்தித் தெரியல."

"ஏன்?"

"ஃபங்க்ஷன் முடியுறதுக்கு முன்னால இவர் பேசினாருப்பா. நம்ம காலேஜ்ல சேரும் கஷ்டப்பட்ட பெண்களோட செலவைத் தன் ட்ரஸ்ட் மூலமா ஏத்துக்கிறதா சொன்னார். வருஷத்துக்குப் பத்துப் பேரை செலக்ட் பண்ணி ஹெல்ப் பண்றாராம். அப்புறம் நம்ம லைப்ரரிய புதுப்பிக்கும் பொறுப்பையும் ஏத்துக்கிட்டார்."

"இதெல்லாம் விளம்பரத்துக்காக உமா!"

"இன்னொன்னு சொன்னா ஆச்சரியப்படுவ."

"என்ன?"

"நீ வரைஞ்ச பெயிண்டிங்ஸ எல்லாம் அவரே வாங்கிட்டுப் போயிட்டாராம்... தெரியுமா?"

"எ...ன்...ன...?"

"ஆமா! எனக்கே நேத்துதான் சாரதா மேம் சொன்னாங்க. இன்னிக்கு உங்கிட்டச் சொல்லலாம்னு இருந்தேன். அதுக்குள்ள என்னென்னமோ ஆகிப் போச்சு!"

"என் படங்களை எதுக்காக வாங்கிட்டுப் போனார்?"



"அது தெரியலை. ஆனா அவரைப் பத்தித் தவறான எண்ணம் நமக்கு வந்தது தப்பு. காலேஜ்ல உன்னை டிஸ்மிஸ் பண்ணணும்னு சொன்னது கூட இந்தப் பிரியங்கா செய்த வேலைதான். நிச்சயமா இதுக்கும் அவருக்கும் சம்பந்தம் இருக்காது திலோ!

"அதனாலதான் உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன். அவர்கிட்டச் சொன்னா எல்லாப் பிரச்சனையும் சரியாகிடும்னு நினைச்சேன். ம்ப்ச்! நம்ம நேரம். திரும்பவும் அந்தத் தாடகை மூஞ்சிலதான் போய் விழிக்கணும்னு இருக்கு. திலோ! இப்ப எந்தத் தைரியத்தில நாம அவ வீட்டுக்குப் போறோம்?"

"ஏன் உமா?"

"நல்ல நாள்லயே அவ நம்மை ஒரு மனுஷியா மதிக்க மாட்டாள். இதில அவகிட்ட ஹெல்ப் கேட்டு வந்திருக்கோம்னு தெரிஞ்சா சும்மா இருப்பாளா? வாசலைக்கூட மிதிக்க விடமாட்டா!"

"வேறு வழியில்லை உமா. எனக்கு விஷ்ணுதான் முக்கியம். அவனுக்காக அவ என்ன பேசினாலும் சகிச்சுத்தான் ஆகணும்."

"சீக்கிரம் பேசி அவனை வெளியே கூட்டிட்டு வரணும் திலோ! அங்கே அப்பாவுக்கு என்ன ஆச்சோ தெரியலை."

"அப்பாவுக்கு எதுவும் ஆகியிருக்கக்கூடாது உமா. எங்க எல்லாருக்கும் ஆணி வேர் எங்க அப்பாதான். அவங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா..."

"பயப்படாதே திலோ! முதல்ல விஷ்ணுவ வெளியே கொண்டு வருவோம். அவனையும் கூட்டிட்டு ஹாஸ்பிடலுக்குப் போவோம்!"

"ம்..."

"திலோ! இந்த ரோடுதான். அந்த அட்ரஸப் பாரு. வீட்டு நம்பர் என்ன?" - வண்டியின் வேகத்தைக் குறைத்தாள் உமா.

"பதினொன்னு உமா!"

"இது பத்து. இதோ பதினொன்னு. இந்த வீடுதான் போலிருக்கு!" - மாளிகை போல் காட்சியளித்த வீட்டின் முன் நின்றனர். வண்டியைச் சுவரோரமாய் நிறுத்திப் பூட்டிவிட்டு இருவரும் வாசலை நெருங்க, அது உட்பக்கமாய்ப் பூட்டியிருந்தது.

தயக்கமாய் நின்று சுவரில் இருந்த அழைப்பு மணிப் பொத்தானை அழுத்த, நான்கைந்து நாய்களின் ஆவேசமான குரைப்புச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு ஆள் ஓடி வந்து கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

"யாரும்மா நீங்க?"

"நாங்க பிரியங்காவைப் பார்க்கணும்."

"வாட்ச்மேன்! அவங்களை உள்ளே அனுப்பு!" - பிரியங்காவின் குரல் இங்கே வரை கேட்க, வாட்ச்மேன் கேட்டைச் சற்று அகலமாய்த் திறந்து வைத்தான்.

வீட்டிற்குள் காலெடுத்து வைக்கவே கூசியது. 'மதியாதார் தலைவாசல் மிதியாதே' என்றாரே ஔவைப் பாட்டி. இன்று மிதிக்கும்படியாய் ஆயிற்றே!

"காரியம் ஆக வேண்டும் என்றால் கழுதையின் காலைக்கூடப் பிடிக்கலாம். தப்பில்லை... வா திலோ!" -



என்றவாறு உமா முன்னே நடக்க, சின்ன நடுக்கத்தோடு அவளைப் பின்தொடர்ந்தாள் திலோத்தமா.

வாசலிலே நின்று வரவேற்றாள் பிரியங்கா. தாடையில் லேசாய் வீங்கியிருக்க, வாயை மூடிக்கொண்டு சைகையால் அழைத்து அமரச் சொன்னாள். அவர்களுக்கு எதிரே இருந்த ஒற்றை சோபாவில் வாகாய் அமர்ந்து கொண்டு திலோத்தமாவை நிதானமாய் அளவெடுத்தாள்.

ஒரே நாளில் சருகாய் உலர்ந்திருந்தாள் திலோத்தமா. எப்போதும் முழு நிலவாய் ஜொலிக்கும் முகம் இன்று அழுது கன்றிச் சிவந்திருந்தது. நேராய் நிமிர்ந்து பார்க்கும் பார்வை பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தது. உடல் அவமானத்தால் குறுகிக் கொண்டிருந்தது.

திருப்தியாய்ப் பார்வையை உமாவின் புறமாய்த் திருப்பி, "என்ன விஷயம்?" - எனச் சைகையால் கேட்டாள்.

"பிரியங்கா! விஷ்ணுவைப் போலீஸ்ல கூட்டிட்டுப் போயிட்டாங்க. நீ ஒரு வார்த்தை சொன்னா..." - எனத் துவக்கிய உமாவை நிறுத்தும்படி கைகாட்டி விட்டுச் சற்றுத் தள்ளி நின்ற பணிப்பெண்ணை அழைத்தாள்.

கையில் சிறு ட்ரேயுடன் நின்றவள் ஓடி வந்து ட்ரேயை நீட்ட, அதில் இருந்த முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்துத் தனது முகத்தைப் பார்த்தாள் பிரியங்கா.

தாடை வீங்கியிருக்க, கழுத்தில் லேசான கீறல். நெற்றியில் சில முடிக் கற்றைகள் காணாமல் போயிருந்தது. வாயைத் திறந்து பற்களைப் பொத்தி வைத்திருந்த பஞ்சுத் துண்டை எடுத்து அந்த ட்ரேயில் போட்டாள். இரத்தச்

சிவப்போடு இருந்த அந்தப் பஞ்சை எதிரில் இருந் இருவரிடமும் காட்டினாள்.

வாயைத் திறந்து காட்டினாள். வலப்புறச் சிங்கப் ப ஒன்றும் கடைவாய்ப் பல் ஒன்றும் காணாமல் போயிருந்த பணிப்பெண்ணைப் பார்த்து. "நீ மாடிக்குப் போ! அம் கீழே வராமப் பார்த்துக்கோ!" - என்றாள்.

"சரிங்கம்மா! அம்மா... டாக்டர் உங்களைப் பேச கூடாதுன்னு சொல்லியிருக்கார்!"

"போடி இவளே! இன்னிக்கு... இந்த நேர பேசறதுதான்டி பேச்சு. என் பேச்சைக் கேட்கிறதுக்குத்தா இவ்வளவு தூரம் வந்திருக்காளுங்க. நீ போ! நா பார்த்துக்கிறேன்!"

"சரிங்கம்மா!" - என்றவள் மாடிக்குப் போகும்வ அமைதியாய் இருந்தவள், அவள் உருவம் மறைந்தது இருவரையும் பார்த்துப் புருவம் உயர்த்திக் கேட்டாள்.

"என்ன விஷயம்?"

"விஷ்ணுவை போலீஸ் கூட்டிட்டுப் போயிட்டாங்க!" - என் மீண்டும் உமாவே தொடங்க, சீறினாள் பிரியங்கா.

"யாருடி விஷ்ணு?"

"தி... திலோவோட தம்பி!"

"அவ தம்பிதானே! பிறகேன் நீ பேசுற? அவ பேசமாட்டாளா? ஏன்? பேசினா கொஞ்சநஞ்சம் ஒட்டிட் இருக்குற கௌரவம் போயிடுமோ?" - ஏளனமாய்க் கேட்க திலோத்தமா ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தாள்.



"பிரியங்கா! என் தம்பிய வெளியே கூட்டிட்டு வரணும். அதுக்காக உன்கிட்ட உதவி கேட்டு வந்திருக்கேன். ப்ளீஸ்... ஹெல்ப் மீ!"

"நான் ஹெல்ப் பண்றது இருக்கட்டும். என் வீடு அண்ணா நகர்ல இருக்குன்னு உங்களுக்கு யார் சொன்னது?"

"என்ன?" - குழப்பமாய்ப் பார்த்தாள்.

"என்ன முழிக்கிற? அங்கே போயிட்டுத்தானே வந்தீங்க?"

"ஓ! அதுவா? ப்ரியங்கா... எங்களுக்கு உன் வீடு தெரியாதில்ல... அதான் உங்க கம்பெனியில போயி அட்ரஸ் கேட்டுட்டு..."

"ஷட் அப் உமா! நீ தேவையில்லாம வாயைத் திறக்க வேண்டாம். எனக்கும் இவளுக்கும் நடக்கிற போர் இது. நீ வேடிக்கை மட்டும் பார்."

திலோத்தமா களைப்பாய் அவளைப் பார்த்தாள். "ப்ரியங்கா! நான் உன்கிட்ட போராட வரல்ல. எப்பவும் உன்னை எதிரியா நினைச்சதும் இல்லை. எனக்கு என் தம்பி வெளியே வரணும். அதுக்காக நான் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிற?"

"என்னடி? இவ்வளவு பட்டும் வியாபாரம் பேசுற மாதிரிப் பேசுற? கண்ல கண்ணீரோடு என் கால்ல விழுந்து கெஞ்சுவேன்னு எதிர்பார்த்தேன்!"

"உன் கால்ல விழணுமா? விழுறேன் பிரியங்கா. தயவு செய்து என் தம்பிய விடச் சொல்லிடு. நான் உன் கால்ல விழுறேன்." - என்றவாறே எழுந்தவளைக் கையமர்த்தினாள்.

"வெயிட்...! நீ என் கால்ல விழுந்துதான் ஆகணும். ஆனா இங்க வெச்சு இல்லை. நம்ம காலேஜ்ல! என்னை எத்தனை பேர் முன்னால கை நீட்டி அடிச்சியோ, அத்தனை பேர் முன்னால நம்ம பிளேகிரவுண்ட்ல வெச்சு என் கால்ல விழணும். விழுவியா?"

"விழுறேன்!" - தயங்காமல் சொன்னவளைப் பார்த்துக் கேலியாய்ச் சிரித்தாள். சிரிக்க முடியாமல் பல் வலித்தது முகம் சுருக்கினாள்.

"சரி... நானே ஒரு நல்ல நாளாப் பார்த்துச் சொல்லி அனுப்புறேன். அப்ப வந்து கால்ல விழு. நீ என்னை அடிச்சதை மறந்திடுறேன். இப்ப கிளம்பு!"

"என் தம்பி!"

"ஏன்? அவனுக்கென்ன?"

"போலீஸ்ல நீ வந்து சொன்னாத்தான் விடுவாங்களாம். வர்றியா?"

"இதோ பார் திலோத்தமா! இப்படியெல்லாம் ஜோக்கடிக்காதே! என்னால சிரிக்கக்கூட முடியல்ல. உன் தம்பி செய்த காரியத்தைப் பார்த்தல்ல!" - என வாயைக் காட்ட, திலோத்தமாவின் முகம் மாறியது.

"எ... என்ன? ஜோக்கா?"

"பின்னே இல்லையா? ஏன்டி! நீ எம் பிரெண்ட்ஸ் முன்னால ஒரே ஒரு அடி அடிச்சதுக்கே உன்னை இப்படிப் பந்தாடியிருக்கேனே... உன் தம்பி... அந்த ரௌடிப் பய என்னை எத்தனை அடி அடிச்சான்னு தெரியுமா? அதுவும் நடுத் தெருவில வெச்சு!



"உன்னை மாதிரி லோ-கிளாஸ்ங்க முன்னால... விடுவேனாடி அவனை? என் முகத்தைப் பார்த்தியா? என் பல்லைப் பார்த்தியா? இதுக்கெல்லாம் அவன் பதில் சொல்ல வேண்டாம்? எனக்கு ரெண்டு பல்லு போச்சே! அவனுக்கு ஒரு பத்துப் பல்லாவது உடைய வேண்டாம்? என்னை அடிச்ச கை முறிய வேண்டாம்? என்னை எட்டி உதைச்ச காலு முடமாக வேண்டாம்!" - கண்ணும் முகமும் கொடூரமாய் மாற, திலோத்தமா நடுங்கிப் போனாள்.

"பி...ரி...யங்கா!"

"இதையெல்லாம் நானே ஒரு ஆளைவிட்டுப் பண்ண முடியும். ஆனா அப்படிச் செய்தா அவன் உடம்பு மட்டும்தான் காயமாகும். என்னை எதிர்த்துப் பேசின வாயும் கையும் இனி யாரையும் பார்த்துப் பேச முடியாமக் கூசணும். உன் தம்பி யார்க்கும் பயன்படாம காலம்பூரா கம்பிக்குப் பின்னாலதான் கிடக்கணும்."

"பிரியங்கா!"

"உன் அப்பனும் ஆத்தாளும் வாயை மூடிட்டு இருந்ததாலதான் அவங்களை விட்டேன். இல்லன்னா ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் தூக்கி உள்ளே வெச்சிருப்பேன். அடிச்சுக் கொன்னாக்கூட கேட்க நாதியில்லாத நாய்ங்களுக்கு என்னை அடிக்கிற அளவுக்கு வீராப்பு வருதோ!

"பார்த்தியா? ஒரே நாள்ல உன்னை எப்படியெல்லாம் கதறடிச்சேன்னு! இனிமே பிரியங்கான்ற பேரைக் கேட்டாலே நடுங்க மாட்டே நீ? உன் வாழ்நாள் முழுக்க அ... வைப்பேன்னு சொன்னேனே... நினைவிருக்கா? அ... நிறைவேத்திட்டேன்."

"பிரியங்கா! என்ன இது? அன்னிக்கு ஏதோ கோபத்தில அதுவும் நீ பேசினதாலதானே ஒரு அடி அடிச்சிட்டா. அதுக்காக நீ இவ்வளவு வல்கரா நடந்துக்கணுமா?"

"அவ என்னை அடிச்சதுக்கே நான் அவ்வளவு ஆத்திரப்பட்டேன். இவ என் அண்ணனை அவமானப் படுத்துறதா நினைச்சு என் கோபத்தில எண்ணெயை ஊத்தினா. சரி... தோத்த வேதனையில பேசுறான்னு பார்த்தா மறுநாளே இவ தம்பிய அனுப்பி என் அண்ணனுக்கே வலை வீசுறா!"

"ஐயோ! அபாண்டமாப் பேசாதே பிரியங்கா!"

"ஏய்... நிறுத்துடி. எதிராளியோட ஒவ்வொரு அசைவையும் கவனிக்கிறவ நான். என் அண்ணன் உன்னோட ஓவியங்களை வாங்கினப்பவே எனக்குச் சந்தேகம்தான். அப்பவே அவனை டீப்பா வாட்ச் பண்ணினேன்.

"இதுல உன் தம்பிய எங்க கம்பெனியில பார்த்ததும் கன்பார்ம் பண்ணிட்டேன். என்னடி! கண்டதும் என் அண்ணன் மேல மையல் வந்திடுச்சா! அதுக்குத்தான் உன் தம்பிய தூது அனுப்பினியா? என் அண்ணனைக் கட்டிக்கிட்டு இந்த வீட்ல வந்து என்னையே அடக்கி ஆளலாம்னு திட்டம் போட்டியா?"

"சீச்சீ! இந்த மாதிரிக் கேவலமான திட்டமெல்லாம் எனக்கு ஒருபோதும் தோணாது!"

"பிறகெதுக்குடி இன்னிக்கு என் அண்ணனைப் பார்க்கப் போன?"



"நான்தான் அவளைக் கூட்டிட்டுப் போனேன். அவளா வரல்ல."

"ஓ! கூட்டுக் கள்ளியா நீ! இதோ பார் உமா!உன்னை என் எதிரியா நான் இதுவரைக்கும் நினைக்கல்ல. ஆனா இவளுக்கு உதவி செய்யுறதா நினைச்சிட்டு நீயும் என் கோபத்துக்கு ஆளாகிடாதே!"

திலோத்தமா கைகூப்பினாள். "பிரியங்கா! உன்னை அடிச்சது மட்டும்தான் நான் பண்ணின தப்பு. மத்தப்படி நீ நினைக்கிற மாதிரி நான் எதுவும் பண்ணல்ல. உனக்கு என் வார்த்தையில நம்பிக்கை இல்லன்னா உன் அண்ணனிடமே கேட்டுப் பார். என் தம்பிய நான் அனுப்பல."

"நீயே அனுப்பியிருந்தாலும் உனக்கு எந்தப் பயனும் இருக்காது. ஏன்னா... என் அண்ணனுக்கு எப்பவோ கல்யாணம் முடிவாகிப் போச்சு. இப்பக்கூட அவனோட வருங்கால மனைவிகூட லண்டன்ல தேன்நிலவு கொண்டாடப் போயிருக்கான். போறதுக்கு முன்னால உன்னை என்னென்ன செய்யணும்னு எங்கிட்ட சொல்லிட்டுத்தான் போனான். அவன் சொன்னதைத்தான் நான் செய்றேன்."

"எ... என்ன?" - நம்ப முடியாத அதிர்ச்சியோடு தள்ளாடினாள்.

"நம்பமுடியல இல்ல. உன் தம்பிகிட்ட நல்லவிதமாப் பேசி அனுப்பிட்டு எங்கிட்டச் சொன்னான். உன்னைக் கல்லூரியை விட்டே நீக்குவ்து மட்டுமில்ல... இந்த ஊரை விட்டே ஓடவைச்சிடுன்னு சொன்னான்."

"ந்நோ!"

"யெஸ்! நீ இப்ப வாடகைக்கு இருக்கிற வீட்டை நா
விலை பேசி முடிச்சிட்டோம். இன்னும் ரெண்டு நாள்
தார்றேன். மூட்டை முடிச்சைக் கட்டிக்கிட்டு உன் நொண்
தகப்பனைக் கூட்டிக்கிட்டு ஊரை விட்டே ஓடிப் போயிடு."

"எ... என்ன? என்ன சொன்ன? என் அப்பா
என்னடி சொன்னே?"

"அட! உனக்கு விஷயம் தெரியாதா? ஆஸ்பிடலுக்கு
போகவே இல்லையா? அச்சோ! ச்சே! ரொம்ப
பரிதாபம்தான். உன் தம்பிக்காக அலைஞ்சியா?"

"பிரியங்கா! என் பொறுமையைச் சோதிக்காதே! என்
அப்பாவுக்கு என்ன ஆச்சு?"

"உங்க அப்பா ரொம்ப பாவம் திலோ! புள்ளைங்க
ரெண்டும் ரௌடியாப் பிறந்திருக்குதேன்னு மனசு நொந்து
அதிர்ச்சியில... பக்கவாதம் வந்திடுச்சாம்!"

"நோ...!" - தலையாட்டி மறுத்தாள்.

"வேணா நேர்ல போய்ப் பாரு. இனிமே உங்க அப்பா
நிரந்தரமான நோயாளி. உன் தம்பி ஜெயில்லயே
காலத்தைக் கழிக்கப் போறான். உன் அம்மா இந்த
வருத்தத்திலேயே சீக்கிரமாப் போய்ச் சேர்ந்திடுவா. நீ உன்
வாழ்நாள் முழுக்க அழுதிட்டே இருக்கப் போற. நான்
சொன்னது நடந்ததா?" - பிரியங்கா பேசிக்கொண்டே போக
அதற்கு மேலும் நிற்க இயலாமல் துவண்டு சரிந்தாள்
திலோத்தமா.

உமா வீறிட்டுக் கத்த, அந்தச் சத்தத்தில் மாடியில் இருந்த வரலட்சுமி கீழே இறங்கி வந்தாள்.



## 9

உலகமெல்லாம் ஒரு நிலவு
இதயமெல்லாம் உன் நினைவு
என் வாழ்வின் ஆனந்தம் நீயே!

அந்த உயர்தர விருந்தினர் மாளிகையின் பத்தாவது மாடியின் பால்கனியில் நின்று கொண்டிருந்தான் ரஞ்சித் குமார். கண்கள் கீழே நேர்கோடாய்த் தெரிந்த சாலையை வெறித்துக் கொண்டிருக்க, மனம் பலவிதச் சிந்தனைகளில் சிக்கிக் கொண்டிருந்தது.

இன்றோடு இங்கு வந்து முழுதாய்ப் பத்து நாட்கள் ஆகின்றன. வீட்டிலிருந்து வந்தது முதல் இதுவரை ஒரு போன்கூடப் பேசவில்லை. சுஹாசினியின் ஆர்டர் அது. 'போன் பேசினால் ஏதாவது வாய்தவறிச் சொல்லிவிடுவீர்கள். அப்பா எப்படியும் கண்டுபிடித்து விடுவார்கள். ப்ளீஸ் ரஞ்சித்...!' எனக் கெஞ்சியிருந்தாள்.

ஆனால் எதற்காக இங்கு வரவழைத்தாளோ அந்த அமரை இதுவரை சந்திக்கவில்லை. ஏதாவது ஒரு காரணத்தால் தள்ளிக்கொண்டே போகின்றது. இன்னும் எத்தனை நாள்தான் இப்படி அறைக்குள் அடைவதும் ஊரைச் சுற்றுவதுமாய் இருப்பது?

எல்லா வேலைகளையும் போட்டது போட்டபடி வந்தேனே! அங்குள்ள நிலவரம் என்ன என்றுகூடத் தெரியவில்லையே! தனியாகத்தானே இருக்கிறோம். அர்ஜுனுக்கு போன் செய்தால் என்ன?

எண்ணம் தோன்றியதும் அதைச் செயலாக்க அறைக்குள் செல்லத் திரும்பியவன், அப்படியே நின்றான்.

அறை வாசலில் சாய்ந்து நின்று ரஞ்சித் குமாரை விழி யெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சுஹாசினி.

வெறும் பனியனோடும் பேண்ட்டோடும் நின்றவனின் கைகள் தானாக நீண்டு கொடியில் கிடந்த பூத்துவாலையை எடுத்து உடம்பைப் போர்த்துக் கொண்டன. அந்த அசைவில் சட்டெனக் கலைந்து புன்னகைத்தாள்.

"ஹலோ ரஞ்சித்!"

"ம்... எப்போ வந்தே?"

"இப்பத்தான். ஜஸ்ட் டூ மினிட்ஸ் முன்னால..."

"குரல் கொடுத்திருக்கலாமில்ல..." - என்றவாறே அவள் மீது தன் உடம்பு உரசி விடாத அளவிற்கு ஒதுங்கி அறைக்குள் சென்று ஹேங்கரில் கிடந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்.

"வொய் ரஞ்சித்? லண்டன் ரோடை ரொம்ப சுவாரஸ்யமா பார்த்திட்டு இருந்தீங்களே... அதைக் கலைக்க வேண்டாம்னுதான்...!"

"சுத்தப் போர் சுஹா. ரூம்லயே எவ்வளவு நேரம் அடைஞ்சு கிடக்கிறது?"

"அதுக்காகத்தான் லீவு போட்டுட்டு வந்தேன். நாம ரெண்டு பேரும் இப்போ வெளியே போறோம்!"

"எங்கு? அமரைப் பார்க்கவா?" - ஆர்வமாய்க் கேட்டான் ரஞ்சித். சிணுங்கினாள் சுஹாசினி.

"என்ன ரஞ்சித் நீங்க? ஒரு அழகான பொண்ணு வெளியே போகலாம்னு கூப்பிடுறேனே... லண்டன்ல



எவ்வளவு அருமையான இடமெல்லாம் இருக்கு. அதை விட்டுட்டு எப்பவும் அமர் புராணம் பாடிட்டு இருக்கீங்களே!"

"சுஹா! நான் ஒன்னும் லண்டனைச் சுத்திப் பார்க்க வரல்ல. என்னை எதுக்காக இங்கே வரச் சொன்னேன்னு மறந்திட்டியா?"

"எதையும் மறக்கல்ல. ஆனா உங்களைத்தான் என்னால புரிஞ்சுக்க முடியல...!"

"என்ன?"

"வயசுப் பையன்தானே நீங்க? இப்படி ஒரு அல்ட்ரா மாடர்ன் பொண்ணு பத்து நாளா கூடவே இருக்காளே... அவகிட்ட கொஞ்சம் சகஜமாப் பேசுவோம்... வெளியில போகும்போது செல்லமாக் கொஞ்சிகிட்டு உரசிக்கிட்டுப் போவோம்னு தோணவில்லையா உங்களுக்கு?" - கிறங்கிப் போன குரலில் சுஹாசினி கேட்க, சூடு பட்டாற் போல் நிமிர்ந்தான்.

வந்து இறங்கிய அன்று இருந்த முகம் அல்ல இது. கண்களில் காமம் வழிய, உதடுகளை விரசமாய் அவள் சுழித்த விதம் அருவருப்பாய் இருந்தது. அவள் தன்னை நெருங்கி வருவதை உணர்ந்து மெல்ல நகர்ந்து, பிறர் பார்வையில் படும்படி சிட்-அவுட்டில் வந்து நின்று கொண்டான்.

"என்ன ரஞ்சித்... இப்படி இருக்கீங்க?"

"எப்படி இருக்கேன்?" - கடுப்பாய்க் கேட்டான்.

"இவ்வளவு பயப்படுறீங்க? நான் ஒன்றும் அத்தனை மோசமானவள் இல்லை!"

"சுஹறா! உன்னோட பேச்சு இன்று சரியில்லை. கிளம்பு!"

"நீங்களும் வாங்க!"

"எங்கே?"

"நைட் டான்ஸ் ப்ரோகிராமுக்கு!"

"வாட்?"

"ரஞ்சித்! நீங்க இதை யெல்லாம் பார்த்திருக் மாட்டீங்களே... இன்னிக்கு என் கூட வந்து பாருங் அப்புறம் விடவே மனசு வராது."

"லுக் சுஹறா! நான் திரும்பவும் சொல்றேன். நா இங்கே வந்தது ஊரைச் சுத்திப் பார்க்கவோ உன்கூட சேர்ந்து டான்ஸ் ஆடவோ இல்ல. முதல்ல என்னை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போ!"

"ஐயோ! என்னாச்சு ரஞ்சித்? உடம்பு சரியில்லையா? - வேகமாய் நெருங்கி நெற்றியில் கை வைத்தவளைப் பட்டெனத் தட்டிவிட்டான்.

"சுஹறா! என்ன பண்ற நீ? நான் அமரைப் பார்க்கிறதுக்குக் கூட்டிட்டுப் போன்னு சொன்னேன்."

"ஷிட்! அமர் அமர் அமர்! இந்த ஒரு பேரைத் தவிர வேற உங்களுக்கு எதுவுமே தெரியாதா?"

"சுஹறா! ஆபத்தான நிலைமையில அவனை இருக்க வெச்சிட்டு நீ என்கூட ஊரைச் சுத்த நினைக்கலாமா? முதல்ல அவனைப் போய்ப் பார்ப்போம். பேசுவோம். நானும் எத்தனை நாள்தான் வேலையைப் போட்டுட்டு இங்கே இருக்க முடியும்?"



"நீங்க எத்தனை நாள் வேணும்னாலும் இங்க இருக்கலாம். அங்க உள்ள வேலைகளைத் தானே பார்த்துக்கிறதா பிரியா சொல்லிட்டா."

"வ்வாட்?"

"என்ன வாட்? ஏன் இவ்ளோ பெரிய ஷாக்கிங்?"

"சுஹறா! நான் இங்கே இருக்கிறது அவளுக்கு எப்படித் தெரியும்? நான் சொல்லிட்டு வரலையே!"

"என்ன ரஞ்சித் நீங்க? உங்களை இங்க வரச்சொல்லி ஐடியா கொடுத்ததே என் நாத்தனார்தான். அவளோட உதவியாலதான் நான் உங்ககூட இத்தனை நாள் சந்தோஷமா ஊரைச் சுத்திட்டு இருக்கேன். என் வாழ்வின் இனிமையான நாட்கள் இது ரஞ்சித்."

"என்ன உளர்ற? அப்போ அமர்?"

"அப்படி யாருமே கிடையாது ரஞ்சித். எனக்கு ஒரு ஆபத்துன்னா நீங்க துடிச்சுப் போயிடுவீங்கன்னு பிரியா சொன்னாள். அதைச் செக் பண்ணிடலாம்னு நான் தான் முடிவு பண்ணினேன். பரவாயில்ல ரஞ்சித்! நான் எதிர்பார்த்ததை விட ரொம்பவே துடிச்சீங்க. யாருகிட்டயும் சொல்லாம எவ்வளவு அக்கறையா என்னைப் பார்க்க வந்தீங்க! உங்களோட அன்பு, துடிப்பு, உங்களோட ஹேண்ட்ஸம், எத்தனை முறை வந்து உரசினாலும் நாசூக்கா விலகுற கண்ணியம்...

"இப்படி... இன்னும் எவ்வளவோ சொல்லலாம் ரஞ்சித். உங்ககிட்டே இருக்கிற எல்லா குணநலன்களையும் நான் விரும்புறேன். எப்பவுமே எனக்கு உங்க மேல ஒரு ஈடுபாடு

உண்டு. இந்தப் பத்து நாள்ல அது ரொம்ப அதிகமாகிடுச் நீங்க இல்லாம வாழவே முடியாதுன்னு தோணுது. படிப் முடிஞ்சதும் கல்யாணத்தை வெச்சுக்கலாம்னு அப்ப சொன்னார். ஆனா உங்களைப் பார்த்த பிறகு, கூடவே இருந்து பழகின பிறகு இப்பவே உங்களைக் கல்யாண பண்ணிக்கணும்னு தோணுது.

"இந்தப் படிப்பையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு உங் கையைப் பிடிச்சிக்கிட்டு உங்க கூடவே வந்திடலாம்னு நினைக்கிறேன். வந்திடட்டுமா ரஞ்சித்? உடனே நா கல்யாணம் பண்ணிக்கலாமா?"

ரஞ்சித் உறைந்து போனான். ஒரு பெண்ணின் பொய்யான பேச்சை நம்பியா இவ்வளவு தூரம் ஓடிவந்தேன்? இவளது நடிப்பைக்கூடக் கண்டுகொள்ள முடியாத முட்டாளாய் இருந்தேனா?

ஹாஸ்பிடலுக்குள் போக முடியாது. நாளை போகலாம். அவன் இன்னும் கண் விழிக்கவில்லை. இப்படித் தினம் ஒரு காரணம் சொன்னபோது நான் சுதாரிக்கவில்லையே! பத்து நாட்களாகவா ஒருவன் அபாய கட்டத்தைத் தாண்டாமல் இருப்பான்? ச்சே! இதைக்கூட நான் யோசிக்கவில்லையே!

"என்ன ரஞ்சித்? எதுவுமே சொல்லமாட்டேங்கிறீங்க?"

"என்ன சொல்லணும்?"

"இந்த மாதிரி மாற்றங்கள் உங்களுக்கும் இருக்கா?"

"ம்... இருக்கு!" - என்றான் இறுகிய குரலில்.

"ரியல்லி! வாவ்! அப்போ உடனே ஊருக்குப் போயிடலாமா?"



"உன்னோட படிப்பு?"

"அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்!"

"நோ... முதல்ல படிப்பு... மற்றதெல்லாம் பிறகு."

"என்ன ரஞ்சித் நீங்க? என்னால இதுக்கு மேலயும் பொறுமையா இருக்க முடியாது."

"புரியுது. நான் போய் உங்க அப்பாகிட்டப் பேசுறேன். அதுவரை உன் கவனம் படிப்புல மட்டும்தான் இருக்கணும். ஓ.கே.!" - விளையாட்டுப் போலவே அவன் கேட்க, மனமேயின்றித் தலையசைத்தாள் சுஹாசினி. "ம்...!"

"அப்போ நான் கிளம்புறேன்!"

"எங்கே?"

"ஊருக்கு! என் வேலையைப் பார்க்கப் போக வேண்டாமா?"

"வேலை கிடக்கட்டும் ரஞ்சித். இன்னும் கொஞ்ச நாள் இருந்திட்டுப் போங்க. ப்ளீஸ்..." - கொஞ்சலாய்க் கேட்டவளை விலக்கினான்.

"நோ! நான் இங்கே இருந்தா உனக்குப் படிக்கணும்னு எண்ணம் வராது. பெண்களுக்குப் படிப்பு ரொம்ப முக்கியம்."

"ப்ளீஸ் ரஞ்சித்! ஒரு ட்டு டேய்ஸ் மட்டுமாவது..."

"நோ... நோ! எனக்கு நிறைய வேலை இருக்கு. அப்பாகிட்டகூடச் சொல்லிட்டு வரல்ல!"

"எல்லார்கிட்டயும் பிரியா சொல்லிட்டா. அதனாலதான் உங்களை யாரும் ஒரு போன் கூடப் பண்ணி டிஸ்டர்ப் பண்ணலை!"

"என்ன? எல்லாருக்கும் தெரியுமா?"

"ம்...!"

"உன் அப்பாவுக்கு?"

"தெரியுமே! ரொம்ப சந்தோஷப்பட்டார்."

"எதுக்கு?"

"என்னைப் பார்க்கிறதுக்காக வீட்லகூடச் சொல்லிக்கா ரகசியமா வந்தீங்களே... அதுக்காக! எம்மேல உங்களுக் ரொம்பப் பிரியம்னு சொன்னார்."

"யாரு?"

"எங்க அப்பாதான்!"

"ஓஹோ! அப்போ... எல்லாருமா சேர்ந்து நாடகமா என்னை முட்டாளாக்கிட்டீங்க?"

"ரஞ்சித்!" - சுஹாசினியின் முகம் மாறியது.

"இல்ல... என்னைச் சுத்தி நடக்கிறது எதையுமே உணராம இருந்திருக்கிறேனே... அதைச் சொன்னேன்!"

"ஸாரி ரஞ்சித்! உங்களை ஏமாத்தணும்னு நினைக்கல்ல. ஒரு சர்ப்ரைஸா இருக்கட்டும்னு நினைச்சேன். எனக்குக் கூட இதுல கொஞ்சம் பயம் இருந்தது. ஆனா... பிரியாதான் நீங்க என்னைப் பார்க்க ஆசைப்படுறீங்க... வெளியே சொல்லத் தயங்குறீங்கன்னு சொல்லி... இந்தப் பிளானை சொல்லிக் கொடுத்தா."

ரஞ்சித் கண்களை மூடி அவசரமாய் யோசித்தான். எனக்கே தெரியாமல் என்னை வெளியேற்றப் பிரியாவிற்கு



என்ன அவசியம் வந்தது? என்னை இங்கே அனுப்பிவிட்டு அங்கே என்ன செய்கிறாள்?

எதற்காக இந்தப் பொய் நாடகம்? சுஹாசினியின் மீது தனக்கு நாட்டம் இல்லை என்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். தெரிந்தும் ஏன் பொய் சொல்லித் திட்டம் போட்டு என்னை இவளிடம் அனுப்பினாள்? தங்கையிடம் ஏதோ தவறு இருக்கிறது. எந்தத் தவறை மறைப்பதற்காக இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது?

நெற்றியைத் தட்டி யோசித்தவனுக்குப் பளிச்சென நினைவில் வந்து நின்றாள் திலோத்தமா.

ஓ காட்! எப்படி அந்தப் பெண்ணை மறந்து போனேன்? இந்த நாடகத்திற்கான முக்கிய காரணம் அவளாகத்தான் இருக்க வேண்டும். அந்தப் பெண்ணின் மீது கடும் கோபத்தில் இருந்தாளே பிரியங்கா!

நிச்சயம் அந்தத் திலோத்தமாவிற்கு ஏதோ நேரப் போகின்றது. அல்லது நேர்ந்திருக்கலாம். எதுவும் விபரீதமாய் நடந்திருக்கக் கூடாது. கடவுளே! எப்படி இத்தனை நாளாய் அவளை மறந்தேன்? அவளைக் கல்லூரியை விட்டே நிறுத்த வேண்டும் என்றாளே தன் தங்கை.

அதற்கு நான் மறுப்புத் தெரிவித்தேன் என்பதற்காகத் தான் என்னை இங்கு அனுப்பினாளா?

அப்படியென்றால் அந்தப் பெண்ணின் படிப்பு என்னா யிற்று? அந்தச் சிறுவனிடம் எத்தனை நம்பிக்கையாய்ச் சொல்லி அனுப்பினேன்!

அவளுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது. யா
கேட்பது? உடனே கேட்டாக வேண்டுமே! பிரியங்கா
கேட்கலாமா? நோ... அவளிடம் கேட்பது வேறு
விளைவுகளை ஏற்படுத்திவிடும். பேசாமல் கல்லூரிக்
போன் செய்து விட்டால் என்ன?

"ரஞ்சித்! என்ன ஆச்சு?"

"சுஹறா! என்னை இங்கே வரவழைக்கணும்
உங்களுக்கு எப்போ தோணிச்சு?"

"சொன்னா ஆச்சரியப்படுவீங்க!"

"பரவாயில்ல... சொல்லு!"

"நான் உங்களுக்கு போன் பண்ணினேனே
அதுக்குக் கொஞ்சம் முன்னாலதான் பிரியா எனக்
போன் பண்ணினாள். கல்யாண மேட்டர் பத்
சொன்னாள். எனக்கும் உங்களைப் பார்க்கணும் போ
இருக்குதுன்னு சொன்னேன். அவ ரொம்ப எக்ஸ்ப
ரஞ்சித்! ரெண்டே நிமிஷத்தில இந்த ஐடியாவை
சொல்லிட்டா... அமர்ன்னு பேர் வெச்சதுகூட அவதான்!"

"எல்லாம் சரி சுஹறா! என்னை ஏமாற்ற உனக்கு வே
வார்த்தையே கிடைக்கலையா?" - நேராய்ப் பார்த்துக் கே
வனைப் பார்த்து முகம் மாறினாள்.

"ர... ரஞ்சித்!"

"நீ என்னை என்ன சொல்லி இங்கே வ
வழைச்சேன்னு தெரியுமா?"

"எ...ன்ன சொன்னேன்?"



"உங்க தங்கையா நினைச்சு எனக்கு ஹெல்ப் பண்ணுங்கன்னு சொன்னே...!"

"ஓ! அதுவா! அது சும்மா உங்களை செண்டிமெண்ட்டா டச் பண்றதுக்காகச் சொன்னேன். அதைப் பெரிசா எடுத்துக்காதீங்க!"

"நீ என்ன எண்ணத்தில அப்படிச் சொன்னன்னு எனக்குத் தெரியாது. ஆனா நான் அந்த எண்ணத்திலதான் வந்தேன்."

"ரஞ்சித்! என்ன சொல்றீங்க?"

"யெஸ்! உன்னை என் தங்கையா நினைச்சுத்தான் உனக்கு உதவி செய்யணும்னு நினைச்சு ஓடிவந்தேன். அதே எண்ணம் இந்த நொடி வரை இருக்கிறதாலதான் உன்னை விட்டு விலகியே நிற்கிறேன்!"

"நோ...!"

"உண்மை! சின்ன வயசில இருந்தே பார்த்து வளர்ந்த பெண் பிரச்சனையில் சிக்கிக் கொண்டிருக்கிறாளே என்ற பதைபதைப்பில்தான் ஓடி வந்தேன். உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் அல்ல!"

"ரஞ்சித்... ப்ளீஸ்! என்னை அவாய்ட் பண்ணணும்னு பொய் சொல்லாதீங்க. நான்... உங்களை ரொம்ப விரும்புகிறேன்."

"பட்...! எம் மனசுல அப்படி எந்த எண்ணமும் இல்லை!"

"பொய்!"

"சத்தியம். சத்தியமா எனக்கு உம் மேல எந்த அபிப்ராயமும் இல்ல!" - ரஞ்சித்தின் அழுத்தமான முடிவில் அரண்டு போனாள் சுஹாசினி. தனக்குக் கிடைத்த தோல்வியை மனம் ஒப்புக்கொள்ளவில்லை. ரஞ்சித்தை இழந்துவிடக் கூடாது என்ற வேகம் அதிகரித்தது. தவிப்போடு அவனை நெருங்கினாள்.

"ரஞ்சித்! உங்களைப் பொய் சொல்லி இங்கே வரவழைச்சிட்டேன்ற கோபத்திலதானே இப்படிச் சொல்றீங்க? ம்? அம்மா... விளையாட்டுக்குத்தானே சொல்றீங்க?"

"அவசியமில்லாம விளையாட நான் ஒன்னும் சின்னக் குழந்தை இல்லை சுஹாசினி. நகரு...!" - என்றவாறு ஹேங்கரில் கிடந்த தன் துணிமணிகளை எடுத்து சூட்கேஸில் வைக்க ஆரம்பித்தான்.

அவன் புறப்படப் போகிறான் என்று புரிந்ததும் சுஹாசினியின் தவிப்பு அதிகமானது. வேகமாய் அவனது சூட்கேஸை மூடினாள்.

"நோ... நான் உங்களைப் போக விடமாட்டேன். எனக்கு ஒரு முடிவைச் சொல்லாமல் நீங்கள் இங்கிருந்து போக முடியாது."

"என் முடிவைத் தெளிவாய்ச் சொல்லி விட்டேனே!"

"இல்ல... நான் நம்ப மாட்டேன். நீங்க என்னை அவாய்ட் பண்ண வேறு ஏதோ காரணம் இருக்கு. எனக்கு அது தெரிஞ்சாகணும்."

"என்ன? வேறு காரணமா? நான்சென்ஸ்!"

"நோ...! எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். நீங்க எனக்குன்னு இத்தனை காலமா நான் தவம் செய்துட்டு



இருக்கேன். இடையில வந்த எவளோ உங்களைத் தட்டிப் பறிக்க விடுவேனா?"

"ஏய்! என்ன உளர்ற? நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே!"

"இல்ல... ஏதோ இருக்கு! அதனாலதான் இத்தனை வருஷமா இல்லாததா உங்க தங்கை எனக்கு போன் பண்ணி உங்களை இங்கே வரவழைச்சிருக்கா! சொல்லுங்க ரஞ்சித்! யார் அவ?"

"இடியட் மாதிரிப் பேசாதே! எம் மனசுல அப்படி எந்த எண்ணமும் இல்ல."

"நான் நம்ப மாட்டேன்!"

"அதைப் பத்தி எனக்குக் கவலையில்ல. வழிவிடு... நான் புறப்படணும்!"

"ரஞ்சித்! என்னைக் கடுப்பேத்தாதீங்க! என் கேள்விக்குப் பதில் சொல்லாம உங்களை இந்த இடத்தை விட்டு நகர விடமாட்டேன்!"

"சுஹாசினி! என்னோட பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு!"

"ஆனா எனக்குப் பொறுமையெல்லாம் கிடையாது. எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்."

"என்ன தெரியணும் உனக்கு?"

"என்னை அவாய்ட் பண்ணக் காரணம் என்ன?"

"சுஹாசினி! சொன்னாப் புரிஞ்சுக்க. எனக்கு உம் மேல எந்த ஈடுபாடும் வரலே. வரவும் வராது."

"அப்போ... வேற யார் மேல வரும்?" - விடாப்பிடியாய் நின்று கேட்டவளைக் கடுப்பாய் ஏறிட்டான்.

"யார் மேலயும் வராது!"

"ஏன்? சாமியாராப் போகப் போறீங்களா?"

"இல்ல... அதுக்கு நிறையக் காரணம் இருக்கு!"

"அப்படியென்ன பொல்லாத காரணம்? என்கிட்ட சொல்லக் கூடாதா?"

"உன்கிட்ட மட்டும் இல்ல... யார்கிட்டயும் சொல்ல முடியாது."

"அப்படியென்ன பெரிய ரகசியம்?"

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம். நீ அமைதியா இருந்து படிச்சி முடிச்சிட்டு வா! நானே உனக்கு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து..."

"எனக்காக நீங்க ஒன்னும் தரகர் வேலை பார்க்க வேண்டாம். எப்பவுமே எனக்கு நீங்கதான் மாப்பிள்ளை!"

"முட்டாள் மாதிரி சொன்னதையே சொல்லிட்டு இருக்காதே! என் நிலைமையைத்தான் சொன்னேனே!"

"நீங்க சொன்ன காரணம் என்னன்னு சொல்லவே இல்லையே!"

"சுஹாசினி! வீட்ல வயசுக்கு வந்த பெண்ணை வெச்சிக்கிட்டு நான் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்?"

"ஹும்... இதெல்லாம் ஒரு காரணமா? பிரியாதான் படிப்பை முடிக்கப் போறாளே! முதல்ல அவ கல்யாணத்தை முடிங்க. நான் வேணா வெயிட் பண்றேன்!"



"எவ்வளவு காலம் வெயிட் பண்ணுவ?"

"ஏன்?"

"அவ இன்னும் நிறையப் படிக்கணும்ன்றா. அவ படிப்பு முடியுற வரைக்கும் கல்யாணப் பேச்சை எடுக்கிறதா இல்ல."

"அவ என்ன காலம் பூரா படிச்சிட்டே இருக்கப் போறாளா? எப்படியும் மேரேஜ் பண்ணித்தானே ஆகணும்?"

"ஆமா! ஆனா அதுவரைக்கும் நீ ஏன் வெயிட் பண்ணணும். உங்க அப்பாவுக்கு நீ ஒரே பொண்ணு. உனக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்கணும்னு அவர் ஆசைப்பட மாட்டாரா?"

"அப்போ என்னோட ஆசை என்ன ஆகுறது? ரஞ்சித்! யாருக்காகவும் என் ஆசையை விட்டுக் கொடுக்க மாட்டேன். இப்ப உங்க பிரச்சனை என்ன? பிரியாவோட மேரேஜ்தானே! நானே அவகிட்டப் பேசுறேன்!"

"நோ! நீ எதுவும் பேச வேண்டாம்."

"ஏன்? பேசினா என்ன?"

"நோ... இது எங்க சொந்த விஷயம். இதுல வேற யாரும் தலையிடுவதை நான் விரும்பல. பிரியாவும் விரும்ப மாட்டாள்."

"ரஞ்சித்! நான் என்ன அந்நியமா? உங்க பேமிலி பிரெண்ட்!"

"ஜஸ்ட் பிரெண்ட்தான். அதைவிட நெருங்கின சொந்தம் இல்ல... ஓ.கே.!"

"சொந்தமாகப் போறவ நான். அதை நீங்க ம
திபாதீங்க!"

"தேவையில்லாத எண்ணங்களை வளர்த்துக்
உன் லைப்ப ஸ்பாயில் பண்ணிக்காதே! என் முடிவுல
மாற்றமும் இல்ல!" - என்றவன் அதற்கு மேலும் நில்லா
தனது உடைமைகளைச் சேகரித்துக் கொண்டு சூட்கே
மூடினான்.

"போங்க! நான் யார்கிட்டப் பேசணுமோ அவங்ககி
பேசிக்கிறேன்."

"நீ யார்கிட்டப் பேசியும் எந்தப் பிரயோஜனமு
இல்லை. நான் கிளம்புறேன். இந்தப் பத்து நாளும் உ
வேலை எனக்காகக் காத்திட்டு இருக்கு. பை!"

"வேலை மட்டும்தானே காத்திட்டு இருக்கும்?"

"வேற என்ன?"

"அது என்னன்னு கண்டுபிடிக்க சீக்கிரமே நானு
புறப்பட்டு வர்றேன். மறுபடியும் சொல்றேன் ரஞ்சி
யாருக்காகவும் நான் என் ஆசையை விட்டுக் கொடுக்
மாட்டேன். நினைவிருக்கட்டும்!" - என்றவளிடம் சலிப்பா
பார்வையை வீசிவிட்டு சூட்கேஸை எடுத்துக்கொண்
மளமளவெனப் படிக்கட்டில் இறங்கினான்.

பின்னால் தொடர்ந்து ஓடி வந்தவளைத் திரும்பியு
பாராமல் சாலையில் போய்க்கொண்டிருந்த டாக்ஸியை
நிறுத்தி அவன் ஏறிச் சென்றுவிட, ஏமாற்றமாய் கோபமாய்
பற்களைக் கடித்தாள் சுஹாசினி.



# 10

என்னதான் உறவிருந்தாலும்
உன்னைத்தான் நினைக்கிறேன்!
இருந்தும் உசுரு இல்லாம
என்னவோ இருக்கிறேன்!

"**வ**ணக்கம் ஸார்!" - மெல்லிய குரலில் சொன்னவளை நிமிர்ந்து பார்த்தார் அந்த முதியவர். பார்த்துக் கொண்டிருந்த கோப்பை மூடி வைத்து விட்டு மூக்குக் கண்ணாடியை நேராக்கிக் கொண்டே திலோத்தமாவை ஏறிட்டார் ஜெயபால்.

"யாரம்மா... நீ?"

"ஸார்! என் பேர் திலோத்தமா. எங்க அப்பா ராகவன்..."

"அட! ராகவன் பொண்ணா நீ? வாம்மா... இப்படி உட்கார்!" - எதிரே இருந்த நாற்காலியைக் காட்டினார்.

"தேங்க் யூ ஸார்!"

"அப்பா எப்படிம்மா இருக்கார்?"

"அப்படியேதான் ஸார். எல்லாம் படுக்கையிலதான்...."
- சொல்லும்போதே தொண்டை அடைத்தது.

"வருத்தப்படாதேம்மா. ராகவன் நல்ல உழைப்பாளி. அவருக்கு இந்த மாதிரி ஆகியிருக்க வேண்டாம். நல்லவங்களுக்குத்தான் ஆண்டவன் ரொம்ப சோதனையைத் தர்றான்."

"ஆமா ஸார்!"

"சரிம்மா! அப்பா இப்பவும் ஆஸ்பத்திரியிலதான் இருக்காரா?"

"இல்லை ஸார்! வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திட்டோம். ஹாஸ்பிடல்ல வெச்சிட்டு இருக்க முடியலை."

"அதுவும் சரிதான். பில்லு விஷம் மாதிரி ஏறுமே... பாவம்! எப்படிச் சமாளிக்க முடியும்? சரி... என்ன விஷயம்மா... இவ்வளவு தூரம் வந்திருக்கே?"

"ஸார்! அப்பாவால இனிமே வேலைக்கு வர முடியாது. அதனால அவரோட வேலையை எனக்குக் கொடுத்தா ரொம்ப உதவியா இருக்கும் ஸார். ப்ளீஸ் ஸார்!" - மெல்லிய குரலில் இறைஞ்சியவளை வியப்பாய்ப் பார்த்தார் ஜெயபால்.

"என்னம்மா சொல்றே?"

"ஆமா ஸார்! இப்ப என் ஃபேமிலி இருக்கிற நிலைமையில கண்டிப்பா எனக்கு ஒரு வேலை வேணும் ஸார். அப்பாவோட மெடிக்கல் செலவு, வீட்டு வாடகை, தம்பியோட ட்ரீட்மெண்ட் செலவுன்னு எவ்வளவோ இருக்கு ஸார்...!"

"ஏம்மா! நீ பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்கிறதா ராகவன் சொல்வாரே... உன் படிப்புக்கு ஏத்த வேலையா தேடிக்க வேண்டியது தானேம்மா. இந்தப் பிளாஸ்டிக் கம்பெனியில உன் படிப்புக்கேத்த வேலை எதுவும் இல்லையேம்மா..."

"ஸார்! என்னோட சர்டிஃபிகேட்ஸ் எல்லாம் ஒரு விபத்தில எரிஞ்சி சாம்பலாயிடுச்சி. சர்டிஃபிகேட்ஸ் இல்லாம



பெரிய கம்பெனியில வேலை கிடைக்கலை ஸார்! அதான்... அப்பா பார்த்த வேலையையே செய்திடலாம்னு உங்ககிட்ட வேலை கேட்டு வந்திருக்கேன்."

"அம்மாடி! இது மாசச் சம்பளம் வாங்குற கணக்கு வேலை இல்லைம்மா. பிளாஸ்டிக் பாக்ஸ், பக்கெட், குடம் செய்யுற வேலை. பீஸ் ரேட்தான் கிடைக்கும். எவ்வளவு செய்கிறோமோ அதுக்கேத்த மாதிரி சம்பளம் கிடைக்கும்."

"பரவாயில்லை ஸார். நான் சமாளிச்சிக்கிறேன்."

"இதோ பாரும்மா! உன் அப்பா மிஷின் ஓட்டினாரு. உன்னால அந்த வேலையெல்லாம் செய்ய முடியாது. நீ சின்னப் பொண்ணா இருக்கியே...!"

"ஸார்! எந்த வேலை கொடுத்தாலும் செய்யறேன் ஸார். ப்ளீஸ் ஸார்... வேலை இல்லைன்னு மட்டும் சொல்லிடாதீங்க."

"சரியம்மா! உன்னைப் பார்த்தாலும் பாவமாத்தான் இருக்கு. உன் அப்பா இடத்துக்கு வேற யாரையும் போடலை. சரி... நீ ஒரு ரெண்டு நாள் இவங்க கூட நின்னு வேலையைப் பழகிக்க... கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும்.

"உன்னால முடிஞ்சா செய். இல்ல... வேற வேலை கிடைச்சாலும் தாராளமாப் போகலாம். படிச்ச புள்ளையை இப்படி வேலை வாங்க எனக்குக் கஷ்டமாத்தான் இருக்கு. இந்த வேலை பிடிக்கலைன்னா நீ எப்ப வேணா நின்னுக்கம்மா..."

"இல்ல ஸார்! எல்லாக் கஷ்டத்தையும் தாங்கிக்கிற அளவுக்கு மனசு திடமாகிப் போச்சு ஸார். நான் செய்யுறேன் ஸார்...."

"சரிம்மா. இங்கே எட்டுப் பொண்ணுங்களும் அ... ஆண்களும் வேலை செய்யுறாங்க. ஆம்பிளைங்க மி... ஓட்டுவாங்க. நீ அந்தப் பொண்ணுங்க கூட நி... என்னென்ன வேலையை எப்படிச் செய்யலாம்னு கத்துக்...

"தேங்க் யூ ஸார்!"

"எப்ப வரணும்... எப்போ போகணும்னு கணக்... இல்லம்மா. இருபத்துநாலு மணிநேரமும் வேலை இருக்கு... நேரத்தை வீணாக்காம வேலை செய்யணும். வேலை... சுத்தமா இருக்கணும். வேலை நேரத்தில அரட்டை அடிக்கிறது எனக்குப் பிடிக்காது."

"சரிங்க ஸார்! நீங்க சொல்ற மாதிரி நடந்துக்கிறேன்."

"சம்பளம் நீ செய்யுற வேலையைப் பொறுத்துத்தா... தருவோம். சாப்பாடு நீ எடுத்திட்டு வந்திடு. காலையிலு... சாயந்திரமும் டீ கிடைக்கும்."

"போதும் ஸார்!"

"ஆமா... உனக்கு வேற எதுவும் வேலை தெரியுமா?"

"வேற வேலைன்னா...?"

"அதாம்மா... இந்த டைப் ரைட்டிங், கம்ப்யூட்... வேலை..."

"கம்ப்யூட்டர் கொஞ்சம் தெரியும் ஸார். வேற எதுவும்... ஸார்! நான் நல்லா படம் வரைவேன் ஸார்!" - என்றாள் உற்சாகமாய்.

"படமா? ஏம்மா... நான் என்ன விளம்பரக் கம்பெனியா வெச்சு நடத்துறேன்?"



"ஸாரி ஸார்!"

"பரவாயில்லை... விடும்மா. இங்கே அதுக்கெல்லாம் அவசியம் இருக்காது. ஆமா... என்ன மாதிரி படம் வரைவ?"

"எது வேணாலும் வரைவேன் ஸார். உங்களைக் கூட கொஞ்ச நேரம் பார்த்தாப் போதும். அப்படியே வரைஞ்சுடுவேன்."

"அடேயப்பா! பெரிய திறமைசாலிதான் போல. தேவைப்பட்டா வரைஞ்சிக்கலாம். இப்போ வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வர்றியாம்மா. இல்ல... இன்னிக்கே வேலையைத் தொடங்குறியா?"

"இன்னிக்கே ஜாய்ன் பண்ணிக்கிறேன் ஸார்!"

"குட். அட! இன்னிக்கு ஒண்ணாந் தேதி. நல்ல நாள்தான் வந்திருக்க. ஏ திலகா! திலகா! இப்படி வா..." - உள்ளே வேலை செய்து கொண்டிருந்த பெண்ணை அவர் அழைக்க... திலோத்தமாவின் கண்கள் இயல்பாய்ச் சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தன.

'இன்றைக்கு ஒண்ணாம் தேதியா? இன்னும் பதினைந்தே நாளில் எக்ஸாம்!' - என எண்ணும்போதே கண்களில் நீர் நிறைந்தது. எத்தனை ஆசையும் கற்பனையுமாய்த் தேர்ந்தெடுத்த படிப்பு. இப்படி மொத்தமாய்ப் பாழாகிப் போனதே... நடந்தவற்றை நினைக்க நினைக்க நெஞ்சை அடைத்தது. பெருமுயற்சி எடுத்துத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

வந்து நின்ற அந்த நடுத்தர வயதுப் பெண்மணியுடன் சேர்ந்து வேலை நடைபெறும் இடத்திற்கு வந்தாள். அரவை

இயந்திரத்தில் பிளாஸ்டிக் துகள்கள் அரைபட்டு கொண்டிருக்க... அந்த நெடி நாசியை நெருடியது. தந்தையிடம் வரும் அதே நெடி.

மீண்டும் மனம் கனக்க... மற்ற எண்ணங்களை ஒதுக்கிவிட்டு மற்றப் பெண்மணியருடன் சேர்ந்து தரையி அமர்ந்து... அவர்கள் செய்யும் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள். அதைத் தன் மூளையில் பதிய வைத்து அவர்களுடன் இணைந்து தானும் செய்யத் துவங்கினாள்

**வி**மான நிலையத்தில் இருந்து நேராய் ரஞ்சித்குமா சென்றது மணியம்மை கல்லூரிக்கு. அவனது வரவை எதிர்பாராத பிரின்சிபால் பதட்டமாய் வரவேற்றார்.

"வாங்க ஸார்! ஏது இவ்வளவு தூரம்?"

"ஒண்ணுமில்லை. சும்மா... உங்களைப் பார்த்து லைப்ரரி விஷயமா பேசிட்டுப் போலாம்னு வந்தேன். பட்ஜெ போட்டு வைக்கச் சொன்னேனே... போட்டாச்சா?"

"போட்டாச்சு ஸார். ராமகிருஷ்ணன் ஸார் கிட்ட கொடுத்திடலாமான்னு கேட்டேன். நீங்க ஃபாரின் போயிருக்கிறதாச் சொன்னாங்க."

"ஆமா! இன்னிக்குத்தான் வந்தேன். இந்தப் பக்கமா ஒரு வேலையா வந்தேன். அப்படியே கேட்டுட்டு போகலாம்னு..."

"ஜஸ்ட் ஒன் மினிட் ஸார்!" - என்றவர் எழுந்து உயரமாய் நின்ற மரப் பீரோவைத் திறந்து ஒரு ஃபைலை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"இதுல எல்லாமே டீட்டெயிலா இருக்கு ஸார்."



"ஓ.கே. நான் ஆபீஸ்ல போய்ப் பார்த்துக்கிறேன். ராமகிருஷ்ணன் அங்கிளோட செல்போன் என்னாச்சு? நான் நிறைய வாட்டி ட்ரை பண்ணினேன். லைன் கிடைக்கவே இல்லை."

"ஸாரோட ஃபோன் எங்கேயோ மிஸ்ஸாகிடுச்சாம். இப்போ வேற போன் வாங்கிட்டார். நம்பர் கூட என்கிட்ட இருக்கு. தரட்டுமா ஸார்?"

"இல்லை. நான் நேர்ல பார்த்து வாங்கிடுறேன். சரி... வரட்டுமா?"

"வாங்க ஸார்..."

"அப்புறம்... உங்ககிட்ட ஒண்ணு கேட்கணுமே?"

"கேளுங்க ஸார்!"

"அன்னிக்கு ஓவியப் போட்டியில கலந்துகிட்டு ஒரு பொண்ணு ஸ்டேஜ்ல கூட ஏறிப் பேசினாளே..."

"திலோத்தமாவா ஸார்?"

"ஓ... யா! அவ இன்னிக்குக் காலேஜுக்கு வந்திருக்காளா? நீங்க யாரும் அவளை எதுவும் கோபமா பேசிடலையே?"

"இல்லை ஸார். அந்தப் பொண்ணு மேல எல்லாருக்கும் கொஞ்சம் கோபம்தான். ஆனா சும்மா வார்ன் பண்ணிட்டு விட்டுடலாம்னு நினைச்சோம். பட்! அவ ரொம்ப பயந்திட்டா போலிருக்கு. ஃபங்ஷன் முடிஞ்சதுல இருந்து இன்னிக்கு வரைக்கும் காலேஜுக்கு வரவே இல்லை."

திடுக்கிட்டான். "என்ன? வரவில்லையா?"

"ஆமா ஸார்! ரொம்ப நல்ல பொண்ணு. காலேஜ் ஃபர்ஸ்ட் ஸ்டுடண்ட்டும் கூட. எல்லார்கிட்டயும் மரியாதையா நடந்துப்பா. அன்னிக்கு ஏன் அப்படிப் பேசினான்னு புரியலை!"

"அதை விடுங்க ஸார்! ஏன் காலேஜுக்கு வரலைன்னு விசாரிச்சீங்களா?"

"அவளோட ஃபிரண்ட்ஸ் கிட்ட விசாரிச்சோம். ஆனா அவங்களுக்கும் தெரியலை. அவ அப்பாவுக்கு ஏதோ உடம்புக்கு முடியலையாம். வீட்டைக் கூட மாற்றி விட்டார்களாம். அதனால எதுவும் தெரியவில்லை."

இன்னும் பலமாய் அதிர்ந்தான் ரஞ்சித். 'இதெல்லாம் சாதாரணமாய் நடந்ததா...! இல்லை... தன் தங்கையின் பங்கு இருக்குமா? எப்படித் தெரிந்து கொள்வது?'

"அந்தப் பொண்ணு... ஃபைனல் இயர்தானே ஸார்?"

"ஆமா. இன்னும் டூ வீக்ஸ்ல எக்ஸாம் ஸ்டார்ட் ஆகப் போகுது. வழக்கமா அவ இதுவரைக்கும் ஒரு நாள் கூட லீவு போட்டதில்லை. அதுக்காக ப்ரைஸ் கூட வாங்கியிருக்கா. ஆனா இப்ப என்னாச்சின்னு தெரியலை..."

மனம் கனக்க எழுந்து கொண்டான். ஏதோ நடந்திருக்கிறது. என்னை வெளியே அனுப்பியதற்கும்... திலோத்தமா கல்லூரிக்கு வராமல் இருப்பதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ? மனம் குழம்பித் தவித்தது.

"ஓ.கே. ஸார்! நான் கிளம்பறேன். ஒருவேளை அந்தப் பொண்ணு வந்தான்னா அவளை யாரும் எதுவும் சொல்லிடாதீங்க."



"ஓ.கே. ஸார்!"

"சரி... நான் வர்றேன்..." - என நடக்க முயன்றவனைக் குரல் கொடுத்துத் தடுத்தார்.

"ஒரு நிமிஷம் ஸார்!"

"என்ன?"

"உங்க சிஸ்டர் பிரியங்காவும் ஒரு வாரமா காலேஜுக்கு வரல்ல..."

"வாட்?"

"யெஸ் ஸார். லீவும் சொல்லலை. எக்ஸாம் நெருங்குறதால லீவு போடாம காலேஜுக்கு வரச் சொல்லுங்க. படிப்புப் போயிடக் கூடாது."

"நா... நான் சொல்றேன். வர்றேன் ஸார்..." - என்றவன் தீவிரமான சிந்தனையோடு அறையை விட்டு வெளியேறி... நீளமான வராந்தாவில் நடந்து வந்தான்.

மதிய உணவு இடைவேளை நேரம் என்பதால் வண்ணமயமான பட்டாம்பூச்சிக் கூட்டம் போல் மாணவியரின் கூட்டம் ஆங்காங்கே தெரிந்தது. பேச்சும் சிரிப்புமாய்க் கலகலப்போடு இருந்தவர்களைப் பார்க்கையில் மனம் திலோத்தமாவை நினைத்தது.

'ஒரு நாள் கூட விடுப்பு எடுக்காதவள் கிட்டத்தட்ட பதின்மூன்று நாட்களாய் ஏன் கல்லூரிக்கு வரவில்லை? அவளது தந்தைக்கு என்ன ஆயிற்று? இதில் பிரியா சம்பந்தப்பட்டிருக்கிறாளா? அவளும் ஏன் விடுப்பில் இருக்கிறாள்? என்ன நடக்கிறது இங்கே?'

குழப்பமாய்த் தன் காரரை நெருங்கியவ
அழைத்தது ஒரு பெண்ணின் குரல்.

"ஹலோ! என்ன ஸார் இவ்வளவு தூரம்?" - நி
திரும்பினான். கண்களில் கோபமும் வெறுப்பும் சுமந்
கொண்டிருந்தாள் உமா. கையில் சின்னதாய் டிபன் பாக்

"ஹலோ! யார் நீங்க?"

"அதைத் தெரிஞ்சிகிட்டு என்ன பண்ணப் போறீங்க?
என்னையும் காலேஜை விட்டே தூக்கப் போறீங்களா?" -
அவளது கேள்வியில் தொனித்த ஏளனம் திடுக்கிட வைத்த

"எ... என்ன சொல்றீங்க?"

"உண்மையைத்தான் ஸார் சொல்றேன். போன வா
காலேஜுக்கு வந்தீங்க. என் ஃபிரண்டை டிஸ்மிஸ் பண்ண
வெச்சீங்க. இப்ப எதுக்காக வந்திருக்கீங்க?"

ரஞ்சித்குமார் வேகமாய் அவளை நெருங்கினான்.
"ஏங்க! உங்க ஃபிரண்ட் யாரு? ப்ளீஸ் சொல்லுங்க."

"அண்ணனும் தங்கையுமா சேர்ந்து ஓட ஓ
விரட்டினீங்களே... அந்த அப்பாவி திலோத்தமா என்னோ
உயிர்த் தோழி."

"எ...ன்ன? நான்... நான் விரட்டினேனா?" -
அதிர்ந்தான்.

"என்ன ஸார் நடிக்கிறீங்க? நான்கூட உங்களை
என்னவோன்னு நினைச்சேன். ஆனால் பக்கா கிரிமினல்
நீங்க... உங்க தங்கச்சி புத்திதானே உங்களுக்கும் இருக்கும்.
ச்சே! உங்களோட ஆணவத்துக்கும் அதிகாரத்துக்கும் என்
திலோவைப் பலியாக்கிட்டீங்களே...



"ஒரே நாள்ல... சில நிமிஷங்கள்ல அவ
குடும்பத்தையே சிதைச்சிட்டீங்களே... அப்படி அவ என்ன
ஸார் பாவம் பண்ணினா? அவ அம்மா அப்பாவை... அவ
குடும்பத்தை எல்லார் முன்னாலேயும் வெச்சு ரொம்பக்
கேவலமா பேசினா உங்க தங்கை. அந்த ஆத்திரத்தில ஒரு
அறை அறைஞ்சா.

"இது தப்பா? பாவமா? உங்க ஃபேமிலியைப் பத்தி...
உங்க பேரண்ட்ஸைப் பத்தி யாராவது தரக்குறைவாப்
பேசினா உங்களுக்குக் கோபம் வராதா? சொல்லுங்க
ஸார்...!" - உமா குரலை உயர்த்திப் பேச... ரஞ்சித்குமார்
அசைவற்றுப் போனான்.

"என்ன பேச்சையே காணோம்? இவ என்னடா
நம்மைக் கேள்வி கேட்கிறதுன்னு பார்க்கிறீங்களா? என்
மனசு அப்படியே கொதிச்சுப் போயிருக்கு. எனக்கு மட்டும்
அந்தக் கண்ணகியோட சக்தி இருந்தா உங்களையும் உங்க
தங்கையையும் எரிச்சிருப்பேன்.

"பாவம் திலோ! இப்ப எங்கே இருக்கா... எப்படி
இருக்கான்னு கூடத் தெரியலை. சின்ன வயசில இருந்தே
வாழ்ந்து பழகின வீடு. அதைக்கூட விலைக்கு வாங்கி உங்க
பணத்திமிரைக் காட்டிட்டீங்க இல்ல...

"பக்கவாதத்தில விழுந்த தகப்பனையும் மனசொடிஞ்சி
போயிருக்கிற தம்பியையும் ஒரு பாவமும் அறியாத
தாயையும் கூட்டிட்டு எங்கே போனாளோ? என்ன
பாடுபடுகிறாளோ? இதையெல்லாம் நினைக்கிற எனக்கே
இப்படிக் கொதிக்குதே!

"அவ வயிறு எப்படி எரியும்? அந்த வயித்தெரிச்சல்
உங்களைச் சும்மா விடுமா? உங்க குடும்பத்தை வாழ

விடுமா? ஏழைன்னா உங்களுக்கெல்லாம் அவ்வளவு இளப்பமாப் போச்சா? திலோத்தமாவிற்குப் பண்ணின கொடுமைகளுக்கு நீங்க பதில் சொல்லியே தீரணும்."

"போதும்..." - கை உயர்த்தித் தடுத்தான் ரஞ்சித். அவனது விழிகள் கலங்கிச் சிவந்திருந்தன. முகம் பாறையாய் இறுகிப் போயிருந்தது. வறண்ட குரலில் கேட்டான்.

"என்ன நடந்தது?"

"என்ன?" - புரியாமல் கேட்டாள் உமா.

"நான் பத்துப் பன்னிரண்டு நாளா ஊர்ல இல்லை. அப்ப என்ன நடந்ததுன்னு கேட்டேன்..." - கோபமாகவே அவன் கேட்க... உமாவின் முகம் கடுத்தது.

"ரொம்ப நல்லாயிருக்கு. எல்லாத்தையும் செய்யச் சொல்லிட்டு இப்ப எதுவுமே தெரியாத மாதிரி கேட்கிறீங்களே... யாரை ஏமாத்த நடிக்கிறீங்க?"

"இதோ பாருங்க... நான் ஏற்கெனவே ரொம்பக் குழப்பத்தில இருக்கேன். தயவுசெய்து நான் சொல்றதைக் கேளுங்க. நீங்க நடந்த விஷயங்களைச் சொன்னாத்தான் எனக்குத் தெரியும். ஏன்னா... லண்டன்ல இருந்து இன்னிக்குத்தான் நான் வந்தேன்.

"வீட்டுக்குக் கூடப் போகாம இங்கேதான் வந்திருக்கேன். அந்தப் பொண்ணுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாதுன்கிற பதைப்புலதான் வந்தேன். நீங்க சொல்றது எதுவுமே எனக்குத் தெரியாது."

"ஆனா... எங்களுக்கு எல்லாம் தெரியும். நீங்க என்னென்ன செய்யச் சொன்னீங்க... அதை உங்க தங்கை



எப்படிச் செய்தாள் என்பது முதல் நீங்க உங்க வருங்கால மனைவியோட தேன்நிலவு கொண்டாடப் போனது வரைக்கும் தெரியும். எல்லாத்தையும் உங்க அருமைத் தங்கையே சொல்லிட்டா..."

"இதோ பாருங்க. நான்...."

"போதும் ஸார்! எப்படியோ ஒரு நல்ல குடும்பத்தை நடுத் தெருவுல நிறுத்திட்டீங்க. அவ உங்க தங்கையை ஒருமுறைதான் அடிச்சா. ஆனா உங்க தங்கை அவளை வாழ்நாள் பூரா எழுந்துக்க முடியாதபடி அடிச்சிச் சாய்ச்சிட்டா.

"உங்க கையால பணம் வாங்கிக்கிறதைக் கௌரவக் குறைச்சலா நினைச்சித்தான் அதை வாங்காம தன் மனசுல பட்டதைப் பேசினா... ஆனா அதையே காரணமா வெச்சு என் தோழியோட எதிர்காலத்தையே நாசமாக்கிட்டீங்க. உங்க ஆணவத்தால இன்னிக்கு ஒரு குடும்பமே சிதறித் திசை மாறிப் போச்சு.

"திலோ படிக்கணும். பெரிய வேலைக்குப் போகணும்னு அவ அப்பா எவ்வளவு பாடுபட்டார்ன்னு எனக்குத்தான் தெரியும். பஸ்ல வந்தா தினமும் வீட்டில காசு கேட்கணுமேன்னு காலேஜுக்குத் தினமும் அஞ்சு கிலோ மீட்டர் நடந்தே வருவாள். அவ கஷ்டப்படுறதைத் தாங்க முடியாம என் வண்டியில கூட்டிட்டு வருவேன்.

"இத்தனை வருஷமா பாடுபட்டு எல்லாம் கைகூடி வர்ற நேரத்தில அவ படிப்புல கை வைக்க எப்படி ஸார்... மனம் வந்தது உங்களுக்கு? படிச்சவர்தானே நீங்க? படிப்போட அருமையைப் பத்தி அன்னிக்கு மைக்கைப் பிடிச்சிட்டு அரை மணி நேரமாப் பேசினீங்களே...

"பெண்களுக்குப் படிப்பு ரொம்ப முக்கியம். கடைசி வரை அதுதான் அவங்களைக் காப்பாத்தும். சொந்தக் கால்ல நிற்க வைக்கும்னு சொன்னீங்களே... அந்தப் படிப்பை நீங்களே கெடுக்கலாமா? ஒரு படிச்ச மனிதர் செய்யுற காரியமா அது?"

"நான் எதுவுமே செய்யவில்லையே... இப்போது கூட அவளுக்காகத்தான் உங்க பிரின்சிபால்கிட்ட பேசிட்டு வர்றேன்."

"என்ன பேசிட்டு வந்தீங்க?"

"அவ காலேஜுக்கு வந்தா யாரும், அவ மேல கோபப்பட வேண்டாம்ன்னு..."

"எப்படி வருவா?"

"ஏன்?"

"அவளோட டி.சி.யைத்தான் உங்க தங்கை தூள் தூளா ஆக்கிட்டாளே. காலேஜ்ல இருந்தே டிஸ்மிஸ் பண்ணிட்டாங்களே... பிறகெப்படி வருவா?" - உமா ஆத்திரமாய்க் கேட்க... நிலை குலைந்து போனான் ரஞ்சித்குமார்.

"வாட்? என்ன சொல்றீங்க நீங்க?"

"நடந்ததைத்தான் சொல்றேன்."

"இல்லை... நீங்க ஏதோ தப்பா புரிஞ்சுட்டுப் பேசுறீங்க. நான் இப்பக்கூட பேசிட்டு வந்தேனே... அந்தப் பொண்ணு தான் லீவுல இருக்கான்னு சொன்னாரே பிரின்சிபால்..."



"என்ன?" - இப்போது உமா அதிர்ந்தாள்.

"ஆமா! உங்களுக்கு டவுட்னா நீங்களே என்கூட வந்து கேளுங்க. எக்ஸாம் டைம்ல இந்தப் பொண்ணு வராம இருக்கிறாளேன்னு வருத்தப்பட்டார். ப்ளீஸ்... நான் சொல்றதை நம்புங்க!" - அவனது குரலில் தெரிந்த உறுதி உமாவைத் தடுமாற வைத்தது.

"எ... எப்படி நம்புறது? உங்க தங்கைதான் சொன்னாளே... அவ கையால தானே சர்டிஃபிகேட்டைக் கிழிச்சுப் போட்டதா திலோ சொன்னா...."

"ஏங்க! படிச்சவங்க தானே நீங்க? உங்களுக்குத் தெரியாதா? நாம ஸைன் போடாம நம்மோட சர்டிஃபிகேட்ஸை அடுத்தவங்க வாங்க முடியுமா? அப்படிக் கொடுப்பாங்களா?"

சுளீரென உறைத்தது. மை காட்! இதை எப்படி யோசிக்காமல் விட்டோம்?

"அதோட உங்க ஃபிரண்ட் காலேஜ்லயே ஃபர்ஸ்ட் ஸ்டுடண்ட், பெஸ்ட் ஸ்டுடண்ட்ன்னு பிரின்சிபால் சொன்னார். அப்படிப்பட்ட ஸ்டுடண்ட்டை யாராவது எந்தக் காரணமும் இல்லாம டிஸ்மிஸ் பண்ணுவாங்களா?"

"இதை நானும் யோசிச்சேன். ஆனா இது உங்க காலேஜ். உங்க தங்கையும் நீங்களும் சொன்னா... அதை அப்படியே செய்வாங்கன்னு பிரியங்கா சொன்னாளே..."

"சரி... நீங்களோ திலோத்தமாவோ வந்து கேட்டுப் பார்த்தீங்களா?"

"அவ எப்படி ஸார் வருவா? அவங்க அப்பாவை பார்த்துக்கணும். அவ தம்பியைப் போலீஸ் ஸ்டேஷ இருந்து கூட்டிட்டு வர..."

"என்ன? விஷ்ணுவுக்கு என்ன ஆச்சு?"

அவனது பதட்டம் ஆச்சர்யத்தைத் தர... வியப்பா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"விஷ்ணுவை நினைவிருக்கா... உங்களுக்கு?" கேட்கும்போதே பெல் அடித்தது.

"பெல் அடிச்சாச்சு. நான் கிளாஸுக்குப் போகணும்."

"ஒரு நிமிஷங்க. இப்பவாவது என்னை நம்புங்க இங்கே நடந்த எதுவும் எனக்குத் தெரியாது. எனக்கு தெரியாமல் நடக்க வேண்டும் என்றுதான் என்னை வெ நாடு அனுப்பியிருக்கிறாள் பிரியா.

"ப்ளீஸ்... தயவுசெய்து எனக்காக... உங்க தோழி காக... என்ன நடந்ததுன்னு தெளிவாச் சொல்லு களேன்."

உமா ஒரு கணம் நின்று அவனைப் பார்த்தாள்.

அவனது கண்களில் தெரிந்த உண்மையும் பதட்டமு அவளை அசைத்தது.

"ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. மேம் கிட பர்மிஷன் கேட்டுட்டு வர்றேன்!" - என்றவாறு தன் வகுப்பறையை நோக்கி ஓடினாள்.



# 11

எங்கெங்கு நீ சென்றபோதும் - என்
நெஞ்சமே உன்னைத் தேடும்
ஆனந்த ராகம் ஆரம்பமாகும்
பூங்காற்றுப் போராடும் அன்பே!

**வி**ரிந்து படர்ந்து நின்று நிழலையும் காற்றையும் தாராளமாய் வழங்கிக் கொண்டிருந்த வேப்ப மரத்தில் இருந்த ஒற்றைக் குயிலின் ஓசையைத் தவிர வெகு அமைதியாய் இருந்தது கல்லூரி வளாகம்.

மரத்தின் நிழலில் நின்று கொண்டு நடந்தவற்றை உமா விவரிக்க, தன் காரின் அருகே கை கட்டி நின்று கொண்டிருந்த ரஞ்சித்குமாரின் முகம் திகிலாய் உறைந்து போயிருந்தது. தொண்டை அடைத்துக் கொள்ள... செருமிக் கொண்டான்.

"இதெல்லாம் எப்போ நடந்தது?"

"ஆண்டு விழா முடிந்த இரண்டாவது நாள். விஷ்ணு உங்களைப் பார்த்து விட்டு வந்த மறுநாள்!" - உமா கண்களில் துளிர்த்த நீரோடு சொல்ல, ரஞ்சித்குமாரின் மனம் சொல்ல முடியாத வேதனையில் துடித்தது.

'இதற்காகத்தான்... இந்த வேலைக்காகத்தான் என்னை சுஹாசினியிடம் அனுப்பியிருக்கிறாள். தன் தங்கை இத்தனை கொடூரமானவளா? ஒரு சிறிய பிரச்சனைக்காக இத்தனை பெரிய தண்டனையைக் கொடுக்கும் அளவுக்கு ஈவிரக்கம் அற்றவளா?

அவளது செயல்பாடுகளைத் தட்டிக் கேளாமல் அவள் விருப்பத்திற்கே விட்டது எத்தனை பெரிய தவறாகிப் போய் விட்டது. அப்படியென்ன விரோதம்? பகை உணர்வு? தன் வீட்டில் யாருக்குமே இல்லாத குணநலன்கள் இவளுக்கு மட்டும் எங்கிருந்து வந்தன?

ஐயோ! அந்தப் பெண் எத்தனை துடித்திருப்பாள். விஷ்ணு! எத்தனை துடிப்பான பிள்ளை. அவனுக்கு என்ன ஆயிற்று? அவனைப் போய் போலீஸில் மாட்டிவிட பிரியாவிற்கு எப்படி மனம் வந்தது? சிறுவன் அல்லவா அவன்! அவனிடம் கூடவா விரோதத்தைக் காட்டினாள்.

என் தங்கையா இத்தனை செயல்களைச் செய்தாள். அதுவும் என் பெயரை உபயோகப்படுத்தி... தன் செயலை முடித்திருக்கிறாள். அந்தக் குடும்பம் என்ன ஆனது? எங்கே போனது?' பதறும் மனதோடு உமாவை ஏறிட்டான்.

"இப்ப... அவங்க எங்கே இருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"ம்ப்ச்... தெரியலை. வீட்டைக் காலி பண்ணணும்னு சொல்லிட்டு இருந்தா... பட்! போகும்போது சொல்லிட்டுப் போகலை."

"அவங்க அப்பாவை அட்மிட் பண்ணியிருந்த ஹாஸ்பிடல்ல போய்ப் பார்த்தீங்களா?"

"போனேன். ஆனா அங்கிருந்து டிஸ்சார்ஜ் பண்ணிக் கூட்டிட்டுப் போயிட்டதா சொன்னாங்க. அதற்குப் பிறகு நான் எங்கேயும் அவளைப் பார்க்கலை. திலோவுக்காக உங்க ஆபீஸ், வீடுன்னு அலைஞ்சதே எங்க அப்பாவுக்குப்



பிடிக்கலை. பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கெதுக் குன்னு ஒரே திட்டு.

"அதோட காலேஜுக்கும் வீட்டுக்கும் போயிட்டு வரவே டைம் சரியா இருக்கு. வேற எங்கே போய்த் தேடுறது?" - என்றவாறே பெருமூச்சு விட்டாள்.

"விஷ்ணுவுக்கு என்ன ஆச்சு? அவன் எப்போ வெளியே வந்தான்?"

"அவன் நிலைமை இன்னும் கொடுமை. போலீஸ்காரங்க சொன்னதை வைச்சு எப்படியாவது உடனே கூட்டிட்டு வந்திடலாம்னுதான் உங்ககிட்ட உதவி கேட்க... உங்க ஆபீஸுக்கு வந்தோம்."

"எ...ன்ன? என் ஆபீஸுக்கு வந்தீங்களா? எப்போ?"

"விஷ்ணுவைக் கூட்டிட்டுப் போலீஸ்காரங்க போனதும் நான்தான் திலோவைக் கூட்டிட்டு வந்தேன். நீங்க இல்லை. உங்க செல் நம்பரையாவது தாங்கன்னு கேட்டோம். உங்க பி.ஏ. தர மாட்டேன்னு சொல்லிட்டார்."

"ஓ காட்!"

"அப்புறம் வேற வழியில்லாம உங்க வீட்டுக்கே போனோம்."

"அப்பா இருந்தாங்களா? உடனே ஹெல்ப் பண்ணியிருப்பாங்களே..." - ஆவலாய்க் கேட்டான்.

"உங்க அப்பா இல்லை. பிரியங்கா கிட்டதான் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தோம். கடைசியா உங்க அம்மா வந்தாங்க. தானே போன் பண்ணி விடச் சொல்றதாச்

சொன்னாங்க. ஆனா பிரியங்கா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணிட்டா. போராடிப் பார்த்துத் திரும்ப போலீஸ் ஸ்டேஷனுக்கே போனோம்.

"அங்கேயும் அழுது கெஞ்சிப் பார்த்தா தி... கடைசியா ஒரு போன் வந்தது. யார் பேசினாங்கன்னு தெரியாது. ஆனா அதுக்குப் பிறகுதான் கையெழுத்து வாங்கிட்டு விஷ்ணுவுக்கு அட்வைஸ் பண்ணி அனுப்பினாங்க. விஷ்ணு யார்கிட்டயும் ஒரு வார்த்தை கூட பேசலை.

"ஏதோ வருத்தத்தில இருக்கான்னு விட்டுட்டோம். ஆனா அதுக்குப் பிறகு அவன் யார்கிட்டயும் பேசவே இல்லை. வீட்டை விட்டு வெளியே போறதும் இல்லை."

"ஐயோ!"

"எப்படியோ ஒட்டுமொத்தக் குடும்பமும் ஒடுங்கிப் போச்சி. நெக்ஸ்ட் மன்த் விஷ்ணுவுக்கு பப்ளிக் எக்ஸாம். எப்படியும் ஸ்டேட் ஃபர்ஸ்ட் எடுத்திடுவேன்னு சொல்லிட்டு இருந்தான். ம்ப்ச்! எல்லாம் போச்சு."

"இல்லை. அப்படி எதுவும் போகாது. நான் விடமாட்டேன். நான் அவனை மாற்றுவேன். இழந்த சந்தோஷங்களை நான் மீட்டுக் கொடுப்பேன். மிஸ் உமா நீங்க எனக்கு ஒரே ஒரு ஹெல்ப் பண்ணணுமே..."

"என்ன ஹெல்ப்?"

தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான். "இது என்னோட ஆபீஸ் அட்ரஸ். இதுல என் போன் நம்பர் இருக்கு. நீங்க எப்போ... எங்கே திலோத்தமாவைப்



பார்த்தாலும் உடனே எனக்குப் போன் பண்ணிடுங்க. மற்றதை நான் பார்த்துக்கிறேன்."

"ஸார்!"

"ப்ளீஸ் உமா! ஏதோ நடக்கக் கூடாததெல்லாம் நடந்து போச்சு. இனிமே அதைச் சீர் செய்யுற பொறுப்பு என்னோடது. என்னை நம்புங்க. நான் எப்படியாவது அவங்களைப் பார்க்கணும். நீங்கதான் அதுக்கு ஹெல்ப் பண்ணணும்..."

"சரிங்க ஸார்..." - விசிட்டிங் கார்டை வாங்கிக் கொண்டாள்.

"நானும் தேடிப் பார்க்கிறேன். அது வரைக்கும் காலேஜ்ல லீவு மட்டும் சொல்லிடுங்க. அப்பாவுக்கு உடம்பு முடியாததால வரலைன்னு சொல்லி வையுங்க. எக்ஸாமுக்கு எப்படியும் அங்கே வந்திடுவாங்க."

"உங்களால முடியுமா ஸார்?"

"நிச்சயமா முடியும். நம்பிக்கையோடு தேடுவோம். சரி... நான் கிளம்புறேன்."

"ம்..."

"திலோவைப் பத்தி சின்னத் தகவல் கிடைச்சாலும் உடனே எனக்குப் போன் பண்ணிடுங்க உமா. எந்த நேரமா இருந்தாலும் பரவாயில்லை."

"கண்டிப்பா பண்றேன் ஸார்."

"சரி... நான் வர்றேன்..." - என்றவாறு அவன் காரில் ஏறிப் புறப்பட்டுச் செல்ல, உமாவிற்குள் லேசாய் நம்பிக்கை

துளிர்த்தது. அவன் தந்த விசிட்டிங் கார்டைப் பத்திரப்படுத்திக் கொண்டே வகுப்பறையை நோக்கி நடந்தாள்.

**கா**ரைச் செலுத்திக் கொண்டே தனது செல்லை எடுத்து... தந்தையைத் தொடர்பு கொண்டான் ரஞ்சித்.

"அப்பா... எங்கே இருக்கீங்க?"

"ரஞ்சித்! நீ எங்கே இருந்து பேசுறே?"

"வீட்டுக்குப் போயிட்டு இருக்கேன். நீங்களும் எங்கே இருந்தாலும் உடனே வீட்டுக்கு வாங்க. முக்கியமான விஷயம் பேசணும்."

"நீ எப்ப வந்தே ரஞ்சித்? லண்டன்ல இருக்கிறதா பிரியா சொன்னாளே..."

"எல்லாம் நேரில வந்து சொல்றேன். நீங்க உடனே வீட்டுக்கு வாங்க."

"சரிப்பா... இதோ கிளம்பிட்டேன்..." - என்றதும் போனை வைத்தான். மீண்டும் உயிர்ப்பித்து அர்ஜுனைத் தொடர்பு கொண்டான்.

"அர்ஜுன்! ஏதாவது முக்கியமான வேலை இருக்கா?"

"ஸார்!"

"நான் ஸைன் பண்ண வேண்டிய பேப்பர்ஸ் எதுவும் இருக்கா?"

"இல்லை ஸார். இப்பத்தான் மேடத்துகிட்ட ஸைன் வாங்கிட்டு நிக்கிறேன்."

"யார்கிட்ட?"



"சின்ன மேடத்துக்கிட்ட."

"பிரியங்கா ஆபீஸ்லயா இருக்கா?"

"யெஸ் ஸார்."

"இப்ப உன் பக்கத்தில இருக்காளா? நான் போன் பேசிட்டு இருக்கிறதைக் கவனிக்கிறாளா?"

"நோ ஸார். அவங்களோட செல்லில யார்கிட்டயோ பேசிட்டு இருக்காங்க. நான் வாசலுக்கு வெளியேதான் நிக்கிறேன்."

"குட்! அப்படியே வெளியில வா. கொஞ்சம் பேசணும்."

"இதோ வந்திட்டேன் ஸார். வெளி கேட் பக்கத்துல வந்து நிக்கிறேன் ஸார். போதுமா?"

"போதும். அர்ஜுன்... நான் சொல்றதைக் கவனமா கேளு."

"சொல்லுங்க ஸார்."

"நான் இப்போ சென்னையிலதான் இருக்கேன். வீட்டுக்குப் போயிட்டு இருக்கேன். நீ என்ன பண்றே... ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி பிரியாவை ஆபீஸூலேயே இருக்க வைச்சிடு. வீட்டுக்கு அனுப்பிடாதே."

"ஓ.கே. ஸார்!"

"நான் போன் பண்ணினதையோ இங்கே வந்திட்டேன் கிறதையோ தப்பித் தவறிக்கூட அவகிட்ட சொல்லிடாதே... புரியுதா!"

"புரியுது ஸார்."

"எத்தனை நாளா ஆபீஸ் வர்றா அவ?"

"நேற்று வரைக்கும் போன்லதான் எல்லா விஷயத்தையும் கேட்டுக்கிட்டாங்க. முக்கியமான லெட்டர்ஸ் எல்லாம் வீட்டுக்கு எடுத்திட்டு வரச் சொல்லி சைன் போட்டாங்க ஸார். இன்னிக்குத்தான் ஆபீஸ் வந்திருக்காங்க."

"ஓ.கே. நீ போனை வைச்சிட்டு ரூமுக்குப் போ. அவ சந்தேகப்படுற மாதிரி நடந்துக்காதே. ஒரு ரெண்டு மணி நேரமாவது அவளை அங்கேயே உட்கார வைச்சிடு."

"ஓ.கே. ஸார்!"

"சரி. போனை வைச்சிடு."

"யெஸ் ஸார்!" - என்றவாறே போனை வைத்து விட்டு நிமிர... திடுக்கிட்டான்.

கடுமையான பார்வையோடு அவனை நெருங்கிக் கொண்டிருந்தாள் பிரியங்கா.

அர்ஜுன் உள்ளூர எழுந்த படபடப்பை மறைத்துக் கொண்டு புன்னகைத்தான்.

"பேசிட்டீங்களா மேம்?"

"நீ பேசிட்டியா?" - அவன் எதிரே வந்து நின்று கைகளைக் கட்டிக் கொண்டு கேட்டவளைக் கண்டதும் சற்று மிரண்டான்.

'பேசியதைக் கேட்டிருப்பாளோ... அவசரப்பட்டு எதையும் உளறிவிடக் கூடாது.'

"மேம்!"

"நீ பேசிட்டியான்னு கேட்டேன்?"

"பே... பேசிட்டேன் மேம்."



"போன்ல யாரு?"

"மேம்..."

"உனக்கென்ன காது கேட்காதா? ஒவ்வொரு கொஸ்டினையும் ரெண்டு முறை கேட்கணுமா?" - குரலை உயர்த்திக் கேட்டாள்.

"ஸாரி மேம்..."

"என்ன ஸாரி? போன்ல யாருன்னு கேட்டேனே...?"

"அஃபிஷியல்தான் மேடம். நம்ம கம்பெனி புராடக்ட் பற்றிப் பேசி முடிவெடுக்க சில டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் மீட்டிங் இன்னிக்கு வைக்கணும்னு சொன்னாங்க. அது விஷயமா பேசிட்டு இருந்தேன்."

"அதை ஏன் இங்கே வந்து பேசுறே?"

"மேட்டர் கொஞ்சம் கான்ஃபிடன்ஸ் மேடம். அதான்..." - என்றவனை நம்பிக்கை இல்லாமல் பார்த்தாள் பிரியங்கா.

"சரி... இப்போ யார் பேசினது? என்ன பேசினாங்க?"

"மிஸ்டர் அகர்வால் பேசினார் மேடம்... இன்னிக்கு ஈவினிங் ஃபோர் ஓ கிளாக் மீட்டிங்குக்கு எல்லாரும் வந்திடுறதா சொன்னாங்க."

"வாட்? மீட்டிங்கா... இன்னிக்கா?"

"எஸ் மேம். போன மாதமே முடிவு பண்ணினது மேம். இனிமே மாற்ற முடியாது."

"அதுக்காக... இப்ப அண்ணன் இல்லாத நேரம் எப்படி மீட்டிங் வைக்க முடியும்?"

"அது ஒண்ணும் பெரிய பிரச்சனை இல்லை மே... ஜஸ்ட் ஒரு கலந்துரையாடல்தான். நீங்க தலைமை வகித்தால் போதும். மற்றவற்றை நான் பார்த்து கொள்கிறேன்."

"என்ன பேசுறே நீ? என்கிட்ட ஒரு வார்த்தை கேட்கா நீ எப்படி அவங்களை வரச் சொல்லலாம்?"

"எக்ஸ்கியூஸ் மீ மேம்... நான் வரச் சொல்லவில்லை அவங்க வரப்போறதை நமக்குத் தெரிவிச்சாங்க. தட் ஆல்."

"ம்க்கும்... எதுக்கெடுத்தாலும் ரெடியா ஒரு பதில் வைச்சிருப்பியே... அண்ணன் இல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே!" - கடுப்பாய்க் கேட்டாள்.

"நீங்க இருக்கிறதா சொல்லியிருக்கேன் மேம். மீட்டிங் டைம்ல சார் இல்லைன்னு சொன்னா... அது வர்றவங்களை அவாய்ட் பண்றதுக்குச் சொல்ற மாதிரி ஆயிடும். இதுவரை நம்ம கம்பெனியில இப்படி நடந்ததில்லை."

"என்னய்யா உன்னோட பெரிய தலைவலியாப் போச்சு. நான் இப்ப வீட்டுக்குப் போகலாம்னு கிளம்பினேன்."

"நோ மேம். ஜஸ்ட் ஒன் ஹவர் நீங்க இருந்தா போதும். சீக்கிரமா மீட்டிங்கை முடிச்சிடலாம். ப்ளீஸ் மேம்!"

"அப்பாவையாவது போன் பண்ணி வரச் சொல்லு. இந்த மீட்டிங் மண்ணாங்கட்டியெல்லாம் எனக்கு ஒரு இழவும் புரியாது. அவனுங்க பேசறதைக் கேட்கிற பொறுமையும் எனக்குக் கிடையாது."

இதற்கு என்ன பதில் சொல்வது என்று அவசரமாக யோசித்தான்.



"என்ன மரம் மாதிரி நிற்கிற? அப்பாவுக்குப் போன் பண்ணுன்னு சொன்னேன். என் செல்லுல சார்ஜ் தீர்ந்து போச்சு."

'நல்லதாப் போச்சு!' - மனதிற்குள் புன்னகைத்துக் கொண்டான்.

"ஸார் இப்போ லெதர் எக்ஸ்போர்ட் பற்றி முக்கியமான மீட்டிங்கில இருக்கார் மேடம். மீட்டிங் ஈவினிங் சிக்ஸ் ஓ கிளாக்தான் முடியும். நடுவில யார் ஃபோன் பண்ணினாலும் சார் அட்டெண்ட் பண்ண மாட்டாங்க..." என்றான் பவ்யமாய்.

"ஓ! ஷிட். எப்பப் பாரு மீட்டிங்... மீட்டிங்... ஊர்னு சுத்திட்டே இருக்க வேண்டியதுதான். அப்படிச் சம்பாதிச்சு என்னதான் பண்ணப் போறாங்களோ?" - பொரிந்தவாறே உள்ளே சென்றவளைப் பார்த்து நிம்மதியாய் மூச்சு விட்டான்.

'பிரமாதம் அர்ஜுன்... அசத்திட்டே!' - என்றவாறு தனக்குத் தானே மெச்சிக் கொண்டு முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் அவளைப் பின்தொடர்ந்தான்.

**மி**ன்விசிறி பரபரவெனச் சுற்றிக் கொண்டிருக்க, அதனடியில் அமர்ந்து நெற்றியை இறுகப் பற்றிக் கொண்டிருந்தான் ரஞ்சித்குமார். அருகே அமர்ந்திருந்த கண்ணபிரான் மகன் சொல்லப் போகும் வார்த்தைக்காக அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

வெகுநேரமாய் மகனிடம் எந்த அசைவும் இல்லாமல் போகவே... மெதுவாய் அவனது தோளைத் தொட்டார். சட்டெனக் கண்களைத் திறந்தவனின் கண்கள் கலங்கியிருக்க, லேசாய்ப் பதறினார்.

"என்னய்யா... கண்ணெல்லாம் கலங்கியிருக்கு? என்னாச்சு? சொல்லுப்பா! எதுவும் பிரச்சனையா?"

"அப்பா!" - தொண்டை அடைக்க அழைத்தான்.

"என்னய்யா?"

"நாம... தப்பு பண்ணிட்டு இருக்கோம்னு தோணுது."

"என்ன?"

"நம்ம பிரியாவுக்கு அளவுக்கதிகமா செல்லம் கொடுத்து அவளை மனிதாபிமானம் இல்லாதவளா மாத்திட்டு இருக்கோம்ப்பா..."

"ரஞ்சித்! என்ன சொல்றே? எனக்கு எதுவும் புரியலையே?"

"அம்மா எங்கேப்பா?"

"நம்ம வக்கீல் பொண்ணுக்குக் குழந்தை பிறந்திருக்குது. அதுக்கு இன்னிக்குப் பெயர் சூட்டு விழாவாம். அதுக்காகப் போயிருக்கா..."

"வர எவ்வளவு நேரமாகுமாம்?"

"எப்படியும் ஆறு ஏழு மணியாகிடும். நீ விஷயத்தைச் சொல்லுப்பா."

"அப்பா! நான் இங்கே இல்லாத சமயம் என்ன நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"எதைப் பற்றிக் கேட்கிறாய்?"

"பிரியாவைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"ஓ! அதுவா? அவளுக்கு எப்போதும் விளையாட்டுத் தான். மழையில நனையுறேன்னு மொட்டை மாடியில போய்



நின்னிருக்கா. மழை விட்டதும் கீழே இறங்கும் போது படிக்கட்டு வழுக்கி விட்டுடுச்சி போலிருக்கு..."

"அப்பா! என்ன சொல்றீங்க?"

"பதறாதேப்பா... அடி ஒண்ணும் பலமா இல்லை. நெத்தியில லைட்டா இடிச்சிக்கிட்டா போலிருக்கு. அப்புறம் தாடையிலயும் லேசான அடி. ரெண்டு நாள்ல சரியாப் போச்சு. நான்கூட உனக்குப் போன் பண்ணணும்னு சொன்னேன். நீ பயந்திடுவேன்னு சொல்லி உனக்குப் பண்ணக் கூடாதுன்னு சொல்லிட்டா..."

"வேற எதுவும் சொல்லலையாப்பா?"

"வேறன்னா? எதைக் கேட்கிறாய்?"

"ரெண்டு பல்லு உடைஞ்சிடுத்தே. அதைச் சொல்லலையா?"

கண்ணபிரான் அதிர்ந்தார். "என்ன? பல் உடைஞ்சதா?"

"ம்... அதை டென்டிஸ்ட் கிட்ட போய்க் காட்டிட்டும் வந்திருக்கா. இதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதேப்பா. இந்தப் பொண்ணு என்கிட்ட சொல்லவே இல்லையே... நான் பதறிடுவேன்னு சொல்லாம மறைச்சிட்டாளோ?"

"அதை மட்டும் மறைக்கலைப்பா... எல்லாத்தையும் மறைச்சிருக்கா."

"என்னப்பா சொல்றே?"

"அவ மழையில நனையவும் இல்லை. படிக்கட்டுல விழவும் இல்லை."

"பின்னே?"

"ஒரு அப்பாவிப் பொண்ணோட குடும்பத்தைப் பழி வாங்கப் போன இடத்தில அடி வாங்கிட்டு வந்திருக்கா."

"என்ன?" - அதிர்ச்சியில் எழுந்தே விட்டார் கண்ண பிரான்.

அவரது முகம் கோபத்தில் கனன்றது. "யாருடா அது? என் பொண்ணு மேலயே கை வைச்சது?"

"அப்பா! தப்பு பண்ணினது நம்ம பிரியா. அதை விட்டுட்டு..."

"இருக்கட்டுமே. என் பொண்ணு தப்பே பண்ணி யிருக்கட்டுமே... அதுக்காக என் பொண்ணு மேல கை வைக்கலாமா? எவன்டா அது? இப்ப எங்கே இருக்கான்?" - தந்தையின் கோபத்தில் அதிர்ந்து போனான் ரஞ்சித்.

"அப்பா!"

"என் பொண்ணு மேல நானே ஒரு நாளும் கை நீட்டினது இல்லை. ஒரு வார்த்தை திட்டினது கூட இல்லை. எவனோ ஒருத்தன் அடிச்சிருக்கான். அதுவும் பல் உடையுற அளவுக்கு அடிச்சிருக்கான்னா அவனை உயிரோடு விடலாமா? சொல்லு... யார் அவன்?" - தந்தையின் ஆவேசத்தில் ஆடிப் போனான்.

அவன் எண்ணி வந்ததென்ன? இங்கு நடப்பது என்ன? நானே வாயைக் கொடுத்துத் திலோவின் குடும்பத்தை மாட்டி விட்டேனோ?



தந்தையிடம் இருந்து இந்தப் பதிலை எதிர்பார்க்க வில்லை அவன்.

தந்தையின் உதவியோடு திலோத்தமாவின் குடும்பத்தைக் கண்டுபிடித்து அவர்களது துயரைத் தீர்க்க வேண்டும் என்றுதான் தந்தையிடம் பேசத் துவங்கினான்.

அதோடு தங்கையையும் கொஞ்சம் அதட்டி வைக்க வேண்டும் என்றும் எண்ணியிருந்தான். ஆனால் பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாய் மாறிவிட்டது. இதற்கு மேலும் எந்த விபரத்தையும் சொல்லி நானே இந்தப் பழி உணர்வைத் தூண்டி விடக் கூடாது.

இனி எது செய்வதாக இருந்தாலும் தானேதான் செய்தாக வேண்டும். எதைப் பற்றியும் இவரிடம் மூச்சு விடக்கூடாது.

பலவித எண்ணங்களுடன் அசையாமல் அமர்ந் திருந்தவனை உலுக்கினார் கண்ணபிரான்.

"உன்கிட்டதான் கேட்டுட்டு இருக்கேன். யார் அவன்?"

"அதைத்தாம்ப்பா நான் உங்ககிட்ட கேட்கலாம்னு வந்தேன். விஷயத்தைக் கேள்விப்பட்டதுல இருந்து எனக்கு அங்கே இருக்க முடியவில்லை. அதான் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்னு உங்ககிட்ட கேட்டேன்."

"அப்போ உனக்கும் தெரியாதா?"

"தெரிஞ்சா விடுவேனாப்பா...!"

"அதானே... நீ என் பிள்ளையாயிற்றே. அதற் காகத்தான் உன் முகம் இப்படி வாடிக் கிடந்ததா? நான் கூட என்னவோ ஏதோன்னு நினைச்சிட்டேன்."

"இதைக் கேள்விப்பட்டதில இருந்து எனக்கு மனசே... ஆறலைப்பா. உங்களுக்குக் கூட பிரியா சொல்லலையா?"

"இல்லையே... சொல்லியிருந்தால் அவளை... குடும்பத்தோடு மேல அனுப்பியிருப்பேனே! அவ... அடித்ததில் என் பொண்ணுக்கு ஏதேனும் ஆகியிருந்தா... என்ன ஆகியிருக்கும்?"

"ஒண்ணும் ஆகியிருக்காதுப்பா. பயப்படாதீர்கள்."

"இல்லை ரஞ்சித்! அவங்களை நாம சும்மா விட... கூடாது. ஏதாவது செய்தே ஆகணும். இரு... நா... பிரியாவுக்குப் போன் பண்ணி..."

"வேண்டாம்ப்பா... வேண்டாம்!" - அவசரமா... மறுத்தான்.

"ஏம்ப்பா?"

"செய்ய வேண்டியதெல்லாம் பிரியாவே செய்திட்டா... அந்தக் குடும்பத்தையே ஊரை விட்டு ஓட வைச்சிருக்கா... ஒருத்தர்கூட வெளியே நடமாட முடியாதபடி செய்திருக்கா..." - கண்களில் வேதனையோடு சொன்ன மகனின் தோள்... தட்டிக் கொடுத்தார்.

"அவ யாரு? என் பொண்ணு. உன் தங்கை. தன்னை... முறைத்தாலே முறைக்கிறவனைச் சும்மா விடமாட்டா... இவனுங்களைச் சும்மா விடுவாளா? நாமளும் ஏதாவது... செய்யணும்..."

"வேண்டாம்ப்பா... நமக்கு எதுவும் தெரியக் கூடாது... தெரிஞ்சா அவளுக்கு அவமானமா இருக்கும்னு நினைச்சு... தான் பிரியா நம்மகிட்ட மறைச்சிருக்கா. நாமளும் இதை... இப்படியே விட்டுடுவோம். அதான் நல்லது."



"ஏன்?"

"பிரியாவைப் பத்தி உங்களுக்குத் தெரியாதாப்பா. அவளுக்குத் தோல்வியே பிடிக்காது. அதுவும் தான் தோற்கிறது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறவ. நாம போய் அவகிட்ட எதுவும் கேட்டு அவ மனசை வேதனைப்பட வைக்க வேண்டுமா?"

"ஆமாம்ப்பா... நீ சொல்றதுதான் சரி. என்னைவிட நீதாம்ப்பா உன் தங்கையை நல்லாப் புரிஞ்சு வைச்சிருக்க. உன்னை நினைச்சா ரொம்பப் பெருமையா இருக்குப்பா..." - என்றவாறு மகனைக் கட்டிக் கொண்டார் கண்ணபிரான்.

ரஞ்சித்தின் மனம் கேள்வி எழுப்பியது. அப்பாவுக்கு இந்த விஷயம் எதுவும் தெரிந்திருக்கவில்லை. அதனால் இவர் கண்டிப்பாய் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்திருக்க மாட்டார். தன் உயிரே போனாலும் பிரியா அடுத்தவர்களுக்காக மனமிரங்க மாட்டாள். அப்படியென்றால் விஷ்ணுவை வெளியே கொண்டு வர போன் செய்தது யார்?

## 12

வசந்த காலக் கோலங்கள்
வானில் விழுந்த கோடுகள்
கலைந்திடும் கனவுகள்
கண்ணீர் சிந்தும் நினைவுகள்!

குழைவாய் வெந்த சாதத்தை நன்றாய்க் கரைத்துத் துளி உப்பிட்டுக் கிண்ணத்தில் ஊற்றிக் கணவனுக்குப்

புகட்டிக் கொண்டிருந்தாள் சகுந்தலை. எந்த மறுப்பும் சொல்லாமல் கசிந்த கண்களோடு குடித்தார் ராகவன். அவரது வாயைத் துடைத்துவிட்டு, கசிந்திருந்த கண்களைத் தன் புடவைத் தலைப்பால் ஒற்றியெடுத்தாள்.

"ஏன் கண் கலங்குறீங்க? உடம்புக்கு எதுவும் பண்ணுதா?" - மெல்லிய குரலில் கேட்டவளிடம் மறுப்பாய்த் தலையசைத்தார். அவரது வேதனைப் பார்வை சென்ற இடத்தைத் திரும்பிப் பார்த்தாள் சகுந்தலா.

மேஜை முன் நின்று தந்தைக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளைப் பிரித்துக் கொண்டிருந்தாள் திலோத்தமா. அவளைக் கண்டதும் ராகவனின் விழிகள் பொங்கிவிட, அவசரமாய் அவரது கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கிசுகிசுத்தாள்.

"ஷ்! அழாதீங்க. அவ பார்த்தான்னா கஷ்டப்படுவா. அழாதீங்க..." - மனைவியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுக் கண்களை மூடிக் கொண்டார்.

"அப்பா!" - மகளின் அழைப்பில் மீண்டும் கண்களைத் திறந்தார்.

"ம்..."

"மாத்திரை போடுங்கப்பா."

"ம்ஹூம்..." - வேண்டாம் என்பதாய்த் தலையசைத்து மறுத்தார்.

"அடம் பிடிக்கக் கூடாது. மாத்திரை யெல்லாம் போட்டாத்தான் உடம்பு குணமாகும். பழையபடி நடமாட முடியும். ஆ காட்டுங்க..." - என்றவாறு தந்தையின் அருகே அமர்ந்தாள்.



மகளின் வார்த்தையில் நம்பிக்கையின்றித் தனது உடம்பைப் பார்த்தார். விபரம் தெரிந்த நாள் முதலாய் உழைத்த கரம். இப்போது எந்த அசைவும் இன்றிக் கிடந்தது. உணவைக் கூடத் தானே அள்ளி உண்ண முடியாத கொடுமை. கட்டிலை விட்டு இறங்க முடியாமல் தவிக்கும் தவிப்பு. மீண்டும் கண்கள் சுரந்தன.

"அப்பா! வாயைத் திறங்கப்பா. எனக்கு வேலைக்கு நேரமாகுதில்ல..."

"என்கிட்ட கொடும்மா. நான் கொடுக்கிறேன்."

"வேண்டாம்மா... உங்களை ஏமாத்திடுவாங்க. நானே கொடுத்திட்டுப் போறேன். வாயைத் திறங்கப்பா..." - மகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே சற்றுக் கோணலாய் மாறியிருந்த வாயைத் திறந்தார் ராகவன். லேசாகத்தான் திறக்க முடிந்தது.

அவர் சிரமப்படுவதை உணர்ந்ததும் விழிகள் நிறைந்தன.

"போதும்ப்பா... நான் போட்டுத் தண்ணீர் ஊத்தினதும் விழுங்கிடணும் சரியா?" - என்றவாறே மாத்திரையைப் போட்டு நீரை ஊற்ற விழுங்கினார். அவரது வாயைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள் திலோத்தமா.

"அம்மா! இன்னும் ஒரு வேளைக்குத்தான் மருந்து இருக்கு. மதியத்துக்கு அதைக் கொடுத்திடுங்க. நைட் வரும்போது நான் வாங்கிட்டு வந்துடுறேன்."

"ம்..."

"நாளைக்கு அரை நாள் லீவு சொல்லிட்டு வர்றேம்மா. விஷ்ணுவை டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போகணும்.

அப்பாயின்ட்மெண்ட் வாங்கிட்டேன். அவனை எப்படியாவது சாப்பிட வைச்சிடுங்கம்மா."

"என்னால முடியலை திலோ! என்னைப் பார்த்தாக்க பயப்படுறான். கட்டிலுக்கடியில போய் பதுங்கிட்டு வெளியே வரவே மாட்டேங்கிறான்..." - சொல்லும் போதே தாயின் குரல் விசும்பியது.

"கம்பெனிக்குப் போக நேரமாச்சேம்மா... சரி... சாப்பாடை எடுத்திட்டு வாங்க. நான் போய் அவனைக் கூட்டிட்டு வர்றேன்..." - என்றவாறு பக்கத்தில் இருந்த சிறு அறைக்குள் நுழைந்தாள்.

பகல் வேளையிலும் அறை முழுக்க இருட்டாய் இருந்தது. கதவின் அருகே இருந்த ஸ்விட்சைப் போட்டவாறே குரல் கொடுத்தாள்.

"விஷ்ணு!"

பதில் இல்லை.

"விஷ்ணு! அக்கா வந்திருக்கேன்டா..." - என்றதும் அறையின் மூலையில் லேசாய்ச் சலசலப்புக் கேட்டது. அங்கே பார்வையைத் திருப்பியவளுக்குப் பகீரென்றது.

தனது பள்ளிக்கூடப் புத்தகங்களைத் துண்டு துண்டாய்க் கிழித்துக் கொண்டிருந்தான் விஷ்ணு. தலை வாரப்படாமல் கலைந்திருந்தது. தேகம் வற்றி... உடல் நிறம் மாறியிருந்தான் விஷ்ணு. முகம் முழுக்க அழுக்கும் தூசியும் படர்ந்திருந்தது.

வேகமாய்த் தம்பியை நெருங்கி, அவன் கையிலிருந்த பாடப் புத்தகங்களை வாங்கினாள். அவளிடமிருந்து ஆவேசமாய்ப் பறித்தான் விஷ்ணு.



"கொடு... நான் கிழிக்கணும்... கொடுன்றேன்ல..."

"தம்பி! இதெல்லாம் ஸ்கூல் புக்டா. இதை ஏன் கிழிக்கிறே?"

"இது இனிமே எதுக்கு? என் பாடம் போச்சு... என் படிப்புப் போச்சு... இனிமே இது எதுக்கு? கொடு. அதைக் கிழிச்சுப் போட்டாத்தான் என் ஆத்திரம் தீரும்."

"விஷ்ணு!" - குரலை உயர்த்தி அதட்டினாள் திலோத்தமா. சட்டெனத் தன் செயலை நிறுத்தினான் விஷ்ணு.

புத்தகங்களை எடுத்துப் பையினுள் அடக்கினாள். தம்பியின் கலைந்திருந்த தலையைப் பரிவோடு கோதினாள். கண்களில் நீர் நிறைந்து தளும்பிற்று.

"ஏன்டா தம்பி... இப்படிப் பண்றே? படிக்கிற புத்தகத்தைக் கிழிக்கலாமா?"

"என்னை ஸ்கூல்ல சேர்க்க மாட்டாங்க அக்கா. என்னை எல்லாரும் ரௌடின்னு சொல்வாங்க. கொலைகாரன்னு சொல்வாங்க. என்னை எல்லாரும் கேவலமாப் பார்ப்பாங்க அக்கா..."

"இல்லடா தம்பி. நீ எதையாவது கற்பனை பண்ணிக்காதே செல்லம். அக்கா உன் ஸ்கூல் ஹெச்.எம்.கிட்ட பேசித் திரும்பவும் சேர்த்துக்கச் சொல்றேன்டா..."

"வேண்டாம்க்கா... அவ ஏற்கெனவே ஸ்கூல்ல போய் சொல்லிட்டாளாம். இனிமே என்னைச் சேர்த்துக்க மாட்டாங்க. என்னால படிக்க முடியாது. நிறையச் சம்பாதிச்சு உன்னைக் கல்யாணம் பண்ணி வைக்க முடியாது. அப்பாவை உட்கார வைச்சு சாப்பாடு போட முடியாது.

"அம்மாவுக்கு இரட்டைவடச் சங்கிலி செய்து போ... முடியாது. என்னால எதுவுமே முடியாது. நான் ... குப்பை. வேஸ்ட் பேப்பர். யூஸ்லெஸ் ஃபெல்லோ. என்னா... எதுவுமே முடியாது..." - முகத்தை மூடிக் கொண்டு அழுதா... விஷ்ணு.

அறை வாசலில் நின்று கொண்டிருந்த சகுந்தலா... விம்மி அழுதாள்.

கட்டிலில் படுத்திருந்த தந்தையின் கதறல் இங்கு வரை கேட்டது. ஒட்டுமொத்தக் குடும்பமும் அழ... திலோத்தமாவின் கண்ணீர் உறைந்தது. தம்பியைத் தன் மடியில் சாய்த்து... கொண்டாள்.

"தம்பி! நீ ஏன் அழறே? ஆண்பிள்ளை அழக்கூடாது... உன்னால் அம்மா, அப்பா எல்லாரும் அழறாங்க பார்... அழாதேடா. என் கண்ணு இல்ல... நீ என் தம்பிடா... உன்னால முடியும். எல்லாமே முடியும்."

"இல்லை. என்னால எதுவுமே முடியாது."

"முடியும்டா. உன்னால முடியும். விட்ட பாடத்தைத் தொடர்ந்து படிக்க முடியும். அம்மா, அப்பாவோட கண்ணீரைத் துடைக்க முடியும். என்கூடச் சேர்ந்து நீயும் உழைக்க முடியும். நல்ல சம்பாத்தியத்தால அப்பாவுக்கு வைத்தியம் பண்ணி அவங்களை நடமாட வைக்க முடியும்.

"நம்ம அம்மாவோட முகத்தில பழைய சந்தோஷத்தைக் கொண்டு வர முடியும். நீ மட்டும் இப்படிக் கண்டதையும் நினைச்சிப் பயந்து ஒளியாம இருந்தா... இது எல்லாத்தையும் உன்னால செய்ய முடியும் தம்பி..."



"அக்கா!" - மடியிலிருந்து தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

"ஆமாண்டா கண்ணா... என் தம்பி வீரன். திறமைசாலி. அஞ்சாநெஞ்சன். அவனால முடியாதது எதுவுமே இல்லை..." - திலோத்தமாவின் குரலில் இருந்த உறுதி அவனை அசைத்தது. தமக்கையின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"இனிமே இந்த ரூமுக்குள்ள அடைஞ்சு கிடக்காதே. வெளியில வா. அப்பாகூட இருந்து அப்பாவைக் கவனிச்சுக்க. அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணு."

"அப்போ ஸ்கூல்?"

"போ... போலாம். உடம்பு கொஞ்சம் தேறினதும் நானே கூட்டிட்டுப் போறேன்."

லேசாய் மலரத் துவங்கியிருந்த முகம் வாடியது. "பொய் சொல்லாதே அக்கா!"

"தம்பி!"

"உன்னையே காலேஜ்ல சேர்த்துக்கலை. போலீஸ் ஸ்டேஷன் போய் இருந்திட்டு வந்தே... என்னை எப்படிச் சேர்த்துப்பாங்க?"

"தம்பி! நான்... நான் போய்ப் பேசுறேன்..."

"என்னைச் சமாதானப்படுத்த நீ பொய் சொல்லாதே அக்கா. நீ என்ன மினிஸ்டரா? இல்லை கோடீஸ்வரியா? நீ சொல்றதை யார் கேட்பாங்க? என்னை யாரும் ஸ்கூல்ல சேர்த்துக்க மாட்டாங்க. என்னால படிக்க முடியாது. என் படிப்பு போச்சு."

"வாயை மூடுடா."

"அக்கா!"

"இனிமே இப்படி புலம்புறதை விடு. ஒழுங்கா குளிச்சிட்டு சாப்பிட்டு இரு. நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கு நாம ஸ்கூலுக்குப் போறோம்."

"என்ன... ஸ்கூலுக்கா?"

"ஆமா! உன்னையும் கூட்டிட்டுப் போறேன். என்கூட வருவேல்ல..."

"வர்றேன்க்கா... இப்பவே வந்திடுறேன்!" - என வேகமாய் எழுந்தான். தானும் எழுந்து கொண்டே புன்னகைத்தாள்.

"இன்னிக்கு வேண்டாம். நாளைக்குத்தான் கூட்டிட்டு வரச் சொன்னாங்க."

"சாரே சொன்னாராக்கா?" - ஆவலாய்க் கேட்ட தம்பியை எதிர் கொள்ள முடியாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

"ம்..."

"சரிக்கா... நாளைக்கே போகலாம்."

"வெரி குட். அக்கா வேலைக்குப் போகணும். நீ சமர்த்தாக் குளிச்சிட்டு அம்மா தர்ற சாப்பாட்டைச் சாப்பிட்டு வீட்டிலயே இருக்கணும். சரியா?"

"சரிக்கா."

"ம்... இப்போ போய்க் குளி. போ..." - என்றதும் எழுந்து கொடியில் கிடந்த டவலை உருவிக் கொண்டு வேகமாய்க் குளியலறையை நோக்கிச் சென்றான்.



ஒரு பெருமூச்சுடன் திரும்பியவள் தாயின் கண்ணீர் படிந்த முகத்தைக் கண்டதும் மெல்லத் தாயை நெருங்கிக் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"அழாதீங்கம்மா... அவன் குளிச்சிட்டு வந்ததும் சாப்பாடு கொடுங்க. நான் வேலைக்குப் போயிட்டு வர்றேன்."

"திலோம்மா..."

"என்னம்மா?"

"நாளைக்குத் தம்பியை... எங்கே கூட்டிட்டுப் போகப் போறே?" - தாயின் கேள்விக்குச் சில நொடிகள் பதில் சொல்ல இயலாமல் நின்றாள்.

"திலோ! ஏன் பதில் சொல்ல மாட்டேங்கிறே?"

"டா... டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போகணும்மா..."

"எந்த டாக்டர்கிட்ட?"

"ஒரு மனநல மருத்துவர்கிட்ட..."

"ஐயோ! இது என்ன கொடுமை?"

"அம்மா ப்ளீஸ்! சத்தம் போடாதீங்க. விஷ்ணு காதில விழுந்திடப் போகுது."

"எம் புள்ளையை ஏன் அங்கெல்லாம் கூட்டிட்டுப் போற? அவன் ஒண்ணும் பைத்தியக்காரனில்லை. ஏதோ மன வருத்தத்தில இருக்கான். கொஞ்ச நாள்ல தானா சரியாயிடுவான்."

"இல்லம்மா. எதையும் முதல்லயே கவனிச்சிட்டா பயமில்லை. காலம் கடந்து போச்சுன்னா தம்பியோட நிலைமை..."

"வேண்டாம். என் பிள்ளைக்கு எதுவும் ஆகாது ஒண்ணும் ஆகாது."

"நானும் அப்படித்தான்ம்மா நினைக்கிறேன். சும்மா நாள் கூட்டிட்டுப் போனாப் போதும். அவங்க பேசற விதம் பேசி அவன் மனக் கலக்கத்தைச் சரி பண்ணிடுவாங்க. அதுக்காகத்தான் கூட்டிட்டுப் போறேன்."

"வேண்டாம்மா... ஏற்கெனவே என் புள்ளைக்கு நிறையப் பட்டப் பெயர் கிடைச்சிடுச்சு. இன்னும் இந்த பைத்தியக்காரப் பட்டமும் கிடைக்க வேண்டாம். என் புள்ளை இப்படியே இருந்தாலும் பரவாயில்லை."

"அம்மா!"

"திலோ! உன்கிட்ட ஒண்ணே ஒண்ணு கேட்கிறேன். அதை மட்டும் செய்தா போதும்."

"என்னம்மா செய்யணும்?"

"சாயந்தரம் வரும்போது அப்பாவுக்கு மாத்திரை வாங்கிட்டு வர வேண்டாம்."

"ஏன்?" - முகம் மாறினாள்.

"அந்தப் பணத்துக்கு நாம எல்லாருக்கும் ஒரே மருந்தா வாங்கிட்டு வந்திடுடி..."

"அ...ம்...மா..."

"ஆமாம்மா. நாம இனி வாழ்ந்து என்ன சாதிக்கப் போறோம்? பேசாம மொத்தமாப் போயிடலாம்."

"அம்மா!"



"ஓடியாடி உழைச்ச மனுஷனை இப்படிப் படுக்கையில பார்க்க முடியலையடி. எப்பவும் படிப்பு, விளையாட்டுன்னு துறுதுறுன்னு சுத்திட்டு இருந்த புள்ளை இருட்டு அறையில அடைஞ்சு கிடக்கிறதை என்னால தாங்க முடியலைடி.

"பஞ்சாட்டம் இருக்கிற உன் கையில இப்படிக் காய்ப்பு பிடிச்சு கொப்புளிச்சு வெடிக்கிறதைப் பார்க்கும் போது என் நெஞ்சே வெடிச்சிடும் போல இருக்கும்மா. பெத்தவ நான் இதையெல்லாம் பார்த்து மனம் குமைஞ்சு நிக்கிறேனே...

"இதையெல்லாம் நினைச்சு நினைச்சு என் இதயம் எந்த நேரம் வெடிச்சிடுமோ தெரியலை. உங்களையெல்லாம் அநாதையா விட்டுட்டுப் போக எனக்கு மனசில்லம்மா... அதனாலதான் சொல்றேன். ஏதாவது மருந்து வாங்கிட்டு வந்திடு. மொத்தமா போயிடலாம். நம்மளைக் கொன்ன பாவம் அந்தப் புண்ணியவதிக்கே போய்ச் சேரட்டும்.

"சண்டாளி! இப்படி என் குடும்பத்தையே சிதறடிச்சிட்டாளே. கஷ்டப்பட வேண்டிய வயசா எம்புள்ளைக்கு. கல்யாணமான நாள்ல இருந்து என் புருஷன் ஒரு நாள் கூட நோயில படுத்ததில்லையே... இப்படி மொத்தமா சாகடிச்சிட்டாளே. நான் என்ன பண்ணுவேன்?" - சகுந்தலா விம்மியழ, திலோத்தமாவின் முகமும் மனமும் இறுகியது.

கைகள் தானாய்ச் சென்று தாயின் விழிநீரைத் துடைத்தன. கண்ணீரோடு மகளின் கையைப் பற்றி விரித்துப் பார்த்தாள் சகுந்தலா. தாமரை இதழ் போன்று இருந்த உள்ளங்கையில் ஆங்காங்கே கொப்புளித்து இருந்தது. வெண்டைக்காய் போல நீளமாய் ஒல்லியாய் மென்மையாய் இருந்த விரல்கள் கறுப்படித்திருந்தன.

அதைப் போன்று இன்னும்... பொங்கி அழுதா...

"பேனா பிடிச்சு எழுதின கையா இது...? ஐயோ!"

"அம்மா! இப்ப ஏன் சும்மா அழறீங்க?"

"என்னால முடியலைடி. இதையெல்லாம் கண்... கொண்டு பார்க்க முடியலை."

"பார்க்கலாம்மா... கொஞ்ச நாள் பொறுத்து... பார்ப்போம். போராடிப் பார்ப்போம். முடியலைன்னா நீங்க... சொன்ன முடிவைச் சந்தோஷமா ஏத்துப்போம்."

"திலோ!"

"அப்பாவையும் தம்பியையும் பார்த்துக்கங்க. நான் கிளம்புறேன்."

"சாப்பிட்டுப் போம்மா."

"பசியில்லம்மா... ஏற்கெனவே லேட்டாகிப் போச்சு. நான் வர்றேன்..." - என்றவாறு கைப்பையை எடுத்து... கொண்டு வாசலில் கிடந்த செருப்பை மாட்டிக் கொண்... வெளியேறுகையில் எதிரே வீட்டுக்கார அம்மாள் வந்... கொண்டிருந்தாள்.

"என்னம்மா! கம்பெனிக்குப் புறப்பட்டியா?"

"ஆமாம்மா..."

"அட்வான்ஸ் பணத்தில இன்னும் மூவாயிர... தரணுமே... எப்போ தர்ற?"

"அம்மாகிட்ட கொடுத்திருக்கேன். வாங்கிக்கங்கம்மா..."

"வேலைக்குச் சேர்ந்து ஒரு மாசம் ஆகலையே... அதுக்குள்ளாற சம்பளம் வாங்கிட்டியா?"



"இல்லம்மா... அப்பாவுக்கு மருத்துவச் செலவுக்கு நகைகளை அடமானம் வைச்சுத்தான் பண்றோம். அதிலதான் உங்களுக்கு அட்வான்ஸ் தர்றோம்."

"சரி. நீ வேலைக்குக் கிளம்பு. நான் அம்மாகிட்ட வாங்கிக்கறேன்."

"ம்..." என்றவாறு நடக்க ஆரம்பித்தாள். வரிசையாய்ப் பதினான்கு குடித்தனங்கள். அவரவர் வீட்டு வாசல் முன்பே அமர்ந்து பாத்திரங்களைக் கழுவிக் கொண்டும், துணிகளைத் துவைத்துக் கொண்டும் இருக்க... கழிவுநீர் குட்டையாய்த் தேங்கி நின்றது. அதில் காலை வைத்து விடாமல் ஒதுங்கி நடந்தாள்.

இரண்டே அறைகள். ஒரு சிறிய அறையைக் குளியல் அறையாகவும், கழிவறையாகவும் பயன்படுத்திக் கொள்ள வீட்டிற்கு இரண்டாயிரம் ரூபாய் அதிகம்தான். ஆனால் அவசரத்திற்கு இதைவிடக் குறைவாய் எந்த வீடும் அமையவில்லை. தாங்கள் குடியிருந்த பழைய வீட்டை ஒப்பிடும்போது இது புறாக்கூண்டுதான்.

அது மிக அருமையான வீடு. அப்பா கல்யாணமான புதிதில் குடியேறிய வீடு. வெறும் இருநூறு ரூபாய் வாடகை என்பார். அதிலேயே இரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கியபோது வாடகை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆகியிருந்தது.

அந்த வீட்டுக்கு அது ஒன்றும் பெரிய தொகை இல்லை. இதைப் போன்ற ஒண்டுக் குடித்தனம் அல்ல அது. விஸ்தாரமான காற்றோட்டமான தனி வீடு. ஓட்டு வீடுதான் என்றாலும் வீட்டைச் சுற்றி மதில் சுவர் கட்டப்பட்டுப்

பாதுகாப்பாய் நிற்கும். முன் பக்க முற்றத்தில் அம்மா பலவிதப் பூச்செடிகளை வளர்த்து வைத்திருந்தாள்.

பூப் பூக்காத நாளே கிடையாது. சாமி படங்களுக்கோ தனக்கோ அம்மாவுக்கோ வெளியே காசு கொடுத்துப் பூ வாங்கிய நாளே கிடையாது. அதிலும் பலவித நிறங்களில் ஏழு ரோஜாச் செடிகள் தொட்டியோடு மதில் சுவரின் மீது வைக்கப்பட்டிருக்கும். போவோர் வருவோர் யார் கேட்டாலும் பறித்துக் கொடுத்து விடுவாள் அம்மா.

அந்த வீட்டை விட்டு வெளியேறும்போது அம்மா அழுத அழுகையைத் தன் வாழ்நாள் முழுக்க மறக்க முடியாது. இரண்டே நாளில் காலி செய்ய வேண்டும் என்று விரட்டியடித்த பிறகு விஷ்ணுவின் நண்பன்தான் தனக்குத் தெரிந்த வீட்டுத் தரகர் மூலம் இந்த வீட்டை ஏற்பாடு செய்து கொடுத்தான்.

அவசரத்திற்கு அம்மா சேர்த்து வைத்த நகைகள்தான் கை கொடுத்தன. "வாடகை ரெண்டாயிரம். பத்து மாத அட்வான்ஸ். சம்மதம்னா இன்னிக்கே கூட வந்திடுங்க. இல்லேன்னா வேற இடம் பாருங்க..." - கறாராய்ச் சொல்லி விட்டாள் வீட்டுக்கார அம்மாள்.

அவசரத்திற்கு இந்த இடம் கிடைத்ததே பெரிது. அதுவும் அப்பா வேலை செய்த கம்பெனி அருகே வீடு கிடைத்ததில் பல மடங்கு ஆறுதல். அதனால் உடனே சம்மதித்துக் குடியேறி விட்டார்கள். வாடகை விஷயத்தில் கறாராய்ப் பேசியபோதும் மற்ற எதிலும் தலையிட்டு ஆயிரம் சட்ட திட்டங்கள் போடவில்லை என்பது ஒருபுறம் நிம்மதியைத் தந்தது.



உடல் நிலை சரியில்லாத தந்தை. மனம் கலங்கிப் போய் நின்ற தம்பி... இவர்களைப் பற்றி யெல்லாம் தோண்டித் துருவவில்லை. விஷ்ணுவும்தான் இப்படி உடைந்து போவான் என்று நினைக்கவில்லையே...

அன்று பிரச்சனை நடந்த தினம் இரவு வரை அவனை வெளியே கொண்டு வர முடியவில்லை. எப்படியோ ஒரு வழியாய் மகளுக்குத் தெரியாமல்... அந்த அம்மாள் போன் செய்து தம்பியின் மீது எந்தத் தவறும் இருக்காது. தன் மகள்தான் அவசரப்பட்டுப் புகார் செய்தாள் என்று கூறியதால் விட்டார்கள். இல்லை யென்றால் நிலைமை இதைவிட மோசமாகி இருக்கும்.

ஆனால் நடந்த கலவரம் தீயாய்ப் பரவி... விஷ்ணுவின் பள்ளி வரை சென்றதைத்தான் இன்னும் நம்ப முடியவில்லை. தானாய்ச் சென்றதோ அன்றி... அதுவும் பிரியங்காவின் செயலோ... வகுப்பாசிரியர் முதல் தலைமை ஆசிரியர் வரை கை விரித்து விட்டனர்.

"எங்க ஸ்கூல் ரொம்பக் கண்டிப்பும் ஒழுக்கமும் நிறைந்தது. இங்கே இவனைச் சேர்த்துக் கொள்ள இயலாது. மற்றவர்களையும் இவன் கெடுத்து விடுவான். ரௌடித்தனம்... கொலை முயற்சி என்பதெல்லாம் சாதாரண விஷயமில்லை. அதனால இவனை வீட்டில வைச்சுக்கங்க...

"எக்ஸாம் மட்டும் எழுத விருப்பம்னா எழுதட்டும். அதுகூட இவனோட ஃபியூச்சரை மனசுல வைச்சித்தான் இந்தச் சலுகை தர்றோம். எங்களால் வேற ஒண்ணும் செய்ய இயலாது!" - என்றதில்தான் சுத்தமாய் உடைந்து போனாள்.

முதலில் தம்பியைச் சகஜ நிலைக்குக் கொண்டு வர வேண்டும். பிறகு மீண்டும் ஒரு முறை தலைமை ஆசிரியரைச் சந்தித்துப் பேசிப் பார்க்க வேண்டும். நன்றாய்ப் படிக்கும் பையன் என்பதால் மனமிரங்கக் கூடும். முயற்சி செய்து பார்க்கலாம்.

கடந்த வாரம் அவனது வகுப்பு ஆசிரியரைப் பார்த்தபோது யாரேனும் தெரிந்தவர்... பெரிய மனிதர்கள் இருந்தால் அவர்களை வைத்துக் கேட்டுப் பார்க்கச் சொன்னார். தனக்கு எந்தப் பெரிய மனிதரைத் தெரியும்? தங்களுக்காகப் பேச யார் வருவார்? அத்தனை செல்வாக்குத் தங்களுக்கு இருக்கிறதா என்ன?

தனக்குள்ளே சிந்தனையில் உழன்று கொண்டே சாலையைக் கடக்க முயல... வெகு அருகே ஒரு இருசக்கர வாகனம் வந்து சடன் பிரேக்கிட்டு நின்றது. தன்மீது மோதியே விட்டது என்ற உணர்வில் கண்களை இறுக மூடிக் கொண்டாள் திலோத்தமா.

"ஏம்மா ரோட்டைக் கிராஸ் பண்ணும்போது பார்த்துப் போக மாட்டியா? கனாக் கண்டுட்டுப் போறியாக்கும்..." - ஒரு ஆட்டோ ஓட்டுநர் திட்டிக் கொண்டே போக... பதட்டமாய்க் கண்களைத் திறந்தாள்.

அந்த இருசக்கர வாகனமும் அதே அதிர்வில் நின்று கொண்டிருக்க... மன்னிப்புக் கோரும் பாவனையோடு நிமிர்ந்தவளின் விழிகள் விரிந்தன.

'இவனா? இவன்... இவன்...' - குழப்பம் தெளிந்தவுடன் ஒரு இறுகிய முகபாவனையோடு விடுவிடுவென நடக்கத் துவங்கினாள்.



## 13

சென்ற இடம் காணேன்
சிந்தை வாடலானேன்
தேடிச் செல்லும் யாரும்
தூது சொல்லக் காணேன்!

**சி**ல விநாடிகளுக்குப் பிறகே திலோத்தமாவின் முகம் நினைவுக்கு வர, புன்னகையோடு பேச முயன்ற அர்ஜுனின் முகம் மாறியது. முகம் கடுக்க அவள் நடக்கத் துவங்கிவிட, தயக்கமாய் அழைத்தான்.

"ஹலோ மேம்! என்னைத் தெரியுதுங்களா?" - அவன் பேசுவது காதில் விழாதது போல் சாலையை நெருங்கி இரு புறமும் பார்வையை வீசினாள். வரிசையாய் வாகனங்கள் வந்து கொண்டே இருக்க, சலிப்பாய் நின்றாள்.

தனது இருசக்கர வாகனத்தை அவளருகே கொண்டு வந்து நிறுத்தினான் அர்ஜுன். "மேம்! என்னை நினைவில்லையா... உங்களுக்கு? நான் அர்ஜுன். அன்னிக்கு எங்க கம்பெனிக்கு வந்திருந்தீங்களே... உங்க ஃபிரண்ட்..."

"என்ன வேணும் உங்களுக்கு?" - வெடுக்கெனக் கேட்டாள் திலோத்தமா.

புன்னகையோடு இருந்தவனின் முகம் லேசாய்ச் சுருங்கியது.

"என்னங்க இது? இவ்ளோ கோபப்படுறீங்க?"

"பின்னே? நடு ரோட்டில வைச்சு ஒரு பொண்ணுகிட்ட என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு?"

"ஸாரி! நான் சும்மா ஒரு ஹெல்ப் பண்ணலா மேன்னு..."

"என்ன? எனக்கு ஹெல்ப் பண்ணப் போறீங்களா? நான் உங்ககிட்ட எந்த உதவியும் கேட்கலையே!"

"இல்லை மேம்! அன்னிக்கு ஏதோ பிராப்ளம்னு சாரைத் தேடி வந்தீங்களே... சார் ஃபாரின் டூர் முடிஞ்சு வந்திட்டார். அதைச் சொல்லலாம்னுதான் கூப்பிட்டேன். தப்பா எடுத்துக்காதீங்க..." - தணிவாய்ச் சொன்னவனைப் பார்த்ததும் தன் கோபத்தைக் குறைத்தாள்.

"இவன் யார்? இவனிடம் போய் ஏன் நம் கோபத்தைக் காட்ட வேண்டும்?"

"மேம்! உங்க பிரச்சனை ஸால்வ் ஆகிடுச்சா?"

"ம்..."

"ஸார் இன்னிக்கு ஆபீஸ்லதான் இருக்கார். சாரைப் பார்க்கணும்னா நீங்க தாராளமா வரலாம்."

"என்ன?"

"ஸாரைப் பார்க்கணும்னா..."

"வேண்டாம் சாமி. அந்த ஆளை ஒரே ஒரு நாள்தான் பார்த்தேன். போதும் போதும்கிற அளவுக்குப் பரிசு கிடைச்சிருக்கு. திரும்பவும் அவரைப் பார்த்து இதுக்கு மேல எதையும் வாங்கிக் கட்டிக்க என்னால முடியாதுப்பா..."

"மேம்! என்ன சொல்றீங்க நீங்க?"

"மிஸ்டர் அர்ஜுன்! என்னோட பிரச்சனையெல்லாம் முடிஞ்சு போச்சு. இனிமே அவரைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அப்படியே அவசியம் ஏற்பட்டாலும் கூட



என் ஆயுளுக்கும் அவரைப் பார்க்க மாட்டேன். போங்க.... இனிமே இப்படி நடு ரோட்டில போறவளைக் கூப்பிட்டுப் பேசற வேலை வைச்சுக்காதீங்க..." - என்றவள் அதற்கு மேலும் நில்லாமல் சாலையைக் கடந்து சென்றாள்.

அவள் சென்ற பிறகும்கூட... தன் வண்டியைக் கிளப்பாமல் நின்று கொண்டே இருந்தான் அர்ஜுன். இந்தப் பெண் ஏன் இவ்வளவு கோபமாய்ப் பேசி விட்டுப் போகிறாள்? கோபம் என் மீதா? ரஞ்சித் மீதா? ஆயுசு முழுக்கப் பார்க்க விரும்பாத அளவுக்கு சார் மீது அப்படி என்ன கோபம்?

குழப்பமாய் அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டே நின்றான். சாலையைக் கடந்தவள் திரும்பியும் பாராமல் எதிர் வரிசையில் வரிசையாய் இருந்த கடைகளில் ஒன்றின் உள்ளே சென்றுவிட... அர்ஜுன் தனது வாகனத்தை உசுப்பினான்.

அந்தப் பெண்ணின் முகமும் வார்த்தைகளும் மனதிற்குள் உழன்று கொண்டே இருக்க, அலுவலகத்தை அடைந்து அதே குழப்பத்தோடு ரஞ்சித்குமாரின் அறையை அடைய, அவனுக்கு முன்பாய் வந்து அமர்ந்திருந்தான் ரஞ்சித்குமார்.

"குட் மார்னிங் ஸார்."

"மார்னிங். ஏன் அர்ஜுன் லேட்? டைம் என்ன தெரியுமா?"

"ஸாரி ஸார்."

"இட்ஸ் ஓ.கே. நம்ம க்ளையண்ட்ஸ் மீட்டிங் ரிப்போர்ட் எடுத்திட்டு வா."

"ஸார்!"

"என்ன?"

"நீங்க லண்டன் போயிருந்தபோது உங்களைத் தேடி ரெண்டு பொண்ணுங்க வந்தாங்கன்னு சொன்னேனே..." - அர்ஜுன் சொல்ல, சட்டென நிமிர்ந்தான் ரஞ்சித்.

"ஆமா."

"அதுல ஒரு பொண்ணை இன்னிக்குப் பார்த்தேன் ஸார்..." - யோசனையாய் அவன் சொல்ல, இருக்கையை விட்டு எழுந்து விட்டான் ரஞ்சித்.

"அர்ஜுன்! ஆர் யூ ஷ்யூர்? நீ பார்த்தது அந்தப் பொண்ணுதானா?"

"ஆமா ஸார். எனக்கு நல்லா நினைவிருக்கு. நான் கூட பேசினேனே..."

"இஸிட் எப்போ? எங்கே?"

"இப்போ கொஞ்சம் முன்னால.... ஆபீஸ் வர்ற வழியிலதான்..."

"எங்கே? எந்த இடத்தில பார்த்தே? சீக்கிரமா ஞாபகப்படுத்திச் சொல்லு..." - ரஞ்சித்குமாரின் பதட்டம் இன்னும் குழப்பத்தை அதிகமாக்கியது.

"ஸார்!"

"சொல்லு அர்ஜுன்! ரெண்டு பேர் வந்தாங்களே... அதுல எந்தப் பொண்ணைப் பார்த்தே?"

"ஒரு பொண்ணு படபடன்னு பேசிச்சு ஸார். இன்னொரு பொண்ணு எதுவுமே பேசாம தலையைக்



குனிஞ்சிட்டே... கண்ல கண்ணீரோட இருந்தது ஸார். பேர் கூட..."

"திலோத்தமா!"

"ம்... இருக்கலாம் ஸார்! அவங்க ஃப்ரெண்ட் திலோன்னுதான் கூப்பிட்டாங்க."

"நீ பார்த்தியா? அது அவதானா?"

"ஆமா ஸார். ரோட்டைக் கிராஸ் பண்ணும்போது வண்டியில மோதப் பார்த்தாங்க."

"ஐயோ! என்னாச்சு?"

"நான் பிரேக் போட்டுட்டேன். அவங்ககிட்ட பேசினேன். ஆனா அவங்க என் மேல ரொம்பக் கோபப்பட்டாங்க...."

"ஏன்? நீ என்ன பேசினே?"

"ஸாரைப் பார்க்கணும்னா வாங்க மேடம். ஸார் ஊரில இருந்து வந்துட்டாங்கன்னு சொன்னேன். அதுக்கு அவங்க..."

"என்ன சொன்னாள்?"

"ரொம்பக் கடுமையா பேசிட்டாங்க ஸார். ஆயுசுக்கும் உங்களைப் பார்க்கவே விரும்பலைன்னு... பார்க்கவே கூடாதுன்னு சொன்னாங்க..."

"அப்படியா சொன்னாள்?"

"யெஸ் ஸார். அதே கோபத்தோட ரோட்டைக் கிராஸ் பண்ணிப் போயிட்டாங்க."

"அர்ஜுன்! அவளை எந்த இடத்தில பார்த்தே?"

"தாம்பரத்தில இருந்து பல்லாவரம் வர்ற வழியில பார்த்தேன் ஸார்."

"எப்படி இருந்தா அவ? ஐ மீன்... ஷாப்பிங் போகிற மாதிரி... இல்ல படிக்கப் போகிற மாதிரி கையில புக்ஸ், டை ஏதாவது வைச்சிருந்தாளா?"

"இல்லை ஸார்! ஒரு ஹேண்ட் பேக் மட்டும் தோள்ல போட்டிருந்தாங்க. பார்த்தா வேலைக்குப் போற மாதிரி இருந்தது."

"என்ன?"

"ஆமா ஸார். நான் பார்த்திட்டு இருக்கும்போதே ரோட்டைக் கிராஸ் பண்ணி எதிர் வரிசையில் இருந்த பிளாஸ்டிக் கம்பெனிக்குள்ள போனாங்க."

"இளிட். நீ நல்லாப் பார்த்தியா?"

"பார்த்தேன் ஸார். அது ஒரு பிளாஸ்டிக் கம்பெனிதான். பேர் கூடப் பார்த்தேனே... ரொம்ப பழைய போர்டு தொங்கிச்சே... என்ன பேர்... யெஸ்! ஆனந்தா பிளாஸ்டிக் கம்பெனி. ஆமா... அந்தப் பெயர்தான்."

"அர்ஜுன்! என்ன பேர் சொன்னே? ஆனந்தா பிளாஸ்டிக் கம்பெனியா?"

"ஆமா ஸார்."

"ஹய்யோ... அது அப்பாவோட ஃபிரண்ட் ஜெயபால் ஸாரோட கம்பெனி."

"அங்கேதான் ஸார் போனாங்க..." - அர்ஜுன் உறுதியாய்க் கூற... ரஞ்சித்குமார் உற்சாகமாய் அவனைக் கட்டிக் கொண்டான்.



"தேங்க் யூ அர்ஜுன். நீ எனக்கு எவ்வளவு பெரிய ஹெல்ப் பண்ணியிருக்க தெரியுமா! நான் நாலு நாளா தேடிட்டு இருக்கேன். தேங்க் யூ ஸோ மச். அர்ஜுன்! நான் உடனே கிளம்புறேன்."

"எங்கே ஸார்?"

"ஆனந்தா பிளாஸ்டிக் கம்பெனிக்கு..."

"ஸார்! இன்னிக்கு ஸ்டாஃப் மீட்டிங் இருக்கு."

"எதுவா இருந்தாலும் நீயே பார்த்துக்கோ. நான் கிளம்புறேன். அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் அர்ஜுன்!"

"சொல்லுங்க ஸார்."

"நீ திலோத்தமாவைப் பார்த்தது... நான் இப்போ புறப்பட்டுப் போறது... எல்லாம் எனக்கும் உனக்கும் மட்டும்தான் தெரியணும்."

"ஸார்!"

"அப்பாவோ பிரியாவோ வந்து கேட்டாலோ போன் பண்ணினாலோ சொல்லிடாதே."

"ஓ.கே. ஸார்!"

"நான் வர்றேன்... அர்ஜுன்!" - என்றவன் திலோத்தமாவைக் காணும் ஆவலில் சீறிப் பாய்ந்து புறப்பட்டான். வாசலைத் தாண்டும் முன் எதிரே வந்து நின்றாள் பிரியங்கா.

தங்கையைக் கண்டதும், ஸ்விட்ச் போட்டாற் போல் நின்றான். முகத்தில் தோன்றியிருந்த உற்சாகம் சட்டென மறைந்தது. லேசாய்ப் புன்னகைத்தான்.

"வா... வா... பிரியா! இன்னிக்கு காலேஜ் போகலையா?"

"ஸ்டடி ஹாலிடே விட்டாச்சு அண்ணா..."

"ஓ! அப்போ வீட்டில இருந்து படிக்க வேண்டியது தானே!"

"ஏன்... நான் இங்கே வரக்கூடாதா?" - அண்ணனைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"சேச்சே! யார் சொன்னது? இந்த வெயிலில் ஏன் அலைகிறாய் என்று கேட்டேன்."

"நான் நடந்து வரவில்லை அண்ணா... காரில்தான் வந்தேன்."

"சரி. வா. உட்கார்!" - உள்ளே எழுந்த ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தங்கைக்கு இருக்கையைக் காட்டி விட்டுத் தானும் அமர்ந்தான்.

"எங்கேயோ வெளியே கிளம்பிட்டு இருந்தியே அண்ணா... எங்கே?"

"அது... ஒரு முக்கியமான வேலை விஷயமா... போகலாம்னு கிளம்பினேன்."

"அப்படியென்ன முக்கியமான வேலை?"

"சும்மா... கம்பெனியோட ஆர்டர் விஷயமா ஒருத்தரைப் பார்த்துப் பேசணும்..."

"என்னை விட முக்கியமான வேலையா அது?"

"இல்லம்மா. உன்னை விட வேற எதுவும் முக்கியமானது இல்லை. சொல்லு... என்ன விஷயமா வந்திருக்கே?"



"நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும் அண்ணா... முக்கியமான முடிவுகள் எடுக்கணும்."

ரஞ்சித்குமார் துணுக்குற்றான். 'எதைப் பற்றிப் பேசப் போகிறாள்? நிச்சயமாய் சுஹாசினி மேட்டராய்த்தான் இருக்கும். அதற்குப் பயந்துதான் இந்த நான்கு நாட்களாய்ப் பிரியாவை நேருக்கு நேராய்ச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தோம். இன்று வசமாய் மாட்டிக் கொண்டோமே...'

"என்ன அண்ணா! நான் பேசுறது உன் காதில் விழுதா... இல்லையா?"

"ம்... சொல்லு. என்ன பேசணும்?" - என்றதும் பிரியங்கா அர்ஜுனை நிமிர்ந்து பார்த்தாள்.

"படிச்சவன்தானே நீ?"

"மேம்...!"

"பெர்ஸனலா பேசணும்னு சொல்லிட்டு இருக்கேன். நீ மரம் மாதிரி நின்னுட்டு இருக்கே. கோ மேன்..." - என்றாள் சுள்ளென. அர்ஜுன் முகம் மாறிவிட, ரஞ்சித் அதட்டினான்.

"பிரியா! மரியாதையாய்ப் பேசு."

"அண்ணா..."

"அர்ஜுன் உன்னை விடப் பெரியவன். உன்னை விட அதிகம் படித்தவன். என்னோட பி.ஏ.'

"அதுக்கு?"

"அவனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுங்கிறேன். அர்ஜுன்! நீ ஒண்ணு செய்றியா?"

"சொல்லுங்க ஸார்!"

"நான் போக வேண்டிய இடத்துக்கு நீ போ. தேடி போற ஆள் அங்கேதான் இருக்குதான்னு பார். இருந்தா உடனே எனக்குப் போன் பண்ணு... இல்லேன்னா கம்பெனியோட ஓனர்கிட்ட கொஞ்சம் விசாரி. ஃபுல் டீட்டெயில்ஸ் கிடைக்காட்டி கூட பரவாயில்லை. அட்ரஸோ ஃபோன் நம்பரோ கிடைக்குதான்னு பாரு..."

"ஓ.கே. ஸார்."

"மேட்டர் கொஞ்சம் அர்ஜெண்ட் அர்ஜுன்... புரியுதா" - அழுத்தமாய்க் கேட்டான்.

"புரியுது ஸார். நீங்க கேட்ட தகவல்களோட வர்றேன் ஸார்."

"தேங்க்ஸ் அர்ஜுன். இந்தா... என் காரை எடுத்திட்டு போ!" - என்றவாறு கார் சாவியை நீட்டினான்.

"இருக்கட்டும் ஸார். என்னோட பைக்லேயே போயிட்டு வந்திடுறேன்."

"வெயில் கொளுத்துது அர்ஜுன். சும்மா கார்லேயே போ. கொஞ்சம் சீக்கிரமா போ. மிஸ் பண்ணிடாதே."

"ஓ.கே. ஸார்!" - என்றவாறு சாவியை வாங்கிக் கொண்டு வெளியேறியதும், கோபமாய் அண்ணனை ஏறிட்டாள்.

"அண்ணா! இதெல்லாம் ரொம்ப ஓவர்."

"எது?"

"ஒரு வேலைக்காரனுக்குக் காரா? ஏன் வெயில் பட்டா உருகிடுவானா அவன்?"



அவன் வயசுக்காவது மரியாதை கொடு."

"பிரியா! எல்லாரையும் அலட்சியமா பேசக் கூடாது.

"வொய்? நான் ஏன் மரியாதை கொடுக்கணும்? அவன் எவ்வளவு பெரிய ஆளா இருந்தாலும் நம்ம கிட்ட கை நீட்டிச் சம்பளம் வாங்குற ஒரு வேலைக்காரன்தான். அதை நீ மறந்திடாதே."

"இதைச் சொல்றதுக்குத்தான் வந்தியா?"

"அண்ணா! வர வர உன் பேச்சில... நடத்தையில ஒரு மாற்றம் தெரியுது."

"என்ன?" - லேசாய்த் திடுக்கிட்டான். "மாற்றமா? என்ன மாற்றம்?"

"என்னைப் பார்க்காம என்கிட்ட பேசாம ஒரு நாளாவது தூங்கியிருக்கியா நீ...!"

"இ... இல்லை."

"ஆனா... இந்த வீக் ஃபுல்லா நீ என்னைப் பார்க்கவே இல்லை. ஒரே வீட்டிலதானே இருக்கோம். தினமும் நான் தூங்கின பிறகுதான் வர்ற. நான் எழுந்துக்குறதுக்குள்ள கிளம்பிப் போயிடுற. அப்படி என்னதான் உனக்கு என் மேல வெறுப்பு?"

"சேச்சே... வெறுப்பா? உன் மேலயா? பத்து நாளா கவனிக்காத வேலையெல்லாம் பெண்டிங்காகிக் கிடக்கு தும்மா. அதான்..."

"பொய். இங்கே உள்ள எல்லா வேலையும் நான் பார்த்துக்கிட்டேன். நீ ஆபீஸ்லேயும் இல்லை. நான் கேட்கும்

போதெல்லாம் நீ வெளியேதான் சுத்திட்டு இருக்க. சொல்லுண்ணா.. எனக்குத் தெரியாம நீ என்னதான் பண்றே?"

"நான் எதுவும் பண்ணலை. ஆன்னா நீதான் எனக்குத் தெரியாம என்னவெல்லாமோ பண்ணிட்டு இருக்க..." - ஒரு மாதிரியான குரலில் ரஞ்சித் சொல்ல; முகம் மாறினாள் பிரியங்கா.

"எ... என்ன? நா... நான் என்ன பண்ணினேன்?" - கேட்கும்போதே உடல் தடுமாறியது. திலோத்தமா மேட்டர் தெரிந்திருக்குமோ... அதைத்தான் சொல்கிறானோ!

தங்கையின் முகத்தில் தெரிந்த மாற்றங்களைத் துல்லியமாக உணர்ந்து கொண்டான் ரஞ்சித்.

"என்னை எதுக்காக லண்டன் அனுப்பினே?"

"அ... அது... சுஹாசினி உன்னை ரொம்ப விரும்புறா. அதோட கல்யாணம் கூடப் பேசி முடிச்சாச்சு. கொஞ்ச நாள் அவகூடப் பேசிப் பழகினா உங்க கல்யாண வாழ்க்கை சந்தோஷமா இருக்குமேன்னு அனுப்பினேன்."

"நான் உன்கிட்ட கேட்டேனா? யாரைக் கேட்டு இதெல்லாம் செய்கிறாய்?"

"ஏன்? நான் செய்யக் கூடாதா? எனக்கந்த உரிமை இல்லையா?"

"இருக்கு. ஆனா கல்யாணம் பண்ணிக்கிற எண்ணம் எனக்கில்லை. அதுவும் அவளைக் கட்டிக் கொள்ளச் சுத்தமாய் விருப்பம் இல்லை."

"ஏன்?"



"இதென்ன கேள்வி? வேண்டாம்னா வேண்டாம். அதை விடு. நீ என்னவோ பேசணும்னு சொன்னியே... அதைச் சொல்லு."

"நான் பேச வந்ததே இதைப் பத்தித்தான். சுஹா எனக்கு போன் பண்ணினா..."

"என்னவாம்?"

"நெக்ஸ்ட் வீக் அவ இங்கே வர்றாளாம். அதுக்குள்ள உன்னோட சம்மதத்தை வாங்கி வைக்கச் சொன்னாள்."

"நான்தான் என்னோட முடிவைத் தெளிவா அவகிட்ட சொல்லிட்டேனே..."

"என்ன சொல்லிட்டு வந்தே?"

"நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லைன்னு சொன்னேன்."

"ஏண்ணா?"

"ஏன்னா எனக்கு அதில எல்லாம் ஆர்வமோ விருப்பமோ கிடையாது."

"வேற ஏதோ காரணமும் சொன்னாயாமே...."

"என்ன?"

"என்னைக் காரணம் காட்டினாயாமே... நான் திருமணம் ஆகாமல் இருப்பதனால்தான் நீ திருமணம் வேண்டாம் என்கிறாயா?"

ரஞ்சித் தடுமாறினான். "ஆ... ஆமாம்."

"அதுக்கும் அவளே ஒரு ஏற்பாடு செய்திருக்கிறாளாம்."

"எ... என்ன?"

"நெக்ஸ்ட் வீக் வர்றான்னு சொன்னேனே... அவ மட்டும் வரலையாம்."

"பின்னே?"

"கூடவே ஒரு அழகான மாப்பிள்ளையையும் கூட்டிட்டு வர்றாளாம்..." - என்றதும் ரஞ்சித்தின் முகம் மலர்ந்தது.

"ரொம்ப சந்தோஷம். எப்படியோ என்னை விட்டால் போதும். அவ டேஸ்ட்டுக்கு ஏத்த மாதிரி அவளே செலக்ட் பண்ணிக்கிட்டாளா... சந்தோஷம்."

"அவசரப்படாதே அண்ணா! அவ கூட்டிட்டு வர்ற மாப்பிள்ளை எனக்கு."

"எ... என்ன?" சடாரென எழுந்தான். முகம் உஷ்ணமானது.

"என்ன சொல்றே பிரியா?"

"சுஹாதான் போன் பண்ணிச் சொன்னாள். எனக்கேத்த மாதிரி ஒரு மாப்..."

"ஷட் அப் பிரியா! என் தங்கைக்கு மாப்பிள்ளை பார்க்க அவ யார்?"

"எனக்கு அண்ணியாகப் போறவங்க அண்ணா. நம்ம வீட்டுல வந்து வாழப் போறவங்க..."

"நோ! நீ சொல்ற எதுவும் நடக்காது."

"எதுவும்னா...?"

"எல்லாம்தான். அவ உனக்கு மாப்பிள்ளை பார்க்கவும் வேண்டாம். எனக்கு மனைவியாகவும் வர வேண்டாம்."

"ஏன் அண்ணா?"



"என்ன... ஏன்? உனக்கு நாங்கள்லாம் இருக்கோம்."

"அப்போ நீங்களே பாருங்க..." - தங்கையின் வார்த்தையில் திடுக்கிட்டான். உறைந்து போன பார்வையோடு தங்கையைப் பார்த்தான்.

"எ...ன்ன?"

"அவங்க பார்த்த மாப்பிள்ளை வேண்டாம்னா... நீயோ... அப்பாவோ பாருங்க. எனக்கு ஒண்ணும் அப்ஜெக்ஷன் இல்லை."

"பி...ரி...யா..."

"அண்ணா! கல்யாணம் பண்ணிக்கணும்னு இது வரைக்கும் எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. ஆனா நான்தான் உன் கல்யாணத்துக்குத் தடையா இருக்கிறதா உனக்குத் தோணினா... எனக்குத் தாராளமா மாப்பிள்ளை பார். நாளைக்கே என்றாலும் நான் ரெடி."

"நோ... நோ... இது... இந்தப் பேச்சே வேண்டாம்."

"ஏன்ணா...? ஏன் இப்படிப் பதறுறே?"

"இப்பக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? முதல்ல படிப்பு முடியட்டும். பிறகு எம்.ஃபில். பண்ணணும்னு சொன்னியே...."

"சொன்னேன்தான். ஆனா படிச்சிட்டு நான் என்ன வேலைக்கா போகப் போறேன்?"

"வேலைக்குப் போனாத்தான் படிக்கணுமா? அறிவை வளர்த்துக்க எவ்வளவு வேணும்னாலும் படிக்கலாம். பிரியா... நீ அந்த சுஹாகிட்ட பேச்சு வெச்சுக்காதே. அவ குணம் உனக்கும் வந்திடும்..." - படபடப்பாகவே ரஞ்சித்

சொல்ல. அண்ணனை உற்றுப் பார்த்தாள் பிரியங்கா. உடம்பிற்குள் ஏதோ செய்வது போல் இருந்தது.

"அண்ணா! ஏன் இவ்வளவு பதறுறே... இப்ப உனக்கு என்ன பிரச்சனை?"

"ஒ... ஒன்னுமில்லையே...!"

"இல்லை. எதுவோ இருக்கு. கொஞ்ச நாளாவே எனக்கும் சந்தேகம்தான்."

"எ... என்ன... சந்தேகம்?"

"வழக்கமா பொண்ணுங்க படிக்க ஆசைப்பட்டாலும்... வீட்டில பெத்தவங்க... படிச்சது போதும். முதல்ல கல்யாணத்தை முடிச்சிடுவோம்னு சொல்வாங்கள்ல..."

"ஆ.. ஆமா."

"ஆனா நம்ம வீட்டில நீயோ... அப்பாவோ இதுவரை அப்படி ஒரு வார்த்தை சொன்னதில்லை. ஏண்ணா?"

"பிரியா! கல்யாணம் எப்ப வேணா பண்ணிக்கலாம். ஆனா படிப்பு அப்படி இல்லை..."

"நீ தப்பாச் சொல்றே அண்ணா. படிக்கிறது அறுபது எழுபது வயசுலகூடப் படிக்கலாம். ஆனா கல்யாணம் இளமையோட இருக்கும்போதே பண்ணிக்கணும்."

"பி...ரியா!"

"ஆமாண்ணா... இந்த மாசத்தோட எனக்குப் படிப்பு முடியுது. நீயே எனக்கேத்த மாப்பிள்ளையாப் பாரு. உனக்கு ஆல்ரெடி பொண்ணு தயாரா இருக்கு. நம்ம ரெண்டு பேருக்கும் ஒரே முகூர்த்தத்தில கல்யாணம் பண்ணிடலாம். என்ன சொல்றே?"



"நோ... இல்லை. வேண்டாம். எனக்குக் கல்யாணம் வேண்டாம்."

"அப்போ எனக்கு மாப்பிள்ளை பார். நான்..."

"வாயை மூடு. கல்யாணம் கல்யாணம்ங்கிறியே... கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க எல்லாம் சந்தோஷமா வாழுறாங்களா? எத்தனை பேர் கண்ணீரோடேயும் துயரத்திலேயும் காலத்தைக் கழிக்கிறாங்கன்னு தெரியுமா உனக்கு?" - ரஞ்சித் கோபமாய்ச் சீறி விழ, பிரியங்காவின் இதயக் கூட்டிற்குள் ஏதோ அடைத்தது. மூச்சு விடத் திணறினாள்.

"அண்ணா..."

"இதோ பார் பிரியா. ஒழுங்கா படிப்பை மட்டும் கவனி. இந்தக் கல்யாணம் காட்சி யெல்லாம் நமக்குத் தேவையில்லை. எல்லாம் பிறகு பார்க்கலாம். இதைப் பத்திப் பேசி என் கோபத்தைக் கிளறாதே. போ... வீட்டில போய்ப் படி..." - தங்கையின் முகத்தைப் பாராமலே ரஞ்சித் பேசிக் கொண்டிருக்க... பிரியங்காவிடம் பதில் இல்லை.

மூச்சு விட முடியாமல் வாயைத் திறந்து மூச்சுக்குப் போராடிக் கொண்டிருந்தாள். அதைக் கவனியாமல் வேறு பக்கமாய்ப் பார்த்துக் கொண்டே பேசினான்.

"என்னடா இது? அண்ணனே இப்படிப் பேசுறான்னு நினைக்காதே. எல்லாம் உன் நல்லதுக்குத்தான் சொல்றேன். கொஞ்ச நாள் போனா உனக்கே புரியும். சரியா? நீ இந்த மாதிரியெல்லாம் ஒரு நாளும் பேச மாட்டியேம்மா...

"இப்ப மட்டும் ஏன் இந்த எண்ணம் வந்தது? முதல்ல அந்த சுஹாசினியோட ஃபிரண்ட்ஷிப்பைக் கட் பண்ணு.

அவ சரியில்லை. அவதான் உன்னை இப்படியெல்லாம் பேச வெச்சிருக்கா. இனிமே அவ ஃபோன் பண்ணினா பேசாதே.

"பிரியா! உனக்கு இன்னும் வயசு இருக்கும்மா. மொதல்ல படி. எவ்வளவு வேணுமோ அவ்வளவு படி. மத்ததெல்லாம் நடக்கும்போது நடக்கும். சரியாம்மா... என்னடா நான் பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன். நீ ஒண்ணுமே பேசாம இருக்க?" - என்றவாறு திரும்பியவனின் முகம் அதிர்ந்தது.

டேபிளின் மீது தலை கவிழ்ந்து படுத்திருந்தாள் பிரியங்கா. துளியும் அசைவில்லை. அதிர்ச்சி விலகிவிட, மெல்லிய புன்னகையோடு தங்கையை நெருங்கினான் ரஞ்சித்குமார்.

"என்ன... கோபமா? அம்மணிக்குக் கோபம் வந்ததும் கவிழ்ந்து படுத்திடுவீங்களே... அம்மணி! இது ஒண்ணும் நம்ம வீடு இல்லை... எழுந்திருங்க."

பிரியங்கா அசையாமல் படுத்திருந்தாள்.

"என்ன? அவ்வளவு கோபமா? அண்ணன் அப்படி என்ன சொல்லிட்டேன் பிரியாம்மா... எழுந்திருடா..." - என்றவாறே தோளைத் தொட்டான். இப்போதும் அவளிடம் எந்த அசைவும் இல்லாமல் போகவே லேசாய் முகம் மாறினான்.

"பிரியாம்மா! இது என்ன விளையாட்டு? எழுந்திருடா. அண்ணனைப் பாரு.... பிரியா!" - என்றவாறே தங்கையின் தலையைப் பற்றி நிமிர்த்த, தலை பிடிப்பில்லாமல் துவண்டது.



"பிரியா" - சத்தமாய்க் கூவிக் கொண்டே இரு கரங்களால் தங்கையை நிமிர்த்த உறைந்து போனான் ரஞ்சித்.

கண்கள் செருகியிருக்க, மூக்கிலும் வாயிலும் கோடாய் இரத்தம் வழிந்திருக்க, பிரியங்கா ஆழ்ந்த மயக்கத்திற்குப் போயிருந்தாள்.

"நோ...ஓ...ஓ..." - ரஞ்சித்தின் வீறிடல் வாசல் வரை கேட்க... அப்போதுதான் காரை விட்டிறங்கிய கண்ணபிரானும், தேநீர் இடைவேளைக்காக கேன்டீன் புறப்பட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களும் ஓடி வந்தனர்.

## 14

துள்ளித் திரிந்த பெண்ணொன்று
துயில் கொண்டதேன் இன்று
தொடர்ந்து பேசும் கிளி ஒன்று
பேச மறந்ததேன் இன்று!

கண்ணபிரான் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தார். மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் பிரியங்கா அனுமதிக்கப்பட்டிருக்க, கண்ணில் நீருடன் நின்றிருந்த மகனைத் தோள் பற்றி ஆவேசமாய்த் திருப்பினார்.

"நான் கேட்டுட்டே இருக்கேன். நீ என்னடா கல்லு மாதிரி நின்னுட்டு இருக்க... வாயைத் திறந்து பதில் சொல்லு."

"அ... அப்பா!"

"என் பொண்ணை என்ன பண்ணின?"

"அப்பா..."

"சொல்லுடா. என்ன ஆச்சு அவளுக்கு?"

"அப்பா! நான் எதுவும் பண்ணலைப்பா..."

"அப்புறம் ஏன் இப்படி ஹாஸ்பிடல்ல வந்து படுத்திருக்கிறா என் பொண்ணு..."

"அப்பா! சும்மாதான் பேசிட்டு இருந்தா... திடீர்னு மயங்கி விழுந்திட்டா. வாயில, மூக்கில எல்லாம் பிளட்... அதான்..."

"ரஞ்சித்! என்கிட்ட எதையும் மறைக்காதே. நீ ஏதாவது கோபமா பேசினியா? அவ மனசு நோகுற மாதிரி பேசினியா?"

"அப்பா... அது வந்து... கோபமா பேசலைப்பா. ஆனா..." - தயங்கியவனின் சட்டையைக் கொத்தாய்ப் பற்றினார்.

"தெரியும்டா... உன் முகமே சொல்லுதே. ஏதோ நடந்திருக்கு. சொல்லு... என்ன நடந்தது?"

"அப்பா... ப்ளீஸ்! நான் அவளை ஒண்ணும் சொல்லவில்லை. அவதான் அந்த சுஹாசினியோட பேச்சைக் கேட்டுட்டுக் கல்யாணம் அது... இதுன்னு சொல்லி... என்னைக் கோபப்பட வெச்சா..."

"எ...ன்ன? கல்யாணமா?"

"ஆமா! பிரியாவுக்குக் கல்யாணம் பண்ணணும்ங்கிற எண்ணம் வந்திருக்குப்பா."

"எ...ன்ன?" - கண்ணபிரான் பலமாய் அதிர்ந்தார். உடல் லேசாய்த் தள்ளாடியது. தந்தையின் தோளைப் பற்றி அருகே இருந்த இருக்கையில் அமர வைத்தான்.



"ரஞ்சித்! என்ன... திடீர்னு... பிரியாவுக்குக் கல்யாணத்து மேல..."

"எல்லாம் அந்த சுஹாசினி பண்ணின வேலைப்பா. என்னலயே உனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்துக் கையோட கூட்டிட்டு வர்றேன்னு சொன்னாளாம்."

"யாரு? ராமகிருஷ்ணன் பொண்ணா?"

"ம்... அவதான்."

"அவளுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை? நம்ம பொண்ணுக்கு எது செய்யணும்னு நமக்குத் தெரியாதா?"

"இதைத்தான் நானும் சொன்னேன். உடனே பிரியா அவ பார்க்கிற மாப்பிள்ளை வேண்டாம்னா... நீயோ... அப்பாவோ பாருங்கன்னு சொல்றா. அதான் கொஞ்சம் கடுமையாப் பேசிட்டேன்."

"தப்புடா. நான் உன்கிட்ட எத்தனை தரம் சொல்லியிருக்கேன். அவ என்னதான் கோபமா பேசினாலும் நாம கோபப்படுற மாதிரி நடந்துகிட்டாலும் அவளை ஒரு வார்த்தை சொல்லக் கூடாதுன்னு... மறந்திட்டியா?"

"இல்லைப்பா. நீங்க சொன்ன மாதிரிதான் நடந்திட்டு இருக்கேன். அவ செய்யுறதெல்லாம் தப்புன்னு தெரிஞ்சும் அவகிட்ட ஒரு வார்த்தை கூட தட்டிக் கேட்காமத்தான் இருந்தேன். இப்ப... இப்படி ஆகும்னு நினைக்கலையேப்பா..." - தொண்டை அடைக்கப் பேசிய மகனை ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தார்.

"டாக்டர் என்ன சொல்றார்?"

"எதுவுமே சொல்ல மாட்டேங்கிறாருப்பா. அரை மணிநேரமா வெளியிலதான் நிக்கிறேன். உள்ளே இருந்து யாருமே வெளியே வரலை..."

"ரஞ்சித்! பிரியாவுக்கு... பயப்படுற மாதிரி எதுவும்..."

"இல்லைப்பா. அவளுக்கு ஒண்ணும் ஆகாது. எதுவும் ஆகாது."

"ஆகக் கூடாதுன்னுதானேடா இத்தனை வருஷமா நம்ம மனசுக்குள்ளேயே மறைச்சி வெச்சிப் புழுங்கிட்டு இருக்கோம். இவ்வளவு வருஷம் பொறுமையா இருந்த நீ ஏன்டா இப்படிக் கோபப்பட்டே?

"கோபமான வார்த்தைகளோ ஏமாற்றமோ அதிர்ச்சியோ ஏற்படாம பார்த்துக்கணும்னு எத்தனை வாட்டி படிச்சிப் படிச்சிச் சொன்னார் டாக்டர். இப்படி எல்லாத்தையும் கெடுத்திட்டியே..."

"அப்பா..."

"அவ என் பொண்ணு மட்டுமில்லடா... என் உயிர். அவளுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆச்சின்னா... என் உசிரும் போயிடும்."

"அப்பா! ஏம்ப்பா இப்படிப் பேசுறீங்க? அவளுக்கு எதுவும் ஆகாது. இப்ப எழுந்து வந்துடுவா..."

"வரணும். என் பொண்ணு கண் விழிச்சு என்கிட்ட பேசணும். அப்பத்தான் என்னால நிம்மதியா மூச்சு விட முடியும்." - தந்தையின் கண்கள் கலங்க... தானும் கலங்கினான் ரஞ்சித்குமார்.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்தவன் திடுக்கிட்டான். படிக்கட்டில் ஏறிப் பதட்டமாய்



வந்து கொண்டிருந்தாள் வரலட்சுமி. பதறிப் போய்த் தந்தையைத் தொட்டான் ரஞ்சித்.

"அ...ப்பா... அம்மா வர்றாங்கப்பா..."

"என்ன?" - திடுக்கிட்டு எழுந்தார் கண்ணபிரான். அதற்குள் கணவனையும் மகனையும் கண்டுவிட்ட வரலட்சுமி பரிதவிப்போடு ஓடி வர, கண்ணபிரான் மகனிடம் மெல்லிய குரலில் எச்சரித்தார்.

"ரஞ்சித்! அம்மாவுக்கு எதுவும் தெரியக் கூடாது. தெரிஞ்சா தாங்கிக்க மாட்டா. அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதே."

"ச... சரிப்பா..." - என்றவன் தாயை நெருங்க, மூச்சு வாங்க வந்து நின்றாள்.

கண்களில் பதட்டம்... பயம்... கண்ணீர். பேச இயலாமல் மூச்சு வாங்கியவளை இருக்கையில் அமர வைத்தார் கண்ணபிரான்.

"உட்கார் லட்சுமி. நீ ஏன் இங்கே வந்தே? அதுவும் இத்தனை படிக்கட்டைத் தாண்டி..."

"என்னங்க! நம்ம பொண்ணுக்கு என்னங்க ஆச்சு?"

"உனக்கு யார் சொன்னது?"

"நீங்க சாப்பாட்டுக்கு வரலையேன்னு உங்களுக்குப் போன் பண்ணினேன். ஆபீஸ்ல உள்ள யாரோதான் போனை எடுத்து விஷயத்தைச் சொன்னாங்க. என் பொண்ணுக்கு என்னங்க ஆச்சு? ரஞ்சித்! நீயாவது சொல்லேன்பா..."

"ஓ... ஒண்ணுமில்லைம்மா... லேசா தலை வலிக்குதுன்னு சொன்னா. அதான் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டு வந்தேன்."

"பொய் சொல்லாதேடா. சாதாரணத் தலைவலிக்கா இந்த ரூம்ல வைப்பாங்க. மயங்கி விழுந்ததா சொன்னாங்களே... என்னங்க! தயவு செய்து என்கிட்ட எதையும் மறைக்காதீங்க. எதுவா இருந்தாலும் சொல்லிடுங்க. என் பொண்ணுக்கு என்ன ஆச்சு?" - கணவனைப் பற்றி வரலட்சுமி உலுக்கிக் கொண்டிருக்க, அறைக் கதவு திறக்கப்பட்டது.

நான்கு மருத்துவர்கள் வெளியே வர, சற்று வயதான மருத்துவரை நெருங்கினார் கண்ணபிரான்.

"டாக்டர்! என் பொண்ணு எப்படி இருக்கா? பயப்படுற மாதிரி எதுவும் இல்லையே...? நான் போய்ப் பார்க்கலாமா!" - படபடப்பாய்க் கேட்டவரின் தோளை மெதுவாய்த் தொட்டார் மருத்துவர்.

"ஸாரி மிஸ்டர் கண்ணபிரான்! இனிமேதான் நீங்க தைரியமா இருக்கணும்..." - மருத்துவரின் பதிலில் மூவரும் ஆடிப் போயினர்.

வரலட்சுமி உடல் நடுங்க மருத்துவரை நெருங்கினாள். "டா...க்...டர்! என்ன சொல்றீங்க? என் பொண்ணுக்கு என்ன ஆச்சு?"

"இவங்க யார் கண்ணபிரான்?"

"என்னோட வொய்ஃப் டாக்டர்."



"உங்க வொய்ஃப்கிட்ட எதையும் சொல்லலையா?"

"இல்லை. இதுவரைக்கும் சொல்லலை..."

"ஏன்?"

"ஏன்னா... அவ ஏற்கனவே ரொம்ப பலஹீன மானவள். சொன்னா... அவளால தாங்கிக்க முடியாது."

"அதுக்காக இதையும் மறைச்சே வைக்க முடியாதே!"

"டாக்டர்! என் மகளுக்குத்தான் கெடு வைச்சிட்டான் ஆண்டவன். என் மனைவியாவது கொஞ்ச நாள் இருக்கட்டுமே..." - கண்கள் கலங்கச் சொன்ன கணவனைக் குழப்பமாய் ஏறிட்டாள் வரலட்சுமி.

"என்னங்க! என்ன சொல்றீங்க நீங்க?"

"ஸாரி லட்சுமி! என்னால உன் முகத்தைப் பார்த்து எதையும் சொல்ல முடியாது."

"ஏன்? என்ன ஆச்சு? டாக்டர்! நீங்களாவது சொல்லுங்களேன். என் பொண்ணுக்கு என்ன? சொல்லுங்க டாக்டர்!"

"ஸாரிம்மா... மனசைத் திடப்படுத்திக்குங்க. உங்க பொண்ணு வாழப் போறது இன்னும் கொஞ்ச நாள்தான். எப்ப வேணா மரணம் நேரலாம்."

"என்ன?" - வரலட்சுமியின் காலடியில் பூமி நழுவியது. பிடிப்பு இல்லாமல் தடுமாறியவளை ரஞ்சித்குமார் பற்றிக் கொண்டான்.

"அம்மா... ப்ளீஸ்மா. இப்படி உட்காருங்க."

"டேய்! இவர்... இவர் என்னடா சொல்றாரு? என் பொண்ணு... உன் தங்கை..."

"ஆமாம்மா! நம்ம பிரியாவுக்கு இதயத்தில கோளாறும்மா. சரி பண்ணவே முடியாத பிரச்சனை. இதயத்துக்குப் போற இரத்தநாளங்கள் எல்லாம் செயல் இழந்து போயிட்டு இருக்குதாம்."

"ஐயோ!" - காதை மூடிக் கொண்டாள்.

"அவ இவ்வளவு நாள் நம்மகூட வாழ்ந்ததே மருந்து மாத்திரையோட உதவியாலதாம்மா..."

"எ...ன்ன? மருந்து மாத்திரையா? அப்படி எதுவும் அவ ஒரு நாளும் சாப்பிட்டதில்லையே!"

"சாப்பிடுவாம்மா. உங்களுக்கு மட்டுமில்ல... அவளுக்கே தெரியாம தினமும் மருந்து சாப்பிட்டுத்தான் இருந்தா. நான் அல்லது அப்பாதானே தினமும் அவளுக்குக் காலையிலும் இரவிலும் பால் கொடுப்போம்."

"ஆமா."

"அதில கலந்து கொடுத்திடுவோம்." - கண்ணீருடன் சொன்னவனைப் பார்த்து வியந்தார் மருத்துவர்.

"மிஸ்டர் ரஞ்சித்! என்ன சொல்றீங்க? பேஷண்ட்டுக்கே விஷயம் தெரியாதா?"

"இல்லை டாக்டர். நாங்க அவகிட்ட எதையும் சொல்லலை. மன்த்லி செக்கப்புன்னு எங்க மூணு பேருக்கும் சேர்த்தேதான் செக்-அப் பண்ணிட்டுப் போவோம்."

"மை காட்!"

"என்னாச்சு டாக்டர்?"



"உங்க தங்கைக்கு எல்லாம் தெரியும்னு நினைச்சிட்டு நான்... நிறைய அட்வைஸ் பண்ணினேனே..."

"எ...ன்ன? எப்போ?" - கண்ணபிரான் பதறிப் போனார்.

"கண்ணபிரான்! ட்ரீட் பண்ணும்போதே உங்க பொண்ணுக்கு நினைவு திரும்பிடுச்சி. வழக்கத்தை விட இன்னிக்கு அவங்க ரொம்ப உணர்ச்சி வசப்பட்டிருக்காங்க. அதான் இந்த மயக்கம் வந்திருக்கு. அதனால ஏம்மா உன் உடம்பு இருக்கிற சூழ்நிலையில டென்ஷன் ஆகுற... அப்படி இப்படின்னு நிறையப் பேசினேனே..."

"போச்சு. எல்லாம் போச்சு. பத்து வருஷத்துக்கும் மேலா நானும் என் மகனும் பொத்தி வெச்சிருந்த விஷயம் என் பொண்ணுக்குத் தெரிஞ்சு போச்சே. ஐயோ! அவ அழுது துடிச்சிருப்பாளே..." - துடித்துப் போனார் கண்ணபிரான்.

"இல்லை கண்ணபிரான். உங்க பொண்ணுகிட்ட எந்த அதிர்ச்சியும் தெரியலை. எந்த மறுப்போ பதிலோ அவ சொல்லலை. அதனாலதான் இனிமே எச்சரிக்கையா இருக்கணும். எதுக்கும் கோபப்படக் கூடாது. சத்தமா பேசக் கூடாது.

"கூடுமானவரை யார்கிட்டயும் பேசாம ரெஸ்ட் எடுக்கணும். கொஞ்ச நாள் ஹாஸ்பிடல்லதான் இருக்கணும்னு பொறுமையா சொல்லிட்டு வந்தேன். நான் சொன்னதெல்லாம் தலையாட்டிக் கேட்டுக்கிட்டா."

"ஏன் டாக்டர்? இன்னும் எத்தனை நாள் இருப்பான்னு கூட சொல்லிட்டீங்களா?" - கோபமாய்க் கேட்டான் ரஞ்சித் குமார்.

"என்ன ரஞ்சித்! இப்படிக் கேட்கிறீங்க?"

"பின்னே? உங்களை யார் ஸார் அட்வைஸ் பண்ணச் சொன்னது? அவளுக்கு எதுவும் தெரியக்கூடாது. அவ மனசு எதுக்காகவும் கலங்கக் கூடாதுன்னு நானும் அப்பாவும் அவளை ஒரு வார்த்தைகூட அதட்டினதில்லை தெரியுமா!

"நீங்க என்னன்னா அவகிட்டயே போய் எல்லாத்தையும் சொல்லி... இப்ப அவளை எப்படிச் சமாதானம் பண்றது? என்ன டாக்டர் இது? ஒரு பேஷண்ட் கிட்ட என்ன சொல்றதுன்னு யோசிக்க மாட்டீங்களா?"

"நீங்க என்கிட்ட கோபப்படுறது தப்பு. நியாயமா பார்த்தா நீங்களே இதை பேஷண்ட்கிட்ட சொல்லியிருக்கணும்."

"வாட்?"

"யெஸ். பேஷண்ட்டுக்குத் தன்னோட ஹெல்த் கண்டிஷன் தெரிஞ்சாத்தான் அவங்களும் அதுக்கேத்த மாதிரி நடந்துக்குவாங்க. நீ கொஞ்ச நாள்தான் இருப்பேன்னு ஓபனா சொல்லாம... உன் ஹார்ட்ல கொஞ்சம் ப்ராப்ளம் இருக்கும்மா.

"அதனால இப்படிச் சாப்பிடு. இப்படிச் செய். இதையெல்லாம் செய்யுன்னு சொல்லியிருக்கலாம். அவங்களும் தன் உடம்புமேல கேர் எடுத்துப்பாங்க. நீங்க தப்பு பண்ணிட்டு என்மேல கோபப்பட்டா எப்படி?"

அழுது கொண்டிருந்த வரலட்சுமி நிமிர்ந்தாள். "அவங்க எப்படிச் சொல்வாங்க? பிள்ளையோட நோயைத் தாய்கிட்டயே மறைச்சவங்களாச்சே..."



"லட்சுமி... நான்..."

"பேசாதீங்க. டாக்டர்! இப்ப என் பொண்ணு எப்படியிருக்கா? நான் அவளைப் பார்க்கணும்..."

"இல்லம்மா. இன்னும் ட்ரீட்மெண்ட் பண்ணிட்டுத்தான் இருக்கோம். இன்னும் அவங்களோட சுவாசம் சீராகலை. ஆக்ஸிஜன் கொடுத்திருக்கோம்."

"ஐயோ!"

"ஒண்ணும் பயப்பட வேண்டாம். ரெண்டு நாள் ஐ.சி.யூ.லதான் இருக்கணும். இப்ப யாரும் உள்ளே போய்ப் பார்க்க முடியாது. வெயிட் பண்ணுங்க."

"டாக்டர்! என் பொண்ணு கொஞ்ச நாளாவது என்கூட இருப்பாளா? அவளுக்குப் பிடிச்ச மாதிரி எல்லாம் செய்து சாப்பிடக் கொடுக்கணும். அவ விருப்பப்பட்ட இடங்களுக்குக் கூட்டிட்டுப் போகணும். அவ விரும்புற மாதிரி நடந்துக்கணும். என் பொண்ணு கூடவே இருந்து பார்த்துக்கணும்.

"ஒரு தாயா என் ஆசையைச் சொல்றேன். டாக்டர்! இது ஒண்ணும் பேராசை இல்லையே... என் பொண்ணு ஒரு ரெண்டு வருஷமாவது என்கூட இருப்பாளா?" - கண்ணீரோடு கையேந்திக் கேட்டவளைக் கண்டு வருத்தமாய் முகம் சுருக்கினார்.

"மன்னிச்சிடுங்க. இதுக்கான பதிலை என்னால சொல்ல முடியாது."

"ஏன் டாக்டர்? எதுவா இருந்தாலும் சொல்லுங்க."

"கஷ்டம்மா... என்னதான் மருந்து உதவியோட தள்ளிப் போட்டாலும் மரணம் என்பது தவிர்க்க முடியாதது."

"டாக்டர்!" - ரஞ்சித்குமார் அதிர்ச்சியாய் நிமிர, கண்ணபிரானின் இதயம் சுருக்கென்றது. பற்களைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

"யெஸ் மிஸ்டர் ரஞ்சித்குமார்! உங்க தங்கையோட இதயத்திற்குச் செல்ல வேண்டிய இரத்த ஓட்டம் வெகுவாய்க் குறைஞ்சு போச்சு. அது சுத்தமா நிக்கும்போது..."

"நோ..." - வீறிட்டான் ரஞ்சித்.

"பட்... அதுதான் உண்மை. எத்தனை நாளுன்னு குறிப்பிட்டு என்னால சொல்ல முடியாது. ஆனா... எப்ப வேணா நடக்கலாம்."

"நோ டாக்டர்! என் பொண்ணு எனக்கு வேணும். ஏதாவது செய்யுங்க. எந்த நாட்டுல இருந்து எத்தனை டாக்டர்ஸைக் கூட்டிட்டு வந்தாலும் பரவாயில்லை. என் சொத்து முழுக்க வித்து வைத்தியம் பார்க்கிறேன். என் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்திடுங்க டாக்டர்.

"அவ என் பொண்ணு இல்ல... என் உயிர். அவளைப் பிணக் கோலத்தில் என்னால பார்க்க முடியாது. அவ வேணும் எனக்கு. ப்ளீஸ் டாக்டர்... ஹெல்ப் மீ!" - நெஞ்சைப் பற்றிக் கொண்டு மண்டியிட்டு அமர்ந்தார்.

"அப்பா!" - பதறினான் ரஞ்சித்குமார்.

"என்னங்க!" - கணவனின் அருகே ஓடினாள் வரலட்சுமி.

"லட்சுமி! உன்கிட்ட மறைச்சது தப்புதான். ஆனா என் பொண்ணு இவ்வளவு சீக்கிரம் நம்மை விட்டுப் போயிடுவான்னு நான் நினைக்கலை லட்சுமி... அவ இருக்கணும். நம்ம கூடவே இருக்கணும்."



"இருப்பாங்க. நிச்சயம் இருப்பா. கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்."

"மிஸ்டர் கண்ணபிரான்! ரிலாக்ஸ்... எழுந்திருங்க ப்ளீஸ்!"

"டாக்டர்! என் பொண்ணை எப்படியாவது... காப்பாத்திடுங்க."

"என்ன கண்ணபிரான் நீங்க... எல்லாம் தெரிஞ்சும் ஏன் இப்படி வருத்திக்கிறீங்க? ப்ளீஸ்... அமைதியா இருங்க. ப்ளீஸ்... நான் இன்னும் அரை மணி நேரத்துல வந்து பார்க்கிறேன்..." - என்றவாறு மருத்துவர் விலகி நடக்க, கண்ணபிரானின் இதயம் முழுக்க வலி பரவியது.

உடல் முழுக்கத் தெப்பமாய் வியர்த்து ஊற்றியது. பெருமுயற்சி செய்து தடுமாறி இருக்கையில் அமர்ந்தார். அழுது கொண்டிருந்த தாயைத் தோளோடு அணைத்துக் கொண்டான் ரஞ்சித்.

"அம்மா! நீங்களும் இப்படி உட்காருங்கம்மா.."

"வேண்டாம்ப்பா... நான் என் பொண்ணைப் பார்க்கணும்ப்பா..."

"இப்ப உள்ளே விட மாட்டாங்கம்மா. டாக்டர் வந்ததும் கேட்டுப் பார்க்கலாம்."

"இப்பவே போய்ப் பார்க்கலாம்ப்பா..."

"டாக்டர்ஸ் திட்டுவாங்கம்மா. வேணா ஒண்ணு பண்ணலாம். வாங்க இப்படி..." - என்றவன் தாயை அழைத்துக் கொண்டு கதவை நெருங்கினான். வட்டமாய் இருந்த கண்ணாடியைக் காட்டினான்.

"இது வழியாப் பாருங்கம்மா. லைட்டாத் தெரியும்..." - என்றதும் ஆர்வமாய் அதில் பார்வையைப் பதித்தாள் வரலட்சுமி.

உள்ளே உயர்ந்த படுக்கையில் தன்னைச் சுற்றிலும் ஏராளமான மருத்துவ உபகரணங்களோடு படுத்திருந்தாள் பிரியங்கா. முகம் தெளிவாய்த் தெரியவில்லை. இரண்டு மருத்துவர்களும் நான்கு நர்ஸ்களும் ஏதோ குறிப்பெடுத்துக் கொண்டிருக்க, கண்ணீரோடு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என்னம்மா... தெரியலையா?"

"வேண்டாம்ப்பா... கன்னுக் குட்டி மாதிரி துள்ளித் திரிஞ்ச பெண்ணை இந்தக் கோலத்தில பார்க்க வேண்டாம். ஐயோ! சாக வேண்டிய வயசா இவளுக்கு? அந்த ஆண்டவன் என் உசிரை எடுத்துக்கிட்டு என் பொண்ணு உயிரை மீட்டுக் கொடுக்கட்டுமே...

"என்னங்க! நம்ம பொண்ணைப் பார்த்தீங்களா? இதுக்காகத்தான் அப்பாவும் பிள்ளையும் அவளை ஊட்டி வளர்த்தீங்களா? நம்ம பொண்ணு எழுந்து வந்திடுவாளா? நம்ம வீட்டுல அவ சிரிப்புச் சத்தம் கேட்குமா? அவ காலடி ஓசை கேட்குமா?

"என்னங்க... ஏன் எதுவும் பேசாம உட்கார்ந்திருக்கீங்க. ஏங்க... என்னங்க!" - கணவனை நெருங்கித் தோளைத் தொட்டாள்.

நாற்காலியில் சாய்ந்து சுவரோடு அமர்ந்திருந்த கண்ணபிரானின் தலை சட்டெனத் தொய்ந்து விழ, பதறி அலறினாள் வரலட்சுமி.



"ரஞ்சித்! அப்பாவைப் பாருப்பா..."

"அப்பா!" - ஓடி வந்து தந்தையின் தலையை நிமிர்த்தினான் ரஞ்சித்.

எந்தப் பிடிமானமும் இன்றிக் கண்ணபிரானின் உயிரற்ற உடல் தரையில் சரிந்தது. விழிகள் திறந்தே இருக்க, நம்ப முடியாமல் தந்தையின் அருகே அமர்ந்தான்.

"அ...ப்...பா! அப்பா! என்னாச்சி? ஏன் எதுவும் பேச மாட்டேங்கிறீங்க... அப்பா எழுந்திருங்கப்பா..." - தந்தையைப் பற்றித் தூக்க முயல, அவரது உடல் ஒத்துழையாமல் தொய்ந்து விழுந்தது. தன் தந்தையின் உடல் சடலமாகிப் போனதை உணர்ந்தவன் விக்கித்துப் போனான்.

## 15

ஒவியனும் வரைந்ததில்லையே
உன்னைப் போல் ஓர் அழகு
ஊரில் இல்லையே - என்
காவியத்தின் நாயகி நீ!

தன் முன்னே இருந்த இரும்புத் தகட்டில் கவனமாய்ப் படம் வரைந்து கொண்டிருந்தாள் திலோத்தமா. கண்ணும் கவனமும் வரைந்து கொண்டிருந்த விநாயகர் உருவத்திலேயே நிலைத்திருக்க, அருகில் வந்து நின்றவரைக் கவனிக்கவில்லை.

விநாயகரின் தும்பிக்கையை லாவகமாய் வளைத்துக் கொண்டிருந்தாள். தூரிகையில் வண்ணங்களைத் தொட்டு வெகு கவனமாய் வரைந்து கொண்டிருந்தவளின் முகத்தில்

புதிதாய் உற்சாகம். புதிய தேஜஸ். அருகே நின்று கொண்டிருந்த ஜெயபால் வியந்து போனார்.

இந்தச் சின்னப் பெண்ணிற்குள் இத்தனை திறமையா? எதையும் பாராமலே எத்தனை துல்லியமாய் வரைகிறாள். நெற்றியில் இருக்கும் திருநீறு முதல் பாதத்தில் இருக்கும் விரல் நகங்கள் வரை அத்தனை தெளிவு.

விநாயகரே நேரில் வந்து அமர்ந்திருப்பதைப் போல் பிரமை தோன்றிக் கண்களில் ஒற்றிக் கொள்ளலாம் என்று இருந்தது. அவரின் காலருகே இருந்த மூஞ்சூறு இன்னும் அற்புதமாய் இருந்தது.

"அடடா! என்ன ஒரு தெய்வீக அழகு. பிள்ளையாரே நம்ம கம்பெனிக்கு வந்திட்ட மாதிரி இருக்குதே..." - ஜெயபாலன் மெய்யான பாராட்டில் கலைந்து நிமிர்ந்த திலோத்தமா அவசரமாய் எழுந்தாள்.

"வா... வாங்க ஸார்!"

"உட்காரும்மா... ரொம்ப அருமையா வரைஞ்சிருக்கேம்மா..."

"தேங்க் யூ ஸார்!" - என்றாள் பூரிப்போடு.

"நான்கூட நீ சொன்னப்போ நம்பலை. ஆனா நீ இவ்வளவு அருமையா வரைவேன்னு தெரிஞ்சிருந்தா பெரிய டிஜிட்டல் போர்டே ரெடி பண்ணித் தந்திருப்பேன்."

"அதுக்கென்ன ஸார்! இந்த போர்டை குடோவுனுக்கு வெச்சிருவோம். நீங்க சொல்ற பெரிய போர்டை வரைஞ்சி வெளியே மாட்டிடுவோம். ரோட்டில போகும்போதே நம்ம கம்பெனி பேரு பளிச்சின்னு தெரியட்டும்!" - என்றார் சந்திரபோஸ்.



"போஸ்! நீ மிஷின் ஓட்டாம இங்க என்ன பண்றே?"

"பாப்பா பெயிண்ட் கேட்டது ஸார். அதான் வாங்கிட்டு வந்தேன்."

"கொடு. வரையட்டும். ஏம்மா... இன்னிக்கு முடிஞ்சிடுமா?"

"இன்னும் அரை மணி நேரத்தில முடிஞ்சிடும் ஸார். ஆனா இன்னிக்கு முழுக்க யாரும் தொடக்கூடாது. நல்லா காயணும்."

"சரிம்மா. வரைஞ்சி முடிச்சதும் போஸ்கிட்ட சொல்லி ஆபீஸ் ரூம்ல கொண்டு போய் வெக்கச் சொல்லு."

"ஸார்! நான் சொன்னதை நீங்க கவனிக்கலையா?" - போஸ் குரல் கொடுக்க, தலையாட்டினார் ஜெயபால்.

"கவனிச்சேன்... கவனிச்சேன். முதல்ல இந்தப் போர்டை மாட்டுவோம். கொஞ்ச நாள் கழிச்சு அடுத்த போர்டை வரையலாம். அதுக்கு முன்னே உனக்கு இன்னொரு வேலை இருக்கும்மா..." - என்றார் திலோத்தமாவிடம்.

"என்ன வேலை ஸார்?"

"ஒரு பத்து நாள்ல என் அம்மாவோட நினைவு நாள் வருதும்மா. அன்னிக்கு மாலை போட்டுச் சாமி கும்பிட... என் அம்மாவோட படத்தை வரைஞ்சி தர்றியா?" - எனக் கேட்டதும் பளீரெனப் புன்னகைத்தாள்.

"ஸார்! நிஜமாவா சொல்றீங்க?"

"அட ஆமாம்மா. நீ இவ்வளவு அருமையா வரைவேன்னு தெரியாம போச்சே. நானும் ஒரு மாசமா ஒவ்வொரு ஸ்டுடியோவா அலையுறேன்."

"ஏன் ஸார்?"

"என் அம்மாவோட போட்டோ ரொம்ப பழசும்மா. கருப்பு வெள்ளை போட்டோ. பிரேம் பண்ணினதுதான். ஆனா இந்த வருஷ மழையில எப்படியோ போட்டோக்குள்ள ஈரம் பட்டுடுச்சி போல. பாதி உருவம் மறைஞ்சி போச்சி."

"அச்சோ..."

"இந்த மாசக் கடைசியில அம்மாவுக்கு நினைவு நாள் வருது. அதுக்குள்ள போட்டோவை ரெடி பண்ணிடலாம்னு பார்த்தா இதை ஒன்னுமே பண்ண முடியாது. இதுல உள்ள நெகடிவ் இருந்தா கொண்டு வாங்க. பிரிண்ட் போட்டுத் தர்றோம்னு சொல்றான்."

"நெகடிவ் இல்லையா ஸார்?"

"நெகடிவ்வா! ஏம்மா... இந்தப் படம் எடுத்து எப்படியும் முப்பது வருஷம் இருக்கும். ஏதோ ஒரு போட்டோ கடையில எடுத்திருக்காங்க. அப்பல்லாம் யாரும்மா நெகடிவ்வைக் கொடுத்திருப்பாங்க. அப்படியே கொடுத்திருந்தாலும் அது இத்தனை வருஷமா பத்திரமா இருக்குமா? நான் எங்கேன்னு போய்த் தேடுவேன்?"

"பரவாயில்லை ஸார். நான் வரைஞ்சி தந்திடுறேன்."

"அதாம்மா... உன்கிட்ட பொறுப்பை ஒப்படைக்கிறேன். பாதி உருவம் நனைஞ்சி போச்சி. நீதான் கொஞ்சம் பார்த்து நல்லா வரையணும். எந்தப் போட்டோவையும் பார்க்காமலேயே இவ்வளவு தத்ரூபமா வரைஞ்சிருக்கியே..."

"இது ஒன்னும் பெரிய விஷயமில்லை ஸார். உங்க அம்மா படத்தை நான் வரைஞ்சி தர்றேன்..." - என்றாள் உற்சாகமாய்.



ஜெயபால் புன்னகைத்தார். "உங்க அப்பாவைப் பாராட்டியே ஆகணும்மா..."

"ஸார்!"

"இந்த ஒரு வருமானத்தை வெச்சிட்டு உங்க அப்பா குடும்பத்தையும் நடத்தி உங்களை யெல்லாம் படிக்க வெச்சதே பெரிய விஷயம். அதிலேயும் இப்படி வரையுற படிப்புக்கெல்லாம் அனுப்பியிருக்காரே... எவ்வளவு செலவாகியிருக்கும்?"

திலோத்தமா புன்னகைத்தாள். "இல்லை ஸார். நான் எந்த ட்ராயிங் கிளாசுக்கும் போகலை."

"என்னம்மா சொல்றே?"

"ஆமா ஸார்... சின்ன வயசில பென்சிலால சின்னச் சின்னப் படங்கள் வரைவேன். அது கோழிக் கிறுக்கல் மாதிரிதான் இருக்கும். ஆனா அப்பா அதை ரொம்ப பாராட்டுவாங்க. அம்மாவோ ஒரு படி மேலே போய் நான் வரைஞ்ச படங்களை வீட்டுச் சுவர்ல ஒட்டி வெச்சு அழகு பார்ப்பாங்க.

"அதைப் பார்க்கும்போது அதைவிட அழகா வரையணும்னு தோணும். அப்படி வரையப் பழகினதுதான் இப்போ இந்த அளவுக்கு வளர்ந்திருக்கு. இந்த வளர்ச்சிக்கு முழுக் காரணம் என் பேரண்ட்ஸ்தான்.

"எந்தக் குழந்தைக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை நிச்சயமா இருக்கும். அதை அலட்சியப்படுத்தாம மட்டம் தட்டாம உற்சாகப்படுத்தித் தட்டிக் கொடுத்தா நிச்சயமா எல்லாருமே திறமைசாலியா வருவாங்க. உற்சாகமும் தன்னம்பிக்கையான பேச்சும்தான் ஸார் ஒவ்வொருத்தரையும் உயர்த்தும்."

"உண்மைதாம்மா! ராகவனுக்கு இருந்த பெருந்தன்மை எனக்கு இல்லாமப் போச்சு. எனக்கும் ஒரு புள்ளை இருக்கான். படிக்கிற காலத்திலேயே ஒழுங்காப் படிக்காம எதையாவது எழுதிட்டே இருப்பான். கவிதைன்னு சொல்லுவான். எனக்கு ஒரு இழவும் புரியாது.

"படிக்காம இப்படித் தறுதலையா அலையுறியேன்னு அடிப்பேன். கடைசியில அப்படியே ஆகிட்டான். படிக்கவும் இல்லை. என் தொழிலையும் கவனிக்கிறதில்லை. எப்பப் பாரு, ஊரைச் சுத்திட்டே அலையுறான்.

"அவன் அம்மா வருத்தப்படாத நாளே இல்லைம்மா.. நானும் என் புள்ளையைக் கொஞ்சம் தட்டிக் கொடுத்திருந்தா எம் புள்ளையும் எதையாவது எழுதிச் சாதித்திருப்பானோ...!"

"கண்டிப்பா ஸார்... அவர் கவிதைதானே எழுதினார். சும்மா ஊதாரித்தனமா சுத்தலையே... நீங்க மட்டும் அவரை உற்சாகப்படுத்தி இருந்தா இந்நேரம் உங்க புள்ளை ஒரு வைரமுத்துவா... ஒரு கண்ணதாசனா உருவாகியிருப்பார்."

"என்னவோம்மா... எனக்கு இதெல்லாம் புரியாது. சின்ன வயசுல இருந்து இந்த மிஷின் கூடவே வாழ்ந்து மிஷினாவே ஆகிட்டேன். பெத்ததும் சரியில்லை. என் காலம் வரை இந்தக் கம்பெனி ஓடும். அதுக்குப் பிறகு..."

"நிச்சயமா இந்தக் கம்பெனி நிலைச்சி நிற்கும் ஸார். வருத்தப் படாதீங்க."

"கேட்க ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா... உன் பேச்சு கூட நல்லதாவே இருக்கு. ராகவன் உன்னை ரொம்ப பொறுப்பா வளர்த்திருக்காரும்மா..."



"நன்றி ஸார்!"

"சரிம்மா... என் அம்மா படத்தை எப்போ வரையுறம்மா...?"

"நாளைக்கே கூட வரையத் தொடங்கிடுறேன் ஸார். கொஞ்சம் திங்ஸ் எல்லாம் வாங்கணும்."

சட்டைப் பையில் இருந்து ஐந்நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார்.

"இந்தாம்மா! என்னென்ன பொருள் வேணுமோ வாங்கிக்க. படம் என் வீட்டிலதான் இருக்கு. நீ வீட்டுக்கே வந்து வரைஞ்சி தந்திடுறியா?"

"வீட்டுக்கா?" - தயங்கினாள்.

"பயப்படாதேம்மா... இங்கிருந்து நாலாவது வீடுதான் என் வீடு. என் மனைவி மட்டும்தான் வீட்டில இருப்பா. அதனால எந்தப் பயமும் இல்லாம தாராளமா வரலாம்மா..."

"வந்து... உங்க பையன்.."

"அவனா? அவன் நடுச்சாமத்திலதாம்மா வீட்டுக்கே வருவான். பகல்ல ஒரு நாளும் வீட்டுப் பக்கம் வர மாட்டான். எங்கேதான் போவானோ? நானே அவனைப் பார்த்துப் பல நாளாச்சு..."

"ஸாரி ஸார்!"

"நீ ஏம்மா ஸாரி கேட்கிற? நான் வாங்கி வந்த வரம் அப்படி...!"

"வருத்தப்படாதீங்க ஸார்... எல்லாம் மாறிடும். ஸார்! நான் எங்க வீட்டில கேட்டுட்டு நாளைக்கு வர்றேன் ஸார்."

"சரிம்மா... வர விருப்பம் இல்லைன்னா சொல்லு. நான் படத்தை இங்கே எடுத்திட்டு வந்திடுறேன்."

- "அப்பாகிட்ட கேட்டுட்டுச் சொல்றேன் ஸார்!"

"சரிம்மா... இந்தாம்மா. இதை வெச்சுக்க..." - என்றவாறு இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை நீட்டினார்.

"வேணாம் ஸார். இந்தப் பணத்திலேயே மிச்சம் வரும்."

"இது சாமான் வாங்க இல்லம்மா... உனக்கு..."

"எனக்கா?"

"ஆமாம்மா. வெளியே யார்கிட்டயாவது போர்டு எழுதக் கொடுத்தாலும் காசு கொடுப்பேனில்ல. நீயே படத்தோட போர்டை ரெடி பண்ணிட்டே. வெச்சுக்கம்மா..."

"வேண்டாம் ஸார்! படம் வரைஞ்சது என்னோட மனத் திருப்திக்காக. கூலிக்காக வரையலை."

"நானும் கூலி தரலைம்மா. உன் படத்தைப் பாராட்டிச் சன்மானம் தர்றேன்னு நினைச்சுக்க. வாங்கிக்கம்மா..." - ஜெயபால் அவளது கையில் பணத்தைக் கொடுத்து விட்டு நகர, திலோத்தமாவிற்கு ரஞ்சித்குமாரின் நினைவு வந்தது.

அன்று அவன் மட்டும் அந்த ஆறுதல் பரிசை அறிவிக்காமல் இருந்திருந்தால் இன்று தன் வாழ்வில் இத்தனை திருப்பங்கள் நேர்ந்திராது. திருப்பங்கள் நிறைந்ததுதானே வாழ்க்கை.

"என்ன திலோ அக்கா! கையில பணத்தை வெச்சுக்கிட்டு சிலையா நிக்கிறீங்க?" - அலுவலகத்தின்



உதவிப் பொறுப்பில் இருக்கும் ராஜேஷ் அழைத்ததும் திரும்பினாள்.

"ராஜேஷ்! உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும்."

"எதுக்கு அக்கா?"

"நீ மட்டும் அந்தப் பழைய போர்டை உடைக்கலைன்னா..."

"ஐயோ அக்கா! சத்தமா சொல்லாதீங்க. ஒட்டடை அடிக்கும்போது தானா விழுந்துதான் உடைஞ்சது. நான் வேணும்னு உடைக்கலை."

"அது தெரியும் ராஜேஷ். எப்படியோ அது உடைஞ்சதாலதானே இத்தனை நாள் கழிச்சி நான் கையில பிரஷ் பிடிச்சிருக்கேன். அதான் உனக்கு நன்றி சொல்றேன்."

"அக்கா! மெய்யாவே நீங்க நல்லா படம் வரையுறீங்க. இதே மாதிரி வரைஞ்சே நீங்க பெரிய ஆளா வரப் போறீங்க."

"தேங்க்ஸ் தம்பி! உன் வாக்குப் பலிக்கட்டும்."

"அக்கா! அன்னிக்கு உங்களைத் தேடி ஒரு ஆள் வந்தாருக்கா."

"என்னைத் தேடியா?" - புருவம் சுருக்கினாள்.

"ஆமாங்கா... நல்ல வாட்ட சாட்டமா ஹீரோ மாதிரி இருந்தாருக்கா. உங்க பேரைச் சொல்லி விசாரிச்சார்..."

திடுக்கென அதிர்ந்தாள். 'அவன்தானா? இந்த இடத்தையும் கண்டு கொண்டானா? எப்படிக் கண்டு பிடித்தான்? எதற்காகத் தேடி வந்தான்?'

"ரா...ஜேஷ்! யாரு...? யார் அவன்?"

"பேரையெல்லாம் சொல்லலை அக்கா. நீங்க இந்தப் பெயிண்ட், பிரஷ் எல்லாம் வாங்கப் போயிட்டீங்கள்ல. அப்பத்தான் வந்தார். ஓனரும் இல்லை. அதனால என்கிட்டதான் விசாரிச்சார்."

"எ...ன்...ன விசாரிச்சார்?" - கேட்கும்போதே மனம் பதறியது.

"உங்க பேரைச் சொல்லிக் கேட்டார். அவங்க இங்க வந்தாங்களான்னு கேட்டார்."

"நீ என்ன சொன்னே?"

"ஓனர் இல்லாத நேரம் வந்து இப்படியெல்லாம் கேட்காதீங்க. எது பேசறதா இருந்தாலும் எங்க ஓனர்கிட்டயே பேசிக்கங்கன்னு கட் அண்ட் ரைட்டா சொல்லிட்டேன்." - ராஜேஷ் பெருமையாய்ச் சொல்ல, நிம்மதியாய் மூச்சு விட்டாள் திலோத்தமா.

"நல்ல காரியம் செய்தாய் ராஜேஷ்."

"யாருக்கா அவரு?"

"எனக்குத் தெரியலையே... எவனாவது ரோட்டில போறவன் வந்து கேட்டிருப்பான். இனிமே இப்படி யாரும் வந்தா எதுவும் சொல்லிடாதேப்பா."

"சொல்ல மாட்டேன்க்கா..."

"தேங்க் யூ. ஆமா... அதுக்குப் பிறகு அந்த ஆள் வந்தானா?"

"இல்லக்கா. நான் இருக்கும் போது வரலை."



"ஓ... சரிப்பா. நீ போய் உன் வேலையைப் பார். நான் இந்தப் படத்தை முடிச்சிட்டுக் கடைக்குப் போகணும்."

"சரிக்கா..." - என்றவாறு அவன் சென்றதும் குழப்பமாய் அமர்ந்தாள்.

'யார் அவன்? அந்த ரஞ்சித்குமாராய்த்தான் இருக்கும். அன்று காலையில்தானே அவனது பி.ஏ. பார்த்தான். போய்ச் சொல்லியிருப்பான். உடனே இவன் கிளம்பி வந்திருப்பான்.

எதற்காக வந்தான்? நான் எப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று கண்டு களிக்க வந்தானா? தங்கையின் வக்கிரபுத்தி தானே இவனுக்கும் இருக்கும். அவன் மட்டும் என் கண்ணில் பட்டும்...

வேண்டாம். அவன் என் கண்ணில் படவே வேண்டாம். கடைசி வரை அவனது உருவம் என் கண்ணில் பட வேண்டாம். என் படிப்பை... என் தம்பியின் எதிர்காலத்தை... என் குடும்பத்தைச் சீர்குலைத்தவன். அவனது முகத்தில் விழிப்பது எத்தனை பெரிய கொடுமை...

ச்சே! அவனைப் பற்றி நினைப்பதே பாவம். போயும் போயும் அவனைப் பற்றி நினைப்பதா?' - தன் எண்ணங்களைப் புறந்தள்ளி விட்டுக் கையில் தூரிகையை எடுத்தாள்.

கிட்டத்தட்ட முடிவடைந்த நிலையில் இருந்த விநாயகரை மேலும் அழகுபடுத்தி, திருப்தியாய்ப் புன்னகைத்தாள். பிளாஸ்டிக் துகள்களை மூட்டையாய்க் கட்டிக் கொண்டிருந்த சந்திரபோஸை அழைத்தாள்.

"போஸ் அண்ணா..."

"இதோ வந்திட்டேன் பாப்பா..." - தன் வேலையை நிறுத்திவிட்டு ஓடி வந்தார்.

"அண்ணா! இந்த போர்டை ஆபீஸ் ரூம்ல கொண்டு போய் வெச்சிடுங்க. பெயிண்ட் ஒட்டிடும். ஜாக்கிரதை."

"சரி பாப்பா..." - போஸ் கவனமாய் அதை எடுத்துக் கொண்டு உள்ளே செல்ல, கையிலிருந்த பணத்தை மடித்து வைத்துக் கொண்டு, வரைந்து விட்டு மீதமிருந்த பெயிண்ட டப்பாக்களை எடுத்துச் சுவரோரமாய் இருந்த மாடத்தில் வைத்தாள்.

வேலை நடந்து கொண்டிருந்த அறைக்குள் நுழைந்து தனது கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டபோது ஜெயபால் எதிரில் வந்தார்.

"புறப்பட்டு விட்டாயாம்மா..."

"ஆமா ஸார். படம் வரையத் தேவையான பொருள் எல்லாம் வாங்கிட்டு நேரே வீட்டுக்குப் போயிடுறேன் ஸார்..."

"சரிம்மா... நானும் வெளியே ஒரு வேலையா கிளம்புறேன். வர்றியா? கார்லேயே போயிடலாம்."

"வேணாம் ஸார்... நடக்கிற தூரம்தானே... நான் நடந்தே போய்க்கிறேன்."

"சரிம்மா... போஸ்! வேலையைப் பார்த்துக்க. நான் ஒரு அரை மணி நேரத்தில வந்திடுறேன்."

"சரிங்க ஸார்!" - ஜெயபால் வெளியேறி காரில் ஏறும் வரை நின்றவள், அறையின் மூலையில் அமர்ந்து சாந்துப் பொட்டு டப்பாவிற்கான மூடிகளை அச்சில் வார்த்துக் கொண்டிருந்த ராதாவை நெருங்கினாள்.



"ராதா!"

"என்ன தீபோ?"

"உன் தங்கைக்குக் கண்ணாடி வளையல் வாங்கணும்னு சொன்னியே.. என்ன கலர் வேணும்னு சொல்லு. நான் கடைக்குப் போய் வாங்கிட்டு வர்றேன்."

"இன்னும் சம்பளம் வாங்கலையே தீபோ!"

"காசு என்கிட்ட இருக்கு. நீ என்ன கலர் வேணும்னு மட்டும் சொல்லு."

"உனக்கேன் வீண் சிரமம். நான்..."

"என்ன கலர் வேணும்?"

"சரி. கறுப்பு கலர் வாங்கிட்டு வா தீபோ. சம்பளம் வாங்கினதும் தந்திடுறேன்."

"ராதா! ஒரு டஜன் வளையல்ல என் சொத்து ஒண்ணும் குறைஞ்சிடாது. நீ வேலையைப் பார். நான் போயிட்டு வர்றேன்."

"சரிப்பா. கொஞ்சம் குறைந்த விலையில வாங்கு... போதும்."

"நான் பார்த்துக்கிறேன்..." - என்றவாறு தோளில் பையை மாட்டிக் கொண்டு வெளியே வந்து படிக்கட்டில் இறங்க முயன்றவள் திகைத்து நின்றாள். கம்பெனியின் முன்னால் வந்து நின்ற காரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தான் ரஞ்சித்.

எதிர்பாராமல் அவனை நேரில் கண்டதும் ஒருகணம் தடுமாறிப் போனாள். முகம் கடுகடுக்க நின்றவளைக் கண்டதும்... ரஞ்சித்தின் முகம் புன்னகைத்தது.

அவனது புன்னகை மேலும் ஆத்திரத்தை மூட்ட, முகத்தைத் திருப்பிக் கொண்டு இறங்கி நடக்க முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"திலோ! நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

"வாட்?" - கோபமாய் நிமிர்ந்தாள்.

"வந்து... உங்களைப் பார்க்கணும்னுதான்..."

"ஏன்? எதுக்காகப் பார்க்கணும்? ஓ! ஊரை விட்டே விரட்டினோமே... இருக்கிறாளா? இல்லை... அவமானம் தாங்காம சூஸைட் பண்ணிகிட்டாளான்னு பார்க்க வந்தீங்களா..."

"நோ... நோ... அப்படியில்லை."

"பின்னே... எதுக்காக என்னை நீங்க பார்க்கணும்?"

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும். உங்களோட ஓவியம்..."

"ஸாரி! எனக்கு யார்கிட்டயும் பேச வேண்டிய அவசியமில்லை. வழியை விடுங்க."

"ப்ளீஸ் திலோ! உங்க கோபம் முழுக்க முழுக்க நியாயமானது. ஆனா நான் பேச வந்த விஷயமே வேற..."

"எந்த விஷயத்தையும் உங்ககிட்ட கேட்க நான் தயாரா இல்லை. உங்க முகத்தைப் பார்க்கக்கூட விரும்பலைன்னு சொன்னேனே... உங்க பி.ஏ.கிட்ட சொல்லலையா?" - வேறு பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டே அவள் கேட்க, வறட்சியாய்ப் புன்னகைத்தான் ரஞ்சித்குமார்.

"சொன்னான். ஆனா ஒரே ஒரு நிமிஷம்... என் முகத்தை நீ பார்த்தால் உன் கோபம் குறைந்து விடும்



திலோ!" - அவன் எந்த அர்த்தத்தில் சொல்கிறான் என்று உணராமல்... கோபமாய் நிமிர்ந்தவளின் முகம் சுருங்கியது.

அன்று கல்லூரி விழாவில் பார்த்த ரஞ்சித் அல்ல இவன்... பளீரிட்ட ஒளி போல் இருந்த முகமும் புன்னகையும் மறைந்திருந்தது. ஷேவ் செய்யாத முகமும் உறங்காத கண்களும் சற்றே மெலிந்திருந்த தேகமுமாய் நின்றவனைப் பார்க்கையில் லேசான பரிதாபம் தோன்றியது.

தாள முடியாத சோகத்தில் தவிப்பவனைப் போல் இருந்தான். சட்டெனக் கோபம் தணிய, எதுவும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"எனக்கு வேலை இருக்கிறது. வழியை விட்டால் போய் விடுவேன்."

"ஸாரி திலோ!"

"எதற்கு?"

"என் தங்கையால் நீ ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறாய்..."

"ஒரு சின்னத் திருத்தம். உங்கள் இருவரால் எங்க குடும்பமே ரொம்ப சந்தோஷமா இருக்கு..." - என்றாள் வெறுப்பாய்.

"உன் கோபம் புரிகிறது திலோ! ஆனால் எல்லாம் எனக்குத் தெரியாமல் என்னை மீறி நடந்து விட்டது. உன் பார்வையில் நான் குற்றவாளியாய்த் தெரியலாம். ஆனால்..."

"நான் யாரிடமும் பாவ மன்னிப்பை எதிர்பார்க்க வில்லை."

"இல்லை திலோ! இந்தப் பாவத்திற்கு எந்தக் கடவுளிடமும் மன்னிப்புக் கிடைக்காது. பாவத்தின் சம்பளம்

மரணம்னு சொல்வாங்க. இப்போ என் தங்கை அந்த மரணத்தோட போராடிட்டு இருக்கா..." - கண்களில் துளிர்த்த நீரோடு ரஞ்சித் சொல்ல... திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஆமா திலோ! உன்னையும் உன் குடும்பத்தாரையும் பழி வாங்கிறதா நினைச்சிட்டு... இப்ப என் மொத்தக் குடும்பத்தையும் கண்ணீர்ல மிதக்க விட்டுட்டா பிரியா. இப்போ தன்னோட கடைசி நாட்களை எண்ணிட்டு இருக்கா..."

"எ...ன்...ன?"

"அவளோட நிலையைத் தாங்க முடியாம அப்பாவோட உயிர் பிரிஞ்சிடுத்து. அப்பாவை இழந்து மகளையும் படுக்கையில பார்க்க முடியாம... அம்மா சுத்தமா உடைஞ்சி போயிட்டாங்க. நான்... ஒரு நடைபிணமா உன் முன்னால வந்து நிற்கிறேன். என்னை... என் தங்கையை மன்னிப்பாயா திலோ?" - கண்கள் கசியக் கேட்டவனை... திகைப்பாய்ப் பார்த்தாள்.

அவளது மனம் என்ற உலைக்களத்தில் கொதித்துக் கொண்டிருந்த கொந்தளிப்பு மெல்ல மெல்ல அடங்கத் துவங்கியது.

## 16

ஒன்றும் அறியாத பெண்ணோ
உண்மை மறைக்காத கண்ணோ
மாற்றுக் குறையாத பொன்னோ
மயங்குது நெஞ்சம் தயங்குது கொஞ்சம்!



ரஞ்சித் சொன்னவற்றைக் கேட்டு விட்டு முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல்... அவனை விட்டு விலகி நடக்கத் துவங்கினாள்.

"திலோ! என்ன ஒண்ணுமே பேசாம போற?"

"நான்தான் ஏற்கெனவே சொன்னேனே... உங்ககிட்ட பேச எதுவுமே இல்லைன்னு..."

"திலோ!"

"நான் என்ன பேசணும்னு எதிர்பார்க்கிறீங்க? இது உங்க குடும்ப விஷயம். இதையெல்லாம் என்கிட்ட ஏன் சொல்றீங்கன்னு புரியலை?"

"திலோ! என்ன இப்படிப் பேசுறீங்க?"

"வேற எப்படிப் பேசறது மிஸ்டர் ரஞ்சித்குமார்? உங்க தங்கை மாதிரி நானும் வக்கிரம் பிடிச்சவளா இருந்தா நீங்க சொன்னதெல்லாம் கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன். துள்ளிக் குதிச்சிருப்பேன். எங்க குடும்பத்தைச் சிதைச்ச உன் குடும்பத்துக்கு அந்த ஆண்டவனே கூலி கொடுத்திட்டான் பார்த்தியான்னு கொக்கரித்திருப்பேன்.

"ஆனா... நான் பிரியங்கா இல்லை... திலோத்தமா. என்னால அப்படியெல்லாம் பண்ண முடியாது. ஏன்னா அடுத்தவங்க கஷ்டத்தைப் பார்த்துச் சந்தோஷப்படுற கேவலமான பிறவி நாங்க கிடையாது."

"திலோ!"

"அதே சமயம் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டே ஆகணும் நான். உன் தங்கையால நான் மட்டுமில்லை... என் குடும்பமே பாதிக்கப்பட்டிருக்கு. இருட்டுல உட்கார்ந்து மூளை

கலங்கிப் போன என் தம்பியைப் பார்க்கும் போதும்... படுக்கையில கிடந்து தவிக்கும் என் அப்பாவைப் பார்க்கும் போதும்...

"எங்க எல்லாரையும் பார்த்துக் கண்ணீர் விடும் என் தாயைப் பார்க்கும் போதும்... என் மனசு உலை கொதிக்கிற மாதிரி கொதிக்கும். அந்தக் கொதிப்பு... அந்த வெப்பம்... இப்போ இந்த நிமிஷம் எனக்குக் குறைஞ்சிருக்கு.

"கடவுள்ன்னு ஒருத்தன் இல்லையோன்னு நினைச்சேன். ஆனா அவன் இருக்கான். பூமியில நடக்கிற அக்கிரமங்களை.... அநியாயங்களைப் பார்த்திட்டுத்தான் இருக்கான். அதுக்கான பதிலையும் அவனே தந்திடுறான். அந்த வகையில எனக்கு ரொம்ப திருப்தியா இருக்கு. இதை இப்பவே என் அம்மாகிட்ட போய்ச் சொல்லணும். அவங்க வயிறும் பத்தி யெரிஞ்சிட்டுத்தானே இருக்கும்... அதை அணைக்க வேண்டாம்...?"

ரஞ்சித்குமாரின் முகம் வருத்தமாய்ப் புன்னகைத்தது. "உன்கிட்ட இருந்து நான் இதை எதிர்பார்க்கவில்லை திலோ!"

"நானும்தான். நாம எதிர்பார்க்கிறதெல்லாமா நடக்குது? தனக்கு இத்தனை சீக்கிரமா முடிவு வரும்னு உங்க தங்கை எதிர்பார்த்திருப்பாளா? இல்லை... நீங்கதான் எதிர் பார்த் திருப்பீங்களா?"

"எதிர்பார்த்தோம் திலோ... ஒவ்வொரு நாளும் அவ கூடக் கொஞ்ச நேரம் தூங்கினாலும் பயந்து போய் அவ மூச்சு விடுறாளான்னு செக் பண்ணுவோம்..." – தொண்டை அடைக்க ரஞ்சித்குமார் சொல்ல... திலோத்தமாவின் பேச்சு நின்றது.



"அவளோட பன்னிரண்டாவது வயசுல ஒரு நாள் விளையாடிட்டு இருக்கும்போது மயங்கி விழுந்தா. உடனே ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனோம். நிறைய டெஸ்ட் பண்ணினாங்க. ம்ப்ச்..."

"எ... என்ன... சொ...ன்னாங்க?"

"இதயத்திற்குப் போற இரத்த நாளங்கள் சரியா வேலை செய்யலைன்னு சொன்னாங்க. நாளாக... நாளாக... அந்த நாளங்கள் செயலிழந்து போகும்னு சொன்னாங்க. கடைசியா... அவ இதயத்திற்கு பிளட்டோ ஆக்ஸிஜனோ கிடைக்காம... அது தன்னோட துடிப்பை நிறுத்திடும்னு சொன்னாங்க."

"ஓ! நோ..." – வேதனையாய்க் கண்களை மூடிக் கொண்டாள்.

"நாங்களும் எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தோம். எல்லாருமே கை விரிச்சிட்டாங்க. அவளோட சாவைத் தள்ளிப் போடலாமே தவிர தவிர்க்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அன்னிலேருந்து இன்னிக்கு வரை எவ்வளவோ போராடினோம்... நானும் அப்பாவும்.

"பிரியாவுக்கும் தெரியாம அம்மாவுக்கும் சொல்லாம... நாங்க தவிச்ச தவிப்பு இருக்கே... அது ரொம்பக் கொடுமை திலோ. அவ தும்மினாக்கூட நாங்க பயப்படுவோம். எந்தக் காரணத்திற்காகவும் அவளைக் கண்கலங்க விட்டதில்லை. ஒரு சின்ன ஏமாற்றமோ வருத்தமோ அடைய விடமாட்டோம்.

"யூ நோ...! அன்னிக்கு காலேஜ் ஃபங்ஷன்ல நான் நடந்துகிட்டது தப்புதான். ஆனா ஒரு அண்ணனா நான் செய்தது தப்பு இல்லை. ஏன்னா... தோல்வியடைஞ்ச

வருத்தத்தை அந்த இதயம் தாங்குமோ என்னவோன்னு பயந்திட்டேன். உன்னோட படங்களை நின்னு பார்க்கறதற்குக் காரணமும் அதுதான். அந்த நிமிஷம் என் தங்கையோட உயிர்தான் எனக்கு முக்கியமாத் தெரிஞ்சது.

"ஆனாலும் மனசு கேட்காம எல்லோருக்கும் ஆறுதல் பரிசை அறிவிச்சேன். நீ மறுத்த விதம் எனக்குப் பிடிச்சிருந்தது. நீ சொன்ன மாதிரியே அந்தப் பணத்தைக் கோவில் வாசல்ல இருந்த வறியவர்களுக்குக் கொடுத்தேன்."

விழிகள் விரிய அவனைப் பார்த்தாள் திலோத்தமா.

"என்ன?"

"ஆமா! நான் பணம் கொடுத்ததும் அவங்க கண்ணுல நன்றியைப் பார்த்தேன். சந்தோஷத்தைப் பார்த்தேன். அந்தச் சந்தோஷத்தைப் பார்ப்பதற்காக நான் இன்று வரை தானம், தர்மம் பண்ணிட்டு இருக்கேன் திலோ!

"இந்தத் தர்மம்... என் தங்கையோட உயிரைப் பிடிச்சு நிறுத்திடுமோங்கிற சுயநலமும் இருக்கு. ஆனா... ஆனா... எதுவுமே அவளைக் காப்பாத்தலை. அவ செய்த பாவங்கள் முந்திவிட்டது போலும்!" - என்றான் வேதனையாய்.

திலோத்தமாவின் மனம் கனத்தது. 'என்னதான் அரக்கத்தனமாய் நடந்து கொண்டபோதும், தன் வயதையொத்த இளம்பெண் அல்லவா! அருமை பெருமையாய் வளர்த்த அண்ணனே... இத்தனை கலங்கி நிற்கும்போது பெற்றவர்கள் எப்படித் துடித்திருப்பார்கள்?

இந்தக் கொடுமையைக் காண இயலாமல்தான் அவளது தந்தையின் ஆத்மா பிரிந்து விட்டதோ? பெற்ற மகளை, இத்தனை வருடமாய்ப் பார்த்து வளர்த்



பிள்ளையைப் பறிகொடுக்க எந்தப் பெற்றவர்களுக்கு மனம் வரும்?

அதுவும் மகளின் மரணத்தை உறுதிப்படுத்திவிட்ட பிறகு... அந்தத் தந்தையின் இதயம் எத்தனை பலமாய் அதிர்ந்திருக்கும். ஒவ்வொரு நாளும் எப்படித் தவித்திருப்பார்? எந்தத் தகப்பனுக்கும் அப்படி ஒரு நிலை வரக் கூடாது.

"ஆனால்... ஒன்று திலோ! பிரியங்கா அடம் பிடிப்பாள். வெடுக்கென்று பேசுவாள் என்பது மட்டும்தான் எனக்குத் தெரியும். அவள் இத்தனை பெரிய காரியம் செய்வாள் என்று நான் சத்தியமாய் நினைக்கவில்லை. உன் தோழி உமா சொல்லித்தான் எனக்கு இந்த விஷயமே தெரியும். என்னை நம்பு!"

"உமாவா! அவளை எப்போ பார்த்தீர்கள்?" - வியப்பாய்க் கேட்டாள்.

"பிரியாவின் பேச்சை நம்பி நான் லண்டன் போனது உண்மை. அங்கு சென்று பத்து நாள் கழித்த பிறகே இது பிரியாவும் சுஹாசினியும் செய்த கூட்டுச் சதி என்று எனக்குப் புரிந்தது.

"உடனே புறப்பட்டு வந்தவன் உன்னைப் பார்ப்பதற்காக உன் கல்லூரிக்குத்தான் போனேன். அப்போதான் உமாவைப் பார்த்தேன். அவங்கதான் எல்லாம் சொன்னாங்க. அந்த நிமிஷத்தில இருந்தே உன்னைத்தான் தேடிட்டு இருந்தேன்."

"எ...துக்கு?"

"திலோ! பிரியா சொன்ன மாதிரி எதுவுமே நடக்கலை. உங்க காலேஜ்ல உங்களை யாரும் டிஸ்மிஸ் பண்ணலை..."

"எ...ன்ன?" - பலமாய் அதிர்ந்தாள்.

"ஆமா! உங்க பிரின்சி, லெக்சரர் எல்லாருமே நீங்க ஏன் வரலைன்னு குழம்பிட்டு இருக்காங்க. உங்க பழைய அட்ரஸுக்கு ஆள் அனுப்பினாங்களாம். நீங்க வேற வீட்டுக்குப் போனது உமாவுக்குக் கூடத் தெரியாதாமே..."

"ஆ...மா... நான் சொல்லலை."

"தப்பு திலோ! நீங்க மட்டும் சொல்லியிருந்தா... எப்பவோ உங்களுக்கு இது தெரிஞ்சிருக்கும். இன்னும் ரெண்டு நாள்ல எக்ஸாம்னு சொன்னாங்களே...!"

"ஆமா..." - என்றவாறே மலர்ந்தாள்.

"அதுக்காகத்தான் உங்களைத் தேடி வந்தேன். நீங்க பரிட்சைக்குத் தயாராகுங்க திலோ! உங்க படிப்பு வீண் போகலை..."

பதட்டத்தில் கண்கள் கசிந்தன. "ஸார்... இதெல்லாம் நிஜமா?"

"ஆமா! இதற்காகத்தான் இத்தனை நாளாய் உங்களைத் தேடி அலைந்தேன். அன்னிக்கு அர்ஜுன் வந்து உங்களைப் பார்த்ததா சொன்னதும்... ரொம்ப சந்தோஷப்பட்டேன். உடனே உன்னை வந்து பார்க்கணும்னு புறப்பட்டேன். ஆனா அதுக்குள்ள பிரியா வந்து பேச... நான் பதிலுக்குப் பேச... என்னென்னவோ நடந்து போச்சு..."



"அப்போ... ஆபீஸ்ல வந்து என்னைப் பற்றி விசாரித்தது நீங்க இல்லையா?"

"அர்ஜுன் வந்தான். நான்தான் அவனை அனுப்பினேன். ஆனால் அதற்குள் பிரியா சீரியஸாகிவிட... அதே ஹாஸ்பிடல்ல அப்பாவோட மரணம் சம்பவித்து விட்டது. எல்லாக் காரியமும் முடிஞ்சது..." - பெருமூச்சு விட்டவனைப் பார்க்கையில் மனம் வருந்தியது.

"ஸாரி! நான்... உங்க வருத்தம் புரியாம... ஏதேதோ பேசிட்டேன்."

"விடு. நீ பேசினதுல எந்தத் தப்பும் இல்லை."

"ஸாரி ஸார். உங்களைப் பத்தி விஷ்ணு சொன்னப்ப கூட நான் நம்பலை. உமா சொன்னதையும் நம்பலை. உங்களை ரொம்பத் தப்பா நினைச்சிட்டேன்."

"விஷ்ணுவா! என்னைப் பத்தி என்ன சொன்னான்?"

"வந்து... ரொம்ப நல்லவர்ன்னு சொன்னான்."

"சின்னப்பையன் தெரியாம சொல்லியிருப்பான். நீ சொன்னதுதான் சரி."

"என்ன?"

"நான் நல்லவன் இல்லை. சுயநலக்காரன். என்னோட சுயநலத்தாலதான் நீங்க இங்க வந்து நிற்கிறீங்க. இதுக்கு பிரியா மட்டும் காரணமில்லை."

"இப்போ... பிரியா எப்படி இருக்கா?"

"இருக்கா. இதுவரை எதுவும் தெரியாம விருப்பத்துக்கு விளையாடினவ. இப்ப கட்டிலை விட்டுக் கீழே இறங்க

முடியாம இருக்கா. இப்பதான் தன்னோட நிலையை உணர்ந்திருக்கா. ம்ப்ச்! பார்க்க முடியலை!" - வருத்தமாய்ச் சொன்னவனிடம் என்ன பதில் சொல்வதென்று புரியாமல் நின்றாள்.

"நான் வந்த விஷயத்தையே மறந்திட்டேனே... ஒன் மினிட்!" - என்றவன் காருக்குள் இருந்த ஒரு வெள்ளை நிறக் கவரை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"என்னது இது?"

"பிரிச்சுப் பாரு..." - குழப்பமாய் அதை வாங்கிப் படித்தவளின் முகம் பிரகாசமாய் மின்னியது. அந்த ஒளியில் சில கணநேரம் லயித்துப் போனான் ரஞ்சித்குமார்.

"ஸா...ர். இது... இது?"

"ஏழு கல்லூரிகள் சேர்ந்து நடத்திய ஓவியப் போட்டியில் நீதான் முதல் பரிசு ஜெயிச்சிருக்க திலோ. அதுக்கான பரிசை வாங்கிட்டுப் போகக் கல்லூரி முதல்வர் உனக்கு அனுப்பின அழைப்பிதழ் இது."

"இது எப்படிச் சாத்தியம்?"

"ஏன்?"

"நான் எந்தப் போட்டியிலும் கலந்துக்கலையே..."

"ஆனா உன்னோட ஓவியம் கலந்துகிட்டு ஜெயிச்சிருக்கே...."

"எ... எப்படி?"

"உன்னோட ஓவியங்களை உன் சார்பா உங்க காலேஜ்ல அனுப்பி இருப்பாங்க போலிருக்கு. நீ வின்



பண்ணிட்டே..." - இயல்பாகவே அவன் சொல்ல, உமாவின் வார்த்தை நினைவில் வந்தது.

"நீ வரைஞ்ச படத்தை யெல்லாம் அவரே வாங்கிட்டுப் போயிட்டாராம்."

"என் அண்ணன் உன்னோட ஓவியங்களை வாங்கினப்பவே எனக்குச் சந்தேகம்தான்!" - பிரியங்காவின் குரல் செவியில் மோதியது.

'அப்படியென்றால் இதைப் போட்டிக்கு அனுப்பியது இவன்தானா! எப்போது அனுப்பினான்? ஏன் அனுப்பினான்?' - அவளது மனதில் எழுந்த கேள்விகளுக்கு அவனே பதில் அளித்தான்.

"திலோ! உன்னோட ஓவியத்தில உயிர் இருந்தது. உன் திறமை பளிச்சிட்டது. அது நிச்சயமா ஜெயிக்கும்னு எனக்குத் தோணிச்சி. அன்னிக்குப் பிரியாவுக்காக உன்னைத் தோற்க வைத்து விட்டேன்.

"நிச்சயம் அதற்குப் பரிகாரம் செய்தாக வேண்டும் என்றுதான் போட்டி நடந்து முடிந்த மறுநாளே இதை வாங்கி அனுப்பி வைத்தேன். நான் நினைச்ச மாதிரி நீ ஜெயிச்சிட்டே... வாழ்த்துக்கள் திலோத்தமா!"

"தே...ங்...க்... யூ... தேங்க் யூ ஸார்!" - உணர்ச்சிப் பெருக்கில் கண்கள் கசிந்தன.

"வீட்டுக்குப் போ... திலோ! அம்மா அப்பாகிட்ட சொல்லு. சந்தோஷப்படுவாங்க."

"கண்டிப்பா. நான் உடனே வீட்டுக்குப் போகணும். இந்த லெட்டரை என் அப்பாகிட்ட காட்டணும். அம்மாகிட்ட

காட்டணும். தேங்க் யூ ஸார்! நான் கிளம்புறேன்...". புன்னகையும் கண்ணீருமாய் அவள் புறப்பட...

அந்தப் புன்னகையில் தன் வலிகளை மறந்து புன்னகையோடு தலையசைத்தான் ரஞ்சித்குமார்.

மருத்துவமனையில் சோர்வாய்க் கண்களை மூடிப் படுத்திருந்தாள் பிரியங்கா. உடல் இளைத்து உருவம் மாறியிருந்தாள். தனது நோயை அறிந்ததைவிடத் தந்தையின் இழப்பு பலமாய்த் தாக்கியிருந்தது.

அதிலும் தந்தையின் உடலைக் கூடப் பார்க்க முடியாமல் முழு நேர மயக்கத்தில் மருத்துவமனையில் கிடந்ததை அவளால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அழக்கூடாது. அதிர்ச்சியான தகவல்களைச் சொல்லக்கூடாது என்ற மருத்துவர்களின் எச்சரிக்கையை மீறித் தாயின் கோலமே அனைத்தையும் சொல்லிவிட்டது.

அழுது துடித்தவளை மருந்தின் உதவியோடு தூங்க வைத்தே சமாளித்தனர். முழுதாய்ப் பத்து நாட்கள் சென்ற பிறகே தன்னிலை உணர்ந்தாள் பிரியங்கா. கூடவே திலோத்தமாவின் நினைவும் வந்தது.

'அன்று அவளும் இப்படித்தானே அழுது துடித்தாள்? கொஞ்சமும் இரக்கமில்லாமல் நடந்து கொண்டேனே... ஒரு சாதாரணப் பிரச்சனையை அன்றே முடிந்து விட்ட பிரச்சனையை விடாமல் இழுத்து... அவளது மொத்தக் குடும்பத்தையும் சீர்குலைத்து விட்டேனே...

அன்று அந்தப் பெரிய மனிதர் இப்படித்தானே விழுந்து துடித்தார்... இன்று அதே இடத்தில் என் தந்தையா? அவள்



எந்தப் பாவமும் அறியாதவள். எந்த தீங்கும் செய்யாதவள். அதனால் அவள் அப்பா உயிரோடு தப்பிவிட்டார்.

ஆனால்.... நான்? நான் செய்த பாவங்களின் பலனாக என் அப்பாவை மொத்தமாய் இழந்து விட்டேனே... கடைசியாய் ஒரு முறை அவர் முகத்தைக் கூடப் பார்க்க முடியாத துரதிர்ஷ்டசாலியாகி விட்டேனே... எத்தனை பணம் கொட்டிக் கிடந்து என்ன?

இந்தப் பணத்தால் போன என் தந்தையின் உயிரை மீட்டுத் தர முடியுமா? மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கும் என் உயிரை இழுத்து நிறுத்த முடியுமா? இந்தப் பணத்தால் என் தாயின் கண்ணீரை நிறுத்த முடியுமா?

தந்தையை இழந்து தங்கையை இழக்கப் போகிறோம் என்பதை முன்கூட்டியே அறிந்து ஒரு கணமும் விடாமல் மருகிக் கொண்டிருக்கிறானே அண்ணன். அவனது வேதனையைத் தீர்க்குமா இந்தப் பணம்?

இப்படி எதற்கும் உதவாத பணம் என்னிடம் கொட்டிக் கிடக்கிறது என்ற ஆணவமா என்னை ஆட்டிப் படைத்தது? எத்தனை பெரிய பாவம் செய்து விட்டேன்! அந்தச் சின்னப் பையனைக்கூட விடாமல் என்ன பாடுபடுத்தி விட்டேன்...? கடவுளே! எனக்கு நிம்மதியான சாவு கிடைக்காது. என் ஆத்மா அமைதியாய் அடங்காது.

நான் பாவம் பண்ணியவள். அதற்கு விமோசனம் தேடாதவள். அடுத்தவரின் துயரத்தைக் கண்டு எள்ளி நகையாடியவள். அதனால்தான்... நான் இன்னும் அதிக நாள் வாழக் கூடாது என்று இறைவன் முடிவு செய்து விட்டான்.

'என்னால் இன்னும் நிறையப் பேர் கண்ணீர் சிந்தக்கூடாது என்றுதான் என் குடும்பத்தினரை மட்டும் கண்ணீர் சிந்த வைத்து விட்டான். அப்பா நல்லவர். அதனால்தான் யாருக்கும் எந்தச் சிரமமும் இன்றி ஒரு சில நிமிடங்களில் நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்து விட்டார்.

'ஆனால் நான் அப்படியல்ல. கோணல் புத்தி உள்ளவள். வக்கிர எண்ணம் படைத்தவள். ஈவு இரக்கம் அற்றவள். எனக்கு நிம்மதியான வலியில்லாத மரணம் வாய்க்காது. அந்த திலோத்தமாவின் கண்ணீர் என்னை நிம்மதியாய்ச் சாக விடாது.'

கண்கள் பொங்கின. லேசாய் மூச்சுத் திணறியது. அருகே அமர்ந்திருந்த நர்ஸ் பதறி எழுந்தாள்.

"மேடம்! என்ன பண்றீங்க? ஏன் அழறீங்க...? அழக் கூடாது..."

"சி.ஸ்...டர்! நான்... என் அண்ணனைப் பார்க்கணும்..."

"அவர் எங்கேயோ வெளியே போயிட்டு வர்றேன்னு சொன்னார்."

"என் அண்ணனுக்குப் போன் பண்ணுங்க சிஸ்டர். நான் உடனே பார்க்கணும்."

"சரி... பதறாதீங்க. ரிலாக்ஸ்டா இருங்க. நான் டாக்டர்கிட்ட சொல்லி போன் பண்றேன்."

"சீக்கிரம் பண்ணுங்க. நான் உடனே என் அண்ணனைப் பார்க்கணும்...."

"பிரியா..." - அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் ரஞ்சித்குமார்.



சட்டென்று திரும்பினாள். "அ... அண்ணா..."

"என்னம்மா! நர்ஸ்கிட்ட என்ன பிரச்சனை பண்ணிட்டு இருக்க... ஏன் கண்ணெல்லாம் கலங்கியிருக்கு?" - பதறினான்.

"ஸார்! உங்களைப் பார்க்கணும். உடனே போன் பண்ணணும்னு அடம் பண்றாங்க ஸார்!"

"பிரியா! நான்தான் வந்திடுறேன்னு சொல்லிட்டுத்தானே போனேன்..."

"அண்ணா! எனக்குப் பொறுமை இல்லேண்ணா.... நீ வந்து என்ன பதில் சொல்லப் போறேன்னு பரிதவிச்சிட்டு இருக்கேன்."

"பிரியா! ப்ளீஸ் காம் டவுன். முதல்ல படு..." - தங்கையைப் படுக்க வைத்தான்.

"சிஸ்டர்! ஏதாவது சாப்பிட்டாளா?"

"அண்ணா! அதையெல்லாம் பிறகு பார்க்கலாம். முதல்ல போன காரியம் என்னாச்சின்னு சொல்லேன். திலோத்தமாவைப் பார்த்தியா? அவகிட்ட பேசினாயா...? அவ பேசினாளா... சொல்லுண்ணா...!"

"பிரியா... அமைதியா இரு. சொல்லாம இருப்பேனா?"

"சொல்லுண்ணா... பார்த்தியா?"

"ம்... பார்த்தேன்.... பேசினேன்."

"என்ன சொன்னாள்?"

"நீ எப்படி இருக்கன்னு கேட்டா... உனக்க வருத்தப்பட்டாள்."

"எ...ன்ன?" - அதிர்ந்தாள். "எனக்காக அவ வருத்தப் பட்டாளா?"

"ம்..."

"எப்படிண்ணா...? நான்... நான் அவ குடும்பத்தையே சிதறடிச்சவ. நான் இந்த நிலைமையில இருக்கிறதைத் தெரிஞ்சு அவ சந்தோஷப்படலையா?"

"தப்பு பிரியா! விரோதியா இருந்தாலும் உயிருக்காகப் போராடிட்டு இருக்கிறவங்களைப் பார்த்து யாரும் சந்தோஷப்பட மாட்டாங்க."

"நான் சந்தோஷப்பட்டேனே அண்ணா... அவ ஒவ்வொரு நிமிஷமும் கஷ்டப்படுறதை நினைச்சி நான் சந்தோஷப்பட்டேனே... ஐயோ! அப்போ நான் மனுஷ ஜென்மமே இல்லையா... எவ்வளவு பெரிய மனசு அவளுக்கு... அவதான்னா மனுஷி. நான்... நான் ஒரு மிருகம்... புழு... கேவலமான பிறவி."

"பிரியா! நீயா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. யாரும் உன்னைத் தப்பா நினைக்கலை. அமைதியா படுத்து ஓய்வெடு."

"அதான் நிரந்தரமா எடுக்கப் போறேனே.... அதுக்கு முன்னாலயாவது என் ஆசை தீரப் பேசிக்கிறேனே..."

"இப்படியெல்லாம் பேசாதேம்மா... கஷ்டமா இருக்கு."

"உண்மைதானே அண்ணா... ஆனா நான் போறதுக்குள்ள செய்த பாவத்தைத் தீர்க்கணும்... அண்ணா! நான் திலோத்தமாவைப் பார்க்கணுமே..."

"எதுக்கும்மா?"



"நீ ஸாரி கேட்டா போதுமா? நான் கேட்க வேண்டாமா?"

"அதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம்மா... நீ இன்னும் ரொம்ப நாள் வாழப் போற... டிஸ்சார்ஜ் பண்ணின பிறகு ஒரு நாள் பார்த்து ஸாரி சொல்லிக்கலாம். இப்ப ரெஸ்ட் எடு."

"இல்லைண்ணா... நீ என்னைச் சமாதானப்படுத் துறதுக்காகப் பொய் சொல்ற..."

"இல்லடா... இப்பகூட டாக்டரைப் பார்த்திட்டுத்தான் வர்றேன். இதே மெடிஸனைக் கன்டினியூ பண்ணினா கொஞ்ச நாளுக்கு எந்தப் ப்ராப்ளமும் வராதுன்னு சொன்னார்."

"அந்தக் கொஞ்ச நாளுக்குள்ள நான் நிறையக் காரியம் பண்ணணும் அண்ணா..."

"என்ன பண்ணணும்?"

"முதல்ல அந்த திலோத்தமாவோட அப்பாவைப் பெரிய டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போய் அவரைக் குணமாக்கணும். அப்புறம் அவ தம்பியை..."

"அதை யெல்லாம் நானே சரி பண்ண ஏற்பாடு பண்ணிட்டேன்... பிரியாம்மா... நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே!"

"நீயா! என்ன அண்ணா செய்தாய்?"

"நீ சொன்னதையெல்லாம் செய்திட்டேன். இந்நேரம் டாக்டர் அவங்க வீட்டுக்குப் போயிருப்பார். அப்புறம் விஷ்ணுவைக் குணப்படுத்த அர்ஜீனை அனுப்பி யிருக்கேன்."

"அர்ஜுனையா? அவன் என்ன பண்ணுவான்?"

"அவன் எம்.ஏ., சைக்காலஜி படிச்சிருக்கான்ம்மா. அதோட தியானம், யோகா கிளாஸ் எல்லாம் நடத்துறான். அதனால அவனாலதான் விஷ்ணுவைக் கியூர் பண்ண முடியும்."

"அப்போ எல்லாப் பிரச்சனைகளும் சீக்கிரம் முடிஞ்சிடும். இல்லண்ணா...?"

"கண்டிப்பா..."

"அண்ணா! நாளைக்கு எக்ஸாம் இருக்குன்னு திலோகிட்ட சொல்லிட்டியா?"

"ம்... சொல்லிட்டேன். காலேஜுக்குப் போகச் சொன்னதும் அவ முகத்தில எவ்வளவு சந்தோஷம் தெரியுமா!"

"உண்மைதாண்ணா... நான் படிக்கிறதை ஜஸ்ட் ஒரு ஹாபியாத்தான் நினைப்பேன். ஆனா... அவ அதைத் தன்னோட குறிக்கோளா... கனவா நினைப்பாள். நான்தான் அவளை ரொம்பக் காயப்படுத்திட்டேன்."

"சரிடா! போனதைப் பத்திப் பேச வேண்டாம். இப்ப ரெஸ்ட் எடு."

"அண்ணா! எனக்காக நீ இன்னும் ஒரே ஒரு காரியம் செய்யணுமே..."

"என்னடா? சொல்லு. செய்யுறேன்."

"மறுக்க மாட்டியே...?"

"ம்ஹும்... சொல்லு..."



"நீ... நீ கல்யாணம் பண்ணிக்கணும். நான் உயிருடன் இருக்கும்போதே..." - தங்கையின் வார்த்தையில் திடுக்கிட்டுப் போனான்.

## 17

மழைக்கு ஏங்கிய மாந்தளிரே
உனக்கு நான் மழைச்சாரல்தான்
வியர்த்து வாடிய மெய்சிலிர்க்க
உனக்கு நான் சிறு தூறல்தான்!

நடையில் உற்சாகத் துள்ளலோடு வீட்டிற்குள் நுழைந்தாள் திலோத்தமா. கையில் ஸ்வீட் பாக்ஸ். வீட்டுக்குள் நுழையும்போதே நெய் மணம் நாசியை வருடியது.

அம்மா கேசரி செய்கிறார்களா! என்ன விசேஷம்? வீட்டில் எந்த நல்ல காரியம் என்றாலும் அம்மா கேசரி செய்வது வழக்கம். இன்று என்ன நடந்தது?

வாசலில் செருப்பைக் கழற்றும் போதே குரல் கொடுத்தாள். "அம்மா! அம்ம்மா..."

மகளின் உற்சாகக் குரலில் உள் அறையில் இருந்து வியர்வை வழிய வெளியே வந்தாள் சகுந்தலா. முகத்தில் பளிச்சென்ற புன்னகை.

"வந்திட்டியா... வா... வா. உன்னைத்தான் எதிர்பார்த்திட்டு இருந்தேன்."

"என் ம்மா விஷயம்? கேசரி வாசம் தெருவரை மணக்குதே..."

"முதல்ல கை, கால் அலம்பிட்டு வா... சொல்றேன்."

தாயின் உற்சாகம் தனக்கும் தொற்றிக் கொள்ள, தோள் பையைக் கழற்றினாள்.

"அம்மா! நானும் நிறைய சந்தோஷமான விஷயம் வெச்சிருக்கேன்."

"என்னது?"

"அது சஸ்பென்ஸ். முதல்ல நீங்கதான் சொல்லணும்."

"ரெண்டு பேரும் சீக்கிரமா சொல்லுங்க. அப்பதான் அப்பாவுக்குக் கேசரி சூடா கிடைக்கும். ஆறிப்போனா டேஸ்ட் குறைஞ்சிடும்!" - லேசாய்த் திணறினாலும் உற்சாகமாகவே பேசிய தந்தையை வியப்பாய் ஏறிட்டாள்.

"அப்பா! நீங்களா பேசினீங்க?" - வேகமாய்க் கட்டிலை நெருங்கினாள்.

"ஆமாம்மா. இன்னும் கொஞ்ச நாள்ல... நல்லா தெளிவாப் பேச ஆரம்பிச்சிடுவேன்." - நம்பிக்கையோடு பேசியவரைக் கண்களில் நீர் மின்னப் பார்த்தாள்.

"அ...ப்பா! இதெல்லாம் எப்படி?"

"அதை நான் சொல்றேன். முதல்ல நீ முகம் அலம்பிட்டுச் சாமி கும்பிடு. சாமி முன்னால ஒரு லெட்டர் இருக்கும். அதையும் எடுத்திட்டு வா. ம்... சீக்கிரம்..." - சகுந்தலா மகளை அவசரப்படுத்த, குழப்பமும் உற்சாகமுமாய்ப் பின்வாசலுக்கு ஓடினாள் திலோத்தமா.

கிணற்றில் நீர் இறைத்துச் சில்லென்ற நீரை முகத்தில் அறைந்து களைப்புத் தீர முகம் அலம்பினாள்.



கிணற்றடியில் கட்டப்பட்டிருந்த கொடிக் கயிற்றில் காய்ந்து கொண்டிருந்த டவலை உருவி முகம் துடைத்தாள். இதமாய் வீசிய தென்றலில் மரத்திலிருந்து சில பூக்கள் உதிர்ந்தன.

நிமிர்ந்து பார்த்தாள். நெல்லி மரம் பெரிதாய்... உயரமாய்க் கிளைகளைப் பரப்பிக் கொண்டு நின்றது. ஏராளமான பூக்களும் நடுநடுவே ஒருசில பிஞ்சுகளும் தெரிந்தன.

'அட! இது நெல்லி மரமா? இந்த வீட்டிற்கு வந்த இத்தனை நாளில் ஒருமுறை கூட கவனிக்கவில்லை. ம்... இந்தப் பூவெல்லாம் காய்க்கட்டும். அம்மாகிட்ட சொல்லி நெல்லிக்காய் ஜாம் செய்யச் சொல்ல வேண்டும்.'

நினைக்கும்போதே நாவில் எச்சில் ஊறியது. இனிப்பும் புளிப்புமாய் வெல்லப் பாகில் குளித்த நெல்லிக்காயைச் சாப்பிடும்போது அத்தனை ருசிக்கும். மாதம் ஒரு முறை அப்பா இதற்காகவே கோயம்பேடு மார்க்கெட்டிற்குச் செல்வதுண்டு.

"திலோ! முகம் அலம்புறியா? குளிக்கிறியா?" - வீட்டிற்குள்ளிருந்து அன்னையின் குரல் கேட்க, டவலைக் கொடியில் போட்டு விட்டு வீட்டுக்குள் ஓடினாள்.

"இதோ வந்திட்டேன்ம்மா..."

"விளக்கேத்தி சாமி கும்பிட்டு வா."

"ம்..." - அறையின் மூலையில் இருந்த சாமி படங்களின் முன்னே மரத்தால் செய்யப்பட்ட ஸ்டாண்ட் வீற்றிருக்க... அதில் எண்ணெய்யுடன் இருந்த காமாட்சி அம்மன் விளக்கை ஏற்றிக் கைகூப்பி வேண்டிக் கொண்டாள்.

கண்களைத் திறந்தபோது சாமி படத்தின் அடியில் வெள்ளை நிறக் கவர் இருந்தது. ஆர்வமாய் அதை எடுத்தாள். "அம்மா! என்ன இது?"

"பிரிச்சுப் பாரேன்..." - கணவனின் அருகே நின்றவாறு புன்னகையோடு கூறிய அன்னையைக் குழப்பமாய்ப் பார்த்து விட்டு கவரைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தவளின் முகம் வியந்து மலர்ந்தது.

அவளது கல்லூரியின் சார்பாக வந்திருந்த கடிதம் அது. கல்லூரியின் கடைசித் தேர்வு நாளை தொடங்க விருப்பதாகவும் இனியும் விடுமுறை எடுக்காமல் கல்லூரியில் வந்து சேரும்படியும் எழுதப்பட்டிருந்தது. கண்களில் நீர் துளிர்க்க... தாயிடம் ஓடினாள்.

"அம்மா! இது... இது எப்படி? யாரும்மா கொடுத்தாங்க?"

"உங்க காலேஜ் பியூனாம். வந்து தந்திட்டுப் போனார்."

"எப்படிம்மா இது? அந்தப் பிரியங்காதான் என்னோட சர்டிஃபிகேட்டைக் கிழிச்சி எறிஞ்சாளே..."

"திலோம்மா! அப்பாவுக்கு இப்படி ஆனதில நாமெல்லாம் முடங்கிப் போயிட்டோம். எதையும் சிந்திக்கலை... ஒரு முறை நீ காலேஜுக்குப் போயிருந்தா இத்தனை குழப்பமும் வந்திருக்காது."

"திலோம்மா! நீ நல்லா படிக்கிற பொண்ணாச்சே! அவ்வளவு அலட்சியமா உன்னை வெளியேத்திட மாட்டாங்கம்மா..." - என்ற தந்தையைக் கட்டிக் கொண்டாள்.

"ஆமாம்ப்பா... நான்தான் இதை யெல்லாம் யோசிக்கலை. உங்களையும் தம்பியையும் கவனிக்கவே



எங்களுக்குச் சரியா இருந்தது. உங்களோட மருத்துவச் செலவுக்கு என்ன பண்றதுன்னு யோசிச்சேனே தவிர, பிரியங்கா சொன்னது உண்மையா இல்லையான்னு யோசிக்காம... யோசிக்க நேரமில்லாம இருந்திட்டேன்."

"சண்டாளி! எம்புள்ளையோட மூளையை மழுங்க வெச்சிட்டாளே... நல்லவேளை எப்படியோ இந்த அட்ரஸ் அவங்களுக்குத் தெரிஞ்சு பரிட்சைக்கு முன்னால நமக்குத் தகவல் தந்திட்டாங்க. இல்லன்னா... என்ன ஆகியிருக்கும்?

"இப்படி ஒரு பொண்ணு இருப்பாளா? தாடகை மாதிரி வந்து ஆடினாளே... நான் வயிறு எரிஞ்சி சொல்றேன் திலோ! அவ நல்லாவே இருக்க மாட்டா. அவ ஆடின ஆட்டத்துக்கு அவளுக்கு நல்ல சாவே வராது."

"ஐயோ அம்மா!" - அவசரமாய்த் தாயின் வாயைப் பொத்தினாள்.

"வேண்டாம்மா.... உங்க வாயில இருந்து இந்த வார்த்தை வரக் கூடாதும்மா..."

"எனக்கு மனசு ஆறலை திலோ!"

"விடுங்கம்மா. நடந்ததை மறக்கிறதுதான் நமக்கு நல்லது. அதையே நினைச்சிட்டு இருந்தா மனசுல வன்மமும் வெறுப்பும்தான் வளரும். அப்புறம் நமக்கும் அவளுக்கும் வித்தியாசம் இல்லாமப் போயிடும்..." - என்ற மகளின் முகத்தை அன்பாய் வருடினாள் சகுந்தலா.

"நீ எம் புள்ளடி... உனக்கு எந்தக் குறையும் வராது."

"சகுந்தலா... எவ்வளவு நேரம்தான் குழந்தையைக் காக்க வைப்பாய். கேசரி எடுத்திட்டு வா. சூடு ஆறிடும்."

"நீங்க அவசரப்படுறது யாருக்காகன்னு புரியுது உங்களுக்குக் கேசரி கிடையாது."

"ஐயோ! ஏன்?"

"இன்னிக்கு வந்த டாக்டர் என்ன சொன்னாரு...? இனிப்பெல்லாம் சாப்பிடுறதைக் குறைக்கணும்னு சொன்னாரில்ல... மறந்திட்டீங்களா?"

"அவருக்கென்ன? சும்மா சொல்லிட்டுப் போவாரு... எனக்குக் கண்டிப்பா கேசரி வேணும்..." - குழந்தையாய் அடம் பிடித்த தந்தையைப் புன்னகையோடு பார்த்தாள் திலோத்தமா.

கடந்த சில நாட்களாய்க் கண்ணீரும் மௌனமுமாய்ப் பார்த்த தந்தையை... இன்று முகத்தில் நம்பிக்கையும் தெளிவுமாய்ப் பார்த்ததில் மனம் லேசானது. மடங்கியிருந்த இடக்கையில் விரல்களைப் பிரித்து நிமிர்த்தி விட்டாள்.

"அம்மா...! அப்பா சாப்பிடாம நாம என்னிக்குச் சாப்பிட்டிருக்கோம்? முதல்ல அப்பாவுக்குக் கொடுங்க. அப்புறம் விஷ்ணுவுக்கு... ஆமா விஷ்ணுவை எங்கே?"

"அவன் யோகா கிளாஸ் போயிருக்கான்ம்மா..."

"என்ன? யோகா கிளாஸா? இங்க ஏது யோகா கிளாஸ்? எப்படிப் போனான்?"

"திலோம்மா! இன்னிக்குக் காலையில இருந்தே நடந்தது எதையும் இன்னும் என்னால நம்ப முடியலை. நீ வேலைக்குப் போய்க் கொஞ்ச நேரத்தில நம்ம வீட்டுக்கு ஒரு கார் வந்தது."

"காரா?"



"ம்... அதில இருந்து மூணு டாக்டர் வந்தாங்க. கையில என்னென்னெல்லாமோ மிஷின் மாதிரி கொண்டு வந்தாங்க."

"எதுக்கும்மா வந்தாங்க?"

"நானும் இதைத்தான் கேட்டேன். அதுக்கு அவங்க... அப்பாவுடைய நண்பர் அனுப்பினதாச் சொன்னாங்க. அப்பாவோட உடம்பு சீக்கிரமே குணமாக்கிடலாம்னு சொன்னாங்க...."

"அப்பா! யாருப்பா அந்த நண்பர்?"

"எனக்கும் தெரியலம்மா... அவங்க ஏதோ பேர் சொன்னாங்கம்மா... சகுந்தலா! அது என்ன பேரு?"

"கண்ணபிரான்னு சொன்னாங்க..." - தாய் சொல்ல, புருவம் உயர்த்தினாள் திலோத்தமா.

'கண்ணபிரானா...! இது... நான் அடிக்கடி கேள்விப்பட்ட பெயர் ஆயிற்றே. எங்கோ கேட்டிருக்கிறேன். அட! இது பிரியங்காவின் அப்பா பெயர். கண்ணபிரான் பொண்ணு... ரஞ்சித்குமாரோட தங்கை... என அடிக்கடி சொல்வாளே! அப்படியென்றால் இதுவும் அவன் வேலைதானா? தங்கையால் ஏற்பட்ட இழப்புகளை அண்ணன் சீர் செய்கிறானோ?'

"எனக்கு இந்தப் பேர்ல எந்தச் சிநேகிதனும் கிடையாதும்மா. ஆனா அவங்க என்னோட பேர்... எனக்கு ஏற்பட்ட நோய் எல்லாம் தெளிவாச் சொல்றாங்க. இதைக் குணமாக்கணும்னு டாக்டர்களை அனுப்பினாராம். யார் அந்தக் கண்ணபிரான்?"

"விடுங்கப்பா! யாராவது உங்க பழைய நண்பரா இருக்கும். நீங்க மறந்திருப்பீங்க."

"இல்லம்மா...! எனக்கு அப்படி யாரும்..."

"அப்பா! ஒருவேளை இப்படி இருக்குமோ?"

"எப்படி?"

"நீங்கள் ஒரு நாளைக்கு நூறு வாட்டி கண்ணா கண்ணான்னு கூப்பிடுவீங்களே... அந்தப் பரம்பொருளே இதைச் செய்திருப்பாரோ?"

"என்ன?" - வியப்பாய்க் கேட்டாள் சகுந்தலா.

"ஆமாம்மா! கடவுள் நேரிடையா வரமாட்டார். இந்த மாதிரி யார் உருவத்திலயாவது வந்துதான் காப்பாத்துவார்." - மகளின் வார்த்தையைக் கேட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள் சகுந்தலா.

"என்னங்க... இப்படியெல்லாம் கூட நடக்குமா?"

"கண்டிப்பா நடக்கும்மா. உயிருக்குப் போராடிட்டு இருக்கிறவனைக் காப்பாத்துற டாக்டர்தான் அவனுக்குக் கடவுள். பசியில துடிக்கிறவனுக்கு ஒரு பிடி சாதம் போடுறவன்தான் கடவுளாத் தெரிவான்.

"தாங்க முடியாத மன வேதனையோடு கண்ணீர் விடும்போது நமக்கு ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசுறாங்களே... அவங்கதான் கடவுள். இப்படி ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொரு உருவத்திலேயும் கடவுள் இருக்காரும்மா..."

"அக்கா! நீ சொல்றது ஹன்ட்ரட் பர்சென்ட் உண்மை. நான் கூட இப்ப அதைப் பத்திதான் படிச்சிட்டு வர்றேன்..." -



என்றவாறே வீட்டிற்குள் வந்த விஷ்ணுவைக் கண்டு மூவரும் பிரமித்தனர்.

கலைந்த தலையும் வெறித்த பார்வையுமாய் இருந்தவனின் முகத்தில் புதிதாய் நம்பிக்கை ஒளி வீசியது. தலைமுடி சீராய் வெட்டப்பட்டு அழகாய் வாரி விடப்பட்டிருந்தது. தானாய் எழுந்து தம்பியை நெருங்கினாள் திலோத்தமா.

"தம்பி! இது... இது ஒண்ணும் கனவில்லையே?"

"நிஜமான நிஜம் அக்கா. பார்த்தியா... நான் எப்படி மாறிட்டேன்னு?"

"எ... எப்படிடா?"

"எல்லாம் எங்க யோகா மாஸ்டராலதான்.... அக்கா! அவர்கூட ஒரு பத்து நிமிஷம் பேசினாப் போதும்ங்கா... நம்ம மனசுல உள்ள பயம், குழப்பம் எல்லாம் போயிடுது. அவர் பேசப் பேசக் கேட்டுட்டே இருக்கலாம் போல இருக்குக்கா..."

"டேய் தம்பி! யாருடா அவர்? எவனாவது வசியம் பண்றவனா இருக்கப் போகுது..."

"ஆஹா... என்னவொரு முன்னெச்சரிக்கை. இந்த எச்சரிக்கை ஏன் மற்ற விஷயத்தில இல்லாமப் போச்சு?" - என்ற இனிய குரலில் அனைவரும் வாசல்புறம் திரும்ப, அர்ஜுன் நின்று கொண்டிருந்தான்.

"வாங்க ஸார்! உள்ளே வாங்க. அக்கா! இதுதான் என் யோகா குரு. பேர் அர்ஜுன்!" - விஷ்ணு பெருமையாய் அறிமுகப்படுத்த திலோத்தமாவின் வாய் உலர்ந்து போயிற்று.

"இதுவும் அவன் வேலைதானா?"

"இவனா...? இ...வரா?"

"ஏன்க்கா... ஸாரை உனக்கு முன்னாலயே தெரியுமா?"

"சேச்சே! நான் உங்க சிஸ்டரை இப்பத்தான் முதன்முறையா பார்க்கிறேன்." - அர்ஜுன் அவசரமாய்ச் சொல்ல, சகுந்தலா புன்னகைத்தாள்.

"வாங்க தம்பி! உட்காருங்க. காபி எடுத்திட்டு வர்றேன்."

"இல்லம்மா... நான் அவசரமாப் போகணும். விஷ்ணுவை டிராப் பண்ணிட்டுப் போகலாம்னு வந்தேன். விஷ்ணு! நாளைக்கும் கிளாஸ் அட்டெண்ட் பண்ணணும்..."

"கண்டிப்பா ஸார்! நீங்களே வந்து அழைச்சிட்டுப் போவீங்களா?"

"ம்... ஸ்கூல் முடிஞ்சதும் ரெடியா இரு. நானே வந்து அழைச்சிட்டுப் போறேன். சரியா?"

"சரிங்க ஸார்!"

"விட்ட பாடத்தையெல்லாம் படிச்சிடுவியா?"

"கண்டிப்பா ஸார். ரெண்டே நாள்ல பிக்-அப் பண்ணிடுவேன். என்னால முடியும்."

"வெரி குட்! இந்த நம்பிக்கை எப்பவும் கூடவே இருக்கணும்."

"இருக்கும் ஸார்!"

"சரி. அப்ப நான் வர்றேன். பை... வர்றேம்மா!" - அனைவரிடமும் விடைபெற்று அவன் புறப்பட்டு விட தம்பியை அருகே அழைத்தாள் திலோத்தமா.



"தம்பி! என்னடா சொல்லிட்டுப் போறார்?"

"படிக்கச் சொல்லிட்டுப் போறார் அக்கா. எக்ஸாம் வரப் போகுதில்ல...?"

"தம்பி!"

"ஆமாக்கா. எங்க ஸ்கூலுக்குப் போய் ஹெச்.எம். கிட்ட பேசிட்டுத்தான் வர்றோம். இந்த ஸார் என்ன பேசினாருன்னு தெரியாதுக்கா! ஆனா... நாளைக்கே ஸ்கூலுக்கு வந்திடுன்னு ஹெச்.எம். சொல்லிட்டாருக்கா."

"ஆண்டவா... கண்ணைத் திறந்திட்டப்பா!" - சகுந்தலா கைகூப்பினாள்.

"அம்மா! இனிமே அப்பாவோட கனவையெல்லாம் நான் நிறைவேத்துவேன். அப்பா! இனிமே எதை நினைச்சும் நீங்க வருத்தப்படக் கூடாது."

"இல்லைடா கண்ணா... எனக்கு இனி எந்த வருத்தமும் இல்லை. எம் புள்ளைங்களோட படிப்புப் போச்சேன்னுதான் ரொம்ப நொறுங்கிட்டேன். இப்ப என் ரெண்டு புள்ளைங்களும் பரிட்சை எழுதப் போறீங்க. இது போதாதா இந்தத் தகப்பனுக்கு?

"சீக்கிரமே நானும் எழுந்து நடமாட ஆரம்பிச்சிடுவேன். அதனால நீங்க அப்பாவைப் பத்திக் கவலைப்படாம பரிட்சைக்குப் படிங்க. படிப்புதான் முக்கியம்."

"அக்கா! அப்பா என்ன சொல்றாங்க? நீயும்..."

"ஆமா தம்பி...! இதோ பார் காலேஜ்ல இருந்து லெட்டர் வந்திருக்கு. நானும் நாளைக்கே காலேஜுக்குப் போகணும்."

"வாவ்! இது ரொம்ப சந்தோஷமான விஷயமாச்சே...!"

"மொதல்ல எல்லாரும் ஒண்ணா உட்காருங்க. நான் சுத்திப் போடுறேன். நம்மளைப் பிடிச்ச கிரகம் இதோட போகட்டும்."

"அம்மா! இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லிடுறேன். அதுக்கும் சேர்த்தே சுத்திப் போட்டுடுங்க."

"என்ன விஷயம்?"

"அம்மா! அப்பா பக்கத்தில போய் நில்லுங்க."

"எதுக்கும்மா?"

"நில்லுங்க, சொல்றேன்!" - என்றவாறு தனது கைப்பையைத் திறந்து ஜெயபால் தந்த இருநூறு ரூபாயை எடுத்து அன்னையின் கையில் கொடுத்தாள்.

"அம்மா! என்னுடைய முதல் சம்பாத்தியம் இது. என்னை ஆசிர்வதிங்கம்மா... அப்பா, நீங்களும்..." - என்றவாறு பெற்றவர்களின் காலைத் தொட்டு வணங்கினாள்.

"அமோகமா வாழ்வேம்மா... எழுந்திரும்மா!"

"அக்கா! நீ சம்பளம் வாங்கிட்டியா? ஒரு மாசம்கூட ஆகலையே!"

"தம்பி! இது சம்பளம் இல்லைடா. எனக்குக் கிடைச்ச சன்மானம். வெகுமதி!"

"வெகுமதியா! யார் கொடுத்தாங்க?"

"சொன்னா அசந்திடுவே!"

"அட! சொல்லுக்கா. ரொம்ப பில்ட்-அப் பண்ணாதே!"



"எல்லாரும் கேட்டுக்குங்க. இது நான் வரைஞ்ச ஓவியத்துக்காக எங்க முதலாளி கொடுத்த சன்மானம்."

"என்ன? நீ படம் வரைஞ்சியா!"

"ம்... எங்க கம்பெனி போர்டுல பிள்ளையார் படம் வரைஞ்சேன். அப்பா! பழைய போர்டு உடைஞ்சு போச்சப்பா. இனிமே நான் வரைஞ்ச போர்டுதான் கம்பெனி வாசல்ல தொங்கப் போகுது."

"அடி ராஜாத்தி! உன்னை எப்படிம்மா வரையச் சொன்னார்? நீ படம் வரையுறது ஜெயபால் சாருக்கு எப்படித் தெரியும்?"

"நீங்க அடிக்கடி சொல்வீங்களாமே... அப்பா!"

"அட... ஆமாம். படம் வரையத் தேவையான பொருள் வாங்கும்போது கேட்பார். சொல்லியிருக்கேன்!"

"அப்பா! நான் வரைஞ்ச படத்தைப் பார்த்திட்டு அப்படியே அசந்திட்டார். உடனே அடுத்த ஆர்டரும் கிடைச்சிடுச்சி..."

"அது என்ன ஆர்டர்? சுவத்தில விளம்பரம் எழுதுறதா?" - விஷ்ணு நக்கலாய்க் கேட்க, முறைத்தாள்.

"போடா! அப்பா... ஜெயபால் சாரோட அம்மா போட்டோ மழையில நனைஞ்சு வீணாகிப் போச்சாம். இன்னும் பத்து நாள்ல அவங்களோட நினைவு நாள் வருதாம். அதனால அந்தப் படத்தையும் என்னையே வரையச் சொன்னாருப்பா..."

மகளின் வார்த்தையில் நெகிழ்ந்து போனார் ராகவன். கண்கள் பனிக்க... புன்னகையோடு மகளின் தலை வருடினார்.

"வரைம்மா... தாராளமா வரை. நீ வரையுற படத்தை அந்தக் குடும்பமே கையெடுத்துக் கும்பிடப் போகுதே... இதைவிட வேறென்ன வேணும்? நல்லா வரைஞ்சு கொடு. ஆனா பணம் வாங்காதே."

"சரிப்பா! இந்தப் பணத்தையே வேண்டாம்னுதான் சொன்னேன். அவர்தான் ரொம்ப வற்புறுத்தித் தந்தார்."

"பரவாயில்லம்மா... பெரியவங்க தர்றதை மறுக்கக் கூடாது."

"ம்... இதே மாதிரி... அந்த ரஞ்சித் ஸார் தந்ததையும் மறுக்காம வாங்கியிருந்தா நமக்கு இவ்வளவு கஷ்டம் வந்திருக்காது... இல்லக்கா!" - விஷ்ணுவின் கேள்வியில் சட்டென்று முகம் வாடினாள் திலோத்தமா.

மகளின் வாட்டத்தைக் கண்டதும் மகனின் தலையில் குட்டினாள் சகுந்தலா. "ஏன்டா! அவளே எவ்வளவு சந்தோஷமா விஷயத்தைச் சொல்லிட்டு இருக்கா. இந்த நேரம் நீ ஏன் பழசைக் கிளறுற?"

"அம்மா! அதுக்காக இந்தக் கொட்டுற வேலையெல்லாம் வேண்டாம்."

"என்னது?"

"கொட்டினா வளர மாட்டேன்ம்மா. அப்பா மாதிரி வளர வேண்டாமா நான்?"

"டேய்! நல்லா சமாளிக்கிறேடா... சேட்டை பண்ணினா கொட்டுக் கிடைக்கும்."

"அம்மா! என்னைப் பகைச்சுக்க வேண்டாம். நான்தான் உங்களுக்குச் செயின் செய்து போடணும். நினைவிருக்கட்டும்."



"டேய்! நீ என்னடா செய்யுறது... சுண்டைக்காய்ப் பயலே! நீ படிச்சு வேலைக்குப் போய்... சம்பாதிச்சி செய்து போடுறதுக்குள்ள எங்க அம்மாவுக்கு வயசு ஆகிடும்."

"வயசானா என்ன?"

"நான் நினைச்சேன்னா... இன்னும் ரெண்டே நாள்ல அம்மா கழுத்தில ரெட்டைவடச் செயின் மின்னும்."

"என்ன?" - மூவரும் ஒரே குரலில் கேட்க...

திலோத்தமா பெருமையாய்ப் புருவம் தூக்கிச் சொன்னாள். "என்னை யாருன்னு நினைச்சீங்க? பெரிய ஆர்ட்டிஸ்ட்டாக்கும்."

"அக்கா! போதும் உன் பெருமை. இப்ப என்ன சொல்ல வர்றே?"

"அம்மா! உங்களுக்குச் செயின் பண்ண ஆர்டர் கொடுக்கணுமா? இல்லே... ரெடிமேடா வாங்கிடலாமா?"

"திலோத்தமா! இது என்ன விளையாட்டு?"

"விளையாட்டு இல்லம்மா... நிஜம். இதோ பாருங்க... இந்தப் பய நான் வரைஞ்ச படத்தை எப்படியெல்லாம் மட்டம் தட்டினான். அந்தப் படம்தான் ஏழு காலேஜ் சேர்ந்து நடத்திய ஓவியப் போட்டியில ஃபர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கியிருக்கு."

"என்ன...?"

"டேய் விஷ்ணு! பரிசு எவ்வளவு தெரியுமா? அஞ்சு ரூபா... பத்து ரூபா இல்லடா... ஒரு லட்சம். ஒரு பெரிய பிரைவேட் கம்பெனி ஸ்பான்ஸர் பண்றாங்க. எவ்வளவு? ஒரு லட்சம்... கேட்குதா?" - தம்பியின் காதில் சத்தமாய்ச் சொன்னாள் திலோத்தமா.

"என்ன? உன் படத்துக்கு ஒரு லட்சமா?" - என்றவாறு விஷ்ணு பொய்யாய் மயக்கம் வந்தது போல் நடிக்க... தம்பியின் முதுகில் மொத்தினாள்.

"விடுக்கா... ரொம்ப குதிக்காதே. உன்னோட படத்தைத் தேர்ந்தெடுத்த ஆளுக்கு ஏதாவது பார்வைக் கோளாறு இருந்திருக்கும். குத்துமதிப்பா செலக்ட் பண்ணியிருப்பாரு. உன் அதிர்ஷ்டம்... அவர் கை நீட்டிய இடத்தில உன் படம் இருந்திருக்கும்."

"டேய்..." - என்றவாறு பற்களைக் கடித்துக் கொண்டு தம்பியை அடிக்கப் பாய்ந்தாள் திலோத்தமா.

அவளிடமிருந்து தப்பிக்க தந்தையிடம் ஓடினான் விஷ்ணு. அவர்களின் விளையாட்டைப் பார்த்துப் பெற்றவர்களும் மனநிறைவோடு சிரிக்க வெகு நாட்களுக்குப் பிறகு அந்த வீட்டில் சிரிப்பலை பரவியது.

## 18

ஏதோ நினைவுகள் கனவுகள்
மனதிலே மலருதே
காவேரி ஊற்றாகவே
காற்றோடு காற்றாகவே!

**பி**ரியங்காவின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார் மருத்துவர். படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த பிரியங்கா... தன் அருகில் நின்று கொண்டிருந்த ரஞ்சித்குமாரிடம் கண்களால் சைகை செய்தாள்.

'கேளுண்ணா!'



'வெயிட் பண்ணு. கேட்கிறேன்...' - அவனும் ஜாடையாகவே சொல்ல...

மருத்துவர் புன்னகையோடு நிமிர்ந்தார்.

"என்ன? அண்ணனும் தங்கையும் என்ன ரகசியம் பேசறீங்க?"

"ஒ... ஒண்ணுமில்லை டாக்டர்!"

"பரவாயில்லை, சொல்லுங்க. என்ன ரஞ்சித் குமார்? தங்கை என்ன சொல்றாங்க?"

"வீட்டுக்குப் போகணுமாம் டாக்டர். ஒரு வாரமா ஒரே அடம்!"

"என்ன பிரியங்கா? கொஞ்சம் உடம்பு தெம்பானதும் வீட்டுக்குப் போயிடணுமா?"

"போரடிக்குது டாக்டர்! அம்மாவும் உடம்பு முடியாம இருக்காங்க. நான் வீட்டில இருந்தா அவங்களுக்குக் கொஞ்சம் ஹெல்ப்ஃபுல்லா இருக்கும்."

"நோ... நோ. இப்ப நீங்க எந்த வேலையும் செய்யக் கூடாது."

"வேலை செய்ய எங்க வீட்டில ஆள் இருக்கு டாக்டர்! என்னோட மிச்ச நாட்களை எங்க வீட்டில என் அம்மாவோட இருந்து நிம்மதியா கழிக்கணும்னு ஆசைப்படுறேன். ப்ளீஸ் டாக்டர்! என்னை டிஸ்சார்ஜ் பண்ணிடுங்களேன்."

"என்னம்மா இது? இப்பத்தான் தொடர்ந்து ட்ரீட்மெண்ட் பண்ணி... எழுந்து உட்கார்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கோம். இன்னும் கொஞ்ச நாள் இருந்தா..."

"இல்லை டாக்டர்! நான் இப்போ நார்மலாத்தான் இருக்கேன். இந்த மாதிரி ஹாஸ்பிடல்ல அடைஞ்சு கிடக்கிறது என்னோட மரணத்தை நினைவுபடுத்திட்டே இருக்கு. நான் எல்லாத்தையும் மறக்கணும்னு நினைக்கிறேன்.

"எப்படியும் மரணம் நிச்சயம். அதை நினைச்சி ஏன் பயப்படணும்? அதை ஏன் எதிர்பார்த்து மிரளணும்? வரும்போது வரட்டும். அதுவரைக்கும் நான் எந்த டென்ஷனும் இல்லாம... சுதந்திரமா இருக்கணும்னு ஆசைப்படுறேன்."

"அது சரிம்மா. ஆனா இந்த ட்ரீட்மெண்ட்டை நிறுத்தினா... மறுபடியும் மூச்சுத் திணறல், ப்ளட் வாமிட் வர சான்ஸ் இருக்கு. எப்போ என்ன ஆகும்னு சொல்ல முடியாதே?"

"ஐயோ! அப்ப இவ இங்கேயே இருக்கட்டும்... டாக்டர்! எத்தனை நாள் ஆனாலும் பரவாயில்லை. ட்ரீட்மெண்ட்டை நிறுத்த வேண்டாம்."

"அண்ணா! நீ ஏன் பயப்படுறே? நான் ஒண்ணும் ட்ரீட்மெண்ட்டை நிறுத்தணும்னு சொல்லலையே... ஹாஸ்பிடல் வேண்டாம்னுதானே சொல்றேன்."

"என்னடா சொல்றே?"

"ஆமாண்ணா! நீயும் எத்தனை நாள்தான் ஹாஸ்பிடல், வீடு, ஆபீஸ்ன்னு ஓய்வில்லாம சுத்திட்டே இருப்பே. பேசாம வீட்டுக்குப் போயிட்டா உன் சிரமத்தில பாதி குறையுமே..."

"நான் சிரமப்படுறேன்னு உன்கிட்ட சொன்னேனா?"



"நீ சொல்லாட்டி எனக்குத் தெரியாதா அண்ணா... நான் பழைய பிரியங்காவா இருந்திருந்தா... என்னைத் தவிர வேற யாரைப் பற்றியும் கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனா இப்ப அப்படியில்லைண்ணா...

"அடுத்தவங்களோட துயரம், வலி, வேதனை, சிரமம் எல்லாமே புரியுது. நீ எத்தனை நாள் தூங்காம என் பக்கத்தில உட்கார்ந்து காவல் காத்திட்டு இருக்க. வீட்டுக்குப் போயிட்டா... நீ ஆபீஸ் முடிஞ்சு வந்ததும் நாம எல்லாரும் சேர்ந்து உட்கார்ந்து... பேசி கவலைகளை மறக்க முயற்சிக்கலாம்.

"அப்பாவோட நினைப்பில முடங்கிக் கிடக்கிற அம்மாவைக் கொஞ்சம் தேற்றி எழ வைக்கலாம். என்னைப் பார்த்து எனக்காக அம்மா தன்னோட வேதனையை மறந்து நடமாடுவாங்களே... அதுக்காகத்தான் சொல்றேன்."

"அதெல்லாம் சரிம்மா. ஆனா ட்ரீட்மெண்ட்?"

"அதை வீட்டில வைச்சே கண்டினியூ பண்ணிக்கலாம். டாக்டர்! ஏதாவது ஒரு நர்ஸ் ஏற்பாடு பண்ணிக் கொடுங்க டாக்டர்! நீங்களும் டைம் கிடைக்கும் போது வீட்டுல வந்து என்னை செக்-அப் பண்ணிக்குங்க. எவ்வளவு ஃபீஸ்னாலும் ஓ.கே.

"ஆனா... நான் வீட்டுக்குப் போயே ஆகணும். ப்ளீஸ் டாக்டர்! என்னோட ஃபீலிங்ஸைப் புரிஞ்சுக்குங்க. நான்... எல்லாத்தையும் மறக்க நினைக்கிறேன்."

பிரியங்காவின் முகத்தில் தெரிந்த வேதனை ரஞ்சித் குமாரை அசைத்தது.

"டாக்டர்! பிரியா சொல்ற மாதிரி... வீட்டில வெச்சே ட்ரீட்மெண்ட்டைத் தொடர முடியுமா?"

"ம்... செய்யலாம். ரெண்டு பேர் கூடவே இருந்து கவனிக்கணும்."

"அப்போ... ரெண்டு நர்ஸை அரேஞ்ச் பண்ணிடுங்க டாக்டர். நான்... அம்மா எல்லாருமே பார்த்துக்கிறோம்."

"ஓ.கே. நேத்து ஒரு டெஸ்ட் பண்ணினோம் இல்லையா? அதுக்கான ரிப்போர்ட் இன்னிக்கு ஈவினிங் வந்திடும். ரிசல்ட் பார்த்திட்டு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லைன்னா நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுறேன்."

"தேங்க் யூ டாக்டர்!"

"பட் ஒன் கன்டிஷன். வீட்டிலதானே இருக்கோம்னு அலட்சியமா இருந்திடாதீங்க. மாத்திரை, மருந்தை கரெக்டா சாப்பிடணும். மாடிப் படிக்கட்டுல ஏற வேண்டாம். கூடுமான வரை ரெஸ்ட் எடுங்க. ரொம்பச் சத்தமா பேசவே கூடாது. அப்புறம் ஃபுட் அயிட்டத்தில அசைவமோ ஆயிலோ இல்லாம பார்த்துக்கணும்."

"அதையெல்லாம் நான் கவனிச்சிக்கிறேன் டாக்டர்!"

"ஓ.கே. ஈவினிங் ரிப்போர்ட்ஸ் வந்ததும்... வந்து பார்க்கிறேன்."

"ஓ.கே. டாக்டர்!"

"டேக் கேர்!" என்றவாறு டாக்டர் விலகியதும்... தங்கையைப் பார்த்துப் புன்னகைத்தான் ரஞ்சித்.

"ம்... எப்படியோ டாக்டரைச் சம்மதிக்க வெச்சுட்டியே... திருப்திதானே?"



"ம்ஹூம்..." - மறுப்பாய்த் தலையாட்டினாள்.

"என்ன?"

"நீ சம்மதிச்சாத்தான் எனக்கு முழுத் திருப்தி."

"இதுல நான் சம்மதிக்க என்னம்மா இருக்கு? டாக்டர் போகச் சொல்லிட்டா... அடுத்த நிமிஷம் உன்னைக் கூட்டிட்டுப் போயிடுவேன்."

"நான் அதைச் சொல்லலை..."

"பின்னே?"

"உன்கிட்ட சொன்னேனே... ஒரு விஷயம்!"

"என்ன விஷயம்?"

"அதான் அண்ணா! உன் கல்யாண விஷயம்?" - பிரியங்கா சொன்னதும்... அதுவரை புன்னகையோடு இருந்தவனின் முகம் மாறியது.

"இப்ப எதுக்கு அந்தப் பேச்செல்லாம்?"

"அண்ணா! நான் இருக்கும்போதே நம்ம வீட்டில ஒரு நல்ல காரியம் நடக்கணும் அண்ணா... நான் அதைப் பார்க்கணும்."

"பிரியா... நான்?"

"ப்ளீஸ் அண்ணா... தயவு செய்து மறுத்திடாதே. நான் எனக்காக மட்டும் இதைச் சொல்லலை. அம்மாவையும் மனசில வெச்சிட்டுத்தான் சொல்றேன்."

"என்ன?"

"நீயே யோசிச்சிப் பாருண்ணா. நானும் போயிட்ட பிறகு அம்மா நிலைமை என்ன ஆகும்? அப்பாவும்

இல்லை. நீயும் பிசினெஸ், ஆபீஸ்ன்னு வெளியே போயிடுவ. அம்மா மட்டும் வீட்டில தனியா எவ்வளவு கஷ்டப்படுவாங்க?"

"அதுக்கு...!"

"இப்ப நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா... நானும் கொஞ்ச நாளைக்கு எந்தக் கவலையும் இல்லாம... புது அண்ணியோட சந்தோஷமா இருப்பேன். ஒரு நாள் நான் போயிட்டாக்கூட... அம்மாவை என்னோட இழப்பு பலமா தாக்காது.

"மருமகள்ங்கிற உறவு அந்த இழப்பை ஈடு செய்யும். அப்புறம் பேரன், பேத்தின்னு அவங்க உலகம் சந்தோஷமானதா ஆகிடும். நானே கூட உனக்கு மகளா வந்து பிறக்கலாம். உங்க வருத்தத்தைப் போக்கலாம்."

"பிரியா!"

"அண்ணா! எனக்குத்தான் உன்னால எந்த நல்லதும் செய்து பார்க்க முடியாமப் போச்சு. எனக்காவது ஒரு வாய்ப்புத் தா அண்ணா... தயவு செய்து எனக்காகக் கல்யாணம் பண்ணிக்க அண்ணா!" - தங்கையின் வார்த்தையில் இழையோடிய வருத்தம் உணர்ந்தவனாய்ப் பெருமூச்சு விட்டான் ரஞ்சித்குமார்.

'அவளது நியாயமான ஆசைதானே இது! இதை நிறைவேற்றினால் என்ன குறைந்து விடும்? போகின்ற ஆத்மா எந்த ஏமாற்றமும் குறையும் இல்லாமல் நிம்மதியாய்ப் போகட்டும்.

அம்மாவும் பாவம்தான். கணவரின் இழப்பையும் மகளின் நிலையையும் தாள முடியாமல் படுக்கையில்



உண்ண மணமின்றி... உறங்க வழியின்றித் தவிப்பதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறான். தன்னுடைய திருமணம் இவர்களது துயரத்தைப் போக்கும் என்றால்... இவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் என்றால்... செய்து கொள்ளலாமே!

வருகின்ற புது உறவின் மகிழ்ச்சியில் பிரியங்காவின் வாழ்நாள் கூட நீடிக்கலாம். நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும். சம்மதித்து விடலாமா?'

"என்ன அண்ணா யோசிக்கிற? இன்னும் எவ்வளவு நாள்தான் இப்படியே இருப்பாய்? நம்ம குடும்பமும் விருத்தியடைய வேண்டாமா? நீயாவது குடும்பம்... குழந்தைன்னு சந்தோஷமா வாழணும் அண்ணா. என்னோட கடைசி ஆசையும் இதுதான்!"

"என்னம்மா இது? ஏன் பெரிய வார்த்தையெல்லாம் பேசுறே?"

"அப்போ... சரின்னு ஒரு வார்த்தை சொல்லுண்ணா."

"சரி. கொஞ்ச நாள் போகட்டும்... பார்க்கலாம்!" என்றதும் மலர்ந்தாள்.

"கொஞ்ச நாள்ன்னா?"

"ஒரு... ஒரு மாசம் போகட்டுமே!"

"அவ்வளவு நாள் எதுக்குண்ணா? ஒரு பத்துப் பதினைந்து நாள்ல பண்ணிடலாமே!"

"என்ன பிரியா விளையாடுறியா? அப்பா இறந்து இன்னும் பதினாறாம் நாள் காரியம் கூட முடியலை. அதுக்குள்ள நாம இதைப் பத்திப் பேசுறதே தப்பு. ஏதோ நீ சொல்றதாலதான் சம்மதிச்சேன்."

"ஸாரி அண்ணா! நான்... இதை யோசிக்கவே இல்லை."

"முதல்ல டிஸ்சார்ஜ் பண்ணட்டும். வீட்டுக்குப் போய் அப்பாவுக்குச் செய்ய வேண்டிய காரியத்தை யெல்லாம் செய்து முடித்து விட்டு இதைப் பத்திப் பேசலாம்."

"சரிண்ணா! நீ இவ்வளவு சம்மதிச்சதே போதும். இனி எனக்கு எந்த மனக் குறைவும் இல்லை. நிம்மதியா கண் மூடுவேன்."

"பிரியா! நான் உன் விருப்பப்படி கல்யாணம் செய்துக்கணும்னா நீ எனக்கு ஒரு உதவி செய்யணும்..."

"சொல்லுண்ணா... எதுவா இருந்தாலும் பண்றேன்."

"இனிமே உன் வாயில இருந்து எந்த அபசகுனமான வார்த்தையும் வரக்கூடாது. உன் உடம்பைப் பத்தியோ உன்னோட நோயைப் பத்தியோ நீ நினைக்கவே கூடாது. இதுக்கு முன்னால நீ எப்படிக் கலகலப்பா... சுறுசுறுப்பா சுத்தி வந்தியோ... அதே மாதிரிதான் இனிமேலும் இருக்கணும். இருப்பியா?"

"இருப்பேன் அண்ணா! இனி எதைப் பத்தியும் கவலைப்பட மாட்டேன்."

"ம்... அப்ப சரி. எல்லாம் உன் விருப்பம் போல நடக்கட்டும். நீ ரெஸ்ட் எடு. நான் ஆபீஸ் போயிட்டு ஈவினிங் வர்றேன்."

"அண்ணா! உன்னோட முடிவு கன்ஃபார்ம்ட் தானே?"

"இதில என்ன சந்தேகம் உனக்கு?"



"அப்போ சுஹாசினிக்குப் போன் பண்ணிச் சொல்லிடவா?"

தங்கையின் கேள்வியில் திடுக்கிட்டான். "எ...ன்ன? சுஹாசினிக்கா...! ஏன்?"

"இதென்ன அண்ணா கேள்வி? அவகிட்டதானே முதல்ல சொல்லணும். ரொம்ப சந்தோஷப்படுவா..."

"பிரியா! அவகிட்ட ஏன் சொல்லணும்?"

"என்ன அண்ணா நீ? அவதானே கல்யாணப் பொண்ணு. அவகிட்டதானே முதல்ல சொல்லணும்."

"வாட்?" - பலமாய் அதிர்ந்தான்.

"ஏன் அண்ணா? இது ஏற்கெனவே பேசின விஷயம்தானே!"

"நோ. எனக்கு... அப்படி எந்த எண்ணமும் இல்லை. அதை அவகிட்டயே சொல்லிட்டேன்."

"அண்ணா!"

"பிரியா... எனக்கு அவமேல எந்த ஈடுபாடும் வரலை. அவளோட செயல்பாடுகள் வேற... என்னுடைய எண்ணங்கள் வேற... எங்களுக்குள்ள ஒத்துப் போகாது."

"அண்ணா! என்ன இப்படிச் சொல்றே?"

"என் மனசில உள்ளதைச் சொல்றேன்... பிரியா! என்னைக் கேட்காம அவகிட்ட எதையும் நீ சொல்ல வேண்டாம். அவ வர்றதுக்குள்ள என்னோட மேரேஜ் முடிஞ்சாலும் ஓ.கே.தான்."

"அண்ணா! அவதான் பொண்ணுன்னு முடிவான தாலதான் நான் இவ்வளவு அவசரப்பட்டேன். அவளை என் அண்ணியா கற்பனை பண்ணித்தான் உன்கிட்ட சம்மதம் கேட்டேன்."

"பிரியா! லைஃப்ங்கிறது வெறும் கற்பனை இல்லடா. அதை அனுபவிச்சி வாழணும். மனசுக்குப் பிடிச்ச பெண்ணோட வாழ்றதுதான் வாழ்க்கை. அதுல கிடைக்கிற நிறைவு வேறு எதிலும் கிடைக்காது."

பிரியங்காவின் முகம் நொடியில் மாறியது. "என்ன மனசுக்குப் பிடிச்ச பெண்ணா?"

தங்கையின் கேள்வியில் சட்டெனச் சுதாரித்தான். "அது... மனசுக்குப் பிடிச்சன்னா... பார்த்ததும் ஒரு பொண்ணைப் பிடிக்கணும். அவகூட வாழ்ந்தா சந்தோஷமா இருக்கும்னு மனசில தோணணும்."

"அப்படி உனக்குத் தோணுதா?"

"எ...ன்ன?"

"இல்ல... எந்தப் பொண்ணையாவது பார்த்து உனக்கு அப்படித் தோணியிருக்குதான்னு கேட்டேன்?" - கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"இ... இல்லை. ஆனா சுஹாசினியைப் பார்த்தா அப்படித் தோணலை..." என்றான் சமாளிப்பாய்.

பிரியங்கா குழம்பிப் போனாள்.

'அண்ணனிடம் ஏதோ மாற்றம் தெரிகிறதே... என்னிடம் மறைக்கிறான். என்னவாய் இருக்கும்? ஏதேனும் பெண்ணைக் கண்டு மையல் கொண்டுள்ளானா?



ஒருவேளை... அந்தத் திலோத்தமாவாய் இருக்குமோ! சேச்சே... இருக்காது. ஒரு முறையோ இரண்டு முறையோ பார்த்திருப்பான். உடனே பிரியம் வந்து விடுமா?

இருக்காது. வேறு யாரோ? எதற்குக் குழப்பம்? பேசாமல் இவனிடமே கேட்டு விடலாம்.'

"அண்ணா! உனக்கு வேறு யாரையாவது பிடிச்சிருக்கா?"

"என்ன?"

"இல்ல... சுஹாசினி வேண்டாம்ன்னா வேறு ஒரு பெண்ணைப் பார்க்கணுமே. ஒருவேளை உனக்குத் தெரிந்த பெண்களில் யாரையேனும் பிடித்திருந்தால்... அவளையே பேசி முடித்து விடலாமே... அதான் கேட்கிறேன்."

"பிரியா! டாக்டர் என்ன சொன்னார்? நீ பேசவே கூடாதுன்னு சொன்னாரில்ல... நீயானா பேசிட்டே இருக்க. பேசினது போதும். ரெஸ்ட் எடு."

"அண்ணா! பேச்சை மாத்தாதே. ஆரம்பித்ததை இடையில் விட வேண்டாம். சொல்லு... நீ யாரையேனும் விரும்புகிறாயா?"

"ம்ப்ச்! அப்படியெல்லாம் எதுவும் இல்லை."

"ஷ்யூர்!"

"ம்... ஷ்யூர்."

"சரி. நான் நம்புறேன். இப்பச் சொல்லுண்ணா... உனக்கு எந்த மாதிரி பொண்ணு பார்க்கணும்?"

"அதை ஒரு மாதம் கழித்துப் பார்க்கலாம்."

"நீ சொல்லு. இப்ப இருந்தே தேட ஆரம்பிச்சாத்தானே பொண்ணு கிடைக்கும்."

"உனக்கு ஏம்மா வீண் சிரமம்? நீ கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடு. நடக்க வேண்டியது தானா நடக்கும்."

"இப்படிச் சொன்னா எப்படி?"

"இப்போதைக்கு இவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்... பிரியா! நான் கிளம்புறேன்."

"ஒரு நிமிஷம் அண்ணா..." - அழுத்தமாய் அழைத்தாள்.

"என்னம்மா?"

"உனக்கு என் மேல நம்பிக்கை இல்லையா அண்ணா!"

"என்ன?"

"நான் இன்னும் பழைய பிரியங்காங்கிற நினைப்புல தானே என்கிட்ட மறைக்கிற!"

"என்ன பிரியா இது?"

"ஆமாண்ணா. நான் ஆணவம் பிடிச்சவதான். அகம்பாவம் பிடிச்சவதான். எல்லாரையும் துச்சமா நினைச்சவதான். ஆனா... அதெல்லாம் அப்போண்ணா... பணமும் அழகும் திமிரும் இருந்த தைரியத்தில் போட்ட ஆட்டம் அது.

"ஆனா... இப்ப அதெல்லாம் போயிடுச்சி அண்ணா. என்னோட ஆட்டமெல்லாம் அடங்கிடுச்சி. இன்னும் கொஞ்ச நாள்ல சுத்தமா அடங்கிடும்."



"பிரியா!"

"எமனுக்கு முன்னால எல்லாருமே அடங்கிப் போயிடுறோம். நான் மட்டும் விதிவிலக்கா? என் ஆத்திரம், ஆணவம், திமிரு எல்லாமே அப்பாவோட உடம்போட மண்ணுக்குள்ள போயிடுச்சிண்ணா...

"இருக்கப் போகிற கொஞ்ச நாள்ல ஏதாவது நல்லது செய்து நிம்மதியா மரணிக்கணும்னு நினைக்கிறேன். ஆனா... நீ என்னை நம்பலை. உன் மனசில உள்ளதைச் சொன்னா... எங்கே நான் அதை மறுத்திடுவேனோன்னு பயப்படுறே... அதனாலதான் என்கிட்ட மறைக்கிறே...!"

"இல்லைடா! அப்படி யெல்லாம் எதுவுமே இல்லைம்மா."

"பொய். பொறந்ததில இருந்து உன் முகத்தைப் பார்த்தே வளர்ந்தவ நான். எந்த ஒரு சின்ன மாற்றத்தையும் கண்டுபிடிச்சிடுவேன். உண்மையைச் சொல்லுண்ணா... உன் மனசில ஒரு பொண்ணு இருக்காள்ல?"

"பிரியா...!"

"நான் நினைக்கிறது சரின்னா... அந்தப் பொண்ணு திலோத்தமா! கரெக்ட்டா?" - ரஞ்சித்குமாரின் முகம் வியந்து மலர்ந்தது.

"பார்த்தியா? உன் முகமே காட்டிக் கொடுத்திடுச்சி. நான் சொன்னது சரிதானே?" - குறுஞ்சிரிப்போடு கேட்டவளிடம் மௌனமாய்த் தலையசைத்தான்.

"ம்..."

"என்ன அண்ணா நீ? இதைச் சொல்ல ஏன் தயங்கினாய்?"

"அவசரப்படாதே பிரியா. அந்தப் பொண்ணைப் பார்த்ததும் மனசுக்குப் பிடிச்சது உண்மைதான். அவளுடைய நினைவுகள் அப்பப்ப வர்றதும் உண்மைதான். ஆனா..."

"என்ன ஆனா?"

"இதையெல்லாம் வெச்சு நாமே எந்த முடிவையும் எடுத்திடக் கூடாது. ஏன்னா நம்மால அந்தப் பொண்ணு ரொம்பக் காயப்பட்டிருக்கா. அது... அவ மனசில ஆழமாப் பதிஞ்சிருக்கும்."

"அண்ணா!"

"என்னதான் டாக்டர்... வைத்தியம்னு அவளுக்குத் தெரியாம ஹெல்ப் பண்ணினாலும் அவ அப்பாவால உடனே எழுந்து நடமாட முடியாதும்மா. பாவம்! வயதான மனிதர். அந்தக் குடும்பத்தின் ஆணிவேர். இப்போ இப்படி படுக்கையில கிடக்கிறாரு. அவளால அதை மறக்க முடியுமா?"

"அண்ணா!" - தொண்டை அடைத்தது பிரியங்காவிற்கு.

"நீ சாதாரணமா செய்த ஒரு காரியம் இப்போ எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கு, பார்த்தியா? தன் பெண்ணோட கல்யாணத்தைப் பத்தி எத்தனை கனவு கண்டிருப்பார்... அந்தப் பெரியவர்....!

"இந்த நிமிஷம் அவர் மனசில எவ்வளவு வேதனை அழுத்திக்கிட்டு இருக்கும். அவரால இப்ப வேலைக்குப் போக முடியாது. அந்தக் குடும்பம் சாப்பிடணுமே... அதுக்காகத்திலோ கஷ்டப்பட்டு உழைக்கிறா. நம்மால நேரடியா உதவ முடியாது.



"அப்படியே உதவினாலும் அதை அவங்க ஏத்துக்க மாட்டாங்க... தன்மானம் உள்ளவங்க. அதுக்காகத்தான் மறைமுகமா ஹெல்ப் பண்ணிட்டு இருக்கேன். ஓவியப் போட்டியோட பரிசு கூட நான் தர்றேன்னு அவளுக்குத் தெரியாது.

"தெரிஞ்சா ஏத்துக்க மாட்டா. அதனால என் ஃபிரண்டோட கம்பெனி மூலமா கொடுக்க ஏற்பாடு பண்ணியிருக்கேன். விஷ்ணு சின்னப் பையன். துடிப்பானவன். அதனால சட்டுன்னு தெளிஞ்சிட்டான். ஆனா அவங்க அப்பா...?

"பெற்ற தகப்பன் இப்படி இருக்கும்போது எந்தப் பெண்ணாவது தன்னோட கல்யாணத்தைப் பற்றி நினைப்பாளா? அதுவும் தகப்பனோட நிலைக்குக் காரணமானவனை ஏத்துப்பாளா? நிச்சயமா மாட்டாள்."

"அண்ணா! இதுக்கு நீ எந்த விதத்திலும் காரணமில்லையே?"

"ஆனா... அது அவளுக்குத் தெரியாதே! அப்படியே தெரிஞ்சாலும் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாள்."

"ஏன்?"

"ஏன்னா... நான் உன்னோட அண்ணன். அவளைப் பொறுத்த வரை நாம மோசமானவங்க. மனுஷ ஜென்மங்களே இல்லை."

"அண்ணா...! அன்னிக்கு... என்னைப் பத்தி விசாரிச்சா... வருத்தப்பட்டான்னு சொன்னியே!"

"அது அவனோட இயல்பு பிரியா! மனிதாபிமானச் செயல். அதை வெச்சிக்கிட்டு நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு போய்க் கேட்கலாமா? காறித் துப்ப மாட்டா...?"

"அண்ணா!"

"இதையெல்லாம் யோசிச்சுத்தான் நான் என் மனசில உள்ளதை உன்கிட்ட சொல்லலை. நடக்கவே நடக்காதுன்னு தெரிஞ்ச பிறகு அதை ஏன் வெளியே சொல்லணும்? என் மனசில அவ இருக்கா. ஆனா அவ மனசில நான் இருக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும்.

"தெரிஞ்சும்... அவளை டிஸ்டர்ப் பண்ண விரும்பலை. ஏற்கெனவே நம்மால அவ பட்ட கஷ்டம் போதும். இனிமே எந்தக் கஷ்டத்தையும் கொடுத்திடக் கூடாது. அதனால இந்தப் பேச்சை அப்படியே விட்டுடு. நீ ரெஸ்ட் எடு. நான் கிளம்புறேன்!" - கனத்த மனத்தோடு ரஞ்சித்குமார் வெளியேற...

நீர் நிறைந்த கண்களோடு அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் பிரியங்கா.

## 19

ஊமையின் கனவை யாரறிவார்? - என்
உள்ளத்தின் கதவை யார் திறப்பார்?
மூடிய மேகம் கலையும் முன்னே
நீ பாடி வந்தாயோ வெண்ணிலவே!

'**கீ**ர்ர்ர்...'ரென்ற மணியோசையில் மாணவியர் கூட்டம் எழுந்தது. கையிலிருந்த பரிட்சை பேப்பர்களைக் கொடுத்து



விட்டு வீட்டுக்குச் செல்லும் அவசரத்தோடு அனைவரும் வெளியேற, திலோத்தமா தனது பேப்பரை நிதானமாய் மேற்பார்வையிட்டு மடித்தாள். அருகே வந்த உமா குரல் கொடுத்தாள்.

"திலோ! எல்லாம் எழுதிட்டியா?"

"ம்... முடிச்சாச்சு... நீ?"

"நான் எப்பவும் போலத்தான். எப்படியும் செவண்டி பர்ஸன்டேஜ் கிடைச்சிடும். சரி... நீ பேப்பரைக் கொடுத்திட்டு வா. நான் வண்டியை எடுத்திட்டு நிற்கிறேன்."

"சரிப்பா!" - என்றவாறு பேப்பரை மடித்துப் பேராசிரியரை நெருங்கிக் கொடுத்தாள்.

"என்னம்மா! கொஸ்டின் பேப்பர் ஈஸியா இருந்ததா?"

"இருந்தது மேம்! ஓரளவுக்கு எல்லாம் எழுதிட்டேன்."

"வெரி குட். நெக்ஸ்ட் எக்ஸாமுக்கு இன்னும் டு டேஸ் இருக்கு. நல்லா பிரிப்பேர் பண்ணிக்கோ."

"ஓ.கே. மேம்!"

"போயிட்டு வா..." - புன்னகையோடு விடை பெற்றுக் கீழே இறங்கி வர... அரச மரத்தின் அடியில் தன் இரு சக்கர வாகனத்தோடு நின்றிருந்தாள் உமா.

"போலாமா திலோ?"

"உமா! நீ வண்டியில போயிடு. நான் கொஞ்சம் பல்லாவரம் வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"பல்லாவரமா! அங்கே எதுக்குடி?"

"நேற்றே சொன்னேனே... நான் வேலை செய்த கம்பெனியோட ஓனர் அவங்க அம்மா போட்டோவை வரைஞ்சு தரச் சொன்னார்."

"ஓ! அதுக்கா...? எக்ஸாம் முடிஞ்சதும் வரையேன் திலோ!"

"இல்லப்பா... இன்னும் ரெண்டு நாள்ல அவங்களோட நினைவு நாள் வருதாம். நான் இன்னிக்கே வரைஞ்சு முடிச்சாத்தான் சரியா இருக்கும். காலையில வரும்போதே வீட்டில சொல்லிட்டு வந்திட்டேன். லேட்டானா... விஷ்ணு வந்து கூட்டிட்டுப் போயிடுவான். நீ கிளம்பு உமா!"

"திலோ! எக்ஸாமுக்குப் படிக்க வேண்டாமா?"

"கம்ப்யூட்டர் எக்ஸாம்தானே! அதுக்கு ஒரு நாள் போதும். டயமாச்சு... நீ கிளம்பு."

"வண்டியில ஏறு திலோ! உன்னை பஸ் ஸ்டாண்ட்லே இறக்கி விட்டுடுறேன்."

"உனக்கு டயமாகுமே!"

"என்ன பெரிய டைம்? எக்ஸ்ட்ரா ஒரு ஃபைவ் மினிட்ஸ் ஆகும். ஏறு..."

"சரி!" - என்றவள் புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக் கொண்டு பின்னால் அமர்ந்து கொள்ள, வண்டியை உசுப்பினாள் உமா. பிரதான வாயிலைக் கடந்து சாலையில் இறங்கி மிதமான வேகத்தில் செல்ல... உமா குரல் கொடுத்தாள்.

"திலோ! சாப்பாடு கொண்டு வந்தியா?"

"ம்... பேகில இருக்கு."



"அப்ப சாப்பிட்டுட்டுக் கிளம்பியிருக்கலாமே?"

"வேண்டாம்ப்பா. அப்புறம் லேட்டாகிடும். இப்பப் போனாத்தான் பஸ்ஸில கூட்டம் இருக்காது."

"லைஃப்ல நாம எதிர்பார்க்காதது எல்லாமே நடக்குது இல்ல... திலோ!"

"என்ன திடீர்னு?"

"இத்தனை நாளா நீ காலேஜுக்கு வரலைன்னதும் நான் திண்டாடிப் போயிட்டேன் திலோ! அன்னிக்கு அந்த ரஞ்சித்குமாரை நேரில பார்த்ததும் கிழிகிழின்னு கிழிச்சிட்டேன். மனுஷன் ஆடிப் போயிட்டார்."

"அச்சோ! ஏன் உமா அவரைத் திட்டினே?" - பதறினாள் திலோத்தமா.

"அந்த நேரம் எனக்கு அவ்வளவு கோபம். உன் படிப்பு, தம்பியோட படிப்பு, நீ வேலைக்குப் போனது... அப்பாவோட நிலைமை... இதையெல்லாம் விட நீ எங்கே இருக்கேன்னே தெரியாத தவிப்பு... எல்லாமா சேர்ந்து அவரை வாட்டியெடுத்திட்டேன்."

"நாமதான் தப்பா நினைச்சிருக்கோம் உமா! ஆனா நடந்த சம்பவத்துக்கும் அவருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அப்ப அவர் ஊர்லயே இல்லையாம்..."

"ம்... சொன்னார். அதுக்குப் பிறகுதான் அவர் பக்கம் இருந்த நியாயம் எனக்கும் தெரிஞ்சது. எல்லாம் அவ... அந்த அலட்டல்காரி செய்த வேலைதான். கடவுள் இருக்கார்... திலோ!

"பார்த்தியா? உன்னைப் பரிட்சை எழுத விடாம பண்ணணும்னு நினைச்சாள்ல... இன்னிக்கு அவளே வர

முடியலை பார்த்தியா? உடம்பு சரியில்லையாம்... அப்படி யெல்லாம் எதுவும் இருக்காது திலோ!"

"ஏன் அப்படிச் சொல்றே?"

"விஷ்ணு அவ பல்லை உடைச்சிக் கையில கொடுத்தானில்ல... அந்த ஓட்டை வாயோட வந்தா எப்பவும் சிரிப்பாளே ஹா... ஹா...ன்னு. அப்படிச் சிரிக்க முடியாதே. அதான் வரலை."

"அப்படியெல்லாம் சொல்லாதே உமா!"

"ஏன்... ஏன் சொல்லக்கூடாது. அவளுக்குக் கூடவா இரக்கம் பார்க்கிற நீ? அவ விஷ நாகம்டி."

"அவ யாராவும் இருந்திட்டுப் போறா... விடு!"

"அப்படியெல்லாம் விடக்கூடாது திலோ! அவ அடிபட்ட பாம்பு. எதுக்கு அடங்கி இருக்கான்னு தெரியலை. எதுக்கும் உஷாராவே இருக்கணும்."

"இனிமே அவளால நம்மை ஒண்ணும் பண்ண முடியாது உமா!"

"அப்படின்னு யார் சொன்னது?"

"நான்தான் சொல்றேன்... உமா! நமக்கு எக்ஸாம் முடிஞ்சதும் ஒரு நாள் பிரியங்காவைப் போய்ப் பார்த்திட்டு வரலாமா?"

"திலோ! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"ஏய்..."

"பின்னே... அவளைப் பார்க்கிறதே பாவம். அதுவும் சாத்தானைத் தேடி... அதோட இருப்பிடத்திற்கே போகணும்னு சொல்றியே?"



"நான் சொல்றதுக்குக் காரணம் இருக்கு உமா!"

"என்ன காரணம்?"

"எக்ஸாம் முடியட்டும்... சொல்றேன்."

"ஏன்? இப்பச் சொன்னா என்னவாம்?"

"வேண்டாம் உமா. உனக்குத் தெரிஞ்சா காலேஜ் முழுக்கத் தெரிஞ்சிடும். அப்புறம் எல்லாரும் போய்ப் பிரியங்காவை ரெஸ்ட் எடுக்க விடாம டிஸ்டர்ப் பண்ணிட்டே இருப்பாங்க. அது அவளுக்கு இன்னும் கஷ்டமா இருக்கும்."

"என்ன திலோ? அப்படியென்ன ரகசியம்?"

"ரகசியம்தான். இந்த ஒன் வீக் பொறுத்துக்கோ... சொல்றேன்."

"உனக்கு டைம் சரியில்லை. நீ திரும்பத் திரும்ப அவ முன்னால போய் நின்னு பிரச்சனையை விலை கொடுத்து வாங்கப் போற. அது மட்டும் எனக்கு நல்லாத் தெரியுது."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. பிரியங்கா இப்ப ரொம்ப மாறியிருக்கா..."

"நீ பார்த்தியா?"

"இ... இல்லை. கேள்விப்பட்டேன்."

"கேள்விப்பட்டதையெல்லாம் நம்பிடுவியா? கடல் தண்ணி குடி தண்ணியா மாறுமா?"

"இப்ப அதைக் கூடச் செய்யுறாங்க உமா! காலத்துக்கு ஏத்த மாதிரி எல்லாமே மாறுது. எல்லாருமே மாறிடுறோம்."

"நீ என்ன திலோ... அந்த ஸாடிஸ்ட்டுக்கு இவ்வளவு வக்காலத்து வாங்குற? என்னால நம்பவே முடியலை."

"வக்காலத்துன்னு எதுவும் இல்லை உமா! ஜஸ்ட் ஒரு மனிதாபிமானம். என்ன இருந்தாலும் அவ நம்ம கிளாஸ்மேட் உடம்பு முடியாம இருக்கிறவளைப் பார்த்துட்டு வர்றதிலே என்ன தப்பு? நாம போகணும். நீ கண்டிப்பா வர்ற!"

"ம்... விதி விட்ட வழி."

"ஏய்! விதி விட்ட வழின்னு நீ வழி மாறிப் போறியே... பஸ் ஸ்டாப்புக்குக் கூட்டிட்டுப் போறேன்னு எங்கே கூட்டிட்டு போறே?" - திலோத்தமா குரல் கொடுக்க... தனது ஸ்கூட்டியை பிரேக்கிட்டு நிறுத்தினாள் உமா.

"அட! வழக்கமா போகிற மாதிரி வீட்டுக்கு வண்டியை விட்டுட்டேன். இரு... வண்டியைத் திருப்பிக்கிறேன்...." - என்றவாறு வண்டியை ரிவர்ஸில் எடுத்து வலப்பக்கமாய்த் திருப்ப... சாலையில் வேகமாய் வந்து கொண்டிருந்த கார் கிரீச்சிட்டு நின்றது.

இருவரும் ஒருகணம் கண்களை மூடிக் கொள்ள, இதயம் வேகமாய்த் துடித்தது.

"இப்படிக் கண்ணை மூடிக் கொண்டு நின்றால் கார் எப்படிப் போவது?" - காருக்குள் இருந்து சிடுசிடுப்பாய் ஒரு பெண்ணின் குரல் கேட்டுச் சட்டெனக் கண்களைத் திறந்தனர்.

குளிர் கண்ணாடியை நெற்றிக்கு மேலே தூக்கி விட்டுக் கொண்டு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தாள் சுஹாசினி. முகத்தில் ஒப்பனையை மீறிய அலட்சியம் தெளிவாய்த் தெரிய... உமா எதுவும் பேசாமல் வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.



'கிர்ர்... கிர்ர்...' என்ற ஓசையோடு முனகிக் கொண்டே நின்றுவிட, பின்னால் இருந்த திலோத்தமா பதட்டமாய் இறங்கினாள்.

"என்ன உமா...? என்னாச்சு?"

"என்னன்னு தெரியலையே திலோ...? மக்கர் பண்ணுதே!"

"ஐயோ! டிராஃபிக் வேற ஹெவியா இருக்கே... வண்டியை ஓரமாக் கொண்டு போய் ஸ்டார்ட் பண்ணலாமா?"

"ம்... சரி!" - என்றவாறு தானும் இறங்கினாள் உமா.

அதற்குள் காது கிழியும்படி ஹாரனை அழுத்தினாள் சுஹாசினி. வாகனங்களில் சென்றவர்கள் மிரண்டு திரும்ப... உமா காரை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னங்கடி! ரெண்டு பேரும் நடு ரோட்டில வண்டியைக் கொண்டு வந்து நிறுத்திட்டு சர்க்கஸ் காட்டிட்டு இருக்கீங்களா? சீக்கிரமா வண்டியை எடு!" - சுஹாசினியின் கூச்சலில் உமாவின் இரத்தம் சூடானது.

வண்டியை ஓரம் கட்டும் எண்ணத்தை உதறிவிட்டு... அதே இடத்தில் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினாள்.

சுஹாசினியின் முகம் இன்னும் கடுப்படைய... திலோ பதறினாள். "உமா! என்ன பண்றே நீ?"

"பொறு திலோ! இந்தக் கார்க்காரிக்கு எவ்வளவு திமிர் பார்த்தியா? நாம அவஸ்தைப்படுறது அவளுக்கு சர்க்கஸ் காட்டுற மாதிரி இருக்குதாம். இரு... வர்றேன்!" - எனக் காரை நோக்கி நகர்ந்தவளின் கரத்தைப் பற்றி நிறுத்தினாள் திலோத்தமா.

"உமா! அவ என்னவோ சொல்லிட்டுப் போறா. விடு... நீ வண்டியை எடு."

மீண்டும் ஹாரனை அழுத்தினாள் சுஹாசினி. "ஏய் என்ன பண்ணிட்டு இருக்கீங்க? வண்டியை எடுங்கன்னா ஊர்க்கதை பேசிட்டு இருக்கீங்களா? எட்டணா வண்டியை வெச்சிட்டு என்ன போஸ் கொடுத்திட்டு இருக்கீங்க?"

உமா ஆவேசமாய் வாய் திறப்பதற்குள் திலோத்தமா அவசரமாய்க் குரல் கொடுத்தாள். "ஸாரிங்க... வண்டி ஸ்டார்ட் ஆக மாட்டேங்குது. ஒரே நிமிஷம்... இப்ப ஒதுக்கிடுறோம்."

"ம்... ம்... சீக்கிரம் ஆகட்டும். நல்ல விஷயமா வெளியே கிளம்பும்போது இப்படி ஒரு இம்சை. ச்சே! சென்னை இன்னும் மாறவே இல்லை. ஷிட்!" – வெறுப்பாய் சுஹாசினி சொல்ல...

உமாவின் கோபம் அதிகரித்தது. தடுத்த திலோத்தமாவை நகர்த்தி விட்டுக் காரை நெருங்கினாள்.

"ஹலோ! மேடம் என்ன... அமெரிக்காவில இருந்து வந்திருக்கீங்களோ?"

"நோ... நோ. ஐ அம் கமிங் ஃப்ரம் லண்டன்!" - கூந்தலைப் பின்னால் தள்ளி விட்டபடி அலட்சியமாய்ச் சொன்னவளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினாள் உமா.

"லண்டனாம்? ஆமா... அங்கே இடமில்லைன்னா இங்கே வந்து காரை ஓட்டுறீங்க?"

"ஹேய்! என்ன நக்கலா?"



"பின்னே... என்னவோ லண்டன்லயே பொறந்து வளர்ந்த மாதிரி இப்படி அலட்டுற? உன் மூஞ்சைப் பார்த்தாலே தெரியுதே... நீ லோக்கல்தானே!"

"ஏய்... என்ன பேசுற நீ?"

"வெயிட்... லோக்கல்ன்னா... அந்த லோக்கல் இல்ல... இதே ஊர்தானேன்னு கேட்டேன். சென்னை மாறலைன்னு ரொம்ப வெறுப்பா சொல்றியே... அது மாறாது. நாமதான் மாறணும்."

"வாட் யூ மீன்?"

"ஒரு செகண்ட் அமைதியா இருந்தா... நான்பாட்டுக்கு வண்டியை நகர்த்திட்டுப் போயிருப்பேன். ஆனா உனக்கு அதுக்குக் கூட பொறுமை இல்லாம... உன் இஷ்டத்துக்குப் பேசுற. முதல்ல நீ மாறு. அப்புறம் சென்னையை மாத்திக்கலாம்."

"யூ ஸ்டுப்பிட். என்னை யாருன்னு நினைச்ச? நான்..."

"எனக்கு உன் ஜாதகமெல்லாம் தேவையில்லை. வண்டி இங்கேதான் நிற்கும். நீ காரை நகர்த்தி ஓரமாப் போ. இல்லைன்னா... இந்த சினிமாவில பேசுவாங்களே... அதே மாதிரி பறந்து போ."

"ஏய்! யூ... யூ...?"

"ஏய்! மூடிட்டுப் போடி. பெரிசா வந்திட்டா... ஒரு டப்பாக் காரை எடுத்திட்டு..."

"உமா! ஏன் சண்டை போடுற? வா இப்படி..."

"சும்மா இரு திலோ! என் வண்டி எட்டணா வண்டின்னா... இது டப்பா கார்தானே!"

"ஏய்! யார் காருடி டப்பாக் கார்?" - கோபமாய்க் கதவைத் திறந்துவிட்டு சுஹாசினி இறங்க... இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தவர் சற்றுத் தடுமாறி நின்றார்.

"ஏம்மா! அறிவிருக்கா உனக்கு? ராங் சைடுல டோரைத் திறக்கிறியே... பின்னால வண்டி வருதான்னு பார்க்க மாட்டியா? எல் போர்டா நீ?"

"யோவ்! யாரு எல் போர்டு? நான் லண்டன்லயே காரை ஓட்டினவ!"

"இது சென்னைம்மா. உன் இஷ்டத்துக்கு ஓட்ட முடியாது. மண் லாரியும் தண்ணீர் லாரியும் உன்னைவிட மோசமா ஓட்டுவாங்க. பார்த்துப் போ!" - என்றவாறு அவர் வண்டியைக் கிளப்பிக் கொண்டு போக... அவமானத்தில் சிவந்த முகத்தோடு உமாவின் புறம் திரும்பினாள் சுஹாசினி.

பொங்கி வந்த சிரிப்பை மென்று கொண்டே... தனது ஸ்கூட்டியைச் சாலையோரமாய் நகர்த்திக் கொண்டு போனாள் உமா.

"ஏன்டி! இதை முதல்லயே செய்திருக்கலாமில்ல?" - ஆவேசமாய்க் கேட்டவளைப் பார்த்து உதட்டைச் சுழித்தாள் உமா.

"செய்திருக்கலாம். ஆனா... எதையும் சும்மா வாங்கிட்டுப் போறதில்ல நாங்க. வட்டியும் முதலுமா திருப்பிக் கொடுத்துட்டுத்தான் போறது. நீ கிளம்பு..."

"திமிருடி... உங்களை மாதிரி லோ-கிளாஸுக்கே உண்டான திமிர்."



"ஏய் வந்திட்டாப்பா... அடுத்த பிரியங்கா. இதோ பாருடி லோக்கல்! உன்னை மாதிரி எத்தனையோ லோக்கல் அலட்டல்களை நாங்க பார்த்திருக்கோம். இந்த அலட்டல் எல்லாம் எங்ககிட்ட வேண்டாம். கிளம்புடி!"

"ஏ... என்ன? என்ன சொன்ன இப்போ?"

"கிளம்புடின்னு சொன்னேன்."

"இல்ல... அதுக்கு முன்னால ஏதோ பேர் சொன்னியே?"

"அதுவா? அது..." - என்ற உமாவின் கையைப் பிடித்து இழுத்தாள் திலோத்தமா.

"உமா! பேசாம வா. நடு ரோட்டில நின்னு சண்டை போடுறது அசிங்கம். வா..."

"திலோ! நான்..."

"பேசாம வா..." - என வலுக்கட்டாயமாக நகர்த்திய போதும் சுஹாசினி விடுவதாய் இல்லை. அதற்குள் கூட்டம் கூடத் துவங்க, போக்குவரத்துக் காவலர் விசிலோடு வந்து சேர்ந்தார்.

"என்னம்மா இங்க பிரச்சனை? டிராஃபிக் டைம்ல நடுரோட்டில நின்னு என்ன பண்ணிட்டு இருக்கீங்க?"

"ஸாரி ஸார். வண்டி திடீர்னு நின்னு போச்சு. ஸ்டார்ட் பண்ண முடியலை. அதான் இந்த மேடமும் இறங்கி வந்து ஹெல்ப் பண்றாங்க. பட் நோ யூஸ் ஸார்!" - உமா பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல, பற்களைக் கடித்தாள் சுஹாசினி.

"ஏம்மா! ஹெல்ப் பண்றது நல்ல விஷயம்தான். அதுக்காக இப்படியா நடு வழியில காரை நிறுத்துவ... எடும்மா காரை... என்னய்யா கூட்டம் இங்கே. கிளம்புங்க... எவ்வளவு வண்டி நிக்குது. கிளம்புங்க..." - காவலர் அதட்ட... புன்னகைத்த உமாவைக் கடுப்பாய் பார்த்தபடியே காரில் ஏறிக் கிளம்பினாள் சுஹாசினி.

"நீ ஏம்மா நிற்கிற? வண்டியை எடும்மா."

"எக்ஸ்கியூஸ் மி ஸார். வண்டியைக் கொஞ்சம் ஸ்டார்ட் பண்ணித் தர்றீங்களா ஸார்..."

"என்னது?"

"ப்ளீஸ் ஸார். இதுவும் ஒரு சமூக சேவைதான். உங்களைப் பார்த்தா அப்படியே எங்க அப்பா மாதிரியே இருக்கு. அதான் ஹெல்ப் கேட்கிறேன்!" - உமா பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டே சொல்ல, அவர் அவளை மேலும் கீழுமாய்ப் பார்த்தார்.

"ம்... இந்தக் காலத்து யூத்துங்க நல்லாப் பேசக் கத்துக்குறீங்க... நான் இப்ப டியூட்டியில இருக்கேன்ம்மா..."

"நான் உங்க டயத்தை வீணாக்க மாட்டேன் ஸார். ஒரே ஒரு வாட்டி ட்ரை பண்ணுங்க. முடியலைன்னா நான் மெக்கானிக் கிட்ட எடுத்திட்டுப் போயிடுறேன்."

"பெட்ரோல் இருக்காம்மா..."

"காலையிலதான் ஸார் போட்டேன்."

"காலேஜ் ஸ்டூடண்ட்டா!" - கேட்டுக் கொண்டே வண்டியை நெருங்கி ஆக்ஸிலேட்டரை முடுக்கியவாறே ஸ்டார்ட் செய்து பார்த்தார். மீண்டும் அதே முனகலுடன்



நின்றுவிட... மேலும் இருமுறை முயற்சித்துவிட்டுச் சலிப்பாய் நிமிர்ந்தார்.

"ஏதோ ரிப்பேர் போலிருக்கும்மா. இந்த ரோட்ல ரைட் சைடுல ஒரு மெக்கானிக் ஷாப் இருக்கு. அங்கே கொண்டு போய்ச் சரி செய்துட்டுக் கிளம்புங்க."

"தேங்க் யூ ஸார். நீங்க உங்க டியூட்டியைக் கவனிங்க!" - புன்னகையோடு கூறிவிட்டு வண்டியை ஓரமாய் நகர்த்தி உருட்டிக் கொண்டே செல்ல.... அதுவரை படபடப்பாய் நின்று கொண்டிருந்த திலோத்தமா தோழியிடம் மெதுவாய்க் கிசுகிசுத்தாள்.

"உமா! ஆனாலும் உனக்குத் துணிச்சல் ஜாஸ்திதான். போலீஸ்காரர்கிட்டயே சர்வசாதாரணமாப் பேசுறியே?"

"திலோ! காவலர்கள் நம்ம நண்பர்களாம்."

"ஓஹோ! அதான் உன் ஃபிரண்ட்கிட்ட ஹெல்ப் கேட்டியாக்கும்?"

"பின்னே.... அந்த அலம்பல்காரிகிட்ட இருந்து எப்படித் தப்புறதாம்? அவளைப் பாரேன். நாம விலகிப் போனாலும் விடாம சண்டைக்கு வந்து நிற்கிறாள். நல்லவேளை, நம்ம நண்பர் வந்து உதவினார்.

"இல்லைன்னா பெரிய பிரச்சனையே ஆகியிருக்கும். ஸாரி திலோ! என்னால உனக்கும் லேட்டாகிப் போச்சு. நீ வேணா ஆட்டோ பிடிச்சுப் போயிடுறியா? நான் வண்டியைச் சரி பண்ணிட்டுக் கிளம்புறேன்."

"தனியாவா நிற்ப?"

"என்னடி இது? பட்டப் பகல்ல எனக்கென்ன பயம்? வா! ரோட்டைக் கிராஸ் பண்ணிட்டு ஏதாவது ஆட்டோ வந்தா நிறுத்தலாம்!" - என்றவாறே வண்டியைத் திருப்பி நிறுத்திய வாறு சாலையின் இருபுறமும் பார்த்தனர்.

நெருக்கமாய் வாகனங்கள் வந்து கொண்டிருக்க... பொறுமையாய் நிற்க ஆரம்பித்த நேரம்... எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த கறுப்புநிற ஹூண்டாய் கார், தனது வேகத்தைக் குறைத்தது.

முன் இருக்கையில் அமர்ந்து ஃபைல் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சித் நிமிர்ந்தான்.

"என்ன அர்ஜுன்! ஸ்லோ பண்ணிட்ட?"

"ஸார்! அது... அவங்க யாருன்னு தெரியுதா?" - அவன் சுட்டிக் காட்டிய திசையில் பார்வையைச் செலுத்திய வனின் கண்கள் மலர்ந்தன.

"அட! இவங்க எங்கே இங்கே?"

"வண்டியைத் தள்ளிட்டு வர்றாங்க ஸார். ரிப்பேரோ?"

"இருக்கலாம் அர்ஜுன்! நீ காரை ஓரமா நிறுத்து."

"கம்பெனிக்குப் போக வேண்டாமா ஸார்?"

"போலாம். முதல்ல அவங்களுக்கு ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமான்னு பார்க்கலாம்!" - என்றவாறே ஃபைலை மூடி வைத்தான் ரஞ்சித்குமார். அர்ஜுன் புன்னகையோடு காரை ஓரமாய்க் கொண்டு நிறுத்தியதும் முதல் ஆளாய் இறங்கினான்.

"அர்ஜுன்! காரைப் பூட்டிட்டு வா."

"நானுமா ஸார்?"



"வா. நான் மட்டும் போனா நல்லாயிருக்காது."

"அது சரி!" - என்றவாறு காரை விட்டிறங்கிப் பூட்டி விட்டுச் சாலையைக் கவனித்துச் சாலையில் இறங்கி... தங்களை நோக்கி வந்தவர்களை முதலில் கவனித்தது திலோத்தமா. உள்ளம் படபடக்க சாலையைக் கவனித்துக் கொண்டிருந்த உமாவின் தோளைப் பற்றினாள்.

"உ... உமா!"

"என்ன திலோ?"

"யாரு வர்றான்னு பாரு."

"எங்கே?" - எனப் பார்வையைச் சுழற்றியவள்... தங்களை நெருங்கியவர்களைப் பார்த்ததும் சிநேகமாய்ப் புன்னகைத்தாள்.

"ஹலோ ஸார்!"

"ஹலோ! எப்படி இருக்கீங்க உமா?"

"ஃபைன் ஸார்!" - என்றவள் ரஞ்சித்தின் பின்னே நின்று புன்னகைத்தவனைக் கண்டு முறைத்தாள்.

"உமா! இது அர்ஜுன். என் செகரட்டரி."

"ம்... தெரியும். உங்களைப் பார்க்கணும்னு சொன்னா... உங்க ஃபோட்டோவைக் காட்டுற அதிபுத்திசாலி ஆயிற்றே. மறக்க முடியுமா?"

"தேங்க் யூ மேம்!"

"எதுக்கு? அதிபுத்திசாலி என்றதற்கா?"

"அதுக்கு மட்டுமில்ல... என்னை மறக்காமல் இருந்ததற்கு!" - அவன் சிரிக்காமல் சொல்ல... முறைத்து விட்டு ரஞ்சித்திடம் திரும்பினாள்.

"என்ன ஸார் இங்கே?"

"நான்தான் இதைக் கேட்க வேண்டும். வண்டிக்கு என்னாச்சு?"

"தெரியலை ஸார். திடீர்னு மக்கர் பண்ணுது. அதான் பக்கத்திலே மெக்கானிக் ஷாப்புக்குப் போயிட்டு இருக்கோம்."

"அடடா! அந்த மெக்கானிக் ஷாப்புக்கு இப்பத்தான் போயிட்டு வர்றோம். அது பூட்டியிருக்கே!" - சற்றும் யோசியாமல் ரஞ்சித் சொல்ல... அர்ஜுன் வியப்பாய்ப் பார்த்தான்.

"ஸார்! நாம..."

"இப்பப் போயிட்டு வந்தோமே... அந்த ஷாப்பைத்தான் சொல்றாங்க!" - என்றவாறு அவனை அழுத்தமாய்ப் பார்க்க... அந்தப் பார்வையின் பொருள் புரிந்து புன்னகையோடு தலையசைத்தான் அர்ஜுன்.

"ஓ! அதுவா? ஆமா... அது இன்னிக்கு லீவுதான்."

"அச்சோ! வேறே எங்கே மெக்கானிக் ஷெட் இருக்கோ... தெரியலையே!"

"இங்கிருந்து ஒரு ஏழு கிலோ மீட்டர் தூரத்தில ஒண்ணு இருக்கு."

"என்ன? ஏழு கிலோ மீட்டரா?" - இழுத்தாள் உமா.

"ஏழு கிலோ மீட்டர் இல்லைங்க.... ஜஸ்ட் ஏழே கிலோ மீட்டர்தான். இப்படியே ஓரமா நடந்து போனா எப்படியும் ஈவினிங்குக்குள்ள போயிடலாம்."

"அர்ஜுன்...!"



"ஸாரி ஸார்....!"

"மிஸ் உமா! இப்ப வீட்டுக்குத்தானே போறீங்க... ரெண்டு பேரும்?"

"நான் வீட்டுக்குப் போகணும். திலோ பல்லாவரம் போகணும்."

"பல்லாவரமா? அவங்க வீடு ராஜீவ்காந்தி நகர்லதானே இருக்கு?"

சட்டென நிமிர்ந்தாள் திலோத்தமா. எதுவும் பேசாமல் தலையைக் குனிந்து கொள்ள உமா வியந்தாள்.

"இவ வீடு உங்களுக்குத் தெரியுமா?"

"இவங்க வீடு தெரியாது. ஆனா விஷ்ணு வீடு தெரியும்!" என்றான் அர்ஜுன்.

"பல்லாவரம் எதுக்குப் போகணும்?"

"இவ வேலை பார்த்தால்ல... அந்தக் கம்பெனியோட ஓனர் வீட்டுக்குப் போகணுமாம்."

"அங்கே எதுக்கு?"

"அவரோட அம்மாவுடைய படத்தை வரைஞ்சு கொடுக்க..."

"அட! பெரிய ஆர்ட்டிஸ்ட்டாகிட்டாங்களோ?" - என்றான் திலோத்தமாவைப் பார்த்து.

"அவ எப்பவுமே பிரமாதமா படம் வரைவா ஸார்! உங்களுக்குத்தான் இவ அருமை தெரியலை..."

"உஷ்! உமா... சும்மா இரு."

"உண்மையைத்தானே சொல்றேன் திலோ! இவர் தானே உன்னோட படங்களைத் தேர்ந்தெடுக்காம விட்டார். அப்போ உன் அருமை தெரியலைதானே!"

"ஆமா... அப்போ தெரியலை. ஆனா... இப்போ தெரியுது." - ஒரு மாதிரியான குரலில் அவன் சொல்ல, திலோத்தமாவின் இதயம் படபடத்தது.

"உமா! வா போகலாம்."

"சரி... வாங்க போகலாம்..." - ரஞ்சித்தும் அதே போல் அழைக்க... திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"என்ன?"

"வாங்க. நம்ம கார்லேயே போயிடலாம். நாங்க கூட இப்ப ஜெயபால் சாரைப் பார்க்கத்தான் போயிட்டு இருக்கோம். உங்களைப் பார்த்ததும் நல்லதாப் போச்சு. வாங்க ரெண்டு பேரையும் நானே ட்ராப் பண்ணிடுறேன்."

"ஸார்! நாம இப்போ பல்லாவரத்துக்கா போயிட்டு இருந்தோம்?"

"கொஞ்ச நேரம் நீ வாயை மூடிட்டு நிற்கலை... நீ வீட்டுக்குப் போக வேண்டியதிருக்கும்... வேலையை விட்டே" - ரஞ்சித் தணிந்த குரலில் மிரட்ட... வாயை இறுக மூடிக் கொண்டான் அர்ஜுன்.

20

கண்ணுக்குள் ஜீவனைத் தேக்கி
காலம் கழித்திருப்பேன்!
உலகம் அழிகின்ற போதும்
உன்னை நினைத்திருப்பேன்!



"உமா! வாயேன். நாம போயிடலாம்."

"கார்லதானே? வாங்க... கார் அதோ நிற்குது."

"ம்ஹூம். நாங்க ஆட்டோவில போய்க்கிறோம்." - அவனை நிமிர்ந்து பாராமலே சொன்னாள் திலோத்தமா.

"ஏங்க! நீங்க ஆட்டோவில போயிடலாம். ஆனா... இந்த வண்டி?"

"அதானே... திலோ! இந்த வண்டியை என்ன பண்றது?"

"பேசாம இப்படி ஓரமா விட்டுட்டுப் போயிடுங்க. யாருக்காவது உபயோகப்படும்."

"மிஸ்டர்! உங்க வாயை மூடிட்டு இருக்கச் சொன்னாரில்லை...!"

"ஸார்! நான் வேணா போய் கார்ல வெயிட் பண்ணட்டுமா?"

"ஏன்?"

"என்னால பேசாம இருக்க முடியாது ஸார்!"

"ரஞ்சித் ஸார்! நீங்க கிளம்புங்க. நாங்க எப்படியாவது மேனேஜ் பண்ணிக்கிறோம்."

"என்னங்க! இப்படித் தெரிஞ்சவங்களை நடுரோட்டில அம்போன்னு விட்டுட்டுப் போக முடியுமா? இது லஞ்ச் டயம். ஆட்டோவும் கிடையாது. பேசாம என்னோட கார்ல வாங்க. எவ்வளவு நேரம் வெயில்ல நிற்பீங்க?"

"திலோ! என்ன சொல்றே?"

"வேண்டாம் உமா! எனக்குப் பயமா இருக்கு."

"ஏங்க... என் மேல நம்பிக்கை இல்லையா உங்களுக்கு? நான் ஒண்ணும் அத்தனை மோசமானவன் இல்லைங்க... தாராளமா நம்பலாம்."

"வேண்டாம். வீட்டில தெரிஞ்சா திட்டுவாங்க."

"ஏங்க! நாம என்ன ஊரைச் சுத்தவா போறோம். ஒரு சின்ன உதவிதானே! ரொம்ப நேரம் ரோட்ல நிக்க வேண்டாம். பார்க்கிறவங்க தப்பா நினைப்பாங்க!" - அவன் சொல்வது புரிய... திலோத்தமாவை ஏறிட்டாள் உமா.

"திலோ! இவர் சொல்றதுதான் சரி. நாம போகலாம்."

"வேண்டாம் உமா!"

"சொன்னாக் கேளு திலோ! நீ மட்டும் தனியாவா போற? நானும்தானே வர்றேன்."

"இருந்தாலும்... அப்பாவுக்குத் தெரிஞ்சா?"

"நான் அப்பாகிட்ட பேசிக்கிறேன். நாம வீட்டுக்குத்தானே போறோம். நான் சொல்றேன். வா... போகலாம்."

"இல்ல உமா... எனக்கு..."

"ப்ளீஸ் திலோ! எனக்கு ரொம்பப் பசிக்குது. நேரமும் ஆகுது. வீட்டில தேடிட்டு இருப்பாங்க. வாப்பா. போகலாம்."

"அது வந்து... நான்..." - திலோத்தமா இன்னும் தயங்க... முகம் வாடினான் ரஞ்சித்குமார்.

"ஸாரிங்க! உங்க ஃபிரண்ட் இன்னும் எதையும் மறக்கலை போலிருக்கு. நான்தான் தப்பாப் புரிஞ்சிகிட்டேன்."

"இ... இல்லை. அப்படியெல்லாம் எதுவும் இல்லை..." - அவசரமாய் மறுத்தாள்.



"பின்னே... ஏன் இவ்வளவு தயங்குறீங்க?"

"இல்லை... ஸார்! அன்னிக்கு என் தம்பி உங்களைப் பார்க்க வந்ததே எனக்குத் தெரியாது. ஆனா... அதுக்கே பல காரணம் சொன்னாள் உங்க தங்கை. இப்போ உங்க கூட கார்ல வந்தது தெரிஞ்சா..."

"ரொம்ப சந்தோஷப்படுவா. ப்ரியா இப்ப முன்ன மாதிரியில்லை... ரொம்ப மாறியிருக்கா. அதோட உங்களைக் கார்ல கூட்டிட்டுப் போனதை உடனே அவகிட்ட போய் சொல்வேன்னு நீங்க எப்படி நினைக்கலாம்?"

"எதற்கும் முன்னெச்சரிக்கையா இருப்பது நல்லது தானே?"

"இது எச்சரிக்கை இல்லை. வீணான பயம்!"

"இருந்திட்டுப் போகட்டும் ஸார்! எங்களை மாதிரி ஆட்கள் பயந்து அடங்கித்தான் இருக்கணும்னுதானே எதிர்பார்க்கிறீங்க? கொஞ்சம் தைரியமா பேசினா... பலமா தாக்கி அடக்கிடுறீங்களே!"

"திலோ! ஏன் இப்படி பேசுறீங்க?"

"பாதிக்கப்பட்டவளாச்சே... அதான் பயப்படுறேன்." - கன்றிய முகத்தோடு சொன்னவளை மனம் கனக்கப் பார்த்தான்.

உமாவின் முகமும் வாடிப் போனது.

"என்ன திலோ நீ... இவர் மேல எந்தத் தப்பும் இல்லைன்னு நீதானே சொன்னே! அதுக்குள்ள ஏன் இப்படிப் பேசுற?"

"உமா! இவர் மேல தப்பு இல்லாம இருக்கலாம். ஆனா... அன்னிக்குப் பிரியங்கா பேசினதை நீயும்தானே கேட்டே...! இப்ப நாம இவர்கூட போனா அவ சொன்னது உண்மைன்னு சொல்ல மாட்டாளா?"

"என்ன? அப்படி அவ என்னதான் சொன்னா?"

"அதைச் சொல்றதால என்ன ஆகப் போகுது இப்போ? நீங்க கிளம்புங்க!"

"சரி.... உங்களை எந்த விதத்திலேயும் நான் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன். ஹெல்ப் பண்ணலாம்னு வந்தேன். உங்களுக்குப் பிடிக்கலைன்னா வேண்டாம்... அர்ஜுன்!"

"ஸார்!"

"நீ இந்த வண்டியைத் தள்ளிட்டுப் போய் மெக்கானிக்... இல்ல... வேண்டாம். நீ காரை எடுத்திட்டுப் போய் ஏதாவது மெக்கானிக் இருந்தா கூட்டிட்டு வா."

"ஓ.கே. ஸார்!" - என்றவன் காரை நோக்கிச் செல்ல... உமா தயக்கமாய் மறுத்தாள்.

"இருக்கட்டும் ஸார். நான் என் அப்பாவுக்குப் போன் பண்ணி..."

"ப்ளீஸ் உமா! நீங்களும் என்னைக் காயப்படுத்தாதீங்க. இது ஒரு சாதாரண உதவி. இதுல எந்த உள் நோக்கமும் இல்லை. என் தங்கை இந்த மாதிரிக் கஷ்டப்பட்டால் என்ன செய்வேனோ... அதைத்தான் செய்றேன்..."

"ஸாரி ஸார்!"



"உமா! அர்ஜுன் இப்போ மெக்கானிக்கோட வருவான். நான் இங்கே நிற்கிறது உங்களுக்குக் கஷ்டமா இருக்கலாம். ஸோ! நான் கிளம்புறேன்."

"ஸார்! காரை அவர் எடுத்திட்டுப் போயிட்டாரே?"

"பரவாயில்லை. நான் அங்கே வெயிட் பண்றேன்..." - என்றவன் திரும்பியும் பாராமல் விலகிச் சென்று சற்று ஒதுங்கியிருந்த ஒரு குளிர்பானக் கடை அருகே நின்று கொண்டான்.

உமா கோபமாய்த் திலோத்தமாவைத் தன்புறமாய்த் திருப்பினாள். "திலோ! உன் மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்க?"

"ஏன்?"

"என்ன... ஏன்? அவர் அப்படி என்ன கேட்டாருன்னு அவரை அப்படிப் புண்படுத்தி அனுப்பின? பாவம்! எவ்வளவு உற்சாகமா வந்தாரு. இப்பப் பாரு, அவர் முகம் எப்படி வாடிப் போச்சு? ஏன் இப்படிப் பண்றே நீ?"

"உமா! நான் என்ன தப்பா பேசினேன்?"

"நீ பேசினது எல்லாமே தப்புதான். ஒருத்தங்க உதவி செய்ய வந்தா ஏத்துக்கணும். இல்லன்னா... சிரிச்ச முகத்தோட நாகரிகமா மறுக்கணும். நீ என்ன பண்ணின? எப்பவோ நடந்ததை யெல்லாம் பேசி அவர் மனசை நோகடிச்சிட்ட..."

திலோத்தமாவின் கண்களில் நீர் துளிர்த்தது. "ஆமா! நான் அவர் மனசை நோகடிச்சிட்டேன்."

"தெரியுதில்ல... தெரிஞ்சும் ஏன் இப்படி?"

"தெரிஞ்சுதான் பேசினேன். இனி இந்த மாதிரி... எந்த இடத்திலேயும் வந்து நம்மகூட பேசக்கூடாதுன்னுதான் இப்படிப் பேசினேன்." - கண்ணீரோடு சொன்னவளை நம்ப முடியாமல் பார்த்தாள் உமா.

"திலோ! என்ன சொல்ற நீ?"

"உமா! உன்கிட்ட சொல்றதுல தப்பில்லை. நான் திரும்பவும் காலேஜுக்கு வந்தது... விஷ்ணு ஸ்கூலுக்குப் போறது... அப்பாவுக்கு உடல் நிலை தேறி வர்றது... இதுக்கெல்லாம் காரணம் யாரு தெரியுமா?"

"யாரு?"

"இவர்தான்."

"என்ன?"

"இவர்தான் எல்லா ஏற்பாட்டையும் பண்ணியிருக்கார். ஆனா எதையும் வெளியே சொல்லிக்கலை. எனக்குத் தெரியும்."

"பின்னே என்னடி? நல்லதுதானே பண்ணியிருக்கார்."

"ம்... நல்லதுதான் செய்திருக்கார். ஆனா இதெல்லாம் பிரியங்காவிற்குத் தெரியுமா... தெரியாதான்னு எனக்குத் தெரியலை!"

"தெரிஞ்சா என்னடி? எல்லாமே அவ செய்த வேலைதானே! அதை இவர் சரி பண்ணியிருக்கார். அதுக்கு ஏன் நீ இவரைத் திட்டினே?"

"உமா! எனக்கு... என்ன... எப்படிச் சொல்றதுன்னு தெரியலை?"

"என்ன திலோ?"



"உமா! எனக்கு... இவரைப் பார்க்கும் போதெல்லாம்... மனசுக்குள்ள ஒரு மாதிரி... படபடப்பா இருக்கு."

"வாட்?"

"ம்... என்னன்னு சொல்லத் தெரியலை. ஆனா அது நல்லதுன்னு தோணலை!" - திலோத்தமா தடுமாற்றமாய்ச் சொல்லிக் கொண்டிருக்க... அவளை உற்றுப் பார்த்தாள் உமா.

"திலோ! நீ... நீ அவரை விரும்புறியா?"

"சேச்சே... இல்லை... இல்லை!" - அவசரமாய் மறுத்தாலும் அவளது முகம் பயத்தில் வெளிறிப் போனது.

"ரிலாக்ஸ் திலோ! ஏன் பதறுற? இதுல ஒண்ணும் தப்பில்லை."

"என்ன?"

"திலோ! ரஞ்சித் நல்லவர். பார்க்கவும் பழகவும் அருமையான மனிதர். அவரை விரும்புறது ஒண்ணும் தப்பு இல்லையே!"

"விளையாடாதே உமா. நான் ஒன்றும் அவரை விரும்பவில்லை."

"பின்னே?"

"அது... வெறும் பயம். அதனால ஏற்படுற படபடப்பு..."

"ஏய், போதும்டி! ஏன் இப்படிப் பூசி மெழுகிற? அவரைப் பார்த்ததும் உன் உடம்பு உதறுறதை நானும் கவனிச்சேன். போலாம்... போலாம்னு ஓடுறதிலேயே குறியா இருந்தியே... அப்பவே எனக்கு டவுட்தான்..."

"நோ. நீ நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லை."

"பிறகேன் அவரை விரட்டின? மனசுல எதுவும் இல்லைன்னா... என்னை மாதிரி ஸ்டெடியா நின்னு பேச வேண்டியதுதானே?"

"அது... நான்..."

"திலோ! ஏன் இப்படி உன்னையே குழப்பிக்கிற? சரி... ஒரு பேச்சுக்கு நீ அவரை விரும்புறேன்னு வெச்சுக்குவோம். அவர் தானா வந்து பேசும்போது நீ ஏன் அவாய்ட் பண்றே? நான் உன் உயிர்த் தோழிதானே! என்கிட்ட சொல்லு. நீ விரும்புறதானே?"

"என்ன பேசுற உமா? பிரியங்கா சொன்னதெல்லாம் மறந்து போச்சா உனக்கு?"

"என்ன சொன்னாள்?"

"நம்ம கரஸ்பாண்டென்ட் பொண்ணை இவருக்குப் பேசி முடிச்சிருக்கிறதா... அந்தப் பொண்ணுகூட கல்யாணத்திற்கு முன்னாலேயே தேன்நிலவு கொண்டாடப் போயிருக்கிறதாச் சொன்னாளே?" - தவிப்பாய்ச் சொன்னவளைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள் உமா.

"ஓ! உன்னோட சீறலுக்கு இதுதான் காரணமா? பார்த்தியா... நீ சொல்லாமலே உன் மனசுல உள்ளது வெளியே வந்திடுச்சி..." - என்றாள் கேலியாய்.

"ஏய்! என்ன நீ... நீயா எதையாவது கற்பனை பண்ணிட்டு..."

"வெயிட்... வெயிட்...! நான் சொல்றதை முழுசாக் கேளும்மா. இப்ப என்ன? இவர் இன்னொரு பெண்ணுக்காக



நிச்சயிக்கப்பட்டவர். இவரை விரும்புறது தப்புன்னுதானே நீ இவ்வளவு குழம்பிப் போயிருக்க...

"ஏன்டி! அந்தப் பிரியங்கால்லாம் ஒரு மனுஷின்னு அவ சொல்றதை அப்படியே நம்பிடுவியா? இவரை லண்டனுக்கு அனுப்பவே ஆயிரம் பொய் சொல்லியிருக்கா. நம்மை ஏமாத்த எத்தனை பொய் சொன்னாள்?

"என் அண்ணன் சொல்லித்தான் இதைச் செய்தேன். உன்னைக் காலேஜ்ல இருந்து டிஸ்மிஸ் பண்ணியாச்சுன்னு எல்லாமே பொய்தானே சொன்னா... பிறகு இது மட்டும் எப்படி உண்மையா இருக்கும்னு நம்புறே?"

திலோத்தமாவின் முகம் லேசாய் மலர்ந்தது. "அப்படியா சொல்றே?"

"ஆமாம் திலோ! அந்தக் கல்யாணப் பேச்சு உண்மையாவே இருந்தாலும் இவர் விரும்பிச் சம்மதிச்சாத்தானே கல்யாணம் நடக்கும்?"

"உமா!"

"எனக்கென்னவோ இவர் மேல கொஞ்சம் சந்தேகமா இருக்கு?" - உமா யோசனையாய்ச் சொல்ல, திலோத்தமா பதறினாள்.

"என்ன... என்ன சந்தேகம்?"

"உன்னை மாதிரியே இவருக்கும் ஏதோ படபடப்பு இருக்கு."

"எ...ன்...ன?"

"ம்... கண்டிப்பா இருக்கு. அவர் பேசினது மட்டும்தான் என்கிட்ட. அவரோட கண்ணு, மனசு எல்லாம் உன்னைத்தான் சுத்துது..."

திலோத்தமாவின் முகம் குப்பெனச் சிவந்தது.

"உளறாதே!"

"யாரு? நான் உளர்றேனா! எதுக்கு வம்பு? அவர்கிட்டயே கேட்டுடலாம். ஹலோ! ரஞ்சித் ஸார்..."

"ஏய்! என்ன பண்றே நீ?"

"டவுட்டை க்ளியர் பண்ணிடுவோம். ஸார்! கொஞ்சம் வாங்களேன்..." - சாலையில் பார்வையைப் பதித்திருந்தவன் உமாவின் குரல் கேட்டுத் திரும்பினான்.

"நானா!"

"ஆமா ஸார்! வாங்களேன்."

"ஐயோ! நான் போறேன்..." - என நழுவியவளைப் பற்றிக் கொண்டாள். தயக்கமாய் நெருங்கி வந்தான் ரஞ்சித்குமார். உமாவை மட்டுமே நேராய்ப் பார்த்துக் கேட்டான்.

"என்ன உமா?"

"ஸார்! உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும். தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

"சும்மா கேளுங்க."

"இல்லை. உங்களுக்கு ஏதோ லண்டன்ல பொண்ணு கூட கல்யாணம்னு சொன்னாங்களே... உண்மையா?" - உமா சாதாரணமாகவே கேட்க... திலோத்தமாவின் உடம்பின் மொத்தப் பாகமும் கூர்மையாயின.

ரஞ்சித்குமார் ஒருமுறை திலோத்தமாவைப் பார்த்தான். பிறகு முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் உமாவிடம் திரும்பினான்.



"இல்லை. அப்படியெல்லாம் எதுவும் இல்லை." - அவனது பதிலில் திலோத்தமாவிற்குள் பால் பொங்கியது. தேன் மழை பொழிந்தது. பூக்குவியல்கள் கொட்டின.

உமா தோழியின் கையை ரகசியமாய் அழுத்தி விட்டாள்.

"நான் சொன்னேன் ஸார்! இவதான் நம்பலை. அதான் உங்ககிட்ட கேட்டுடலாம்னு கூப்பிட்டேன்." - உமா விளையாட்டாய்ச் சொல்ல... விழிகள் விரிய திலோத்தமாவின் முகத்தைப் பார்த்தான் ரஞ்சித்.

"என்ன... சொன்னீங்க?"

"பிரியங்கா எங்ககிட்ட சொன்னாளே... அதான்..."

"பெரியவங்களுக்கு அந்த எண்ணம் இருந்திருக்கலாம். பட்... எனக்கு எந்த ஐடியாவும் இல்லை."

"ஏன் ஸார்? பொண்ணு நல்லா இல்லையா?"

"நல்லா இருந்தாப் போதுமா? மனசுக்குப் பிடிக்க வேண்டாமா?" - ஓரக் கண்ணால் திலோவைப் பார்க்க அவளது இதயம் பல மடங்கு துடித்தது. முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் இருக்க... அரும்பாடு பட்டாள்.

உமா விடாமல் கேட்டாள். "அப்போ... வேறு எந்தப் பொண்ணாவது உங்க மனசுக்குப் பிடிச்சிருக்கா?"

இதற்கு அவனிடம் பதில் இல்லை. குழப்பமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள் திலோத்தமா. அவனது பார்வை அவளது முகத்தைத் தீவிரமாய் ஆராய்ந்து கொண்டிருந்தது. மீண்டும் உள்ளம் படபடக்க... உமாவின் பின்னே மறைந்து கொண்டாள்.

"என்ன ஸார்! சைலண்ட் ஆகிட்டீங்க?"

"இதுக்கு முன்னால என்ன கேட்டீங்க?"

"உங்க மனசுக்கு வேற எந்தப் பெண்ணையாவது பிடிச்சிருக்கான்னு...?"

"ஆமா! பிடிச்சிருக்கு."

"என்ன? யார்... யாரை?" - அவசரமாய்க் கேட்டாள் உமா.

நீலோ நிமிரவே இல்லை. உள்ளே பொங்கிக் கொண்டிருந்த பால் சட்டென அடங்கியது.

"ஸாரி! அதைச் சொல்ல முடியாது."

"ஏன்?"

"எனக்குத்தான் அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. ஆனா அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்காது."

"ஸா...ர்!"

"ஸாரி உமா! இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காதீங்க..."

"அட... என்ன ஸார் இது? சூப்பர் சீன்ல வந்து தொடரும் போடுறீங்களே... எனக்கு அது யாருன்னு தெரிஞ்சே ஆகணும். சொல்லுங்க ஸார்!"

"உமா! சும்மா இரு."

"நீ பேசாதே. நான் கேட்டுட்டு இருக்கேனில்ல... நீங்க சொல்லுங்க ஸார்!"

"உமா! அதைத் தெரிஞ்சிகிட்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க?"



"எவ்வளவோ பண்ண வேண்டியதிருக்கு ஸார். முதல்ல நீங்க ஆளைச் சொல்லுங்க."

"வேண்டாம் உமா! நான் சொல்ற பதிலால சிலரோட மனசு வருத்தப்படலாம். என் மேல இன்னும் வெறுப்பு வரலாம்." - அவன் யாரை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறான் என்று புரிந்து போனது.

"நானும் அந்தச் சிலரோட மனசு வருத்தப் படக்கூடாதுன்னுதான் கேட்கிறேன். சொல்லுங்க ஸார்! உங்க பி.ஏ. வந்திடப் போறாரு...."

"சரி... உங்களுக்காகச் சொல்றேன். விளைவுகள் எதுவா இருந்தாலும் நீங்கதான் பொறுப்பு."

"அதை நான் பார்த்துக்கிறேன். நீங்க சொல்லுங்க."

"ஓ.கே. எப்படியிருந்தாலும் என் மனசில உள்ளதைச் சொல்லித்தான் ஆகணும். அதை உங்க மூலமா தெரிவிச்சிடுறேன். என் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு... உங்களோட..."

அவன் என்ன சொல்கிறான் என்பதைக் கேட்க முடியாதபடி இரைச்சலோடு வந்து நின்றது ரஞ்சித்தின் கார். கதவைத் திறந்து கொண்டு அர்ஜுனும் ஒரு மெக்கானிக்கும் இறங்க... தரையில் காலால் உதைத்தாள் உமா.

"போச்சு! சரியான நேரத்தில கரடி வந்திடுச்சு!" - சத்தமாகவே முணுமுணுக்க... அர்ஜுன் திரும்பினான்.

"இப்ப யாரு கரடி? நானா! மெக்கானிக்கா?"

"ம்... இந்தக் கார்தான்!" - என்றாள் கடுப்பாய்.

"ஓ! கருப்பா இருந்தா கரடியா?"

"ஷ்ஷ... முதல்ல வண்டியை ரெடி பண்ணுங்க. எவ்வளவு நேரமா நிக்குறது?"

"அர்ஜுன்! ஏன் இவ்வளவு லேட்? இதோ இருக்கிற மெக்கானிக் ஷாப்புக்குப் போயிட்டு வர இவ்ளோ நேரமா?"

"ஸார்! அந்த மெக்கானிக் ஷாப் நிஜமாகவே கீவு போலிருக்கு..." - அர்ஜுன் சத்தமாகச் சொல்ல... அவஸ்தையாய் நெற்றியில் கை வைத்தான் ரஞ்சித்குமார். 'உளறிட்டானே...!'

அவனது அவஸ்தையை உணர்ந்து கொள்ளாமல்... பத்து கிலோ மீட்டர் அலைந்து திரிந்து இந்த மெக்கானிக்கைக் கண்டுபிடித்துக் கூட்டி வந்ததை அர்ஜுன் சொல்லிக் கொண்டே போக...

உமாவும் திலோத்தமாவும் கண்களில் கேள்வியோடு ரஞ்சித்குமாரைப் பார்க்க, அவஸ்தையாய்ப் புன்னகைத்தான்.

"ஸாரி! ஸாரி! நான்தான் சும்மா... சொன்னேன்."

"என்ன? சும்மா சொன்னீங்களா! ஏன் ஸார்?" - உமா கோபமாகக் கேட்ட பிறகே... தான் உளறியதை உணர்ந்த அர்ஜுன் தன் பேச்சை நிறுத்தி... ரஞ்சித்குமாரைப் பரிதாபமாய்ப் பார்க்க அவன் பற்களைக் கடித்தான்.

"ஸாரி ஸார்! உண்மை என்னை அறியாமல் வெளியே வந்திடுச்சு!"

"நல்லதுதான் அர்ஜுன்! உண்மையை எப்பவும் மறைக்க முடியாது. நானே சொல்லிடுறேன். ஆமா உமா!



உங்களைப் பார்த்ததும் உங்ககூட... குறிப்பா... திலோ கூட பேசணும்.... அவளை என் கார்ல கூட்டிட்டுப் போகணும்னு ஆசைப்பட்டுத்தான் அப்படிச் சொன்னேன்."

"என்ன?"

"இவ்வளவு நேரம் கேட்டீங்களே... அந்தப் பொண்ணு இவதான்!" - என அவன் தைரியமாக திலோத்தமாவைக் கை காட்ட... திலோத்தமாவிற்குள் மீண்டும் பால் பொங்கிற்று.

## 21

உள்ளக் கதவை நீ மெல்லத்
திறந்தால் அந்நாளே பொன்நாளாய்
என் ஜென்மம் விடியும்
எந்நாளும் பன்னீரில்
என் நெஞ்சம் நனையும்!

ஆர்ப்பாட்டமாய் வந்து இறங்கிய சுஹாசினியின் முகம் தொங்கிப் போயிற்று. தான் வருவதாக அறிவித்தும் ரஞ்சித் வீட்டிலிருந்து தன்னை வரவேற்கவில்லை என்பது ஒருபுறம் ஏமாற்றமாய் இருந்தாலும்... இந்த வீட்டில் தன்னைக் கலகலப்பாய் வரவேற்கும் ஒரே நபரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்ததால் கடுப்பாகிப் போனாள்.

கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த பிரியங்காவோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். உடல் மிகவும் சோர்ந்து மெலிந்திருந்தது. எந்தவித ஒப்பனையும் இல்லாமல் வெளிறியிருந்த முகத்தை வியப்பாய்ப் பார்த்தாள் சுஹாசினி.

"ஒரு நாள் கூட மேக்கப் இல்லாம இருக்க மாட்டாளே... என்னாச்சு இவளுக்கு. ஆன்ட்டி! பிரியாவுக்கு உடம்பு எதுவும் சரியில்லையா?"

முகத்தில் துளியும் சிரிப்பின்றி அமர்ந்திருந்த வரலக்ஷ்மியிடம் கேட்டாள் சுஹாசினி.

ஆமாம்... எனச் சொல்வதற்கு வாயெடுத்தவளுக்கு மகனின் எச்சரிக்கை நினைவு வந்தது.

"அம்மா! பிரியாவுக்கு என்ன வியாதி. அவ இன்னும் கொஞ்ச நாள்தான் இருப்பாங்கிற விஷயம் நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியக்கூடாது. குறிப்பா... நம்ம வீட்டில வேலை செய்யுறவங்களுக்கோ நம்ம சொந்தக்காரங்களுக்கோ கூடத் தெரியக் கூடாது."

மருத்துவ மனையில் இருந்து வீட்டிற்கு அழைத்து வந்த அன்றே தாயைத் தனியே அழைத்துச் சொல்லியிருந்தான் ரஞ்சித்.

"ஏம்ப்பா?"

"இந்த விஷயம் எல்லாரும் தெரிஞ்சிட்டா... அப்புறம் பிரியாவைப் பரிதாபமா பார்த்தே கொன்னுடுவாங்க. தினம் ஒருத்தர் வந்து துக்கம் விசாரிக்கிற மாதிரி கேட்பாங்க. பிரியாவே மறக்க நினைச்சாலும் மத்தவங்க மறக்க விடமாட்டாங்க.

"அதனால யாருக்கும் எதுவும் தெரிய வேண்டாம். அவ வாழுற நாள் வரைக்கும் எதுக்காகவும் கஷ்டப்படக் கூடாது. புரியுதாம்மா! நீங்களும் அவ முன்னால நின்னு எப்பவும் அழுதிட்டே நிற்காதீங்க. சரியா?"

"ம்..."



"கூடுமானவரை அவளை வெளியே எங்கேயும் அனுப்ப வேண்டாம். கண்டிப்பா ரெஸ்ட் எடுத்தே ஆகணும். யாராவது வந்து கேட்டா லைட்டா ஜுரம்னு மட்டும் சொல்லுங்க."

"சரிப்பா!"

"நாம நம்ம கஷ்டத்தை மறைச்சிட்டு அவ முன்னாடியும் மத்தவங்க முன்னாலேயும் இயல்பா இருக்கணும். பிரியாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லைன்னுதான் அவ காலேஜ்ல சொல்லியிருக்கேன். அவ ஃபிரண்ட்ஸ் யாரும் வந்து கேட்டா அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதீங்க..." - எனப் பலமுறை எச்சரித்திருந்தான்.

"ஆன்ட்டி! உங்ககிட்டதான் கேட்கிறேன். பிரியாவுக்கு என்னாச்சு? அவ ஏன் இப்படி இளைச்சுப் போயிருக்கா?" - மீண்டும் சுஹாசினி கேட்க... வருத்தமாய்ப் புன்னகைத்தாள் வரலக்ஷ்மி.

"அவ அப்பான்னா... அவளுக்கு உயிராச்சே. அவரோட இழப்பைத் தாங்க முடியாமத்தான் இப்படித் துரும்பாப் போயிட்டா. சரியாச் சாப்பிடுறதில்ல... ஒழுங்காத் தூங்குறதில்ல... காலேஜுக்குப் போறதில்ல..."

"ஓ! ஸாரி ஆன்ட்டி. நான் அதை மறந்தே போயிட்டேன்."

"பரவாயில்லம்மா. உட்கார். காபி கொண்டு வர்றேன்."

"இல்ல ஆன்ட்டி. நான் இப்பத்தான் சாப்பிட்டு வர்றேன். பிரியா கூட நிறையப் பேசணும்னு வந்தேன். தூங்கிட்டு இருக்காளே... எழுப்பட்டுமா?"

அவசரமாய்ப் பதறினாள். "வேண்டாம்மா. ரொம்பத் தலைவலின்னு இப்பத்தான் மாத்திரை போட்டுப் படுக்க வைச்சேன். அவ தூங்கட்டும். நீ வா. நாம ஹால்ல உட்கார்ந்து பேசலாம்."

'இவர்களுடன் அமர்ந்து என்ன பேசுவது? இதற் காகவா லண்டனில் இருந்து வந்து வீட்டில் ஒருவரிடமும் நின்று பேச நேரமில்லாமல் பறந்து வந்தேன். ச்சே! இன்று நடந்தது எதுவுமே நன்றாய் இல்லை. எத்தனை கனவு களோடு வந்தேன்!

'வரும் வழியில் அந்த வண்டிக்காரியிடம் தகராறு! அதுவுமே மிகவும் கடுப்பேற்றி இருந்தது. மதிய உணவிற்கு அண்ணன் எப்படியும் வீட்டுக்கு வந்து விடுவான் என்ற பிரியங்காவின் வார்த்தையை மறவாமல்... ரஞ்சித் வீட்டில் இருக்கும்போதே வந்துவிடலாம் என்றால் அவளால் நடு ரோட்டில் அரை மணி நேரம் வேஸ்ட்.

'இங்கு வந்தால் ரஞ்சித்தையும் காணவில்லை. இவளானால் நோயாளி போல் படுக்கையில் கிடக்கிறாள். இப்போது சும்மாயிருக்க வேண்டுமே... பேசாமல் ரஞ்சித்தின் அலுவலகத்திற்கே சென்று கேட்டால் என்ன? அதுதான் சரி...' - என்று நினைத்தவள் வரலக்ஷ்மியை நெருங்கினாள்.

"ஆன்ட்டி! பிரியா தூங்கட்டும். நான் போய் ரஞ்சித்தைப் பார்த்து விட்டு வருகிறேனே...?"

"ரஞ்சித்தா? அவன் இப்போ எங்கே இருப்பான்னு எனக்கே தெரியாதேம்மா. நீ எங்கே போய்ப் பார்ப்பாய்?"

"அது ஒன்றும் பெரிய பிரச்சனையில்லை ஆன்ட்டி. என் கையிலதான் செல் இருக்கே. ஒரு போன் பண்ணிக் கேட்டால் போதும்."



"ஆபீஸ்ல ஏதாவது வேலையா இருப்பான்ம்மா. அங்கே போய் என்ன பேசுவாய்? கொஞ்ச நேரம் இரேன். பிரியா எழுந்திடுவா. பேசிட்டு இருங்க. அவன் சாயந்திரம் வந்திடுவான். வேலை நேரத்தில் போன் பண்ணினா அவனுக்குக் கோபம் வரும்."

'க்கும்... பிள்ளைக்குத் தப்பாத அம்மா. கொஞ்ச நேரம் அவனைத் தனியாப் பார்த்துப் பேசலாம்னு பார்த்தா... பெரிசு விடாது போலிருக்கு. ம்ஹூம். இது சரிப்படாது. பிரியாவை எழுப்பிட வேண்டியதுதான். அவளையும் கூட்டிட்டே போய் ரஞ்சித்தைப் பார்க்கணும்.

'அப்பத்தான் நழுவாமப் பதில் சொல்வான். தங்கையைக் காரணம் காட்டித்தானே திருமணம் செய்து கொள்ள மறுக்கிறான். இவளே சொன்னால் நிச்சயம் அவனால் மறுக்க முடியாது. பிரியாவின் பேச்சிற்கு மறு பேச்சு அந்த வீட்டில் கிடையாது என்பது அவளும் அறிந்ததே.'

"ஓ.கே. ஆன்ட்டி! நான் இங்கேயே வெயிட் பண்றேன். நீங்க வேலை இருந்தா கவனிங்க."

"பரவாயில்லம்மா. இப்ப என்ன வேலை? நானும் உன்கூடவே இருக்கேன். படிப்பு எல்லாம் எப்படிம்மா போயிட்டு இருக்கு?"

"ம்... நல்லாப் போயிட்டு இருக்கு!" - இவளை எப்படி வெளியேற்றுவது என அவசரமாய் யோசித்தாள் சுஹாசினி.

"இப்ப எதுவும் லீவுல வந்திருக்கிறியா? எத்தனை நாள் இருப்ப?"

"லீவு இல்ல ஆன்ட்டி. நான்தான் உங்களையெல்லாம் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். "

"இதுக்காகவா அவ்வளவு தூரத்தில இருந்து வந்தே?"

"முக்கியமான முடிவுகள் எடுக்கணும்னா வந்துதானே ஆகணும் ஆன்ட்டி!"

"எ... என்ன முக்கியமான முடிவும்மா?"

"அ... அது... பிரியா எழுந்தப்புறம் சொல்றேனே..."

"சரி."

"ஆன்ட்டி! ரொம்பத் தாகமா இருக்கு. ஏதாவது சில்லுன்னு தர்றீங்களா?"

"இதோ எடுத்திட்டு வர்றேன்ம்மா. வெயில்ல வந்தவளுக்கு ஒண்ணுமே தராம பேசிட்டிருக்கேனே... ஆரஞ்சு ஜூஸ் தரட்டுமா சுஹா?"

"போதும் ஆன்ட்டி. கொஞ்சம் சில்லுன்னு இருக்கட்டும்."

"ம். இதோ கொண்டு வர்றேன்!" - வரலக்ஷ்மி எழுந்து அறையை விட்டு வெளியேற... அவசரமாய்ச் சென்று கதவைச் சாத்தினாள். அதே வேகத்தில் கட்டிலை நெருங்கினாள்.

"ஏன்டி! நான் ஒருத்தி எவ்வளவு ஆர்வமா ஓடி வந்திருக்கேன். உனக்கு என்ன தூக்கம்? எழுந்திரு. பிரியா. எழுந்திரு!" - ஒருக்களித்துப் படுத்திருந்த பிரியாவின் முதுகில் வழக்கம் போல் பலமாய் அறைந்து எழுப்ப... திடுக்கிட்டு எழுந்தாள் பிரியங்கா.



முதுகோடு சேர்த்து இதயமும் பலமாய் வலித்தது.

தூக்கம் கலைந்ததோடு திடீரென்று வாங்கிய பலமான அடியில் மூச்சுத் திணறியது. திணறலாய் மெல்ல எழ முயற்சித்தாள்.

பிரியங்காவின் உடல் நிலையை உணராத சுஹாசினி அலட்சியமாய்த் தன் ஒற்றைக் கையால் அவளைப் பற்றி யெழுப்பி அமர வைத்தாள். அதில் இன்னமும் வலி கூட... "அம்மா... ஆஆ..." என முனகினாள்.

பக்கத்து அறையில் அமர்ந்து சாப்பிட்டு விட்டுக் கை கழுவிக் கொண்டிருந்த நர்ஸின் காதில் இந்த முனகல் கேட்டுவிட... பதட்டமாய் ஓடி வந்தாள்.

"என்ன பிரியா இது? பகல்ல என்ன தூக்கம்? போ... முதல்ல ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வா. நான் எவ்வளவோ பேசணும் உன்கிட்ட. கமான்...!" - வேகமாய் அவளைக் கட்டிலில் விட்டு இறக்கி... குளியலறையை நோக்கித் தள்ள... வலியால் கண்களை மூடிக் கொண்டிருந்த பிரியங்கா தள்ளாடிக் கீழே விழுந்தாள்.

"ஐயோ!" - கூக்குரலோடு நர்ஸ் ஓடி வந்து அவளைப் பற்றித் தூக்க... ஆரஞ்சுப் பழத்தைப் பிழிந்து கொண்டிருந்த வரலக்ஷ்மி சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். நெஞ்சம் பதற... வேலையை அப்படியே போட்டு விட்டு மகளின் அறையை நோக்கி ஓடினாள்.

நர்ஸ் சீறிக் கொண்டிருந்தாள். "அறிவில்ல? இப்படியா ஒரு பேஷண்ட்கிட்ட நடந்துக்கிறது? யார் நீங்க? நகருங்க... இந்தப் பக்கம்..." - என்றவாறு சுஹாசினியை நகர்த்தி விட்டு பிரியங்காவைப் பரிவாய் அணைத்தபடி கட்டிலில் படுக்க வைத்தாள்.

"மேடம்! உடம்புக்கு ஒண்ணுமில்லையே... எதுவும் செய்யுதா?"

"என்னம்மா! என்ன ஆச்சு? எம் புள்ள சத்தம் கேட்டுதே...!" - பரபரப்பாய் மகளை நெருங்கிக் கை, கால்களை வருடினாள் வரலக்ஷ்மி. நர்ஸ் கோபமாய் முகம் சிவக்க நின்று கொண்டிருந்த சுஹாசினியைச் சுட்டிக் காட்டினாள்.

"யாரு மேடம் இது?"

"இது... என் பொண்ணோட சிநேகிதி. ஏன் என்ன பண்ணினாள்?" - வரலக்ஷ்மியின் பதிலில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

'நான் இவ பெண்ணோட சிநேகிதியா? சிநேகித் மட்டும்தானா? ஏன் மருமகள் என்று அறிமுகம் செய்வதற்கென்ன? மகனைப் போலவே தாயும் அழுத்தக் காரிதான். இருக்கட்டும். நான் இங்கு வந்தவுடன் எல்லாம் தலைகீழாக மாறிவிடும்!' - பற்களைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

"மேடம்! நீங்க பக்கத்தில இருந்ததாலதானே சாப்பிடப் போனேன். திடீர்னு மேடத்தோட முனகல் சத்தம் கேட்டுது. ஓடி வந்து பார்த்தா... இந்தப் பொண்ணு முதுகைப் பிடிச்சி கீழே தள்ளிட்டு இருந்தா...."

"என்ன?" - அதிர்ச்சியாய் சுஹாசினியை ஏறிட்டாள் வரலக்ஷ்மி.

"அத்தே! ஏன் என்னை அப்படிப் பார்க்கிறீங்க? ஏய்! என்னவோ நான் வேணும்னே பிடிச்சித் தள்ளின மாதிரி



பேசுற. அத்தே! நீங்க போனதும் பிரியா எழுந்திட்டா. நான்தான் அவளை முகம் அலம்பிட்டு வரச் சொன்னேன். சொல்லேன் பிரியா?"

வலியிலும் உறக்கக் கலக்கத்திலும் சற்று முன் போடப்பட்டிருந்த மாத்திரையின் வீரியத்திலும் உடல் முழுக்க வெடவெடக்க கண்களை மூடிக் கொண்டாள் பிரியங்கா. மறுக்கவோ பேசவோ உடம்பு ஒத்துழைக்கவில்லை.

அதைக் கண்ட சுஹாசினியின் முகம் இன்னும் கடுப்பானது. ஆவேசமாய்ப் படுக்கையை நெருங்கிப் படுத்திருந்தவளின் தோளைப் பற்றி அசைத்தாள்.

"ஏய்! ஒரு நர்ஸ் என்னவோ நான் கொலைக் குற்றம் செய்த மாதிரி என் மேல கம்ப்ளெய்ண்ட் பண்ணிட்டு இருக்கா. நீ என்னடான்னா பேசாமப் படுத்திட்டு இருக்கே. எழுந்திரு பிரியா!" - அவளது பிடியில் துவண்டாள் பிரியங்கா.

"சு...ஹா! விடு. என்னால... முடியலை... ப்ளீஸ்!"

"என்னடி! ஒரு தலைவலிக்குப் போய் இவ்வளவு சீன் போடுறீங்க எல்லாரும்... என்னதான் வீட்டுக்குச் செல்லப் பெண் என்றாலும் இது ரொம்ப ஓவர்!" - என்ற சுஹாசினியைக் கோபமாய் விலக்கினாள் நர்ஸ்.

"போம்மா... அந்தப் பக்கம். உடம்பு முடியாதவங்ககிட்ட எப்படி நடந்துக்கணும்னு கூடத் தெரியாது? ஏன் தூங்கின வங்களை எழுப்பின?"

"வாட்? நான் எழுப்பினேனா? நீ பார்த்தியா? மைண்ட் இட்."

"இதோ பாரும்மா. பொய் சொல்லாதே. நான் கொடுத்த டோஸுக்கு நாலு மணி நேரம் அசந்து தூங்குவாங்க. பக்கத்தில நின்னு பேசினாக்கூட தூக்கம் கலையாது. நீதான் ஏதோ பண்ணி அவங்களை எழுப்பியிருக்க..."

"அதான் அவங்களால எழ முடியாம இருக்காங்க. என்ன பண்ணினே? தூங்குறவங்களை எழுப்புறதே பாவம். நீ என்னன்னா உடம்பு முடியாம மாத்திரையோட தயவில தூங்குறவங்களை எழுப்பினாயா?"

"ஹேய் லுக். நீ ரொம்ப ஜாஸ்தி பேசுற. நான் இவங்களுக்கு என்ன உறவுன்னு தெரியுமா?"

"நீ யாரா இருந்தா எனக்கென்ன? எனக்கு என்னோட பேஷண்ட் முக்கியம். மேடம்! இவங்களை வெளியே அழைச்சிட்டுப் போங்க. இவங்க தூங்கட்டும்!" - நர்ஸ் சொல்ல, பிரியங்கா கண்களைத் திறவாமலே முனகினாள்.

"அ...ம்...மா!"

கலங்கியிருந்த கண்களைத் துடைத்தவாறே மகளை நெருங்கினாள் வரலக்ஷ்மி. "பிரியாம்மா! என்னம்மா?"

"அ...ம்...மா! முதுகில... நெஞ்சுல... ரொம்ப வலிக்குதும்மா."

"ஐயோ! ஏம்மா... சிஸ்டர்! என் பொண்ணுக்கு வலிக்குதாமே?" - தாய் பதற...

நர்ஸ் பிரியங்காவிடம் குனிந்தாள். கன்னங்களை லேசாய்த் தட்டினாள். "பிரியங்கா! ஏன் முதுகு வலிக்குது? முதுகு அழுத்துதா? ஒருக்களித்துப் படுத்துக்கிறீங்களா?"

"இல்லை... முடியலை. யாரோ அடிச்சாங்க... என் முதுகில..." - கண்களைத் திறவாமலே அவள் முனகலாய்ச்



சொல்ல... இருவரும் சரேலென சுஹாசினியின் புறம் திரும்ப... முகம் கறுத்துப் போய் நின்றாள் அவள்.

"நான் சொன்னேனில்ல மேடம்! இவதான் அடிச்சு எழுப்பியிருக்கா? ஏம்மா! உன் பலத்தை இப்படியா காட்டுவ? வெளியே போம்மா..."

"ஏய்! நீ ரொம்பப் பேசுற. நான்..."

"சுஹாசினி!" - அழுத்தமாய் அழைத்தாள் வரலக்ஷ்மி.

"ஆன்ட்டி! நான் ஒண்ணும் வேணும்னு அடிக்கலை. சும்மா தட்டி எழுப்பினேன். அவ்வளவுதான். ஆமா! வெறும் தலைவலிக்கு எதுக்கு நர்ஸெல்லாம் வெச்சிருக்கீங்க?"

"நீ கொஞ்சம் வெளியே வா."

"ஆன்ட்டி!"

"என் கூட வா..." - என்றவாறு வரலக்ஷ்மி வெளியேற... பற்களைக் கடித்தவாறே அவளைப் பின் தொடர்ந்தாள்.

"இப்பச் சொல்லும்மா. பிரியாகிட்ட நீ என்ன பேசணும்?"

"ஆன்ட்டி! அது வந்து..."

"கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதே. நீ ஒரு பொண்ணுதானே?"

"ஆன்ட்டி!"

"இதோ பார். ரஞ்சித்தோட அப்பா இருந்தபோது அவரும் உன் அப்பாவும் சம்பந்தி ஆகலாம்னு யோசிச்சிருக்கலாம். ஆனா அதுக்கு நானோ என்

புள்ளையோ பொறுப்பாக முடியாது. முதல்ல இதைப் புரிஞ்சுக்கணும்... நீ!" - சற்றே கடுமையாய் வரலக்ஷ்மி சொல்ல... சுஹாசினியின் முகம் மாறியது.

"எ...ன்ன?"

"ரெண்டு நாள் முன்னே நீ பிரியாகிட்ட போன்ல பேசும்போது நானும் இருந்தேன்."

"ஆ...ன்...ட்டி!"

"அவகிட்ட என்ன சொன்னே? மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கியா? அவ உன்கிட்ட மாப்பிள்ளை கேட்டாளா? நீ எப்போ புரோக்கர் ஆனாய்?"

"ஆன்ட்டி!"

"என் பொண்ணுக்கு எப்போ எது செய்யணும்னு எங்களுக்குத் தெரியாதா? நீ ஏன் நாட்டாமை பண்றே? சிட்டுக்குருவி மாதிரி பறந்திட்டிருந்த பொண்ணு இப்படிப் படுத்துக் கிடக்கான்னா... அதுக்கு முழுக்காரணமும் நீதான்."

"நானா!"

"ஆமா. சும்மா இருந்த பொண்ணுகிட்ட கண்ட கருமத்தையெல்லாம் பேசி அவ மனசைக் கலைச்சிருக்க... அவளுக்குக் கல்யாணம் பண்ற பொறுப்பை உன்கிட்ட யாரு கொடுத்தது?" - மிரட்டலான தொனியில் வரலக்ஷ்மி கேட்க... சுஹாசினியின் முகம் அவமானத்தில் சிவந்தது.

வரலக்ஷ்மி இப்படிப் பேசிக் கேட்டதில்லை. இந்த வீட்டின் முக்கியப்புள்ளி பிரியா சம்மதித்தால் போதும் என்று தான் எண்ணியது தவறோ! இப்போதே மாமியார்



காட்டுகிறாளே... இவளிடம் நாமும் அதிகாரத்தைக் முறைத்துக் கொள்ளக் கூடாது. இதமாய்ப் பேசியே காரியத்தைச் சாதிக்க வேண்டும். சட்டென முகத்தை மாற்றிப் புன்னகைத்தாள்.

"ஆன்ட்டி! ஏன் இவ்வளவு கோபப்படுறீங்க? ஒரு பொண்ணுன்னு இருந்தா தெரிஞ்சவங்க... சொந்தக்காரங்க ஏதாவது நல்ல மாப்பிள்ளை இருந்தா பேசுவது இயல்பு தானே. ஹரி நல்ல பையன். ரொம்ப வசதியானவனும் கூட. நம்ம பிரியாவுக்குப் பொருத்தமா இருப்பான்னுதான் நான் பேசினேன்."

"நீ பேசினது தப்பு இல்லை. ஆனா அதை யார்கிட்ட சொல்லியிருக்கணும்? என்கிட்டயோ ரஞ்சித்தோட அப்பாகிட்டயோதான் பேசியிருக்கணும். சொன்னியா?"

"ஸாரி ஆன்ட்டி!" - என்றாள் முகம் கன்ற.

"கல்யாணம்ங்கிறது சின்னப் பிள்ளைங்க விளை யாட்டு இல்லை. உங்க இஷ்டத்துக்கு நீங்களே பேசி முடிக்கணும்னா நாங்க எதுக்கு இருக்கோம்?"

சுஹாசினிக்குள் விர்ரெனக் கோபம் ஏறியது. "அதான் அவளே வேண்டாம்னு சொல்லிட்டாளே... பிறகேன் இப்படிக் குறுக்கு விசாரணை பண்ணிட்டு இருக்கீங்க? நான் எந்த மாப்பிள்ளையையும் கூட்டிட்டு வரலை..."

"பிறகேன் இங்கே வந்தாய்? இங்கு என்ன வேலை உனக்கு?"

"ஆன்ட்டி! ஏன்... நான் இங்கே வரக்கூடாதா? எனக்கு அந்த உரிமை இல்லையா?"

"இதோ பாரும்மா. உன் அப்பாகிட்ட எல்லாம் சொல்லிட்டோம். நீ அவரைப் பார்த்துப் பேசு. எல்லாம் புரியும்."

"என்ன? என்ன பேசினீங்க?"

"இங்கே எந்த எண்ணத்தோட வந்தியோ... அந்த எண்ணம் பலிக்காது."

"என்ன?"

"என் புள்ளைக்குப் பிடிக்காத எதையும் நான் செய்ய மாட்டேன். நீ உனக்கேத்த மாப்பிள்ளையா பார்த்துக்கோ. போயிட்டு வா... நான் என் பொண்ணைக் கவனிக்கணும்."

"வெளியே போடின்றீங்களா?"

"எனக்கு வேலை இருக்கும்மா..."

"எனக்கு ஒரு முடிவு தெரியாம நான் இங்கிருந்து போக மாட்டேன்." - அழுத்தம் திருத்தமாய் சுஹாசினி சொல்ல... வாசற்புறமாய்க் கேள்வி வந்தது.

"என்ன முடிவு தெரியணும் உனக்கு?" - குரல் வந்த திசையில் இருவரும் திரும்ப... ரஞ்சித் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் வேகமாய் நெருங்கியவளை விட்டு விலகி... தாயிடம் வந்தான்.

"அம்மா! இங்கே என்ன பிரச்சனை?"

"பிரச்சனைன்னு ஒண்ணும் இல்லப்பா. சும்மா பேசிட்டு இருக்கேன். இவளும் படிச்ச பொண்ணுதானே! விஷயத்தைப் புரிஞ்சப்பா."



"ரஞ்சித்! லண்டன்லே என்கிட்ட என்ன சொன்னீங்க? பிரியாவுக்குக் கல்யாணம் பண்ணாம நீங்க பண்ணிக்க மாட்டேன்னுதானே சொன்னீங்க...!"

"ஆமா."

"பிறகேன் அவளுக்குப் பார்த்த மாப்பிள்ளையை வேண்டாம்ங்கிறீங்க. முதல்ல பிரியா ஓ.கேன்னுதான் சொன்னாள். அதுக்குப் பிறகுதான் போன் பண்ணி வேண்டாம்னு சொல்றா. காரணம் கேட்டா அழுகிறாள். என்ன... அவளை மிரட்டினீங்களா?"

"சு...ஹா..." - மிக மெல்லிய குரலில் அழைத்தாள் பிரியங்கா. நிற்க முடியாமல் நின்றவளை நர்ஸ் கைத்தாங்கலாய்ப் பற்றியிருந்தாள்.

ரஞ்சித் பதறியவாறே தங்கையை நெருங்கினான். "பிரியா! நீ ஏம்மா வெளியே வந்தாய்? போய்ப் படு."

"இல்லண்ணா! நான்... நான்... பேசணும்."

"என்ன பேசணும்?"

"நான் ஏன் கல்யாணம் வேண்டாம்னு சொன்னேன்னு சுஹாவுக்குத் தெரியணும். தெரிஞ்சாத்தான் அவளால தன்னோட முடிவை மாத்திக்க முடியும். நான் சொன்னா... அவ கேட்பா..."

"என்ன பிரியா உளறுற? நான் ஏன் முடிவை மாத்திக்கணும்?"

"சுஹா... நான்..." - என்ற தங்கையைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் ரஞ்சித்.

"வேண்டாம் பிரியா! நீ பேசறதுக்கே சிரமப்படுறியே... நானே சொல்றேன்."

"அண்ணா!"

"உண்மையைச் சொல்லிடுவோம். முடிவை சுஹாசினியே எடுக்கட்டும்."

"என்ன.... ஆளாளுக்கு என்னென்னவோ சொல்றீங்க?" - குழப்பமானாள் சுஹாசினி.

தொண்டையைச் செருமிக் கொண்டான் ரஞ்சித்குமார். "சுஹாசினி! உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்ததும் பிரியா இப்ப உன்கிட்ட சொல்லப் போற விஷயமும் ஒண்ணு தான். அவளால சொல்ல முடியாததால அவ சார்பா நானே சொல்லிடுறேன்."

"எ... என்ன?"

"எனக்கு இதயத்தில கோளாறு இருக்கு சுஹா. எல்லா ட்ரீட்மெண்ட்டும் பண்ணிப் பார்த்திட்டோம். எந்த டாக்டராலும் என்னைக் காப்பாத்த முடியாது."

"எ...ன்...ன?" - பலமாய் அதிர்ந்தாள் சுஹாசினி.

"அதனாலதான் கல்யாணம் வேண்டாம்னு சொன்னேன். என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. இன்னும் எத்தனை நாள் இருக்கப் போறேனோ... அது வரைக்கும் இப்படியே இருந்திடுறேனே... இதை அன்னிக்கே உன்கிட்ட சொல்லியிருப்பேன்.

"என்னால முடியலை. ஆனா உன்னை நேரில பார்த்த பிறகு சொல்லாமல் இருக்க முடியலை. உனக்கு என் மேல



கோபம் இருக்கும்னு தெரியும். ஆனா கல்யாணம் வேண்டாம்னு நான் சொன்னதுக்கு இதுதான் காரணம்!"

தன் தங்கை சொல்ல வேண்டிய வார்த்தைகளை ரஞ்சித் சொல்ல... ரஞ்சித் தன்னைப் பற்றித்தான் சொல்கிறான் எனத் தவறுதலாகப் புரிந்து கொண்ட சுஹாசினி உறைந்து போனாள்.

## 22

மாலைப் பொழுதின் மயக்கத்திலே
நான் கனவு கண்டேன் தோழி
மனதில் இருந்தும் வார்த்தைகள்
இல்லை காரணம் ஏன் தோழி!

**மா**லை சூரியன் மறைந்து இருள் சூழ ஆரம்பித்த நேரம்... தன் பணியைச் சிறப்பாகச் செய்து முடித்தாள் திலோத்தமா. விரல்கள் வலித்தன. கையில் இருந்த தூரிகையைக் கீழே வைத்து விட்டு விரல்களைக் கோத்து நெட்டி முறித்தாள்.

உட்கார்ந்தே இருந்து வரைந்ததில் கால்கள் மரத்துப் போயிருந்தன. மெல்ல எழுந்து காலை உதறினாள். கழுத்தைச் சாய்த்து நிமிர்த்தினாள். உடலின் களைப்பையும் வலியையும் விட மனம் வெகுவாய் நிறைந்திருந்தது.

மனம்தான் நம் உடல் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கிறது. எத்தனை வேலை இருந்தாலும் மனம் உற்சாகமாய் இருந்தால் அனைத்தும் எளிதாய் சிறப்பாய் முடிந்து விடுகிறது. மனம் பாரமாய் இருந்தால் எல்லாமே பாரமாய்த் தெரிகிறது.

திலோத்தமாவின் மனம் இன்று மயிலிறகாய் மாறி யிருந்தது.

'இவதான் என் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு!' - என்று ரஞ்சித் கை காட்டிவிட... அதற்கு மேலும் அங்கு நின்று அவள் அவனை எதிர்கொள்ள முடியாமல் உள்ளம் படபடக்க... ஓடி வந்து எதிரே வந்த ஆட்டோவில் ஏறிக் கொண்டாள்.

ஆனால் அதற்குள் உமா ரஞ்சித்திடம் எல்லாம் சொல்லி விட்டாள் என்றது அவனது முகத்தின் ஜொலிப்பில் தெரிந்தது. ஆட்டோ அவர்களைக் கடக்கையில் சத்தமாய் 'தேங்க் யூ!' என்றானே... பறக்கும் முத்தம் வேறு. ஐயோ! - நினைக்கையில் இப்போதும் கன்னம் சிவந்தது.

இது எப்படி நிகழ்ந்தது. சரியா... தவறா? அவனிடம் எது தன்னை ஈர்த்தது என்று இதுவரை புரியவில்லை. ஆனால் பல வருஷம் பார்த்துப் பழகியது போல் ஒரு நெருக்கம் மனசுக்குள் இழையோடியது.

பிரியங்கா செய்தது பெரிய பிழைதான். அதற்கு அதிகமாகவே அவள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் இதில் இவனுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லையே... தங்கையால் ஏற்பட்ட அனைத்தையும் இவன்தானே சரிசெய்தான். அதனால் ஏற்பட்ட நிகழ்வா?

இல்லை... தங்கையின் முடிவால் மனம் கலங்கி நின்றவனைக் கண்டதும் தன் மனம் இளகியது. தந்தையைப் பறிகொடுத்த நிலையிலும் தங்களின் படிப்பிற்காக ஓடி வந்து உதவினானே! அப்போது ஏற்பட்ட மாற்றமா?



விஷ்ணுவின் மீது அவன் கொண்ட அக்கறையா? தன் குடும்பத்தின் மீது அவன் வைத்திருக்கும் அன்பா... கவனிப்பா? எது? எது தன்னை அசைத்தது? எத்தனை முறை யோசித்தும் அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் உறுதியாய்த் தெரிந்தது. அவனை... அவனது குண நலன்களை... அவனது குரலை... பேச்சை... அவனது அருகாமையைத் தன் மனம் விரும்புவது உண்மை. எதையும் மறைக்காமல் ஒளிக்காமல் அவன் பேசுவதைத் தன் மனம் விரும்பி ஏற்கிறதே.

அவனது முகம் வாடி நின்றால் தன் மனம் துடிக்கின்றதே. அவனைத் தேற்ற வேண்டும் எனத் தவிக்கின்றதே. அவனது முகம் மலர்ந்தால் தன் மனம் நிறைகின்றதே... இதற்குப் பெயர்தான் நேசமா?

அப்படியென்றால் உமா சொன்னது போல் நான் அவனை நேசிக்கின்றேனா? அதை என் முகம் காட்டிக் கொடுத்துவிடும் என்று அஞ்சியதால்தான் அவனை நிமிர்ந்து பார்க்கவும் தயங்கி அவனை விட்டு விலகத் துடித்தேனா?

இனி அவனை எப்படிப் பார்க்க முடியும் என்ற தயக்கத்தை விட எப்போது பார்க்க முடியும் என்ற தவிப்பே மேலோங்கியது. ஆசையில் கலங்கிய மனக்குளத்தைத் தட்டி அடக்கினாள்.

இதென்ன! நேரம் காலம் தெரியாமல் அவனது நினைவு இம்சிக்கின்றதே. அவனது நினைவுகளை ஒதுக்கி வைத்து விட்டுத் தான் வரைந்து வைத்திருந்த படத்தைப் பார்த்தாள். வயதான பெண்மணியின் புகைப்படத்தைக் கையில் எடுத்தாள்.

ஈரத்தால் நசிந்து போயிருந்த படத்தைத் தான் வரைந்த ஓவியத்தின் அருகே வைத்துப் பார்த்தாள். சற்றும் பிசகாமல் அந்த அம்மாளே நேரில் வந்து அமர்ந்திருப்பதைப் போல் வெகு அருமையாய் இருந்தது. திருப்தியாய்ப் புன்னகைத்தாள்.

"அடடா! என்ன அழகு! என் மாமியாரே நேர்ல வந்த மாதிரி இருக்கும்மா..." என்றவாறே கையில் காபியோடு வந்தாள் ஜெயபாலின் மனைவி ஆனந்தபுஷ்பம்.

"வாங்கம்மா! படம் எப்படிம்மா இருக்கு?"

"இதைப் படம்னே சொல்ல முடியாது. அப்படியே நேர்ல பார்த்த மாதிரி இருக்கு. அவர் வந்து பார்த்தா ரொம்ப சந்தோஷப்படுவாரு. அருமையா வரைஞ்சிருக்கேம்மா..." - அந்த அம்மாள் மனதாரப் பாராட்டியதில் மனம் இன்னும் உற்சாகமாகியது.

"தேங்க்யூம்மா!"

"இந்தாம்மா, காபி. குடி."

"பரவாயில்லை. இருக்கட்டும்... இப்ப தம்பி வந்திடுவான். வீட்டில போய்..."

"அட! சும்மா குடிம்மா. எவ்வளவு நேரமா அசையாம இருந்து வரைஞ்சிருக்க. காபி குடிச்சிட்டு நைட் டிபனும் எங்க வீட்டிலயே சாப்பிட்டுப் போகணும். "

"ஐய்யோ! வேணாம்மா... ஏற்கெனவே லேட்டாகிடுச்சி. அம்மா தேடிட்டு இருப்பாங்க."

"முதல்ல காபியைக் குடிம்மா. நான் அவருக்குப் போன் பண்ணிட்டு வர்றேன்."

"எதுக்கும்மா?"



"படம் ரெடியானதும் சொல். நான் உடனே பார்க்கணும்னு சொல்லிட்டுத்தான் கிளம்பினார். கம்பெனியிலதான் இருப்பாங்க. போன் பண்ணினதும் வந்து நிற்பாங்க... பாரேன்!" - என்றவாறு கையில் காபியைக் கொடுத்து விட்டு அவள் அடுத்த அறைக்குச் செல்ல... புன்னகையோடு காபியை அருந்தத் துவங்கினாள்.

குப்பென சிகரெட் நெடி தாக்க... திடுக்கிட்டுத் திரும்பினாள். வாயில் சிகரெட்டோடு நின்றவனும் லேசாய்த் திடுக்கிட்டு, அவசரமாய் சிகரெட்டைத் தூக்கி எறிந்தான். கலைந்த தலை, சிவந்த கண்கள், சவரம் செய்யப்படாத முகம் என ரௌடி போல் காட்சியளித்தவனைக் கண்டதும் மிரண்டு... அவசரமாய் அடுத்த அறைக்குள் பார்வையைத் திருப்பினாள்.

அங்கே எதுவும் புலப்படவில்லை என்றதும் பயமாய் அவனிடம் திரும்பினாள்.

"யா... யார் நீங்க?" - கேட்கும்போதே குரல் தந்தி அடித்தது. அலட்சியமாய்ப் பதில் வந்தது.

"இது நான் கேட்க வேண்டிய கேள்வி. யார் நீ? எங்க வீட்டில என்ன பண்ணிட்டு இருக்க?" - அவனது குரலில் இன்னும் மிரண்டாள்.

"இது...: உங்க வீடா? நான்... வந்து ஜெயபால் ஸார்தான்..."

"என்ன?"

"இல்லை... இந்தப் படம் வரையுறதுக்காக வந்தேன்..." - என்றவள் தான் வரைந்த ஓவியத்தைச் சுட்டிக் காட்ட... அவன் பார்வை வியந்தது.

"அட! எங்க பாட்டியோட படம். நீயா வரைஞ்சே?"

"ம்..."

"பரவாயில்லையே... ஏதாவது விளம்பரப் போர்டு எழுதுற கம்பெனியில இருந்து வந்திருக்கியா?"

"இ... இல்லை. நான் படிச்சிட்டு இருக்கேன்."

"என்ன?" - வியப்பாய்ப் பார்த்தான்.

"ஏன்?"

"படிச்சிட்டே இதை பார்ட் டைம் ஜாப்பா பார்க்கிறியாக்கும்?"

"இல்லை. சாரோட கம்பெனியிலதான் எங்க அப்பா வேலை பார்த்தாங்க. நான் கூட..."

"இரு... இரு... யார் உன் அப்பா?"

"அப்பா பேரு ராகவன்!"

"ராகவன் சாரோட பொண்ணா நீ?" - ஆச்சரியமாய்க் கேட்டான்.

"ஆமா! அப்பாவை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும். என் அப்பா என்னைத் திட்டும்போதெல்லாம் எனக்காகப் பரிந்து பேசுற ஒரே ஆத்மா ராகவன் ஸார்தான்!"

"ஸார்?"

"அதெல்லாம் என் சொந்தக் கதை. இந்த வீட்டில ஒரு அம்மா இருப்பாங்களே... எங்கே அவங்க?"

"யாரு... யாரைக் கேட்கிறீங்க?"



"என்னைத்தாம்மா கேட்கிறான்..." - என்றவாறே இன்னொரு பக்க அறையிலிருந்து வந்தாள் ஆனந்தபுஷ்பம்.

"அம்மா! இது..."

"என் புள்ளைதாம்மா. பேரு திவாகர். திவா! என்னடா அதிசயமா இவ்வளவு சீக்கிரமா வந்திட்டே?"

"பணம் வேணும்."

"எதுக்குடா? காலையிலதானே தந்தேன்."

"இருநூறு ரூபா எப்படிப் போதும்? ஒரு ஐந்நூறு கொடு."

"எதுக்குடா?"

"கேட்டா பணத்தைக் கொடு. சும்மா கேள்வி கேட்காதே!" - சிடுசிடுத்தவனை அடக்கினாள்.

"ஏன்டா! இப்படிப் பொறுப்பில்லாம அலையுற? உன் அப்பா உன்னை நினைச்சே கவலைப்பட்டுட்டு இருக்காங்க. சொன்னாக் கேளுடா. பேசாம நம்ம கம்பெனியில போய் ஏதாவது வேலையைப் பாருடா."

"ச்சே! உன்னோட பெரிய ரோதனையாப் போச்சே! இதுக்குத்தான் வீட்டுக்கே வர்றதில்ல... பணத்தைக் கொடு."

"இப்ப என்கிட்ட பணம் இல்லைடா. அப்பா வரட்டும். வாங்கித் தர்றேன்."

"என்ன? உன்கிட்ட பணம் இல்லையா? இதை நான் நம்பணும்! உன்கிட்ட இருந்து எப்படி வாங்குறேன்னு பாரு!" - என்றவன் ஆத்திரமாய்ப் பார்வையைச் சுழற்றினான். அவனது கண்களில் அப்போதுதான் வரைந்து முடித்திருந்த ஓவியம் தெரிய ஆவேசமாய் அதை எடுத்தான்.

திலோத்தமா பதறிப் போனாள். "ஐயோ! என்ன பண்றீங்க? இன்னும் பெயிண்ட் காயலை. தொடாதீங்க."

"ஏய்! வாயை மூடிட்டுக் கிளம்பு. இது எனக்கும் எங்க அம்மாவுக்கும் நடக்கிற போராட்டம். போ..."

"ஸார்! ப்ளீஸ் ஸார்! கிட்டத்தட்ட அஞ்சு மணிநேரமா உட்கார்ந்து இருந்து வரைஞ்ச படம். பச்சைத் தண்ணி குடிக்கக் கூட நான் எழுந்துக்கலை. கவனம் சிதறிடக் கூடாதுன்னு அசையாம இருந்து வரைஞ்சேன். ப்ளீஸ் ஸார் இதை வீணாக்கிடாதீங்க.

"உங்களுக்குக் கவிதை எழுதுறது எவ்வளவு பிடிக்குமோ... அதே மாதிரி ஓவியம் வரையுறது என் மூச்சு. ரொம்பக் கஷ்டப்பட்டு வரைஞ்சிருக்கேன். தயவு செய்து அதைக் கலைச்சிடாதீங்க. உங்க கவிதையை யாராவது கிழிச்சுப் போட்டா உங்களால தாங்கிக்க முடியுமா?"

திலோத்தமா கெஞ்ச... திவாகரின் முகம் மாறியது. கையில் தூக்கிப் பிடித்திருந்த ஓவியம் தானாய்க் கீழே இறங்கியது. உதடு துடிக்கக் கேட்டான்.

"எ...ன்ன சொன்னே? கவிதையா? நான் கவிதை எழுதுறது உனக்கு எப்படித் தெரியும்?"

"உங்க அப்பா சொல்லியிருக்காங்க. உங்களைத் தட்டிக் கொடுக்காம விட்டுட்டோமேன்னு ரொம்ப வருத்தப் பட்டாங்க."

"என்ன?"

"கவிதை எழுத வயசு தேவையில்லை ஸார். இப்பக் கூட நீங்க எழுதலாமே... எத்தனையோ பத்திரிகைகள்ல



கவிதைகள் வெளிவருதே! நீங்க கூட இப்படிப் பொறுப் பில்லாம ஊர் சுத்துறதை விட்டுட்டுக் கவிதை எழுதி அனுப்பலாமே?"

"நா...னா?"

"ஆமா ஸார்! எல்லாராலேயும் கவிதை எழுத முடியாது. அது ஒரு அற்புதமான வரம். அதைக் கடவுள் உங்களுக்குத் தந்திருக்கார். அதை உங்க அப்பா மேல உள்ள வீம்புக்காக வீணாக்கிடாதீங்க."

திவாகரின் கோபமும் ஆத்திரமும் சுத்தமாய் மறைந்து போனது. கையில் இருந்த படத்தை எடுத்த இடத்தில் வைத்து விட்டு நிமிர்ந்தான்.

"அப்போ... கவிதை எழுதலாம்னு சொல்றியா?"

"தாராளமா எழுதுங்க ஸார்! நேத்துக்கூட குங்குமத்தில ஒரு விளம்பரம் பார்த்தேன். புதுக் கவிஞர்களே வாருங்கள்ன்னு! ஒரு வாரம்தான் இருக்கு. வர்ற வெள்ளிக்கிழமைக்குள்ள கவிதைகளை அனுப்பிடணுமாம். உங்களால முடியுமா?"

"என்ன?"

"ஏதாவது ஒரு நாலு கவிதை எழுதி அனுப்புங்க. எப்படியும் ஒன்றாவது தேர்ந்தெடுப்பாங்க. எழுதிடுவீங்களா?" - ஆர்வமாய்த் திலோத்தமா கேட்க... நம்பிக்கையோடு தலையசைத்தான் திவாகர்.

"முடியும்... எழுதிடுவேன்."

"அப்போ உடனே கடைக்குப் போங்க. ஒயிட் பேப்பர், பேனா, கவர் எல்லாம் வாங்கிட்டு வாங்க. உடனே எழுத

உட்காருங்க. பத்துக் கவிதை எழுதுங்க. அதுல நல்லதா நான்கை செலக்ட் பண்ணி அனுப்புங்க. நிச்சயமா உங்க கவிதை புக்ல வரும்."

"நிஜமாவா...! வருமா?"

"வரும் ஸார். இந்தப் புக்னு இல்லை. எப்பல்லாம் தோணுதோ... அப்போ எல்லாம் எழுதி அனுப்பிட்டே இருங்க. இதை ஒரு ஹாபியா எடுத்துக்கணும். அதே நேரம் நம்ம வயித்துக்காக உழைக்கவும் செய்யணும். வேலை செய்யும்போது கூடக் கவிதை எழுதக் கரு கிடைக்கலாம்."

"ஆமா... கிடைக்கலாம்."

"போங்க. கடையில போய் பேப்பர் எல்லாம் வாங்கிட்டு வாங்க. அம்மா! ஸாருக்கு ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்து அனுப்புங்க." - மகனையும் திலோத்தமாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்தபுஷ்பம் திடுக்கிட்டு விழித்தாள்.

"என்னம்மா?"

"ஒரு ஐம்பது ரூபாய் கொடுத்தனுப்புங்க."

"ஐயோ! கையில சில்லறையா இல்லையே... இரும்மா! தேடிப் பார்க்கிறேன்."

"விடுங்கம்மா... நானே தர்றேன்!" - என்றவள் தன் கைப்பையைத் திறந்து ஒரு பேனாவையும் ஒரு இருபது ரூபாய் நோட்டையும் எடுத்து அவனிடம் நீட்டினாள்.

"இந்தாங்க ஸார்! இது பேப்பரும் கவரும் வாங்கப் போதும். இந்தப் பென்னை வச்சுக்கங்க. எழுதுங்க... எழுதிட்டே இருங்க."



"தேங்க்யூ!" - கண்களில் கனவு மின்ன வாங்கிக் கொண்டான் திவாகர்.

"போங்க. இனி ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்கக் கூடாது."

"இ... இதோ போறேன். அம்மா! இப்ப வந்திடுறேன்..."

"சரிப்பா!" - காற்றாய்ப் பறந்த மகனைப் பார்த்து வியந்து போனாள் ஆனந்தபுஷ்பம்.

'கவிதை என்றால் தன் மகனுக்கு உயிர் என்று தெரியும். தன் கணவரின் திட்டுதலைக் கேட்கப் பிடிக்காமல்... அதை அப்படியே விட்டுட்டு அன்று முதல் தறுதலையாய் மாறி... ஊரில் உள்ள அனைத்துக் கெட்ட சகவாசத்தையும் சேர்த்துக் கொண்டான்.

'ஆனால்... இன்று ஒரே நாளில் சில நிமிடங்களிலேயே இந்தப் பெண் எப்படி இவனை மாற்றி விட்டாள்! வழக்கமாய்க் குடித்து விட்டு வரும் நேரம் இது. இன்றுகூட அதற்குப் பணம் இல்லை என்றுதான் வீட்டுக்கு வந்திருக்கிறான். வந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று.

'எல்லாம்... இந்தப் பெண் தன் வீட்டுக்கு வந்த நேரம். வந்த ஒரே நாளில் இந்தக் குடும்பத்தின் குலவிளக்கைச் சுடர்விட ஏற்றிவிட்டாளே... கண்ணுக்கும் மனதுக்கும் இனிமையான பெண்தான். எத்தனை கனிவு... என்ன திறமை... என்ன பொறுமை...

'ஒரு பெண்ணிடம் இத்தனை குணங்களும் கொட்டிக் கிடக்குமா? இவள் ஒரு அபூர்வமான பெண். அற்புதமான பெண்... இவளைக் கைநழுவ விட்டுவிடக் கூடாது. தன்

மகளாய்... மருமகளாய் ஆக்கி... தன்னுடனே வைத்துக் கொள்ள வேண்டும்.' - ஆனந்தபுஷ்பத்தின் மனம் திடமாய் முடிவெடுத்தது. அதில் உறுதியாய் நின்றது.

அதிர்ச்சியில் இருந்து மீளாமல் நின்ற சுஹாசினியின் தோளைத் தொட்டாள் பிரியங்கா.

"சுஹா! அண்ணன் சொன்னது எல்லாம் உண்மை. இந்த நிலைமையில நான் எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்... சொல்லு!"

சுஹாசினி அசையாமல் நின்றாள். 'எப்படி முடியும்? தன் அண்ணன் சாவை நெருங்கிக் கொண்டிருக்கையில் இவளால் எப்படித் திருமணத்திற்குத் தயாராக முடியும்! ஆனால் ரஞ்சித்திற்கு இப்படி ஒரு நோய் இருக்கும் என்று இன்னும் நம்ப முடியவில்லை.' மெல்ல வாய் திறந்தாள்.

"ரஞ்சித்! உங்களுக்கு ஷ்யூரா தெரியுமா? ஒருவேளை சினிமாவில வர்ற மாதிரி வேற எந்த பேஷண்ட்டோட ரிப்போர்ட்டாவது மாறி வந்திருக்குமோ?"

விரக்தியாய்ப் புன்னகைத்தான். "இது எனக்கும் அப்பாவுக்கும் மட்டுமே தெரிஞ்ச ரகசியம். வெளியே யாருக்கும் தெரியாமலே எத்தனை டாக்டர்களைப் பார்த்திட்டோம். எதுவுமே பண்ண முடியாதுன்னு சொல்லிட்டாங்க."

"என்கூட லண்டனுக்கு வாங்களேன். அங்கே உள்ள பெரிய ஹாஸ்பிடல்ல சேர்த்து..."

"போன முறை நீ கூப்பிட்டப்போ லண்டன் வந்திருந்தேனே... அப்பவே விசாரிச்சிட்டேன். ஹார்ட்ல



ப்ராப்ளம்னா சரி பண்ணிடலாமாம். இது ஹார்ட்டுக்குப் போகிற ரத்தநாளங்கள்... அதைச் செயற்கையா வைக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க..."

"ஓ! காட். நீங்க ஏன் என்கிட்ட இதைப் பத்தி ஒரு வார்த்தை கூடச் சொல்லலை?"

"ஸாரி சுஹா! அம்மாவுக்கும் பிரியாவுக்கும் தெரியக் கூடாதுன்னு வேற யாருக்கும் சொல்லலை. சொல்லியும் என்ன ஆகப் போகுது?" - வேதனையாய்ச் சொல்லிய வாறே... தன் நெஞ்சை நீவிவிட்டுக் கொண்டான் ரஞ்சித்.

"எப்பவுமே வலிக்குமா?"

"மெடிஸன் எடுத்திட்டு இருந்தா வலி தெரியாது. கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர்ஸ் சொல்லியிருக்காங்க."

"பின்னே ஏன் வெளியே சுத்துறீங்க? வீட்டில இருக்க வேண்டியதுதானே?" - சுஹாசினி கேட்க... குழப்பமாய்ப் புருவம் சுருக்கினான்.

"நான் வீட்டில இருந்தா பிஸினெஸ்ஸை யார் பார்த்துக்கிறது?"

"ஓ! அதுவும் இருக்கோ! அங்கிள் கூட இல்லையே... ரொம்பக் கஷ்டமா இருக்குமே ரஞ்சித்?"

"கஷ்டம்தான். எல்லாமே திடீர்னு நடந்து போச்சு. பிரியாதான் ரொம்ப உடைஞ்சு போயிட்டா. எப்பவும் அழுதிட்டே இருக்கா."

"அவளைப் பார்த்தாலே தெரியுதே. அவதான் நோயாளி மாதிரி இருக்கிறா. பிரியா! நீயே இப்படி இருந்தா எப்படி? நீதான் அண்ணனுக்கு ஆறுதல் சொல்லணும்..." -

பிரியங்காவைப் பார்த்து சுஹாசினி சொல்ல... இப்போது பிரியங்காவின் முகம் மாறியது.

"என்ன?"

"அவர் ஆம்பிளை. தன்னோட கஷ்டங்களை மறைச்சிக்கிட்டு நடமாடுறார். நீதான் சும்மா அழுதிட்டு இருக்காம... அவர்கிட்ட கலகலப்பா பேசிச் சிரிச்சிட்டு இருக்கணும். அப்பத்தான் அவரும் தன்னோட நிலையை மறந்து சந்தோஷமா இருப்பார்." - அவள் பேசிக்கொண்டே போக... பிரியங்கா குழப்பமாய் அண்ணனைப் பார்த்தாள்.

ரஞ்சித்திற்கு சுஹாசினியின் பேச்சு புரிபட... அவனது முகம் புன்னகைத்தது. அவசரமாய்த் தங்கையிடம் கண்ணால் ஜாடை செய்தான்.

"எதுவும் பேசாதே!"

பிரியங்கா மௌனமாய்த் தலையாட்டினாள். ஒன்றும் புரியாமல் குழம்பி நின்ற வரலக்ஷ்மியை நெருங்கி... அவளது கையைப் பற்றிக் கொண்டாள் சுஹாசினி.

"ஆன்ட்டி! என்னை மன்னிச்சிடுங்க ஆன்ட்டி. இங்க உள்ள சூழ்நிலை புரியாம நான்தான் கோபப்பட்டுட்டேன். ஸாரி ஆன்ட்டி!"

"பரவாயில்லம்மா..."

"இனிமேதான் நீங்க தைரியமா இருக்கணும். பிரியாவுக்காக நீங்க வாழ்ந்தாகணும்..."

"ஆமாம்மா! அந்தக் கடவுள் எனக்கு இந்த நோயைக் கொடுத்திருக்கலாமே... என் புள்ளையைக் கொண்டு போக அந்த ஆண்டவனுக்கு எப்படி மனசு வந்தது?"



"வருத்தப்படாதீங்க ஆன்ட்டி! ரஞ்சித் ரொம்ப நல்லவர். அவருக்கு இப்படி ஒரு வியாதி வந்திருக்கவே கூடாது..."

வரலக்ஷ்மி பதறி நிமிர்ந்தாள். "எ...ன்னது?"

அவசரமாய்த் தாயை நெருங்கினான் ரஞ்சித்.

"அம்மா! நடப்பதெல்லாம் நன்மைக்கேன்னு நினைங்கம்மா. யாருக்கும் எந்த வருத்தமும் இல்லாம இது முடியட்டும்."

"ரஞ்சித்!"

"என்ன சுஹா?"

"நீங்க எவ்வளவு நல்லவர்... உங்க கூட வாழ முடியாமப் போச்சே... அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா அதுல நீங்க எந்த நோய்நொடியும் இல்லாம... நீண்ட ஆயுளோடு பொறக்கணும். நான் உங்க மனைவியாகணும்."

புரியாமல் விழித்த தாயை அணைத்துக் கொண்டே சிரிக்காமல் சொன்னான். "ம்... பார்க்கலாம்."

"சரி... நான் புறப்படுறேன்."

"எங்கே?"

"வீட்டுக்குத்தான். ரொம்ப கற்பனையோடு வந்தேன். ரஞ்சித்! இப்படி ஆகும்னு நினைக்கலை. நீங்களும் உங்க மனசைத் தேத்திக்குங்க. வேறே என்ன பண்றது?"

"தலை விதியை மாற்ற முடியாது சுஹா. நீ உனக்கேத்த மாதிரி ஒரு வாழ்க்கையை அமைச்சுக்க."

"ட்ரை பண்றேன் ரஞ்சித்!"

"அப்புறம் சுஹா... இங்கே நடந்தது எதுவும் வெளியே யாருக்கும் தெரிய வேண்டாம். என்னால ஒவ்வொருத்தர் கிட்டயும் பதில் சொல்ல முடியாது."

"யாருக்கும் தெரியாது ரஞ்சித்! சொல்ல மாட்டேன்."

"தேங்க் யூ. நான் ரெஸ்ட் எடுக்கணும்... நீ!"

"இதோ போயிடறேன். உடம்பைப் பார்த்துக்கங்க!" - என்றவாறு வாடிய முகத்தோடு தயக்கமாய் அவள் வெளியேற... அவளது கார் புறப்படும் வரை அமைதியாய் நின்றவன்... ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு தங்கையைக் கட்டிக் கொண்டான்.

மலையென நினைத்திருந்த பிரச்சனை பனியாய் விலகிப் போனதை எண்ணிப் பிரியங்காவும் நிம்மதியடைய... அடுத்த பிரச்சனை திலோத்தமாவுக்கு ஆரம்பமானது.

## 23

மனதில் நின்ற காதலியே
மனைவியாக வரும்போது
சோகம் கூடச் சுகமாகும்
வாழ்க்கை இன்ப வரமாகும்!

**வ**ரலக்ஷ்மி எதுவும் புரியாமல் மகனை ஏறிட்டாள். "ரஞ்சித்! இவ என்ன சொல்லிட்டுப் போறா?"

"அம்மா! உங்களுக்கு இன்னும் புரியலையா? அவ எனக்கும்தான் உடம்பு சரியில்லைன்னு நினைச்சிட்டுப் போறாள்..."

"என்ன?"



"பிரியா பேசுறதா நினைச்சு நான் பேசினதை... அவ அப்படி எடுத்துக்கிட்டா போலிருக்கு. எனிவே இதுவும் நல்லதுக்குத்தான். என்ன பிரியா?"

"ஆமாம்மா! நான்கூட ரொம்ப பயந்துதான் போயிருந்தேன். சுஹா கிட்ட எப்படிப் பேசுறதுன்னு பயந்துதான் அவ வர்றதுக்குள்ள மாத்திரை போட்டுப் படுத்தேன். நல்ல வேளை! அண்ணன் வந்தான். இல்லைன்னா... பிரச்சனை வேற மாதிரி போயிருக்கும்."

"ரஞ்சித்! என்னப்பா இதெல்லாம்?"

"அம்மா! ஒண்ணும் பயப்படாதீங்க. நான்கூட சுஹா பேசினதை வெச்சு... அவ நம்ம அண்ணனை ரொம்ப விரும்புறான்னு நினைச்சேன். ஆனா அண்ணனுக்கு உடம்பு முடியலைன்னு நினைச்சிட்டு எவ்வளவு ஈஸியா கிளம்பிட்டா பாருங்க. ஸாரிண்ணா! இவளுக்காக நான் உன்கிட்ட வாதாடினது எவ்வளவு பெரிய தப்பு!"

"விடுடா. போனதைப் பத்திப் பேச வேண்டாம்."

"அப்போ... இனி நடக்கிறதைப் பத்திப் பேசுவோமா?"

"ஓ! பேசலாமே. ஆனா அதுக்கு முன்னால நீ படுத்து ரெஸ்ட் எடு. அப்புறமா பேசலாம்."

"இல்லண்ணா... நல்ல காரியத்தை எப்பவுமே ஆறப் போடக் கூடாது. உடனே பேசிடணும். நமக்கு இல்ல... எனக்கு நாள் கம்மியாத்தானே இருக்கு."

"பிரியா!"

"ஸாரிண்ணா... உண்மை அதுதானே! நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டா... நான் அண்ணிகூட கொஞ்ச நாள் சந்தோஷமா வாழ்வேனே... ப்ளீஸ் அண்ணா!"

"சரி... சரி... இப்ப என்ன பண்ணலாம்?"

"நாம உடனே திலோத்தமா வீட்டுக்குப் போகலாம்."

"இப்பவேவா?"

"ம். அதான் ஈவினிங் ஆகிப் போச்சே!"

"பிரியா! முதல்ல திலோவுக்கு எல்லா எக்ஸாமும் முடியட்டும். பிறகு ஒரு நல்ல நாளாப் பார்த்து நாம பேசலாம்."

"எக்ஸாம் முடிய இன்னும் ஒன் வீக் இருக்கே?"

"ஒரே வாரம்தானே... கண்ணை மூடித் திறப்பதற்குள் ஓடிவிடும். ஆனா அதுக்கு முன்னால நாம நிறைய காரியம் பண்ணணும்."

"என்ன பண்ணணும்?"

"திடுதிப்புன்னு போய் நின்னு கல்யாணப் பேச்சை எடுத்தா... அவங்க மிரண்டுடுவாங்க. அதோட உம்மேல அவங்க எவ்வளவு கோபத்தோட இருக்காங்கன்னு தெரியாதே!" - ரஞ்சித் சொல்ல... பிரியங்காவின் முகம் வாடியது.

"ஆமா அண்ணா! நான் உன் தங்கைன்னு தெரிஞ்சா.. நம்மை வீட்டுக்குள்ளேயே விட மாட்டாங்க... இல்ல?"

"சேச்சே! அப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க."

"அண்ணா! ஒண்ணு பண்ணலாமா?"

"என்ன பண்ணலாம்?"



"பேசாம... நீயும் அம்மாவும் போய்ப் பேசுங்க. நான் யாருன்னு அவங்களுக்குத் தெரியாமலே இருக்கட்டும்."

"ஏய்! இதென்ன விளையாட்டுக் காரியமா? கல்யாணம். கல்யாண விஷயத்தில எதையும் மறைக்கக் கூடாது." - அதட்டினாள் வரலக்ஷ்மி.

"உண்மையைச் சொன்னா... அவங்க சம்மதிக்க மாட்டாங்கம்மா. நமக்கு அண்ணனோட வாழ்க்கைதான் முக்கியம்."

"அதுக்காகப் பொய் சொல்லலாமா? அதை எத்தனை நாள் மறைக்க முடியும்? நீ உன் அண்ணனுக்குக் கல்யாணம் பண்ணி வெக்கணும்னு நினைக்கிறதே... அதைக் கண்ணால பார்த்து ரசிக்கணும்னுதானே! நாம இப்படிப் பொய் சொன்னா... உன் அண்ணன் கல்யாணத்தை எப்படிப் பார்ப்பாய்?" - தாயின் கேள்வியில் முகம் மாறினாள் பிரியங்கா.

"இல்லை... நான் பார்க்கணும். அண்ணன் கல்யாணத்தை நான் பார்க்கணும்."

"அப்போ நாம உண்மையைச் சொல்லித்தான் ஆகணும். இப்ப உள்ள நிலைமையையும் சொல்லுவோம். நிச்சயமா அவங்க சம்மதிப்பாங்க."

"அம்மா சொல்றதுதான் சரி பிரியா! அவங்ககிட்ட நாம எதையும் மறைக்கக் கூடாது."

"அண்ணா!"

"முதல்ல அவளுக்கு எக்ஸாம் முடியட்டும். நாம ஒரு நாள் போய்ப் பேசுவோம். அவங்களுக்கு விருப்பம்னா நாம

மேற்கொண்டு பேசலாம். இல்லேன்னா நாம எதையும் கேட்காம வந்துடலாம்."

"அண்ணா! நான் பேசுறேண்ணா... திலோகிட்ட மட்டுமில்ல. அந்த வீட்டில இருக்கிற எல்லார்கிட்டயும் நான் மன்னிப்புக் கேட்கிறேன்! தப்பு செய்தவ நான்... நான்தான் மன்னிப்புக் கேட்கணும்."

"பிரியா! எமோஷனலாகாதே... ரிலாக்ஸ்!"

"இல்லை அண்ணா! எனக்கு ஒண்ணும் ஆகாது. உன் கல்யாணத்தை மட்டுமில்ல... உனக்குப் பிறக்கப் போகிற குழந்தையையும் நான் பார்த்துட்டுத்தான் போவேன்!" - என்றாள் கண்கள் பனிக்க.

"கண்டிப்பாடா. இதெல்லாம் நடக்கும். எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கு. வா! காபி சாப்பிடலாம். அம்மா...!"

"நீங்க உட்காருங்கப்பா. நான் காபி எடுத்திட்டு வர்றேன்."

"வா ப்ரியா! இப்படி உட்கார்." - தங்கையைச் சோபாவில் அமர வைத்தான்.

"அண்ணா! திலோ என்னை மன்னிப்பாளா?"

"ஏம்மா இப்படிக் கேட்கிறே?"

"அன்னிக்கு இதே இடத்தில வெச்சுத்தான் அவளைத் தாறுமாறா பேசினேன். என்னோட பேச்சைத் தாங்க முடியாம அவ இங்கேதான் மயங்கி விழுந்தாள். அப்பக்கூட நான் பதறவோ பயப்படவோ இல்லண்ணா... சந்தோஷமா சிரிச்சேன்.



"ச்சே! நான் எவ்வளவு பெரிய ராட்சஸியா இருந்திருக்கேன். அவ நிச்சயமா இதையெல்லாம் மறந்திருக்க மாட்டா அண்ணா... என்னை மன்னிக்கவே மாட்டாள்."

"பிரியா! மன்னிக்கிறது தெய்வ குணம். அந்தக் குணம் நிச்சயமா அவகிட்ட இருக்கு. நீ வேணாப் பாரேன். உன்னைப் பார்த்ததும் அவ எந்தக் கோபமும் படாமல் உன்னை வரவேற்பாள். நடந்தது எதையும் உன்கிட்ட குத்திக் காட்ட மாட்டாள்."

"எப்படிண்ணா இவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"பிரியா! இன்னிக்கு மதியம் நான்... அவளைப் பார்த்தேன்!" - லேசாய்த் தயங்கிப் புன்னகையோடு சொன்னவனை வியப்பாய்ப் பார்த்தாள்.

"யாரை? திலோவையா?"

"ம்."

"எங்கே? எப்போ?"

"லஞ்ச் முடிச்சிட்டு ஆபீஸ் போகப் புறப்பட்டேனில்ல... அப்பத்தான். அவ ஃபிரண்ட் உமா கூட மெயின் ரோட்ல பார்த்தேன்."

"பார்த்திட்டு அப்படியே போயிட்டியா? காரை நிறுத்திப் பேசினியா?"

"ம்... பேசினேன். ஆனா உமாதான் பதில் பேசினாள்."

"ஏன்? திலோ ரொம்பக் கோபமா இருந்தாளா?"

"அப்படின்னு சொல்ல முடியாது. ஆனாலும் என்கிட்ட பேசத் தயங்குறா..."

"ஆமாண்ணா! அதுக்குக் காரணம் நான்தான்!" - என்றாள் குற்ற உணர்வோடு.

"என்ன... நீயா?"

"ஆமாண்ணா... அன்னிக்கு ஆபீஸ்ல அந்த விஷ்ணுப் பயலை பார்த்தேனா? இவதான் தம்பியைத் தூது விட்டிருக்கான்னு நினைச்சி... உன்னையும் அவளையும் சம்பந்தப்படுத்தி... கொஞ்சம் ஜாஸ்தியாவே பேசிட்டேன்."

திகைத்துப் போனான். "பிரியா! என்னம்மா... நீ?"

"ஸாரிண்ணா! ஆணவம் என் கண்ணை மறைச்சதுல எனக்கு எதுவும் புரியலை. வாய்க்கு வந்தபடி பேசிட்டேன். ஆனா இப்பத்தான் அதெல்லாம் தப்புன்னு தெரியுது. இது எல்லாத்துக்கும் சேர்த்தே அவகிட்ட நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்.

"நீ என்னை அவ வீட்டுக்குக் கூட்டிட்டுப் போண்ணா... என்னால நடமாட முடியும் போதே நேர்ல போய் மன்னிப்புக் கேட்டுட்டு வந்திடலாம். கூட்டிட்டுப் போறியா?" - கெஞ்சலாய்க் கேட்ட தங்கையின் தலையை வருடினான்.

"ம்... போகலாம். நெக்ஸ்ட் வீக் கூட்டிட்டுப் போறேன்."

"ரியல்லி?"

"ம்... கண்டிப்பா கூட்டிட்டுப் போறேன்!" - என்றான் புன்னகையோடு.



தன் முன் இருந்த தாயின் வரைபடத்தை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெயபால். சாப்பாடை எடுத்து வைத்து விட்டு வந்த ஆனந்தபுஷ்பம் புன்னகைத்தாள்.

"இன்னும் எவ்வளவு நேரம்தான் உங்க அம்மாவைப் பார்த்திட்டே இருப்பீங்க? வாங்க! வந்து சாப்பிடுங்க..."

"எனக்குப் பசியில்லை ஆனந்தா! நீ சாப்பிடு..."

"என்ன? பசியில்லையா? மதியமும் சாப்பிடலையே.... வாங்க!"

"ஆனந்தா! இந்த ராகவனோட பொண்ணுக்கு எவ்வளவு திறமை பாரேன். போட்டோவில கூட எங்க அம்மா முகம் இவ்வளவு தெளிவா இல்லை. ஆனா இந்தப் பொண்ணு எப்படி இவ்வளவு அம்சமா வரைந்தாள்?" - படத்தை விட்டுக் கண்களை விலக்காமலே கேட்டார் ஜெயபால்.

"எனக்குக் கூட ஆச்சரியமாகத்தான் இருக்குங்க. நெத்தியில விழுந்த சுருக்கம் கூட எவ்வளவு துல்லியமா தெரியுது பாருங்க. இது பெரிய வித்தைதான். நான்கூட சின்னப் பொண்ணா இருக்காளே... எப்படி வரைவாளோன்னு நினைச்சேன்..."

"நம்ம கடையில போர்டு வரைஞ்சா பாரு... ஒரு விநாயகர் படம். எவ்வளவு தத்ரூபமா வரைஞ்சு தந்தா தெரியுமா? ரோட்ல போறவங்க கன்னத்தில போட்டுக்கிறாங்கன்னா பாரேன்."

"ம்..."

"ஆமாம் ஆனந்தா! அதான் அம்மாவோட படத்தை வரையச் சொன்னேன். ஆமா... பணம் ஏதாவது கொடுத்தியா?"

"கொடுத்தேங்க. வாங்கவே மாட்டேனுட்டா. அவ அப்பா வாங்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காராம்..."

"ராகவன் ரொம்ப நல்ல மனுஷன் ஆனந்தா. நாம இதுவரைக்கும் அவரைப் போய்ப் பார்க்கவே இல்லை. பாவம்! உடம்பு சரியில்லாம இருக்காராம். நாம ஒரு நாள் போய்ப் பார்த்திட்டு வருவோமா?" - கணவர் கேட்க... உற்சாகமாய்த் தலையசைத்தாள்.

"சரிங்க! நானே சொல்லணும்னு இருந்தேன்."

"சரி. அம்மாவோட காரியம் முடியட்டும். ஒரு நாள் போயிட்டு வரலாம்."

"சரிங்க... வாங்க சாப்பிடலாம்."

"சாப்பாட்டை மூடி வெச்சிடு. இப்ப பசியில்லை. வயிறும் மனசும் நிறைஞ்சிருக்கு."

"எனக்கும்தாங்க. அந்தப் பொண்ணு வந்துட்டுப் போனதில இருந்து நம்ம வீட்டுல நிறைய மாற்றம் நடக்குதுங்க."

"என்ன சொல்றே?"

"அங்கே பாருங்க..." - என மகனின் அறையைச் சுட்டிக் காட்டினாள்.

குழப்பமாய்த் திரும்பிப் பார்த்தார் ஜெயபால். மகனின் அறைக்குள் விளக்கு எரிய... கதவு திறந்திருந்தது. உள்ளே அமர்ந்திருந்த மகனின் முதுகும் தெரிந்தது.



"என்ன? துரை இன்னிக்குச் சீக்கிரமே வந்துட்டாரக்கும்... கோட்டை வாசல் எப்பவும் மூடியேதானே இருக்கும். இன்னிக்கு என்ன திறந்திருக்கு?"

"மெல்லப் பேசுங்க. புள்ளை கவிதை எழுதிட்டு இருக்கான்."

"என்ன?" - வியப்பாய்க் கேட்டார்.

"ஆமாங்க! நாம ஏதாவது பேசினா... எப்படிச் சள்ளுன்னு விழுவான்... இன்னிக்கு அந்தப் பொண்ணு என்னவெல்லாமோ சொல்றா... இவன் எல்லாத்துக்கும் தலையை ஆட்டுறான். பொட்டிப் பாம்பா அடங்கிட்டாங்க..."

"என்ன சொல்றே நீ?"

"அட! நடந்ததைத்தான் சொல்றேன். அந்தப் பொண்ணுதான்... இப்படி பொறுப்பில்லாம ஊர் சுத்தாதே. கவிதை எழுது. ஏதோ புத்தகத்தில வெளிவரும்னு சொன்னா. உடனே பேப்பரும் பேனாவும் வாங்கிட்டு வந்து எழுதத் தொடங்கிட்டான்!" - ஆனந்தபுஷ்பம் பெருமையாய்ச் சொல்ல... நம்ப முடியாமல் மீண்டும் மகனின் அறையைப் பார்த்தார்.

மேஜை முன் அமர்ந்திருந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தான். அவ்வப்போது யோசிப்பதும் எழுதுவதுமாய் இருந்தவனைப் பார்த்து மனம் லேசாக மனைவியிடம் திரும்பினார்.

"ஆனந்தா! எப்படி... இது?"

"எல்லாம் அந்தப் பொண்ணு செய்த மாயம்ங்க. அந்தப் பொண்ணுகிட்ட ஏதோ இருக்கு. இல்லைன்னா...

நமக்கு அடங்காதவன் அந்தப் பொண்ணோட ஒரு வார்த்தைக்குக் கட்டுப்படுவானா?"

"ம்... எப்படியோ நல்லது நடந்தா சரி. இத்தனை நாளா இவன் கவலைதான் என்னை வாட்டியது. இன்னிக்கு ராகவன் பெண்ணால இதுக்கு ஒரு விடிவு வந்தா... சந்தோஷம்தான்."

"நானும் அதையேதாங்க நினைக்கிறேன்."

"என்ன?"

"நம்ம திவாவுக்கும் கல்யாண வயசு கடந்து போகுதே சீக்கிரமா ஒரு கல்யாணத்தைப் பண்ணி வெச்சிட்டாப் பொறுப்பா நடந்துக்குவானே...!" - இதமாய் ஆரம்பித்த மனைவியிடம் சீறினார் ஜெயபால்.

"நீ திரும்பவும் ஆரம்பிச்சிடாதே. கல்யாணம்னா... விளையாட்டு இல்ல..."

"அது எனக்கும் தெரியுங்க. நாம பெத்து வெச்சிருக்கிறதே இந்த ஒண்ணுதான். அவனுக்கு ஒரு நல்லது செய்து பார்க்க வேண்டாமா?"

"நல்லது செய்து பார்க்கிற மாதிரியா இவன் நடந்திட்டு இருக்கான்? இவன் யோக்கியதைதான் ஊருக்கே தெரியுமே!"

"ஏங்க! நீங்களே இப்படிச் சொன்னா எப்படி? அவன் நம்ம புள்ள...!"

"நம்ம புள்ளைன்னா செய்யுறது தப்பு இல்லைன்னு ஆகிடுமா? இப்ப ரெண்டு நாளுக்கு முன்னாடிகூட ஃபுல்லாத் தண்ணியடிச்சிட்டு வந்து கம்பெனியில தகராறு பண்ணினான். மானமே போச்சு..."



"உங்களுக்கும் அவனுக்கும்தான் எப்போதுமே ஆகாதே. பிறகு என்ன பண்ணுவான்?"

"என்கிட்ட சண்டை போடணும்னா வீட்டில வந்து போடணும்டி. கம்பெனியில வெச்சுப் போறவன் வர்றவன் எல்லாம் பார்க்கிற மாதிரி ரௌடித்தனம் பண்ணினா... எவன் பொண்ணு கொடுப்பான்?"

"நமக்கு என்னங்க குறை? பணத்துக்கோ செல்வாக்குக்கோ குறையில்லையே... இது எல்லாம் நம்ம பிள்ளைக்குத்தானே! கண்டிப்பா தயங்காம பொண்ணைக் கொடுப்பாங்க."

"அடி கூறு கெட்டவளே! பணம் மட்டும் இருந்தா போதுமா? பொண்ணைக் கொடுக்கிறவன் மாப்பிள்ளை எப்படி இருக்கான்னுதான் பார்ப்பான். நம்ம பொண்ணு காலம்பூரா கண்கலங்காம வாழணும்னுதான் நினைப்பான். அப்படி நினைக்கிற எவனும் உன் புள்ளைக்குப் பெண் தர மாட்டான்.

"அதனால மனசுல தேவையில்லாத ஆசைகளை வளர்த்துக்காதே. நமக்கு அந்தக் கொடுப்பினை இல்லை. இவனைப் பெத்த கடமைக்கு இவனுக்குச் சாப்பாடும் போட்டு இவன் குடிச்சிச் சீரழியப் பணமும் கொடுக்கணும்னு நமக்கு எழுதியிருக்கு..."

"ஏங்க இப்படியெல்லாம் பேசுறீங்க?"

"உண்மை அதுதானே! இவனை நம்பி இவனுக்கு யார் கிட்டயாவது பொண்ணு கேட்டுப் போனா நம்மளையே செருப்பைக் கழட்டி அடிப்பாங்க."

"சும்மா பேசாதீங்க. அதெல்லாம் பொண்ணு கிடைக்கும். கிடைக்கும் என்ன... கிடைச்சாச்சு!" - என்ற மனைவியை அதிர்ச்சியாய்ப் பார்த்தார்.

"ஆனந்தா?"

"என்ன பார்க்கிறீங்க? நம்ம வீட்டுக்கு வந்தாளே அந்தப் பொண்ணைத்தான் சொல்றேன். பேர்கூட நல்ல பேருங்க. திலோத்தமாவாம்..." - ஆனந்தபுஷ்பம் சொல்ல இன்னும் அதிர்ந்தார்.

"யாரு? ராகவன் பொண்ணா?"

"ம்... ஆமாங்க. பொண்ணு கண்ணுக்கு லட்சணமா இருக்கா. படிச்ச பொண்ணாவும் இருக்கு. நம்ம திவாகரைக் கண்டிப்பா மாத்திடுவா. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு."

"ஏய்! வாயை மூடுடி. அதுவே பாவம். இவ்வளவு நாளா பல சோதனைகளைத் தாங்கிகிட்டு நடமாடிட்டு இருக்கு. நீ மொத்தமா சாகடிச்சிடாதே."

"ஏங்க! உங்களுக்கு வாய்ல நல்ல வார்த்தையே வராதா?"

"இதோ பாரு ஆனந்தா! நாம ஒண்ணும் உத்தமசிகாமணியைப் பெத்துடலை. உன் புள்ளையைப் பத்தி உனக்கே தெரியும். அவனை நம்பி எப்படிடி அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணி வைப்பாய். இது பெரிய பாவம்!"

"எல்லாம் எனக்குத் தெரியும். நான் ஒரு தடவைக்குப் பல தடவை நல்லா யோசிச்சித்தான் இந்த முடிவை எடுத்திருக்கேன்!" - என்றாள் தீவிரமாய்.



"என்ன யோசிச்ச?"

"ஏங்க! ராகவனோ இப்போ கை கால் விளங்காம கிடக்கார். அவர் பெண்டாட்டியோ புள்ளையோ சம்பாதிக்கலை. பிறகு எப்படி இந்தப் பொண்ணுக்கு அவரால கல்யாணம் பண்ணி வைக்க முடியும்?"

"அ... அதுக்கு?"

"அதுக்கு நாம அவரைப் போய்ப் பார்த்துப் பேசுவோம். அவருக்காகப் பரிதாபப்பட்டு அவர் பொண்ணை நம்ம பையனுக்கே கட்டி வைச்சிடலாம். வரதட்சிணை, கல்யாணச் செலவு எதுவும் வேண்டாம்னு சொல்வோம்."

"சொன்னால்?"

"தயங்காம சம்மதிச்சிடுவாங்க. இந்தப் பொண்ணுக்கு இவர் நகை நட்டு பண்ணிச் சீர்செனத்தியோட கல்யாணம் செய்ய முடியுமா? வேறு வழியில்லையே... நாம கேட்டதும் சம்மதிச்சிடுவாரு."

ஜெயபாலின் முகம் மாறியது. உள்ளம் பதறியது. "வேண்டாம் ஆனந்தா! கல்யாணத்தை வியாபாரமாக்கிடாதே. பாவம், ஒரு பொண்ணோட வாழ்க்கை நம்மால நாசமாக வேண்டாம்."

"திரும்பத் திரும்ப இப்படியே சொல்லாதீங்க. நாம ஒண்ணும் பாவம் செய்யலை. புண்ணியம்தான் பண்றோம்."

"என்ன... புண்ணியமா?"

"ஆமா! கல்யாணத்திற்கு வக்கில்லாம கஷ்டப்பட்டு இருக்கிற ஒரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்கிறது புண்ணியம்தானே!"

"எது? இது புண்ணியமா!"

"பின்னே?"

"ஒரு அருமையான மகனை எல்லா நல்ல குணத்தோடவும் வளர்த்து ஆளாக்கி... இப்படி ஒரு கஷ்டப்பட்ட பெண்ணைக் கட்டி வைத்தால் அது புண்ணியம். இப்படி ஒரு தறுதலையைக் கட்டி வைத்து அந்தப் பெண்ணைப் பலியாக்குவது பெரிய பாவம்!"

"ம்... இப்படியே சொல்லிச் சொல்லித்தான் நம்ம புள்ள வாழ்க்கை இப்படி நிக்குது. இனிமே யார் சொன்னாலும் சரி. என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை."

"வேண்டாம் ஆனந்தா! அந்தக் குடும்பமே கஷ்டத்துல மூழ்கிக் கிடக்குது. இந்த நேரம் போய் நம்ம சுய லாபத்துக்காக ஒரு பொண்ணோட வாழ்க்கையோட விளையாடாதே. அது மனசுல என்ன இருக்கோ?"

"அதைப் பத்தியெல்லாம் நீங்க கவலைப்படாதீங்க. நான் பேசிக்கிறேன். பையனுக்கு அப்பாங்கிற முறையில நீங்க என்கூட வந்தாப் போதும்."

"முடிவே பண்ணிட்டியா?"

"ஆமாம். பொண்ணு வீட்டில போய்ப் பேசுறதுதான் பாக்கி. முதல்ல உங்க அம்மா காரியம் முடியட்டும். ஒரு நல்ல நாளாப் பார்த்து வெத்தலை பாக்கோட போய்ப் பேசிடலாம்."

"அவசரப்படாதே ஆனந்தா! அந்தப் புள்ளை இன்னும் படிச்சிட்டு இருக்கு."



"அதையும் கேட்டுட்டேன். இந்த வாரத்தோட பரிட்சை முடியுதாம். நாம போறதுக்கும் பரிட்சை முடியுறதுக்கும் சரியாத்தான் இருக்கும்."

"பொறு. முதல்ல ராகவன் மனசுல என்ன இருக்குன்னு கேட்டுப்போம். பிறகு பேசலாம். அதுக்குள்ள அவசரப்பட்டு உன் மகன்கிட்ட உளறிடாதே!"

"இன்னும் சொல்லலை. ஆனா நான் முடிவு பண்ணினது பண்ணினதுதான்." - உறுதியாய்ச் சொன்னவளை மறுத்துப் பேச இயலாமல் தவித்தார் ஜெயபால்.

ஒரு தாயாய் அவளது ஆசை சரிதான். ஆனால் ஒரு பெண்ணாய் யோசித்துப் பார்க்க வேண்டாமா! ஒரு சின்னப் பெண்ணைப் பலியிட இவளுக்கு எப்படி மனம் வந்தது?

திவாகர் முரடன். பெற்றவர்களையே மதிப்பதில்லை. எதைச் செய்யாதே என்பாரோ அதைத்தான் செய்வான். அது அவனுடைய சுபாவம். இதில் தகப்பனை வெறுப்பேற்றுவதாய் எண்ணிக் கொண்டு எல்லாவிதக் கெட்ட பழக்கங்களையும் கற்றுக் கொண்டவன்.

இன்றுவரை அதைத் தொடர்ந்து கொண்டிருப்பவன். இது ராகவனுக்கும் தெரியும். தெரிந்தும் எப்படித் தன் பெண்ணைக் கொடுப்பார்? இது ஏன் இவளுக்குப் புரியவில்லை? இன்று அவரது சூழ்நிலை மாறியிருந்தாலும் அவரது மனதில் எத்தனை கனவுகளை வளர்த்திருப்பார்? அந்தப் பெண்ணுக்குக் கூட எத்தனை கனவு இருக்கும்?

வேறு வழியில்லாமல் சம்மதித்தாலும் அவரது வயிறு எரியாதா? தெரிந்தே ஒரு குடிகாரனுக்கு... ரௌடிக்குத் தன்

பெண்ணைக் கொடுக்க எப்படிப் பெற்றவர்களுக்கு மனம் வரும்? கூடாது. இவளது சொல்லைக் கேட்டு அந்தக் குடும்பத்தின் வயித்தெரிச்சலைக் கட்டிக் கொள்ளக் கூடாது.

முதலில் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பேச வேண்டும். மனைவியிடம் ஏதாவது காரணத்தைச் சொல்லி நாட்களைக் கடத்த வேண்டும். ராகவனைச் சந்தித்துப் பேச வேண்டும். அந்தப் பெண்ணின் மனதில் ஏதேனும் விருப்பம் இருந்தால்... அதை ராகவனின் ஆசியோடு நிறைவேற்ற வேண்டும். அந்தப் பெண்ணை வாழ வைக்க வேண்டும்.

இது எதையும் மகனுக்குத் தெரியவிடக் கூடாது. தவிப்பாய் மகன் அறையைப் பார்த்தார். அவன் இன்னும் எழுதிக் கொண்டே இருந்தான்.

## 24

அழகிய திருமுகம் ஒருமுறை
பார்த்தால் அமைதியில் வாழ்ந்திருப்பேன்
நுனிவிரல் கொண்டு ஒருமுறை தீண்ட
நூறுமுறை பிறந்திருப்பேன்!

'**நா**ம் ஒன்று நினைக்க இறைவன் ஒன்று நினைக்கின்றான்' என்றொரு பழமொழி உண்டு. ஜெயபாலைப் பொறுத்தவரை அது உண்மையாகிப் போனது. மனைவியின் எண்ணம் நிறைவேறக்கூடாது. திலோத்தமாவின் வாழ்க்கை பாழாகி விடக்கூடாது. முதலில் அவளைச் சந்தித்துப் பேசிவிட வேண்டும் என்றுதான் நினைத்திருந்தார்.



ஆனால் மறுநாளே மும்பையில் வசித்துக் கொண்டிருக்கும் அவரது இளைய தங்கை போன் செய்து... அங்கே நடந்த கலவரத்தில் தன் கணவன் அடிபட்டு மருத்துவமனையில் கிடப்பதாகவும்... தனக்கு இங்குள்ள பாஷை எதுவும் புரியவில்லை. பயமாக இருக்கிறது. உடனே வா... என அழுது கொண்டே பேசவும் மற்றவற்றை மறந்து உடனே மும்பைக்குப் பறந்து விட்டார்.

போனவர் நான்கைந்து நாட்களாய் அங்கேயே தங்கைக்கு உதவியாகத் தங்கிவிட... ஆனந்தபுஷ்பம் பொறுமை இழந்தாள். நல்ல காரியத்தை ஏன் தள்ளிப் போட வேண்டும்? நாமே பேசி முடித்தால் என்ன? சம்மதித்தால் தாம்பூலம் மாற்றிக் கொண்டு... கணவர் வந்த பிறகு மற்றவற்றைப் பேசிக் கொள்ளலாம் எனப் புறப்பட்டு விட்டாள்.

அலுவலகத்தில் வேலை செய்தவர்களிடம் விசாரித்து வெகு சுலபமாய் வீட்டைக் கண்டுபிடித்து விட்டாள். ராகவனைக் கண்டு ஆறுதல் சொல்லி... சகுந்தலாவிடம் இரு துளிக் கண்ணீர் விட்டுத் துக்கம் விசாரித்து... பிறகு நேரிடையாய்க் கல்யாண விஷயத்திற்கு வந்தாள்.

கணவன் மனைவி இருவரும் திகைக்க... அவர்களது மனதை வெகு சுலபமாய்த் தன் பேச்சால் மாற்றினாள் ஆனந்தபுஷ்பம். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். ராகவன் ஒன்றும் கல் அல்லவே! வெறும் கற்பூரம். அது காற்றிலேயே கரைந்துவிடும்.

ஆனந்தபுஷ்பத்தின் பேச்சு நெருப்பு ஜுவாலையாய் மாறி... சொற்ப விநாடிகளில் அவரைக் கரைத்தது.

எப்படியும் குணமாகி எழுந்து விடுவோம் என்ற நம்பிக்கையை அவளது பேச்சுப் பொசுக்கியது.

"நீங்களும் படுக்கையில விழுந்தாச்சு. இனி கடைசி வரைக்கும் எழுந்து நடமாட முடியாது. சகுந்தலா ஒரு அப்பாவி. வீட்டைத் தவிர வேற உலகமே அவளுக்குத் தெரியாது. பையன் சின்னப் பொடியன். அவன் எப்போ வளர்ந்து எப்போ சம்பாதிச்சு... நாலு காசு பார்ப்பான்...

"அப்படியே சம்பாதிச்சாலும் உங்களுக்குக் கஞ்சி ஊத்துவானா... இல்ல... அக்காளுக்குக் கல்யாணம் பண்ணுவானா? நீங்களே சொல்லுங்க... ராகவன்! இப்போ பவுனு விக்கிற விலை என்ன? பத்து மாசம் சம்பாதிச்சாலும் ஒத்தை சவரன் வாங்க முடியுமா... உங்க மகனால?

"எப்படி நகை சேர்த்து... பணம் சேர்த்து... கல்யாணம் பண்ண முடியும்? அதுக்குள்ள பொண்ணுக்கு நாற்பது வயசாகிடும். அதுக்கப்புறம் எப்படி மாப்பிள்ளை பார்ப்பீங்க? அம்பது அறுபது வயசிலதானே பார்க்கணும்? அதுவும் ரெண்டாம் தாரமாத்தான் அமையும்.

"இப்படி கிளி மாதிரி பெண்ணைப் பெத்துக்கிட்டு ஏன் அதைச் சிக்கிச் சிதைய விடணும்? பேசாம நான் சொல்றதைக் கேளுங்க. எங்க வசதியைப் பத்தி உங்களுக்கே தெரியும். சொந்தமா வீடு இருக்கு. கம்பெனி இருக்கு. ஒரு வேன் இருக்கு.

"எனக்கும் குறைவில்லாம நகை நட்டு இருக்கு. இதெல்லாம் யாருக்கு? எங்களுக்குப் பிறகு என் மகனுக்கும் மருமகளுக்கும்தானே! எவளோ ஒருத்தி இதை அனுபவிப் பதற்கு நம்ம ராகவன் பொண்ணு அமோகமா வாழட்டும்னு தான் நாங்க இந்த முடிவை எடுத்தோம்.



"ரெண்டு பேருமே வந்து பேசலாம்னுதான் இருந்தோம். அவங்க தங்கச்சி வீட்டுக்காரருக்கு உடம்பு சரியில்லைன்னு மும்பைக்குப் போயிருக்காங்க. உங்களுக்குச் சம்மதம்னா வெத்தலை பாக்கு மாத்திக்கவோம். அவங்க வந்த பிறகு கல்யாணத் தேதியைக் குறிச்சிடலாம். என்ன சொல்றீங்க?"

தங்களைப் பேச விடாமல் தானே பேசி முடித்துவிட்டவளைப் பார்த்து விட்டுக் கணவன்புறம் திரும்பினாள் சகுந்தலா. நிச்சயம் மறுத்து விடுவார் என்று எதிர்பார்த்தவளுக்குப் பலத்த அதிர்ச்சியைக் கொடுத்தார் ராகவன். சில நிமிட அமைதிக்குப் பிறகு மெல்லப் பேசத் துவங்கினார்.

"எங்க மேல இவ்வளவு அக்கறை வெச்சு சம்பந்தம் பேச வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. ஆனா இப்ப எங்க நிலைமை என்னன்னு உங்களுக்குத் தெரியுமே!"

"நல்லாத் தெரியும் ராகவன். நீங்க எதைப் பத்தியும் கவலைப்பட வேண்டாம். கல்யாணச் செலவுன்னு பத்து பைசா கூட நீங்க செலவு பண்ண வேண்டாம். உட்கார்ந்த இடத்தில இருந்தே அட்சதை போட்டு வாழ்த்துங்க. அது மட்டும் போதும்."

"தம்பி இப்போ... எப்படி இருக்குது?"

"யாரு? என் பையனா? அவனுக்கென்ன ராஜாவாட்டம் இருக்கான். எல்லாம் உங்க பொண்ணு செய்த மாயம். அவன் இப்ப ரொம்ப மாறிட்டான். இப்பக்கூட உங்க பொண்ணைப் பார்க்கத்தான் போயிருக்கான்."

"என்ன?" - இருவரும் திடுக்கிட்டனர்.

"பயப்படாதீங்க. உங்க பொண்ணு சொன்னானு கவிதை எழுதி ஏதோ புத்தகத்துக்கு அனுப்பினான். அவனோட நல்ல நேரம் அது புக்குல பிரசுரமாகியிருக்காம். அதை முதல்ல அவகிட்டத்தான் காட்டணும்னு போயிருக்கான்.

"உங்க பொண்ணு மேல அவனுக்கு அவ்வளவு பிரியம். உங்க பொண்ணைத் தைரியமா கொடுங்க ராகவன். நான் என் பொண்ணா பார்த்துக்கிறேன். அவளை எங்க எல்லாருக்குமே பிடிச்சிருக்கு. இனிமே அவதான எங்க வீட்டு மகாராணி!" - ஆனந்தபுஷ்பம் உறுதியாய்ச் சொல்ல... ராகவன் அதற்கு மேல் தயங்கவில்லை.

"சகுந்தலா! தட்டை எடுத்திட்டு வா."

"எ... என்னங்க!" - மனைவியின் குரலில் இருந்த திகைப்பை உணர்ந்த போதும்... அவளை நிமிர்ந்து பார்க்கத் திராணியின்றி... தன் மடங்கிய கையைப் பார்த்துக் கொண்டே சொன்னார்.

"இதைவிட அருமையான இடம் நம்ம பொண்ணுக்கு அமையாது... சகுந்தலா! போய்த் தட்டை எடுத்திட்டு வா. வெத்தலை பாக்கு மாத்திக்கலாம்."

"அ...வசரப்படாதீங்க. திலோ வந்திடட்டும். அவகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு..." - எனத் தொடங்கிய மனைவியைப் பார்வையால் அடக்கினார்.

"குழந்தைகளுக்கு எது செய்தா நல்லதுன்னு நமக்குத் தெரியாதா? அவ குழந்தை. அவகிட்ட என்ன கேட்கிறது? போ... சொன்னதைச் செய்."

கணவனின் குரலில் மிரண்டு தன்னிச்சையாய் எழுந்தாள். இரண்டே நிமிடத்தில் எளிதாய் நிச்சயதாம்பூலம்



அரங்கேறிவிட... சகுந்தலாவின் தாயுள்ளம் கண்ணீர் சிந்தியது. தன் முதலாளி மகனின் ஆட்டங்களை அவ்வப்போது ராகவன் சொல்லிக் கேட்டதுண்டு.

இன்று அதே குடிகாரனுக்குச் சற்றும் யோசிக்காமல் எப்படித் தன் பெண்ணைக் கொடுக்க மனம் வந்தது? கண்கள் கலங்க... கணவனைப் பரிதாபமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

வந்த வேலை வெற்றிகரமாய் முடிந்ததில் ஆனந்த புஷ்பம் வாயெல்லாம் பல்லாக விடை பெற்றதும் பதில்கூடச் சொல்லி அனுப்பாமல் உறைந்து போய் நின்றாள் சகுந்தலா.

மனைவியின் மனக்கொந்தளிப்பை உணர்ந்தவராய் மனம் வலிக்க அவளை அழைத்தார்.

"சகுந்தலா!"

மனைவியிடம் துளியும் அசைவில்லை.

"சகுந்தலா! நான் செய்தது தப்பா?"

பரிதாபமாய்க் கேட்டவரைத் திரும்பிப் பார்த்து அதிராமல் கேட்டாள். "நீங்க செய்தது சரியா?"

"இல்லம்மா! நான் செய்தது சரியில்ல. ஆனா அதைத் தவிர நமக்கு வேற வழியும் இல்லையே... இந்த உதவாக்கரையால இனி என்ன செய்ய முடியும்... சகுந்தலா?" - கண்கள் கலங்கக் கேட்டவரைப் பார்க்கையில் மனம் துடித்தது.

"ஏங்க இப்படிப் பேசுறீங்க? உங்களுக்குக் குணமாகிடும்னு டாக்டர் சொன்னாரில்ல... பிறகேன் இப்படி ஒரு அவசரமான முடிவை எடுத்தீங்க?"

"டாக்டர் என் மனசைத் தேத்துறதுக்காக அப்படிச் சொல்லியிருக்கலாம் சகுந்தலா! இந்த அம்மா சொன்னதைக் கேட்டியா? கடைசி வரைக்கும் இப்படித்தான் இருப்பேன் போலிருக்கு..."

"அப்படிச் சொல்லாதீங்க. இந்த அம்மா என்ன கடவுளா? சும்மா உங்களைப் பயமுறுத்த ஏதாவது சொன்னா... உடனே நம்பிடுறதா! இது நம்ம பொண்ணோட வாழ்க்கை. இதுல நாம அவசரப்படலாமா?"

"சகுந்தலா! சில விஷயங்கள்ல அவசரப்பட்டாத்தான் நல்லது நடக்கும். வந்த வரனை விட்டுட்டுக் காலம் போன பின்னால அழுது என்ன பிரயோஜனம்? வயசும் அழகும் இருக்கும்போதுதான் மாப்பிள்ளை வீட்டார் தேடி வருவாங்க சகுந்தலா! அது போன பின்னால யாரும் சீந்தமாட்டாங்க.

"நம்ம பொண்ணு முதிர் கன்னியா நரைத்த தலையோடு நம்ம கூடவே இருக்கணும்னு ஆசைப் படுறியா?"

"ஐயோ! ஏன் இப்படிப் பேசுறீங்க? எந்தத் தாயாவது அப்படி நினைப்பாளா?"

"அப்படி ஒரு நிலைமை நமக்கு வந்திடக் கூடாதுன்னுதான் நான் ஒத்துக்கிட்டேன் சகுந்தலா! என்னால இந்த நிலையில ஒத்த ரூபாகூட சம்பாதிக்க முடியாதே. நான் எந்த தைரியத்தில இந்த இடத்தை மறுக்க முடியும்? சொல்லு...!" - கணவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் அழுதாள்.

"இப்பத்தான் நம்ம குழந்தைங்க பழையபடி கலகலப்பா மாற ஆரம்பிச்சிருக்கு. திரும்பவும் அதுகளை



அழ விடணுமா? அவளை ஒரு வார்த்தை கேட்காம... நீங்க சம்மதிக்கலாமா?"

"திலோ என் பொண்ணு... சகுந்தலா. அவளுக்கு என் மேல கோபம் வராது. நான் எது செய்தாலும் அதை மனப்பூர்வமா ஏத்துப்பா."

"நம்ம நம்பிக்கையைப் புள்ளைங்க மேல திணிக்கக் கூடாதுங்க. அவங்க கிட்டயும் பேசிச் சம்மதம் வாங்கின பிறகு தலையாட்டியிருக்கணும். இப்ப அவ வந்து நிற்பாளே... நான் என்னன்னு சொல்லுவேன்?"

"நீ ஏன் இப்படிப் பயப்படுற? என் பொண்ணு என் முடிவை முழு மனசோட ஏத்துக்குவா. நீ எதுவும் பேசாதே. அவ வரட்டும். நானே பேசுறேன்."

"இன்னிக்குத்தான் பரிட்சை முடியுது. இன்னும் ரிசல்ட் வரணும். பெரிய வேலையில சேரணும். தம்பியைப் படிக்க வைக்கணும்னு எவ்வளவு கனவு கண்டாள். இப்படி ஒரே நிமிஷத்தில என் பொண்ணோட மொத்தக் கனவையும் நாசமாக்கிட்டீங்களே..."

"என்னைக் கொல்லாதே சகுந்தலா. இந்தக் கையாலாகாத தகப்பனால வேற என்ன செய்ய முடியும்? என்னை அவ புரிஞ்சுப்பா. என் பொண்ணு மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. அவளுக்கு இதைவிட வேற நல்ல வாழ்க்கை அமையாது. நான் பேசுறேன்...

"நீ பதறாதே. அமைதியா இரு. அவ வரட்டும். அந்த அம்மா சொன்னதை வெச்சுப் பார்த்தா திலோவுக்கும் அந்தப் பையனைப் பிடிக்கும்னுதான் நினைக்கிறேன். அவ வந்ததும் அவகிட்டயே கேட்டுடலாம்!" - ராகவன் தனக்குத் தானே

நம்பிக்கை யூட்டிக் கொண்டு, மகளின் வருகைக்காகக் காத்திருக்கத் துவங்கினார்.

**ம**ஞ்சள் நிறச் சித்திரைப் பூக்கள் தரை முழுக்க உதிர்ந்திருக்க... மரத்தடியில் அமர்ந்திருந்தாள் திலோத்தமா. சுற்றிலும் தோழியர் கூட்டம். அனைவரின் முகத்திலும் ஒருவித இறுக்கம். பிரிவுத் துயரம். கண்களில் லேசான ஈரம். மௌனமே அவர்களின் மொழியானது.

திலோத்தமா கல்லூரியின் கட்டடத்தை ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் கலங்கின. சொந்த வீட்டை விட்டுப் பிரிவது போல் வலித்தது. இனி இதே போல் உரிமையாய் வந்து கூடிக் களிக்க முடியுமா? எட்ட நின்றுதான் பார்க்க முடியும்.

ஒருவர் ஒருவராய்த் தனித்தனித் திசைகளில் பறந்து சென்று விடுவர். இனி இந்தக் கட்டடத்தில் புதிதான பட்டாம்பூச்சிகள் வந்து சேரும். எத்தனை பேரைப் பார்த்துப் பழகி... அவர்கள் பிரியும்போது இந்தக் கட்டடமும் தனக்குள் அழுமோ? உள்ளே அழுது கொண்டுதான் வெளியே கம்பீரமாய் நிற்கிறதோ?

இனி எத்தனை ஆண்டுகள் போனாலும் இந்த இன்பம் திரும்பி வாராது. குடும்ப வாழ்வில் சிக்கிச் சிலர் நீந்திக் கரையேறுகிறார்கள். சிலர் அதிலேயே மூழ்கி விடுகிறார்கள். இனித் தன் வாழ்வு எப்படி இருக்குமோ?

"திலோ! போலாமா? இப்பவே டயமாச்சு!" - உமாதான் உசுப்பினாள்.

"இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாம் உமா."



"இப்படிச் சொல்லிச் சொல்லி மூணு மணி நேரமா உட்கார்ந்திருக்கோம். வீட்டில தேடுவாங்க. வா... போகலாம். ஏய் எல்லாரும் எழுந்திருங்கப்பா. இனி மார்க் ஷீட் வாங்க வரும்போது மீட் பண்ணலாம்."

தோழியர் கூட்டம் மனமேயின்றி எழ... திலோத்தமா அப்படியே அமர்ந்திருந்தாள்.

"உமா! நீ வீட்டுக்குப் போ. நான் கொஞ்ச நேரம் கழிச்சு வர்றேன்."

"ஏன்? தனியா உட்கார்ந்து என்ன பண்ணப் போறே?"

"என்னவோ தெரியலை உமா! மனசெல்லாம் பாரமா இருக்கு. வீட்டுக்குப் போகவே மனசில்லை."

"எல்லா லீவுலேயும் மனசு கஷ்டமாத்தானே இருக்கும். வா.. எல்லாம் போகப் போகச் சரியாகிடும்."

"இல்லை உமா! இது வேற மாதிரியான பாரம். ஏதோ நடக்கக் கூடாதது நடந்திட்ட மாதிரி மனசுக்குள்ள ஒரு... ஒருவிதக் கலக்கமா இருக்கு."

"இப்படியே உட்கார்ந்திருந்தா கண்ட நினைப்பும் வரும். நீ வா... முதல்ல!"

தோழியை எழுப்பினாள். தங்களுடைய உடைமைகளை எடுத்துக் கொண்டு மற்றத் தோழிகளிடம் கையசைத்து விடைபெற்று வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

"உன் வண்டி இன்னும் சரியாகலையா உமா?"

"வண்டி சரியாயிடுச்சு. அப்பாதான் எடுத்து வர விடல்ல..."

"ஏன்?"

"திரும்பவும் ரிப்பேராகி நாம ரோட்டில தள்ளிட்டு அலையக்கூடாதுன்கிற நல்ல எண்ணம்தான். இன்னிக்கு ஒரு நாள் தானேன்னு நானும் கம்ப்பெல் பண்ணலை. பஸ்லேயே போயிடலாம்."

"சரி..." - என்றவாறு வாசலை அடைந்தவளின் கால்கள் தானாய் நின்றன. கண்களில் ஒளி மின்ன... உடல் முழுக்கப் புதிதாய் இரத்தம் பாய்ந்தது. பின்னே வந்த உமா தானும் நின்றாள்.

"என்ன திலோ? நின்னுட்ட!" - என்றவள் அவளது பார்வை சென்ற இடத்தைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

சாலையோரமாய்க் காரை நிறுத்திவிட்டு கார் அருகே கையைக் கட்டிக் கொண்டு நின்றான் ரஞ்சித்குமார்.

"ம்... இனிமே உன் கால் நகராதே. சரி... பேசிட்டு வாங்க. நான் போறேன்." - என விலகியவளின் கையை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டாள் திலோத்தமா.

"உமா! என்னை விட்டுட்டுப் போகாதே."

"ஏய்! வீட்டுக்குப் போகலை. பஸ் ஸ்டாப்ல வெயிட் பண்றேன். பேசிட்டு வா."

"ம்ஹும்."

"என்ன ம்ஹும். அதான் எக்ஸாம் முடிஞ்சு போச்சே. இன்னும் என்ன? நீ ஒழுங்கா பரிட்சை எழுதணும்னுதான் அவர் உன்னை டிஸ்டர்ப் பண்ணாம இருந்தார். இனி மேலாவது பேசேன்டி..."



"நீயும் வா."

"கிழிஞ்சது போ. அவர் என்கிட்ட பேச வரலை..."

"என்கிட்ட என்ன பேசணுமாம்?"

"அதை அவர்கிட்டயே கேளு. என்னை விடு!" - என்றவள் கையை விலக்கிக் கொண்டு வேகமாய் நடக்க... படபடப்பாய் நின்று கொண்டிருந்தவளை மென்மையான புன்னகையோடு நெருங்கினான் ரஞ்சித்குமார்.

"ஹாய் திலோ!"

"ஹ... ஹாய்!"

"எக்ஸாம்ஸ் எல்லாம் முடிஞ்சதா? நல்லா எழுதியிருக்கியா?"

"ம்..."

"உன்கிட்ட கொஞ்சம் பேசணும். கார்ல உட்கார்ந்து பேசலாமா?"

அவசரமாய் மறுத்தாள். "இ...ல்ல. வேண்டாம்."

"இங்கே நின்னு பேச எனக்கொன்றும் அப்ஜெக்‌ஷன் இல்லை. போறவங்க எல்லாம் நம்மை ஒரு காட்சிப் பொருளாப் பார்த்திட்டுப் போவாங்க. பரவாயில்லையா?"

"ஐயோ!"

"கார்ல உட்கார்ந்து பேசலாமா?"

"எ... என்ன பேசணும்?"

"அதை கார்ல வெச்சே சொல்றேனே... ப்ளீஸ் கம்!" - கார் கதவைத் திறந்து விட்டான்.

வெகுவாய்த் தயங்கி நடுங்கும் கால்களைப் பிரயாசைப்பட்டுக் காரில் வைத்தாள். உள்ளம் திடும் திடும்மென அதிர்ந்தது.

காரில் ஏறி மெத்தென்ற இருக்கையில் அமர்ந்ததும் கதவைச் சாத்தினான். சில்லென்ற குளிரும் இதமாய் வீசிய நறுமணமும் சிலிர்க்க வைத்தது.

மீண்டும் பதறினாள். "க... கதவை ஏன் சாத்துறீங்க?"

"இது ஏ.சி. கார்ம்மா. தூசு ஏறிடும். அதோட கதவைத் திறந்து வைச்சா போற வர்றவங்க எட்டிப் பார்த்திட்டுப் போவாங்க. நாம சும்மா பேசிட்டுத்தான் இருப்போம்னு அவங்களுக்குத் தெரியாதே!"

"சரி! என்ன பேசணும்? சீக்கிரம் சொல்லுங்க. நான் வீட்டுக்குப் போகணும்..."

"போகலாம். முதல்ல என்னைப் பார்."

"எ...ன்ன?"

"என் முகத்தைப் பாருன்னு சொன்னேன்."

"எதுக்கு?" - அவசரமாய்க் குனிந்து கொண்டாள்.

"ஆச்சரியமா இருக்கு திலோ!"

"ம்..."

"அன்னிக்கு அத்தனை பேர் முன்னால ஸ்டேஜ்ல ஏறிப் பேசின பெண்ணா நீ? நம்பவே முடியலையே... ஒருவேளை அது உன்னோட டூப்ளிகேட்டா?"

"அப்படியெல்லாம் இல்லை."



"பின்னே? முகத்தைப் பார்க்கவே இப்படிப் பயப்பட்டா எப்படி? முகத்தைப் பார்த்துத்தானே பேசணும்...."

தயக்கமாய் நிமிர்ந்தாள். அவனது முகத்தை அண்மையில் பார்த்ததும் மனம் படபடவென அடித்துக் கொண்டது. மீண்டும் பார்வையைத் தழைத்துக் கொண்டாள். "என்னால முடியாது."

"ஏன்?"

"அதெல்லாம் சொல்ல முடியாது. என்ன சொல்லணுமோ சொல்லுங்க. இல்லேன்னா நான் கிளம்பிடுவேன்."

"ஏய்! போயிடாதே. உன்னைப் பார்க்கிறதே பெரிய விஷயம்!"

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

"திலோ!"

"ம்..."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?"

"ம்...?" - திடுக்கென நிமிர்ந்தாள். கண்கள் பெரிதாய் விரிந்தன.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?"

"க... கல்யாணமா?"

"ம்... படிப்புதான் முடிஞ்சு போச்சே. நான் அம்மாவை அழைச்சிட்டு வந்து பெண் கேட்கட்டுமா? உனக்குச் சம்மதம்தானே?" - அவன் கேட்க... குப்பெனச் சிவந்தாள் திலோத்தமா.

"இ...ப்படிக் கேட்டா... எப்படி?"

"உன்னோட விருப்பம் முக்கியம் திலோ! அம்மாவுக்கு... பிரியாவுக்கு எல்லாருக்கும் சம்மதம். உனக்கும் சம்மதம்னா வீட்டில வந்து பெரியவங்க கிட்டப் பேசலாம்னு இருக்கோம். நீ என்ன சொல்றே?"

"நான்... நான் ஏன்ன சொல்றது?"

"சம்மதம்னு சொல்லு!" - என்றான், அவளது கண்களை நேராய்ப் பார்த்து.

"வந்து... அப்பா அம்மாகிட்ட... எப்படிப் பேசுவீங்க?"

"அது என் பொறுப்பு. எனக்குத் தேவை உன் பதில்தான். என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ம்." - தலையைக் குனிந்து கொண்டாள்.

"நாளைக்கே கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"என்ன?" - திடுக்கிட்டாள்.

"எனக்கு அவசரம் இல்லை திலோ! ஆனா... பிரியா ரொம்ப பயப்படுறா. தன்னோட மரணத்துக்கு முன்னால நம்ம கல்யாணத்தைப் பார்க்கணும்னு ஆசைப்படுறா. அவளோட கடைசி ஆசை இது."

"எனக்குப் புரியுதுங்க. ஆனா நீங்க என்னோட நிலைமையையும் யோசிக்கணுமே. அப்பா படுக்கையில இருக்கிறாங்க. தம்பியும் சின்னப் பையன். அவங்களை யெல்லாம் அப்படியே விட்டுட்டு என்னால... எப்படி?"

"ஓ! ஸாரி... ஸாரி. நான் அதை யோசிக்கவே இல்லையே. என்ன பண்ணலாம் திலோ? அவங்களையும் நம்மோட அழைச்சிட்டுப் போயிடலாமா?"



"ம்ஹூம். அது சரி வராது."

"ஏன்?"

"இதுக்கு அம்மா அப்பா ஒத்துக்க மாட்டாங்க ரஞ்சித். அவங்களுக்குன்னு சுய கௌரவம் இருக்கு. நிச்சயமா அவங்க நம்மகூட வந்து தங்க மாட்டாங்க."

"அப்போ இதுக்கு என்ன வழி?"

"ஒரு வழி இருக்கு. ஆனா அதுக்கு நீங்க ஒத்துக்கணும்."

"கண்டிப்பா. என்ன வழி அது?"

"நான் வேலைக்குப் போகணும். அந்தச் சம்பளத்தை அம்மாகிட்ட கொடுக்கணும். விஷ்ணு படிச்சு முடிச்சி வேலைக்குப் போற வரைக்கும் நான் என் கடமையைச் செய்தே ஆகணும். உங்களுக்கு இதுல சம்மதம்னா நீங்க தாராளமா என்னைப் பெண் கேட்டு வரலாம். இல்லேன்னா..."

"ஐயோ! அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதே திலோ. உன் விருப்பம் போல தாராளமா செய். விஷ்ணு வேலைக்குப் போன பிறகு கூட நீ தாராளமா உன் கடமையைச் செய்யலாம். எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை."

"இப்ப ஒத்துக்கிட்டு பிறகு பேச்சு மாற மாட்டீங்களே?"

"ப்ராமிஸ்மா. உனக்கு நம்பிக்கை இல்லேன்னா எழுதித் தரட்டுமா?"

"சேச்சே! நம்பிக்கை இல்லாம இல்லை. சும்மா..."

"அப்போ உனக்கு என் மேல நம்பிக்கை இருக்கு."

"ம்... இருக்கு."

"அப்போ கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"ம்..." - சம்மதமாய்த் தலையாட்டினாள்.

"எப்போ?"

"எப்ப வேணாலும்..." - வெட்கமாய் அவள் சொல்ல... குதூகலித்தான் ரஞ்சித்குமார். குனிந்து அமர்ந்திருந்தவளின் முகத்தை நிமிர்த்தி அவளது நெற்றியில் அழுத்தமாய் முத்தம் பதித்தான். திலோத்தமாவின் உடல் ஒரு முறை அதிர்ந்தது.

"தேங்க் யூ ஸ்வீட்டி. மை ஸ்வீட் ஹார்ட். நாளைக்கே வர்றோம்."

"நாளைக்கா?"

"ம்... ஏற்கெனவே பிரியா அடம் பண்ணிட்டு இருக்கா. நான்தான் உனக்கு எக்ஸாம் முடியட்டும்னு வெயிட் பண்ணச் சொல்லியிருக்கேன். ஸோ! நாளைக்கு நாங்க வர்றோம். நீ ரெடியா இரு."

"ஐயோ! நான் வீட்டில எதுவும் சொல்ல மாட்டேன். நீங்க வந்து என்ன பேசணுமோ பேசிக்குங்க."

"தேங்க் யூ டியர். அப்புறம் திலோ! உன்கிட்ட ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"கேளுங்க."

"பிரியா... மேல உனக்கு... இன்னும் கோபம் இருக்கா?"



"சேச்சே! இந்த நிலையில அவமேல கோபப்பட முடியுமா? அதையெல்லாம் நான் எப்பவோ மறந்திட்டேன்."

"எனக்குத் தெரியும். நானும் இதைத்தான் அவகிட்ட சொன்னேன். ஆனா அவ மனசுதான் உறுத்திட்டே இருக்கு. ரொம்ப வருத்தப்படுறா."

"நாளைக்கு வரும்போது அவளையும் கூட்டிட்டு வாங்க. நான் பேசுறேன்."

"தேங்க்ஸ் திலோ! இந்த உதவியை என் வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன். பிரியாவை நிம்மதியான மனசோட அனுப்பி வைக்க வேண்டியது என்னோட கடமை திலோ!" - என்றான் கண்கள் கசிய.

"நம்மோட கடமை!" - என்றவளை நன்றிப் பெருக்கோடு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பில் மொத்தமாய்க் கரைந்து போனாள் திலோத்தமா.

## 25

நீ வருகின்ற வழி மீது
யார் உன்னைக் கண்டார்?
உன் வளை கொஞ்சும் கை
மீது பரிசென்ன தந்தார்?

முகம் முழுக்க வெட்கப் புன்னகையோடும் மனம் நிறைய உற்சாகத்தோடும்... தோழி உமாவின் கேலியில் பெருமிதமும் ஆனந்தமுமாய் வீட்டை நெருங்கினாள் திலோத்தமா. வழக்கமாய் நடக்கும் பாதைதான். ஆனால் இன்று எல்லாமே புதுமையாய்த் தெரிந்தது.

தெருமுனையில் கட்டப்பட்டிருந்த எருமை மாட்டுக் கூட்டத்தைக் கடந்து செல்கையில் யாரோ தன் பெயர் சொல்லி அழைக்க... சட்டென நின்றாள்.

குரல் வந்த திசையில் திரும்பினாள்.

"நான்தான்..." என்றவாறு நின்றவனைப் பார்த்துக் குழம்பினாள்.

"யார் நீங்க?"

"திலோத்தமா! என்னைத் தெரியலையா? நான்தான் திவாகர்!" - என அவன் அறிமுகம் செய்ததும் லேசாய்ப் புன்னகைத்தாள்.

"ஓ! நீங்களா? ஸாரி... எனக்கு அடையாளம் தெரியலை."

"பரவாயில்லைங்க. இத்தனை நாளா கூடவே இருக்கிற ஃபிரண்ட்ஸ்களுக்கே என்னை அடையாளம் தெரியலை. ஒருமுறைதானே பார்த்திருக்கீங்க. எப்படித் தெரியும்?" - என்றவனை வியப்பாய்ப் பார்த்தாள். வார்த்தையில் மரியாதை கூடியிருக்கிறதே!

பரட்டைத் தலையும் தாடியும் கசங்கிய சட்டையுமாய் இருந்தவன் இன்று வெகு சுத்தமாய்க் காட்சியளித்தான். உடையில் ஒரு நேர்த்தி இருந்தது. தலைமுடியை ஒட்ட வெட்டி அழகாய் வாரியிருந்தான். முகத்தில் இருந்த தேவையற்ற முடிகளைச் சவரம் செய்து பளிச்சென நின்றிருந்தான். தன்னையும் மீறிப் புன்னகைத்தாள்.

"நீங்க என்ன இந்தப் பக்கம்?"



"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

"என்னைப் பார்க்கவா? எதுக்கு?"

"அன்னிக்குச் சொன்னீங்களே... கவிதை எழுதுன்னு."

"ஆமா."

"நான் எழுதின கவிதை புக்ல வந்திருக்கு. பார்க்கிறீங்களா?" - ஆவலாய்க் கேட்டவாறே புத்தகத்தை நீட்டினான். திலோத்தமா உண்மையாகவே மலர்ந்தாள்.

"வாவ்! கங்கிராட்ஸ். நான் சொன்னேனில்ல... எப்படியும் வரும்னு..."

"ஆமாங்க. உங்க நாக்குல அந்த சரஸ்வதிதான் குடியிருக்கா. உங்க வாக்குப் பலிச்சிடுச்சி. எம் பேர் எல்லா புக்லயும் வந்திருக்கு."

"ம்... இன்னும் எழுதுங்க. எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்புங்க."

"சரிங்க."

"பெரிய கவிஞரா வருவீங்க திவாகர்! ஒரு கண்ணதாசன்... ஒரு வைரமுத்து லெவல்ல வரணும்னு முனைப்போட எழுதுங்க. நிச்சயம் ஜெயிப்பீங்க."

"ரொம்ப நன்றிங்க. உங்களைப் பார்த்து நன்றி சொல்லிட்டு... இந்தப் புக்கைக் கொடுத்திட்டுப் போலாம்னு உங்க காலேஜ் வாசல்ல நின்னேன்."

"எ...ன்ன? எப்போ?"

"ரொம்ப நேரமா நின்னேன். நீங்க வரவே இல்லை. அதான் எப்படியும் வீட்டுக்குப் போறதுக்குள்ள பார்த்திடணும்னு ரெண்டு மணி நேரமா நிற்கிறேன்."

"என்ன ஸார் இது?"

"பரவாயில்லைங்க. உங்களை நேர்ல பார்த்துச் சொல்லணும்னு நினைச்சேன். சொல்லிட்டேன். ரொம்பத் திருப்தியா இருக்கு. இந்தாங்க புக். வீட்டில போய் வாசிச்சுப் பாருங்க. நாற்பத்து மூணாவது பக்கத்தில வந்திருக்கு."

"சரி... நான் பார்த்துக்கிறேன்!" - என்றவாறு புன்னகையோடு வாங்கிக் கொண்டாள்.

"அப்போ நான் வர்றேங்க...."

"ம்."

"தப்பா எடுத்துக்காதீங்க. இனிமே இப்படித் தெருவில நின்னு பேசி உங்களைச் சங்கடப்படுத்த மாட்டேன். இன்னிக்கு ஏதோ ஆர்வம். அதான்..."

"இட்ஸ் ஓ.கே."

"வர்றேங்க..." - என்றவாறு அவன் விலகி நடக்க...

கையிலிருந்த புத்தகத்தைக் கைப் பையுள் வைத்துவிட்டு... கூடுதல் உற்சாகத்தோடு வீட்டை நோக்கி நடந்தாள். தன்னுடைய வார்த்தை ஒரு மனிதனை இத்தனை விரைவாய் மாற்றிவிட்டதா?

இதை அப்பாவிடமும் சொல்ல வேண்டும். ரொம்ப சந்தோஷப்படுவாங்க. உற்சாகமாய் வீட்டை அடைந்தவள்...



வாசலில் செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே நுழைய... தாயின் அழுது சிவந்த முகம் கண்ணில் பட... பதறிப் போனாள்.

"அம்மா! என்னம்மா... முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு..." - தாயை நெருங்கி முகத்தை வருடினாள்.

"அ... அது ஒண்ணுமில்லை. போ... போய்க் கை கால் அலம்பிட்டு வா. காபி தர்றேன்."

"அம்மா! உண்மையைச் சொல்லுங்க. அப்பாவுக்கு ஏதும்..."

"தீலோம்மா..." - பரிவாய் அழைத்தார் ராகவன்.

"அப்பா!"

"இப்படி வாம்மா."

"என்னப்பா!" - என்றவாறு வந்த மகளைத் தன்னருகே அமர வைத்துக் கொண்டார்.

"பரிட்சை எல்லாம் நல்லா எழுதினியா?"

"ம்... சூப்பரா எழுதியிருக்கேன்ப்பா... எப்படியும் ஃபர்ஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணிடுவேன்."

"வெரி குட்மா. பரிட்சை முடிஞ்சு போச்சு. அடுத்து என்னம்மா பண்ணப் போற?"

"இது என்னப்பா கேள்வி? ரிசல்ட் வர்ற வரைக்கும் பிளாஸ்டிக் கம்பெனியில வேலைக்குப் போறேன். ரிசல்ட் வந்த பிறகு படிப்புக்கேத்த மாதிரி ஒரு வேலையைத் தேடிக்கணும்."

"எப்போம்மா கல்யாணம் பண்ணிக்கப் போற?" - தந்தை கேட்க... திடுக்கிட்டாள்.

"அ...ப்பா! கல்யாணமா! அதுக்கென்ன அவசரம் இப்போ?" - உடல் உதறியது.

ரஞ்சித் விஷயம் அப்பாவின் காதுக்கு எட்டிவிட்டதோ? நாளை பெண் கேட்க வருவதாய்ச் சொன்னாரே... தானாய்ப் பெண் கேட்டு வருவதாய் இருக்கட்டும். வேறு எதையும் சொல்ல வேண்டாம் என்று நினைத்தோமே...

தன்னையும் மீறித் தந்தைக்குத் தெரிந்து விட்டதோ... அதனால்தான் பரிட்சை முடிந்த கையோடு திருமணப் பேச்சை எடுக்கிறாரோ? மகளின் முகவாட்டத்தைப் பார்த்து விட்டுக் கோபமாய்க் கணவனிடம் திரும்பினாள் சகுந்தலா.

"நான் எத்தனை வாட்டி சொன்னேன், கேட்டீங்களா? பாருங்க... புள்ளை முகம் எப்படி மாறிடுச்சி. எவ்வளவு சந்தோஷமா வீட்டுக்குள்ள நுழைந்தாள்...?"

"சகுந்தலா! நீ பொறு. நான் பேசிக்கிறேன். திலோம்மா...!"

"என்னப்பா?"

"அப்பா எது செய்தாலும் அது உன் நன்மைக்காகத்தான்னு ஏத்துப்ப இல்லம்மா...?"

தந்தையின் பேச்சில் வித்தியாசம் தெரிய.... லேசாய் முகம் மாறினாள். "அப்பா!"

"திலோம்மா! உனக்கு ஒரு அருமையான வரன் வந்திருக்கும்மா. நமக்குத் தெரிஞ்ச இடம்தான்."



"அப்பா!" - திகைப்பாய்ப் பார்த்தாள். பயப்பந்து உருண்டது.

"திலோம்மா! அப்பாவால உனக்கு மாப்பிள்ளை தேடி அலைய முடியாது. வரதட்சிணைக்கு எதுவும் சேர்த்து வைக்கலை. சேர்க்க உடம்புல வலுவும் இல்லை."

"அப்பா! இப்ப எதுக்கு இந்தப் பேச்செல்லாம்?"

"காரணம் இருக்கும்மா. இந்த மாப்பிள்ளை வீட்டில உன்னை மட்டும் கொடுத்தாப் போதும்னு சொல்றாங்க. கல்யாணச் செலவை யெல்லாம் கூட அவங்களே பார்த்துக்கிறாங்களாம்."

"அப்பா!" - திலோத்தமாவின் தொண்டை அடைத்தது. கண்களில் நீர் தளும்பிற்று. பேச இயலாமல் தவித்தாள். என்ன சொல்வது? ரஞ்சித்! உங்களுக்கு முன்னே யாரோ முந்திக் கொண்டார்களே.... நான் இப்போது அப்பாவுக்கு என்ன பதில் சொல்வேன்?

மகளின் நிலை கண்டு சகுந்தலா கலங்கினாள். "திலோ! நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காம வெத்தலை பாக்கு கூட மாத்திட்டாங்க."

"என்ன?" - சடாரென எழுந்து விட்டாள். உடல் அதிர்ந்தது.

"என்னம்மா சொல்றீங்க?"

"அந்த அம்மா வந்தாங்க. ஏதோ பேசினாங்க. உங்க அப்பாவைப் பயமுறுத்தற மாதிரி என்னவெல்லாமோ பேசி... தட்டை மாத்திட்டாங்க."

"அப்பா! என்னப்பா இதெல்லாம்?"

"எனக்கு வேற வழியில்லைம்மா. கடைசி வரைக்கும் இப்படியே படுக்கையில கிடந்தா உன்னை எப்படியம்மா கரையேத்துவேன்? பருவத்தில பயிர் செய்திடணும்மா..."

"அப்பா! எனக்கு இன்னும் எவ்வளவோ கடமை இருக்குப்பா. தம்பியைப் படிக்க வைக்கணும். உங்களுக்கு வைத்தியம் பார்க்கணும்."

"அதெல்லாம் தானா நடக்கும்மா. கல்யாணம் அப்படியில்லை. தேடி வரும்போது முடிச்சிடணும். தட்டிப் போச்சுன்னா அமையாதும்மா..."

"அப்பா! அதுக்காக இவ்வளவு அவரசப்படணுமா?"

"எனக்கு அவசரமில்லம்மா. மாப்பிள்ளையோட அம்மாதான் அவசரப்படுறாங்க. மாப்பிள்ளை கூட உன்னைப் பார்க்க வந்ததா சொன்னாங்களே... பார்த்தியாம்மா. உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா?" - தந்தை கனிவாய்க் கேட்க... கலங்கியிருந்த முகம் மெல்ல மெல்லத் தெளிந்தது.

தெளிந்த முகத்தில் பலவித உணர்வுகள் தோன்றி மறைந்தன.

"அப்பா! என்ன... சொல்றீங்க?"

"மாப்பிள்ளை அம்மாதாம்மா சொன்னாங்க. அவர் உன்னைப் பார்க்கப் போறதாச் சொன்னாராமே... வரலையா?" - திலோத்தமாவின் முகம் குப்பெனச் சிவந்தது. அப்படியென்றால் வந்தது ரஞ்சித்தின் அம்மா.



பையனை அங்கே அனுப்பிவிட்டு அம்மா இங்கே வந்தார்களா? இவர் என்னிடம் சொல்லவே இல்லையே... நாளைதானே வருவதாய்ச் சொன்னார்...! அதற்குள் எப்படி?

"திலோம்மா! இப்படி எதுவும் பேசாம நின்னா எப்படி? அந்த மாப்பிள்ளை வந்தாரா? இல்லையா?"

"வ...ந்தாரும்மா!" - என்றாள் முகம் சிவக்க.

"எப்படியிருக்கார்? பேசினாரா? உனக்குப் பிடிச்சிருக்கா?"

"அம்மா...! அதை... எப்படி உங்ககிட்ட சொல்றது?"

"எதுவா இருந்தாலும் சொல்லு. இது உன் வாழ்க்கை. உன் முடிவுதான் முக்கியம். பிடிக்கலைன்னா தயங்காமச் சொல்லிடு."

"இ... இல்லைம்மா! புடிச்சிருக்கு..." - மகளின் வெட்கப் புன்னகையைக் கண்டு மனம் நிறைந்தவராய் மனைவியை ஏறிட்டார்.

"என்னவோ சொன்னியே? பார்த்தியா என் பொண்ணு முகத்தை... அதுல தெரியுற வெட்கத்தை..."

"திலோ! அந்த மாப்பிள்ளையைப் பத்தி ரொம்ப மோசமா..."

"இல்லைம்மா. அவர் ரொம்ப நல்லவர். நான்கூட அவரைத் தப்பாத்தான் நினைச்சிட்டு இருந்தேன். ஆனா அவர் மேல எந்தத் தப்பும் இல்லை. அவரே எல்லாத்தையும் சொல்லிட்டார். நாளைக்குத்தான் நம்ம வீட்டுக்கு வர்றேன்னு சொன்னார்..."

"அட! நாளைக்கு மாப்பிள்ளை வர்றாரா? ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா. சகுந்தலா! நாளைக்குக் கேசரி பண்ணிடு. அப்புறம்..."

ஆர்வமாய்த் தொடங்கிய ராகவன் மனைவியின் குழப்பமான முகத்தைக் கண்டு தன் பேச்சை நிறுத்தினார்.

"சகுந்தலா!"

"ம்..."

"இன்னும் என்ன குழப்பம் உனக்கு?"

"எனக்கென்னவோ இது... சரியாத் தோணலைங்க. நாம இருக்கிற நிலைமையை அவங்களுக்குச் சாதகமா ஆக்கிட்டாங்களோன்னு மனசுக்குள்ள உறுத்தலா இருக்கு."

"அம்மா! அப்படியெல்லாம் எதுவுமே இல்லைம்மா. அவர் என்னை விரும்பித்தான் பெண் கேட்டு வரச் சொல்லியிருக்கார்."

"என்னடி சொல்ற?"

"அவரோட மனசை எப்பவோ என்கிட்ட சொல்லிட்டார். நான்தான் தயங்கினேன். என்னோட படிப்பு முடிஞ்சதும் தானே பெண் கேட்டு வர்றதாச் சொன்னார்."

"அப்போ எங்களுக்குத் தெரியாம இதெல்லாம் நடக்குதா? நீ சொல்லித்தான் அவங்க வந்தாங்களா?" - கோபமானாள் சகுந்தலா.

"ஐயோ! இல்லைம்மா... அவரேதான் வந்து சொன்னார்."



"அதெப்படி? வேலைக்குப் போறேன்னு ஒரு மாசம் கூடப் போகலை. அதுக்குள்ள...?" - கோபமாய்த் தொடங்கிய மனைவியை அதட்டினார் ராகவன்.

"சகுந்தலா! என்ன நீ நம்ம புள்ளையைச் சந்தேகப் படறியா?"

"அதுக்கில்லங்க..."

"பேசாம இரு. இப்போ உனக்கு என்ன பிரச்சனை? மாப்பிள்ளை எப்படி இருப்பாரோன்னுதானே பயப்படுறே? நாளைக்கு வர்றேன்னு சொல்லியிருக்காரில்ல... வரட்டும். நீயே பாரு. உனக்குப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம். இல்லைன்னா விட்டுடலாம்..."

"என்ன?"

"ஆமா சகுந்தலா! உனக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்ய எனக்கு மட்டும் ஆசையா என்ன? ஒரே பொண்ணு. அவ வாழ்க்கைப்பட்டுப் போற இடத்தில சந்தோஷமா வாழணும்னுதானே நினைக்கிற?"

"ஒரு தாய்க்கு அதைவிட என்ன ஆசை இருக்க முடியும்?"

"உன் ஆசை நல்லபடியா நிறைவேறும் சகுந்தலா. நம்ம பொண்ணுக்கே மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கே. அவ மனசு போல வாழ்றதுதானே நமக்குச் சந்தோஷம். நிம்மதி!"

"ஆமாங்க."

"அப்போ திலோ கிட்டயே கேளு. அவளுக்குப் பிடிக்கலைன்னா அவங்களை வர வேண்டாம்னு

சொல்லிடுவோம். இல்லைன்னா... வரட்டும். பேசிப் பார்ப்போம். உனக்கும் பிடிச்சிருந்தா சம்மதிக்கலாம். என்ன சொல்ற?" - ராகவன் கேட்க... யோசனையாய் மகளைப் பார்த்தாள் சகுந்தலா.

"நீ என்னம்மா சொல்ற?"

"அம்மா! அவரை உங்களுக்குப் பிடிக்கும்மா. ரொம்ப நல்லவர். நீங்க பாருங்களேன்...."

"அப்போ... மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருக்கா திலோம்மா?"

"ம்... பிடிச்சிருக்கும்மா."

"அப்போ..."

"அம்மா! எனக்குக் கல்யாணம் ஆன பிறகுகூட வேலைக்குப் போய் அந்தப் பணத்தை நம்ம வீட்டுக்கே கொடுக்கச் சொல்லிட்டார். விஷ்ணு வேலைக்குப் போய்ச் சம்பாதிச்ச பிறகும் கூட நிறுத்த வேண்டாம்னு சொல்றார்."

"எ...ன்ன?"

"அது மட்டுமில்லம்மா. நம்ம அப்பாவோட ட்ரீட்மெண்ட்டுக்கு ஏற்பாடு பண்ணினது... விஷ்ணுவோட ஸ்கூல்ல பேசினது... என்னை எக்ஸாம் எழுத வெச்சது எல்லாமே அவரோட ஏற்பாடுதாம்மா..."

"என்ன?" - ராகவனும் வியந்து போனார்.

"ஆமாம்ப்பா! இது எல்லாமே அவர்தான் செய்யுறார். அந்த மனசுதாம்ப்பா... எனக்குப் பிடிச்சிருக்கு. நான்கூட அவர் மேல ரொம்பக் கோபமாத்தான் இருந்தேன். இப்ப



அவரோட மனசைப் புரிஞ்சிகிட்ட மாதிரி அம்மாவும் நீங்களும் புரிஞ்சுப்பீங்க. நாளைக்கே வந்து இதைப் பத்தி உங்ககிட்டப் பேசணும். ஸாரி கேட்கணும்னு சொன்னார்..." - திலோத்தமா வெட்கப் புன்னகையோடு சொல்ல... ராகவன் லேசாய்க் குழம்பினார்.

மன்னிப்பா? எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்? மகள் யாரைச் சொல்கிறாள் எனக் குழம்பிப் போனார்.

## 26

மன்னிக்க மாட்டாயா - உன்
மனமிரங்கி! நீ ஒரு மேதை
நான் ஒரு பேதை - நீ தரும்
சோதனை நான் படும் வேதனை
போதும்! என்னை மன்னிக்க மாட்டாயா?

**கா**ரை விட்டு இறங்கிய ரஞ்சித்குமார் திலோத்தமாவின் வீட்டைப் பார்த்தான். வரிசையாய்ச் சிறிய வீடுகள் ஆஸ்பெஸ்டாஸ் கூரையோடு நின்றிருக்க... குடித்தனக்காரக் குழந்தைகள் நான்கைந்து காய்ந்த குச்சிகளை நட்டு வைத்துக் கொண்டு ஒரு விறகுக் கட்டையால் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தனர்.

ஒரு ஓரமாய் ஏழெட்டு எருமை மாடுகள் கட்டப்பட்டிருக்க... சாண வாடை குடலைப் புரட்டியது. நாசியைச் சுருக்கியபடி காருக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே தயக்கமாய் அமர்ந்திருந்தாள் பிரியங்கா. கதவைத் திறந்து விட்டான்.

"வா... பிரியா! இதுதான் திலோ வீடு!" - என்றவாறு அழைக்க... மெதுவாய் இறங்கியவள் சுற்றிலும் பார்வையை வீசினாள். மனம் வலித்தது.

"இதுவா திலோத்தமா வீடு?"

"அதோ... அந்த லாஸ்ட் வீடு. வா போகலாம்!" - என ரஞ்சித் முன்னே நடக்க... பிரியங்காவிற்குள் ஏதோ உறுத்தியது. ஓட்டு வீடாய் இருந்தாலும் தனி வீடாய்ச் சுற்றிலும் மரம், பூச்செடிகளோடு இருந்தாளே... இப்போது இப்படி ஒரு முடங்குக்குள் எருமைக் கூட்டத்தின் நடுவே வாழும்படி ஆக்கிவிட்டேனே...

என் கொட்டத்திற்குப் பயந்து அவசரமாய் இந்த வீட்டைப் பார்த்திருப்பாளோ? நான் செய்த காரியம் அவளை எத்தனை மோசமாய்ப் பாதித்திருக்கிறது. என்னை மன்னிப்பாளா? மாட்டாள். நிச்சயம் மன்னிக்க மாட்டாள். கையில் கிடைப்பதைக் கொண்டு அடித்தே விரட்டுவாள்.

என்ன தைரியத்தில் அவளைப் பார்க்க வந்தேன்? அவள் என்னை மன்னிப்பாள் என்று எப்படி எதிர்பார்த்தேன்? என் உடல் நிலை அறிந்து வருந்தியிருக்கலாம். அது அவளது சுபாவம். அதையே பிடித்துக் கொண்டு இப்படி வீடு வரை வந்தால் விடுவாளா?

ஆனால் இதற்கெல்லாம் பயந்தால் எப்படிக் காரியம் நடக்கும்? இது என் அண்ணனின் வாழ்க்கை. இதில் என் சொந்த விருப்பு வெறுப்பை நுழைக்கக் கூடாது. பாவம், அண்ணன்... இத்தனை வருடங்களாய் என்னைப் பற்றிய கவலையில் உழன்று கொண்டிருக்கிறான்.



இனியாவது அவன் வாழ்க்கையில் சந்தோஷம் மலரட்டும். மனதிற்குப் பிடித்த பெண்ணோடு வாழட்டும். எப்படியாவது இவர்களது திருமணத்தை நடத்தி விட வேண்டும். அதற்காக எத்தனை அவமானங்களையும் தாங்கிக் கொள்ளலாம்.

"என்ன பிரியா நின்னுட்ட...? வா!"

"அண்ணா!"

"என்னம்மா?"

"வந்து... என்னைப் பார்த்தா அவங்க வீட்டில எல்லாரும் கோபப்படுவாங்களே...!"

"நீதானேம்மா வந்தே ஆகணும்னு அடம் பிடிச்ச?"

"இப்படி ஒரு இடத்தில இருப்பான்னு நினைக்கலை. அண்ணா! எதுக்கும் நான் வெளியே நிற்கிறேன். நீ போய்ப் பேசு."

"நானா? நான் என்ன பேசுறது?"

"நான் வந்திருக்கேன்னு சொல்லு. திலோ என்ன சொல்றான்னு கேட்டுட்டு..."

"அட! வாங்க ஸார். பிரியங்கா... வா... வா... ஏன் வெளியே நிற்கிறீங்க? ப்ளீஸ் உள்ளே வாங்க..." - கையில் துடைப்பத்தோடு வெளியே வந்த திலோத்தமா... அதை ஓரமாய்ப் போட்டு விட்டு, தூக்கிச் செருகியிருந்த புடவையைச் சீராக்கிக் கொண்டு புன்னகையோடு அழைத்தாள்.

இருவரும் தயங்கி நிற்க... "அட! வாங்க... வா... ப்ரியா. உடம்பெல்லாம் எப்படி இருக்கு?" - பரிவோடு கேட்டபடி

கைப்பற்றி அழைத்துச் செல்ல... பிரியங்காவிற்குத் தொண்டை அடைத்தது. பேச்சு எழவில்லை. தலையை மட்டும் அசைத்தாள்.

"ம்..."

"நீ ஏன் பிரியா இவ்வளவு தூரம் வந்தே? நானும் உமாவும் இன்னும் ரெண்டு நாள்ல வர்றதா இருந்தோம்..." - சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் நுழைய... பிரியங்கா அப்படியே நின்றாள்.

"என்ன பிரியா? உள்ளே வா."

"நீ... நீ என்னைப் பார்க்க வரணும்னு நினைச்சியா திலோ?"

"ம்... எக்ஸாம் முடியுற வரை எங்கேயும் வர முடியலை. நேற்றோடு எல்லாப் பரிட்சையும் முடிஞ்சு போச்சா... அதான் உனக்கு ஏதாவது ஒரு கிஃப்ட் வாங்கிட்டு வந்து பார்க்கலாம்னு..." - என்றவளின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பிரியங்கா. அவளது உடல் குலுங்க... பதறினாள் திலோத்தமா.

"பிரியா! என்ன ஆச்சு? ஏன் அழறே?"

"திலோ! நீ இத்தனை நல்லவளா? உனக்கு நான் எவ்வளவோ கெடுதல் பண்ணியும் நீ என்னைப் பார்க்கணும்னு நினைச்சிருக்கியே... உன்னைப் போய்க் காயப்படுத்தியிருக்கேனே... எனக்கு மன்னிப்பே கிடையாது.

"உன் பக்கத்தில நிற்கிற அருகதையே கிடையாது. நான் பாவி. மோசமான கொடும்பாவி. அதான் இந்த மாதிரி வியாதியெல்லாம் வந்திருக்கு. நீ நல்லவ திலோ! நீ ரொம்ப



நல்லவ. நான்தான் பாவி!" - முகத்தில் அறைந்து கொண்டு அழுதவளைப் பதறித் தடுத்தான் ரஞ்சித்குமார்.

"பிரியா! என்ன பண்றே நீ...? நீ அழக்கூடாது. நெர்வெஸ் ஆகக் கூடாது. அமைதியா இரு!"

"முடியலைண்ணா! நான் எவ்வளவு கேவலமான ஜென்மம்னு எனக்கு இப்பத்தான் புரியுது. எனக்கு எப்படி அமைதி கிடைக்கும்?"

"பிரியா... நடந்ததை நினைச்சு..."

"ஸார்! ஒரு நிமிஷம். பிரியா! இப்ப எதுக்காக அழறே நீ?"

"தி... திலோ! நான்... நான்..."

"ம்... சொல்லு. ஏன் அழறே?"

"நான் தப்புப் பண்ணியிருக்கேன் திலோ! உனக்கு நிறையப் பாவம் பண்ணியிருக்கேன்."

"செய்தது தப்புன்னு உணர்ந்தாலே போதும் பிரியா. இப்படி அழுது உன் உடம்பைக் கெடுத்துக்காதே."

"திலோ!"

"ஏன் வெளியே நின்னு பேசணும்... முதல்ல உள்ளே வாங்க. நீங்களும் வாங்க. அம்மா வரலையா?"

"அம்மாவையும் கூப்பிட்டோம். அம்மாதான் இந்த மாதிரி இடங்களுக்கு நான் வரக்கூடாதுப்பா. முதல்ல நீங்க போயிட்டு வாங்கன்னு சொன்னாங்க." - ரஞ்சித் இயல்பாகச் சொல்ல... திலோத்தமாவின் முகம் மாறியது.

"என்ன?"

"ஏன் திலோ?"

"உள்ளே வாங்க. பேசலாம்..." - என்றவாறு வீட்டிற்குள் நுழைந்து கொண்டே தாயை அழைத்தாள்.

"அம்மா... அப்பா... அவங்க வந்திட்டாங்க!" - மகளின் உற்சாகமான குரலில் கணவருக்கு மாத்திரை கொடுத்துக் கொண்டிருந்த சகுந்தலா ஆவலாய்த் திரும்பினாள்.

அவளது கண்ணில் முதலில் பட்டது ரஞ்சித்குமார். உயரமாய்க் கம்பீரமாய் இனிமையான புன்னகையோடு நின்று கொண்டிருந்தவனைப் பார்த்ததும்... மனநிறைவோடு சிரித்து வரவேற்றாள். இதுவா மாப்பிள்ளை? எத்தனை அழகு! இவர் என் மகளுக்கென்றே பிறந்தது போல எத்தனை பொருத்தம்!

மாப்பிள்ளையைப் பாராமலே அவ்வளவு தயங்கினோமே...! நல்ல வேளையாய் ஒரேயடியாய் மறுக்கவில்லை. அவசரமாய் நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

"வாங்க! உட்காருங்க."

ரஞ்சித்குமார் கைகளைக் கூப்பி வணங்கினான். "வணக்கம்மா... எப்படி இருக்கீங்க?"

"ம்... நல்லா... இருக்கோம். உட்காருங்க."

"இருக்கட்டும் சார். உங்க உடம்பு பரவாயில்லையா?" - என்றவாறு கட்டிலை நெருங்கி ராகவனிடம் விசாரிக்க... அவர் குழப்பமான முகத்துடன் தலையசைத்தார்.

"ம்... இப்ப பரவாயில்லைப்பா!"



"டாக்டர் என்ன சொல்றார்? தினமும் வந்து பாக்கிறாரா?"

"வந்திடுவார். சீக்கிரமே குணமாக்கிடலாம்னு சொல்றார்."

"டாக்டர் பிரகாஷ் ரொம்ப டேலண்ட்டானவர். எப்படிப்பட்ட நோயையும் குணப்படுத்திடுவார்." - அவன் இயல்பாய்ச் சொல்ல...

ராகவனின் குழப்பம் அதிகரித்தது. இவரை எங்கோ பார்த்திருக்கிறோமே...? எங்கே? புருவம் சுருக்கி யோசித்தார்.

"அட! ரஞ்சித் ஸார்..." - குளித்து விட்டு ஈரத் தலையோடு வந்த விஷ்ணு வியந்தான்.

"ஹாய் விஷ்ணு! ஹவ் ஆர் யூ?"

"ஃபைன் ஸார். ஸார்... நீங்களா மாப்பிள்ளை? அக்கா! நீ என்கிட்ட சொல்லவே இல்லையே?"

"டேய்! இதெல்லாம் அப்பா ஏற்பாடு. எனக் கொண்ணும் தெரியாது..." - என்றவாறு தாயின் பின்னே மறைந்து கொண்டாள்.

"நேற்று அவ்வளவு நேரம் ஆர்க்யூமெண்ட் பண்ணீங்களே... யாராவது மாப்பிள்ளையோட பேரைச் சொன்னீங்களா?"

"சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பியாம்?"

"வீட்டையே தலைகீழா மாத்தியிருப்பேன். என் ஃபிரண்ட்ஸ் எல்லாரையும் கூட்டிட்டு வந்து அட்டகாசமா டெகரேட் பண்ணியிருப்பேன்."

"விஷ்ணு! அதை யெல்லாம் நிச்சயதார்த்தம் அன்னிக்குப் பண்ணிக்கலாம். இன்னிக்கு நாங்க... ஜஸ்ட் பேசிட்டு மன்னிப்புக் கேட்டுட்டுப் போகலாம்னு வந்தோம்."

ராகவன் இன்னும் குழம்பிக் கொண்டே இருக்க... சகுந்தலாவின் முகம் லேசாய் மாறியது. "மன்னிப்பா? எதுக்கு?"

"திலோ! அம்மாகிட்ட எதுவும் சொல்லலையா?"

"ம்ஹும்."

"சரி! நாங்களே சொல்லிடுறோம். பிரியா!" - என்றவாறு தன் பின்னே திரும்பியவன் தங்கையைக் காணாமல் திடுக்கிட்டான்.

"பிரியா!" - அழைத்தவாறே வாசலை அடைய... பிரியங்கா தயங்கியவாறே வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

"என்ன பிரியா? இவ்வளவு தூரம் வந்திட்டு வாசல்லயே நின்னா எப்படி? உள்ளே வாம்மா. நான் இருக்கேனில்ல... வா!" - என்றவாறு தங்கையை உள்ளே அழைத்து வர, திலோத்தமாவைத் தவிர அனைவரின் முகமும் மாறியது. சகுந்தலாவின் முகம் பயத்தில் வெளிற... ராகவனின் குழப்பம் தெளிந்தது.

அட! இவன் அன்று திலோத்தமாவின் கல்லூரி விழாவில் தலைமை தாங்கியவன் ஆயிற்றே! இது இவன் தங்கையா! இங்கே எதற்காக வந்திருக்கிறார்கள்? திகைப்பாய் மகளை நோக்க... முகம் முழுக்க வெட்கப் புன்னகையோடு நின்று கொண்டிருந்தாள் திலோத்தமா.



உடலும் உள்ளமும் பதற... அவசரமாய் எழ முயற்சித்தார் ராகவன். அந்தப் பதட்டத்திலும் திகைப் பிலும் கணவனின் அசைவைக் கண்டு ஓடி... அவரைப் பற்றிக் கொண்டாள் சகுந்தலா.

"பதறாதீங்க! இப்படிச் சாய்ந்து உட்காருங்க."

"சகுந்தலா! இ... இந்தப் பொண்ணு... திரும்பவும் எதுக்காக இங்கே வந்திருக்கா? இன்னும் என்ன செய்யலாம்னு வந்திருக்கா?"

"எனக்கும் தெரியலைங்க. நீங்க அமைதியா இருங்க. நான் கேட்கிறேன்..." - என்றவள் கணவனைத் தலையணையில் சாய்த்து அமர வைத்துவிட்டு ரஞ்சித் குமாரை நெருங்கினாள்.

"தம்பி! இவளை எதுக்காகக் கூட்டிட்டு வந்தீங்க? இவ உங்களுக்கு உறவா? யார் இவ?"

"அம்மா! இவ என்னோட தங்கை பிரியங்கா!" - என்றான் ரஞ்சித்.

"எ...ன்...ன?" - இடியை நேரிடையாய்த் தலையில் வாங்கியது போல் அதிர்ந்தாள் சகுந்தலா. கண்கள் திகைப்பாய்ப் பிரியங்காவைப் பார்க்க... அவள் கண்களில் நீரோடு தலைகுனிந்து நின்றிருந்தாள். சகுந்தலாவின் முகம் இறுகியது.

"அப்போ... நீதான் இவ அண்ணனா?" - மரியாதை தேய்ந்தது.

"ம்... ஆமாம்மா."

"அன்னிக்கு இவ சொன்னாளே... எல்லாம் என் அண்ணன் சொல்லித்தான் செய்யுறேன்னு... அந்த அண்ணன் நீதானா?"

"அம்மா... அது வந்து..." - எனத் தொடங்கிய திலோத்தமாவைப் பார்வையால் அடக்கினாள் சகுந்தலா. "உள்ளே போ..."

"அம்மா! ப்ளீஸ்... நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா..."

"வாயை மூடடி. இவன் யாருன்னு தெரிஞ்சுதான் நேத்து இவனுக்காக வக்காலத்து வாங்கினியா? வார்த்தைக்கு வார்த்தை நல்லவன்னு சொன்னியே... இந்த நல்லவனாலதான் நாம இன்னிக்கு இப்படி நிற்கிறோம். அது மறந்து போச்சா உனக்கு?"

விஷ்ணுவும் ராகவனும் உறைந்து போய் நிற்க... சகுந்தலா அதே சீற்றத்தோடு வந்தவர்களை நோக்கித் திரும்பினாள்.

"என்னடியம்மா! இன்னிக்கு என்ன பண்ணலாம்னு உன் அண்ணனையும் கையோட கூட்டிட்டு வந்தே? அரைகுறை உசுரோட இருக்கிறவங்களை ஒரேயடியா அனுப்பிடலாம்னு வந்தியாக்கும்."

கண்ணீரோடு நிமிர்ந்தாள் பிரியங்கா. "இல்லம்மா... நான் செய்தது பெரிய பாவம். அதுக்காக மன்னிப்புக் கேட்கலாம்னு..."

"என்ன? மன்னிப்பா? உனக்கா? நீ செய்த காரியத்திற்கு அந்த ஆண்டவனே உன்னை மன்னிக்க மாட்டான்."



"தெரியும்மா! அந்த ஆண்டவன் என்னை மன்னிக்கல. மன்னிக்கவும் மாட்டார். ஆன உங்க கால்ல விழுந்து கண்ணீர் விட்டால் என் பாவம் குறையுமேன்னு வந்தேன்!" - எனப் பிரியங்கா குனிய, அவசரமாய்ப் பின்னால் நகர்ந்தாள் சகுந்தலா.

"உனக்குப் பாவம் குறையும்ன்னு எங்களுக்குப் பாவத்தைக் கூட்டிடாதே. உன் முகத்தில விழிக்கிறதே பாவம். வெளியே போ. போயிடுங்க ரெண்டு பேரும்!"

"அம்மா!"

"நீ பேசாதே! வாயை மூடிட்டு உள்ளே போ."

"அம்மா! ஆத்திரப்படாம நான் சொல்றதைக் கேளுங்கம்மா. அவங்க எதுக்காக வந்திருக்காங்கன்னு..."

"தெரியுமே! நம்மையெல்லாம் பார்த்து சந்தோஷப்பட வந்திருப்பா. அன்னிக்கு உன் அப்பா மயங்கி விழுந்தப்பக்கூட இவ முகத்தில நான் சந்தோஷத்தைத் தான்டி பார்த்தேன். எவ்வளவு கல் நெஞ்சக்காரியா இருந்தாலும் ஒருத்தி அப்படிச் சந்தோஷப்பட மாட்டாள். இவ ஒரு அரக்கி. பிணந்தின்னும் கழுகு. இவளை வீட்டுக்குள்ள விட்டதே பெரிய பாவம். வெளியே போன்னு சொன்னேனே... போடி!" - பிரியங்காவின் தோளைப் பற்றி வெளியே தள்ள முயற்சித்த அன்னையைப் பற்றிக் கொண்டாள் திலோத்தமா.

"அம்மா! என்ன காரியம் பண்றீங்க? வீட்டுக்கு வந்தவங்ககிட்ட இப்படியா நடந்துக்கிறது? அவ ஏற்கெனவே உடம்பு முடியாம இருக்கா!"

"ஏன்? அவளுக்கென்ன கேடு? குத்துக்கல்லாட்டம் வந்து நிற்கிறாளே! ராசாவாட்டம் நடமாடிட்டு இருந்த எம்புருஷனை இப்படி சாய்ச்சுட்டாளேடி. இன்னும் என்ன பாக்கியிருக்குன்னு இங்கே வந்திருக்கா? என் வயிறு பத்தி எரியுதுடி."

ரஞ்சித் குமார் பதறினான். "வேண்டாம்மா! எதையாவது சொல்லிடாதீங்க. என் தங்கை ஏற்கெனவே சாவோட போராடிட்டு இருக்கா. இதுல உங்க சாபமும் சேர்ந்திட்டா அதை அவளால தாங்க முடியாது." - கண்கள் கசிய அவன் சொன்னதும், அனைவரும் திடுக்கிட்டனர்.

சகுந்தலா அதிர்ச்சியாய் அவனைப் பார்க்க, கண்ணீரோடு தலையசைத்தான். "ஆமாம்மா... என் தங்கை... இன்னும் கொஞ்ச நாள்தான் வாழப் போறா. அதுக்குள்ள செய்த பாவத்துக்கு மன்னிப்புக் கேட்கலாம்னுதான் என்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாள். மத்தப்படி நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை."

சகுந்தலா இன்னும் திகைத்து நிற்க, திலோத்தமா எல்லாவற்றையும் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தாள். விஷ்ணுவின் கண்களில் இரக்கம் தோன்ற, ராகவன் பேச இயலாமல் உறைந்திருக்க, சகுந்தலா சிலையாய் நின்றாள்.

பிரியங்கா கண்ணீரோடு கட்டிலை நெருங்கி ராகவனின் கால்களைப் பற்றிக் கொண்டாள். பதறியவரின் கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"மன்னிச்சிடுங்கப்பா... பெரிய தப்பு பண்ணிட்டேன். பணத் திமிர்ல எனக்கு இருந்த அகம்பாவத்தில ரொம்பக் கொடுமையா நடந்துக்கிட்டேன். திலோ எப்பவும் என்னைவிட



அதிக மார்க் வாங்குவா. காலேஜ்ல என்னை விட அவளைத்தான் எல்லா டீச்சர்ஸுக்கும் பிடிக்கும். அதனால எப்பவுமே அவளை எனக்குப் பிடிக்காமல் போச்சு!

"எப்ப சான்ஸ் கிடைச்சாலும் அவளை அவமானப்படுத்த ஆரம்பிச்சேன். அதில ஏற்பட்ட ஒரு சின்னப் பிரச்சனைதான் என்னை இத்தனை கொடுமையானவளா மாத்திடுச்சு. நான் அவளைப் பழிவாங்கணும்னு நினைச்சுத்தான் இப்படிக் கீழ்த்தரமா நடந்துக்கிட்டேன்.

"ஆனா... நான் செய்தது எல்லாமே பெரிய பாவம். அதனாலதான் அந்தக் கடவுள் அதுக்கான தண்டனையை எனக்குத் தந்திட்டாரு. நிறையத் தண்டிச்சிட்டார். என் ஆட்டத்தை அடங்க வெச்சிட்டார். சீக்கிரமே அடங்கிப் போயிடுவேன்."

ராகவன் பதறினார். "அப்படியெல்லாம் பேசாதம்மா!"

"இல்லப்பா! தப்பு செய்தா தண்டனையை அனுபவிக்கணும். நானும் அதுக்குத் தயாராகிட்டேன். திலோ நல்லவ. அவளுக்கு உங்களை மாதிரியே ரொம்ப நல்ல மனசு. என்னை மன்னித்து விட்டாள். அதே மாதிரி நீங்களும் என்னை மன்னிக்கணும்."

"முதல்ல எழுந்திரும்மா. காலை விடு."

"என்னாலதானேப்பா உங்களுக்கு இந்த நிலமை. நான்தானே உங்க கை காலை முடக்கிட்டேன். எனக்கு எந்தப் பிறவியிலும் விமோசனமே கிடையாது." - மீண்டும் குலுங்கி அழுதாள். திலோத்தமாவும் ரஞ்சித்தும் பிரியங்காவைத் தொட்டனர்.

"பிரியா! எழுந்திரு பிரியா! அழாதே. உன் உடம்புக்கு ஆகாது."

"திலோ! அப்பாகிட்ட சொல்லு திலோ. என்னை மன்னிக்கச் சொல்லு. உன் அப்பாவை இப்படி முடக்கிப் போட்டேன் நான். கடவுள் என் அப்பாவை முழுசாப் பறிச்சிட்டார். நீ பரிட்சை எழுதக்கூடாதுன்னு நினைச்சேன். இப்போ என்னால காலேஜ் வாசலுக்குக்கூட வர முடியல...

"உங்க அம்மா உங்களை யெல்லாம் பார்த்துக் கண்ணீர் விட்ட மாதிரி இன்னிக்கு என் அம்மா என்னைப் பார்த்துத் துடிக்கிறாங்க. நான் உனக்குச் செய்த எல்லாத் துன்பத்துக்கும் எனக்குத் தண்டனை கிடைச்சிடுச்சு.

"இப்ப எனக்குத் தேவை உங்க எல்லாருடைய மன்னிப்புந்தான். என்னை மன்னிச்சிட்டீங்களா? மன்னிச்சிட்டேன்னு ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்க திலோ!" - தொடர்ந்து பேசியதில் பிரியங்காவிற்கு மூச்சு வாங்கியது. அவள் மூச்சுக்குத் திணறுவதை உணர்ந்து ராகவன் பதறினார்.

"சகுந்தலா! இந்தக் குழந்தையை எழுப்பி உட்கார வையேன். பாரு... மூச்சுத் திணறுது!" - கணவர் சொன்னதும்தான் உயிர் பெற்றாள் சகுந்தலா. சட்டென நகர்ந்து வந்து பிரியங்காவின் தோள் பற்றி எழுப்பினாள். ஃபேன் காற்றுப் படும் இடத்தில் அமர வைத்தாள்.

இன்னும் தேம்பிக் கொண்டிருந்தவளைத் தன் புடவைத் தலைப்பால் முகம் துடைத்து விட்டாள். பதட்டமாய் நின்று கொண்டிருந்த மகளை அழைத்தாள்.



"திலோ! அடுப்பில சூடா பால் இருக்கும். கொஞ்சம் ஹார்லிக்ஸ் கலந்து எடுத்திட்டு வா."

"இதோம்மா!" - திலோத்தமா உள்ளே ஓட... அண்ணனும் தங்கையும் உடைந்து போயினர். இதுதான் தாய்மையா? இதுதான் மனிதாபிமானமா? தன் குடும்பத்தையே நிலை குலைய வைத்தவள் இன்று மூச்சுக்குத் திணறியதும்... எத்தனை இயல்பாய் அணைத்துக் கொள்கின்றனர். இதுதான் அன்பு. இதுதான் கருணை.

இது இவர்களுடனே பிறக்கிறது... ஏற்றத் தாழ்வு பார்த்து வருவதில்லை. ஒரு உயிர் துடிப்பதைக் கண்டு... மனம் வருந்துவதைக் கண்டு தானும் துடிப்பது எத்தனை பெரிய மனம்! தன்னால்தான் இவர்களுடன் வாழ முடியாது.

ஆனால் தன் அண்ணனாவது இவர்களுடைய அன்பில் வாழ வேண்டும். திலோ தன் அண்ணியாய் வர வேண்டும். இவர்களுடன் கொஞ்ச காலமாவது மன நிறைவோடு வாழ வேண்டும். சம்மதிப்பார்களா? அண்ணனை இவர்களுக்குப் பிடித்திருக்கிறது. திலோவிற்கும் பிடித்திருக்கிறது. நிச்சயமாய்ச் சம்மதிப்பார்கள்.

சம்மதிக்க வைக்க வேண்டும். அண்ணன் சந்தோஷமாய் வாழ்வதைப் பார்க்க வேண்டும். திலோத்தமா சூடான பானத்தோடு வர, அதை வாங்கிப் பிரியங்காவிற்குப் புகட்டினாள் சகுந்தலா. மறுக்காமல் குடித்தாள்.

கலங்கிய கண்களை மீண்டும் துடைத்து விட்டாள். "அழாதேம்மா... உனக்கு ஒன்றும் ஆகாது."

"அம்மா!"

"சின்னப் புள்ளைங்க ஏதோ தெரியாமச் செய்யுற தப்புக்கெல்லாம் சாமி பெரிய தண்டனை கொடுக்காதும்மா. இது சாதாரண வியாதியாத்தான் இருக்கும். நமக்குக் கெடு வைக்க டாக்டர் யாரு? நீ எதைப் பத்தியும் கவலைப்படாம பயப்படாமத் தைரியமா இரு. நல்லா சாப்பிட்டுட்டு உற்சாகமா இரும்மா. உனக்கு எதுவும் ஆகாது. எல்லாம் தானே சரியாகிவிடும். நம்பிக்கையோட இரும்மா."

பிரியங்கா புன்னகைத்தாள். "என்னை மன்னிச்சிட்டீங்களாம்மா?"

"எனக்குச் சொல்லத் தெரியலம்மா. ஆனா உம் மேல எந்தக் கோபமும் இல்ல. சின்னப் பொண்ணுதானே! விடு... வேற கதை பேசுவோம். உங்க அம்மா எப்படி இருக்காங்க?"

"ம்... இருக்காங்கம்மா. அப்பா போனதுல பாதி உசுரு போயிடுச்சு. இப்ப என்னைப் பார்த்து அழுதிட்டு இருக்காங்க. வீட்டை விட்டு வெளியே வர்றதே இல்ல. இன்னிக்குக் கூட கூப்பிட்டோம். நல்ல விஷயம் பேசும்போது நான் எதுக்குன்னு சொல்லிட்டாங்க. அதனாலதான் நாங்க மட்டும் வந்தோம்." - சகுந்தலாவும் திலோத்தமாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னம்மா இப்படிச் சொல்ற? உங்கம்மா உங்ககிட்ட எதுவும் சொல்லலையா?" - சகுந்தலா கேட்க, பிரியங்கா குழம்பினாள்.

"என்ன கேட்கிறீங்க? அம்மா எதுவும் சொல்லலையே!"



"தம்பி! நேற்றே உங்க அம்மா வந்து உங்களுக்கு எங்க திலோவைப் பேசி முடிச்சி வெத்தலை பாக்கு மாத்திட்டுப் போயிட்டாங்களே!"

"என்ன?" - இருவரும் திகைத்தனர். ராகவன் அவசரமாய்க் குரல் கொடுத்தார்.

"சகுந்தலா!"

"என்னங்க! இவங்ககிட்ட அவங்க அம்மா சொல்லல போலிருக்கே!"

"அம்மா! எங்க அம்மாவா வந்தாங்க? அப்பா இறந்த பிறகு அம்மா எங்கேயும் போறதில்லையே!" - ரஞ்சித் குழப்பமாய்க் கேட்டான்.

"தம்பி! நேற்று வந்தது உங்க அம்மா இல்லப்பா!" - ராகவன் குரல் கொடுக்க, திலோத்தமா பலமாய் அதிர்ந்தாள்.

"அ...ப்...பா...! எ... என்ன சொல்றீங்க?"

"ஆமாம்மா! நேற்று வந்தது ஜெயபால் சாரோட மனைவி. அவங்க புள்ள திவாகருக்கு உன்னைப் பெண் கேட்டு வந்தாங்க."

"எ...ன்...ன...?" - திகைப்பாய் ரஞ்சித் குமாரைப் பார்க்க, அவனும் திடுக்கிட்டான்.

"என்ன சார் சொல்றீங்க?"

"ஆமா தம்பி! நேற்று அந்த அம்மா வந்திருந்தாங்க. தன்னோட புள்ளைக்கு என் மகளைக் கட்டிக் கொடுக்கக் கேட்டாங்க. நானும் வேறு வழியில்லாம வெத்தலை பாக்கு மாத்திட்டேன்."

"அப்பா...!" - வீறிட்டாள் திலோத்தமா. கண்களில் நீர் பெருகிற்று. தாயின் உள்ளம் பதறியது.

"திலோ! என்னடா இது? எனக்கு எதுவும் புரியலையே!"

"அம்மா! நான் இவரைத்தான் சொல்றீங்கன்னு சம்மதிச்சேம்மா! எனக்கு... எனக்கு வேற யாரையும் பிடிக்காதுப்பா. எனக்குக் கல்யாணமே வேண்டாம். நிறுத் திடுங்க. எனக்கு எதுவுமே வேண்டாம்."

"அம்மாடி! ராஜாத்தி!" - பதட்டமாய் எழ முயன்றவரைத் தடுத்தான் ரஞ்சித்.

"ப்ளீஸ் ஸார்... பதறாதீங்க. திலோ! பயப்படாதே! இது நடக்காது. திவாகர் இதுக்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டான்."

"எப்படிச் சொல்றீங்க?"

"திவாகருக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆயிடுச்சு. ரிஜிஸ்தர் மேரேஜ். நான்தான் சாட்சிக் கையெழுத்துப் போட்டேன்." - ரஞ்சித் சொல்ல, அனைவருமே திடுக் கிட்டனர். திலோத்தமாவின் முகத்தில் மட்டும் நிம்மதி படர்ந்தது.

## 27

நீ என்னைச் சேர்ந்திடும் வரையில்
இதயத்தில் சுவாசங்கள் இல்லை
நீ வந்து தங்கிய நெஞ்சில்
யாருக்கும் இடமே இல்லை!

மனம் முழுக்க உற்சாகத்தோடு வீட்டிற்குள் நுழைந்தவனைப் புன்னகையோடு எதிர் கொண்டாள் ஆனந்தபுஷ்பம்.



"திவா! பார்த்திட்டியா... பேசினியா?"

"பார்த்தேம்மா... கவிதை வந்த புக்கையும் கொடுத்தேன். ரொம்ப சந்தோஷப்பட்டாள்."

"இருக்காதா பின்னே? சரி... சரி. உள்ளே வா. அப்பா வந்தாச்சி. அப்பாகிட்டயும் சொல்லு. வா..." - தாயின் உற்சாகம் தனக்கும் தொற்றிக் கொள்ள... திவாகர் தாயைப் பின் தொடர்ந்தான்.

ஜெயபால் சட்டையை மாட்டிக் கொண்டே எதிரே வந்தார்.

"என்னாங்க! அதுக்குள்ள வெளியே கிளம்பிட்டீங்க?"

"கம்பெனிக்குப் போறேன். எல்லா வேலையும் அப்படியே கிடக்குமே!"

"அதையெல்லாம் திவா பார்த்திட்டுத்தான் இருந்தான். நீங்க முதல்ல உட்காருங்க. உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"என்ன? திவா கம்பெனிக்குப் போனானா?" - வியப்பாய்க் கேட்டார்.

"ஆமாம்ப்பா! ரெண்டு நாளா போயிட்டு இருக்கேன். இனிமே கரெக்ட்டா வர்றேம்ப்பா..." - என்ற மகனை நம்ப முடியாமல் பார்த்தார் ஜெயபால்.

"திவா! நீயா பேசுற? என்னடா இது மாயம்?"

"அவனா பேசலைங்க. எல்லாம் அவ செய்த மாயம்!"

"எவ?"

"அதாங்க... அந்த ராகவனோட பொண்ணு."

"ஆனந்தா! நான் ஏற்கெனவே உன்கிட்ட சொல்லியிருக்கேன். நீயா எதையாவது கற்பனை பண்ணிக்கிட்டு உளறாதேன்னு..."

"அம்மாவைக் கோவிக்காதீங்கப்பா. அம்மா சொல்றது உண்மை."

"திவா!"

"ஆமாம்ப்பா. திடீர்னு ஒரு நாள் வந்து என் கண் முன்னால நின்னா. என்னைப் பார்த்துக் கவிதை எழுது. எழுதிட்டே இரு. முன்னேறுவேன்னு சொன்னாள். நானும் எழுதினேன். அந்தக் கவிதை இன்னிக்குப் புக்ல பிரசுரமாகியிருக்கு."

"அப்படியா?"

"ஆமாம்ப்பா. இப்பக்கூட அவளைப் பார்த்துப் பேசிட்டுத்தான் வர்றேன். ரொம்ப சந்தோஷப்பட்டா. என்னை இன்னும் நிறைய எழுதுன்னு சொன்னாள்."

"எழுதுப்பா. நான் அன்னிக்கு ஒரு நாள் உன்னைப் பத்திச் சொல்லி வருத்தப்பட்டேன். அதை மனசில வெச்சிட்டு உன்னைப் பார்த்ததும் சொல்லியிருப்பாள்."

"ஆமாம்ப்பா. எனக்கு என்னவோ இது திடீர்னு நடந்த மாதிரி தோணலை?"

"பின்னே?"

"கடவுளே அவ உருவில வந்து எனக்கு அருள்வாக்கு சொன்ன மாதிரி இருந்ததுப்பா. ராகவன் ஸார் மாதிரியே அவரோட பொண்ணுக்கும் நல்ல மனசுப்பா."



"அதனாலதான் அந்தப் பொண்ணையே நம்ம வீட்லயே வெச்சுக்கலாம்னு போய்ப் பேசி முடிச்சிட்டு வந்திருக்கேன்... நான்!" - என்ற தாயைக் குழப்பமாய் ஏறிட்டான்.

"அம்மா!"

"ஆமா திவா! ஒரு நாள்தான் அந்தப் பெண்ணைப் பார்த்தாய். உடனே பெட்டிப் பாம்பா அடங்கிட்டியே... காலம் பூரா அவகூட வாழ்ந்தா..."

"அம்மா...?" - அதட்டினான் திவாகர்.

"ஏன்டா! உனக்கு அவளைப் பிடிக்கலையா?"

"பிடிச்சிருக்கு. அவ சொன்ன அறிவுரைகள் பிடிச்சிருக்கு. என்னைத் தட்டிக் கொடுத்த விதம் பிடிச்சிருக்கு. அதுக்காக நீங்க ஏதாவது ஏடாகூடமா பண்ணி வைக்காதீங்க."

"திவா! நான் உனக்குக் கெடுதல் பண்ணுவேனாடா... எல்லாம் நல்லபடியா பேசி முடிச்சிட்டேன்டா. பொண்ணு வீட்ல எல்லாருக்கும் சம்மதம்தான். அப்பா ஊரில இருந்து வந்ததும் நாள் குறிச்சிடலாம்னு சொல்லி..."

"அம்மா! உங்களை யார் இதையெல்லாம் செய்யச் சொன்னது?"

"ஏன்டா?"

"என்ன ஏன்டா! ஏம்மா... ஒரு நாள் பார்த்துப் பேசினதும் இப்படிக் கல்யாணம் வரைக்கும் போயிடுறதா? நான்சென்ஸ்!"

"திவா?"

"என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டீங்களா? இப்படி நீங்களா முடிவெடுத்துதான் என்னோட லைஃப்பே மாறிப் போச்சு. இப்பத்தான் என்னோட தவறுகளை உணர்ந்து ஒழுங்கா இருக்கணும்னு நினைக்கிறேன். அதையும் கெடுத்துடாதீங்க."

ஜெயபால் கோபமாய் மனைவியின் புறம் திரும்பினார்.

"உனக்கு ஏன் இவ்வளவு அவசரம்? நான்தான் பொறுமையாய்ப் பார்க்கலாம் என்றேனே... யாரைக் கேட்டு நீ போய்ப் பேசினாய்?"

"நீங்கபாட்டுக்கு உங்க தங்கச்சி வீட்டில போய் உட்கார்ந்திட்டீங்க. நான்தான் நாள் நல்லா இருக்குதேன்னு போய்ப் பேசினேன். ராகவனும் ஒத்துக்கிட்டார்."

"அவர் ஒத்துக்கிட்டு இருக்க மாட்டார். நீதான் எதையாவது சொல்லி ஒத்துக்க வெச்சிருப்ப!"

"ஆமாம். அப்படியேதான் இருக்கட்டுமே... எனக்கு என் புள்ளை கல்யாணம் முக்கியம். அதுக்காகப் பேசினேன் தான்."

"அம்மா! இப்ப நான் உன்கிட்ட கல்யாணம் பண்ணி வையுன்னு கேட்டேனா?"

"புள்ளைங்க கேட்டா கல்யாணம் பண்ணுவாங்க?"

"ம்... இதெல்லாம் பேசத் தெரியுறது. ஆனா என்கிட்ட ஒரு வார்த்தையாவது கேட்க வேண்டாமா?"



"சரிடா. இப்பக் கேட்கிறேன். கல்யாணம் பண்ணிக்கிறியா?"

"வேண்டாம்."

"ஏன்... ஏன் வேண்டாம்?"

"வேண்டாம்னா வேண்டாம்!" - என்றான் கடுப்பாய்.

"டேய்! வயசு முப்பதைத் தாண்டியாச்சு. இந்த வயசில கல்யாணம் பண்ணிக்காம ஐம்பது வயசுலயா பண்ணிப்ப?"

"சொன்னாக் கேளுங்கம்மா. சும்மா என்னை டார்ச்சர் பண்ணாதீங்க..." - என்றவாறே வீட்டிற்கு வெளியே செல்ல முயன்றவனின் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

"நில்லுடா! என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டுப் போ."

"என்ன?"

"ஏன் கல்யாணம் வேண்டாம்னு சொல்ற?"

"என் கேள்விக்கு நீங்க பதில் சொல்வீங்களா?"

"என்னடா கேட்கப் போற?"

"இத்தனை வருஷமா இல்லாம... இப்ப என்ன திடீர்னு கல்யாணப் பேச்சு?" - மகனின் கேள்வியில் ஒரு கணம் தடுமாறினாள்.

"பதில் சொல்லுங்கம்மா!"

"என்னத்தைச் சொல்றது? நீ என்ன புள்ளை மாதிரியா நடந்துக்கிட்ட? ஊர்ல உள்ளவன் எல்லாம் உன்னை ரௌடின்னு சொல்ற மாதிரிதானே இருந்தே?"

"அப்போ... இப்பவும் அப்படியே இருந்தா கல்யாணப் பேச்சு வந்திருக்காது?"

"ஏன்டா... இப்படிக் குதர்க்கமா பேசற? அப்படியே இருந்தா எவன் பொண்ணு கொடுப்பான்? எந்தப் பொண்ணு உனக்குக் கழுத்தை நீட்டுவா?"

"நீட்டினாம்மா... என்னை அந்த நிலையிலும் விரும்பி என்னை நம்பி ஒருத்தி கழுத்தை நீட்டினாள். நான் அவளைக் கல்யாணமும் பண்ணிக்கிட்டேன்."

தாய் தந்தை இருவரும் அதிர்ந்து நிற்க... தந்தையை ஏறிட்டான் திவாகர்.

"ஸாரிப்பா! உங்களுக்கு எப்பவுமே என்னைப் பிடிக்காது. அதனாலதான் இதை உங்ககிட்ட சொல்லலை. அவ வீட்டிலயும் ரொம்பக் கஷ்டம். ஒரு இக்கட்டான சூழ்நிலையில நாங்க கல்யாணம் பண்ணிக்கிட்டோம். என்னை மன்னிச்சிடுங்கப்பா!"

ஜெயபால் மெல்ல அதிர்ச்சியில் இருந்து மீண்டார். "ஏன்டா! எனக்கு நீ ஒரே பிள்ளை. உன்னைப் பிடிக்காமல் போகுமா? ஏதோ கோபத்தில் சில சமயத்தில திட்டியிருப்பேன். நீ அதை மனசில வெச்சிட்டு... என்னை விட்டு விலகிப் போயிட்டியே...!"

"ஸாரிப்பா..."

"இந்த அப்பன்கிட்டதான் சொல்லலை. அம்மா கிட்டயாவது சொல்லியிருந்தா ஊரறிய ஜாம்ஜாமுன்னு கல்யாணத்தைப் பண்ணியிருக்கலாமே..."



"அம்மா ஒத்துக்கிட்டு இருக்க மாட்டாங்கப்பா. அவ கஷ்டப்பட்ட ஃபேமிலியில உள்ளவ."

"அதுக்காக? உன் மனைவி இந்த வீட்டு மருமகடா. இப்ப அந்தப் பொண்ணு எங்கே இருக்கா?"

"சாந்தி காலனியில ஒரு வீடு பார்த்து வெச்சிருக்கேன்ப்பா..."

"அடப்பாவி! இவ்வளவு பெரிய வீட்டை வெச்சிட்டு... சரி... போனதை விடு. போ... போய் அந்தப் பெண்ணை அழைச்சிட்டு வா!" - என்ற தந்தையை முகம் மலரப் பார்த்தான்.

"அப்பா!"

"போடா! வீட்டுக்குக் கூட்டிட்டு வா. ஆமா... எப்போ கல்யாணம் பண்ணீங்க?"

"ஏழெட்டு மாசம் ஆச்சுப்பா."

"என்னவோ குழந்தை குட்டி பெத்துட்டு வந்து சொல்லாம விட்டியே... போ... போய் மருமகளைக் கூட்டிட்டு வா. நீ என்னடி இப்படி நிற்கிற? உன் பிள்ளை சொன்னதைக் கேட்டியா இல்லையா?"

"கேட்டேன். காதுல விழுந்தது."

"வேற என்ன யோசனை?"

"நான் வேற இது எதுவும் தெரியாம... ராகவன்கிட்ட தாம்பூலம் மாத்திக்கிட்டேனே... இப்ப என்னங்க பண்றது?"

"என்ன... தாம்பூலம் மாத்திட்டியா?" - கோபமாய்க் கேட்டார்.

"இல்ல... சும்மா பேசலாம்னு போனேன். அவங்க சம்மதிச்சதும்..."

"வாயை மூடு. உனக்கு எல்லாத்திலேயும் அவசரம். உன் பிள்ளையும் உன்னை மாதிரியேதான் இருக்கான்."

"இப்ப இது ரொம்ப முக்கியம். நானே என்ன பண்றதுன்னு கலங்கிப் போய் நிற்கிறேன்."

"அப்பா! நான் வேணா ராகவன் சார்கிட்ட பேசட்டுமா?"

"வேண்டாம் திவா! இது உன் அம்மா பண்ணின கோளாறு. இதை நாங்கதான் பேசிச் சரி பண்ணணும். நீ சின்னப் பையன். நீ பேசினா அது மரியாதையா இருக்காது."

"இப்ப என்னப்பா பண்றது?"

"நீ போய் மருமகளை அழைச்சிட்டு வா. நானும் உன் அம்மாவும் போய் ராகவனைப் பார்த்து விஷயத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுட்டு வர்றோம். ராகவன் ஒண்ணும் முழு மனசோட சம்மதிச்சிருக்க மாட்டார். நான் பேசறேன்."

"என்னங்க... நானும் வரணுமா?"

"பின்னே? நீதானே பேசி முடிச்சாய். இப்ப நீதான் சரி செய்யணும்...."

"மருமக வரும்போது ஆரத்தி கரைக்க வேண்டாமா?"



"அதுக்குள்ள பேசிட்டு வந்திடலாம் வா. திவா! நீ கிளம்பு..."

தந்தை சொன்னதும் உற்சாகமாய்ப் புறப்பட்டான் திவாகர்.

இடிந்து போய் அமர்ந்திருந்த சகுந்தலாவை அசைத்தான் விஷ்ணு.

"அம்மா! என்னம்மா இது? வந்திருக்கிறவங்களுக்குச் சாப்பிட எதுவும் கொடுக்க வேண்டாமா?"

"ம்..."

"எழுந்திருங்கம்மா."

"விஷ்ணு! அவங்களை விடு..." - என்றவாறு சகுந்தலாவின் அருகே வந்து அமர்ந்தான் ரஞ்சித்குமார்.

"என்ன ஆன்ட்டி! என்னாச்சு?"

"இல்லை. என்னால... எதையும் நம்ப முடியலை."

"நான் சொன்னது எல்லாமே உண்மை ஆன்ட்டி. திவாகர் என்னோட காலேஜ் மேட். அப்ப இருந்தே நாங்க ஃபிரண்ட்ஸ்."

"அதில்லை தம்பி... புள்ளை கல்யாணம் பண்ணியிருக்கிறது தெரிஞ்சும் அந்த அம்மா எப்படி வந்து கல்யாணம் பேசினாங்க? அதுவும் அவ்வளவு அவசரமா தாம்பூலம் மாத்திட்டுப் போனாங்களே..."

"திவாகர் அம்மாவைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும் ஆன்ட்டி. அவங்க ரொம்ப நல்லவங்க.

அவங்களுக்குத் திவாகரோட மேரேஜ் விஷயம் தெரியாதுன்னு நினைக்கிறேன்."

"என்ன?"

"ஆமா! தெரிஞ்சிருந்தா இப்படிப் பேசியிருக்க மாட்டாங்க."

"இப்ப நீங்க மட்டும் சொல்லலைன்னா... நிலைமை என்ன ஆகியிருக்கும்? அந்தப் பையனும் என் பொண்ணு கழுத்தில தாலி கட்டிட்டா... ஐயோ!"

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் நடந்திருக்காது. மத்த விஷயத்தில திவா அப்படி இப்படி இருந்தாலும் பெண்கள் விஷயத்தில ரொம்ப நல்லவன். அதுவும் விரும்பிய பொண்ணையே கல்யாணம் பண்ணினவன்.

"அவன் எப்படி இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிப்பான்? திவாவோட கல்யாண விஷயம் எப்படி அவங்க அம்மாவுக்குத் தெரியாம இருந்ததோ... அதே மாதிரி இந்தக் கல்யாணப் பேச்சும் அவனுக்குத் தெரிஞ்சிருக்காது."

"அப்படியா சொல்ற அண்ணா?"

"ஆமாம் பிரியா. திவாகரைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். அவங்க அப்பா மேல உள்ள கோபத்திலதான் வீட்டுக்கு அடங்காம சுத்திட்டு இருக்கானே தவிர. இயல்பாகவே அவன் நல்லவன்தான்."

ராகவன் மகளைப் பார்த்தார். "திலோம்மா! நீ எப்போம்மா... அந்தப் புள்ளையைப் பார்த்தே? அந்த அம்மா ஏதேதோ சொன்னாங்களே...!"



"அப்பா... அன்னிக்கு ஜெயபால் ஸாரோட அம்மா படத்தை வரையப் போனேனில்ல... அன்னிக்குத்தான் பார்த்தேன். அவர் நல்லா கவிதை எழுதுவாராம். நான்தான் திரும்பவும் எழுதச் சொன்னேன்."

"உனக்கு ஏன்டி இந்த வேண்டாத வேலையெல்லாம்?" - சகுந்தலா கடிந்து கொண்டாள்.

"ஏம்மா! நான் என்ன தப்பு பண்ணிட்டேன்? ஸ்கூல்ல சேட்டை செய்யுற பிள்ளைங்களை அதட்டி உட்கார வைப்பாங்களே... நல்லா படிக்கிற பிள்ளை வீம்புக்காக அடம் பண்ணும்போது சமாதானம் செய்து படிக்க வைப்போமே... அதே மாதிரி ஒரு சாதாரண விஷயம்."

"உனக்குச் சாதாரண விஷயமா இருக்கலாம். ஆனா அவனுக்கு..."

"அம்மா! அவர் மனசுல எந்தத் தவறான எண்ணமும் இல்லைப்பா. நேற்று கூட தன்னோட கவிதை புக்ல வந்திருக்கிறதா சொல்லி ரொம்பச் சந்தோஷப்பட்டாரு. நான்கூட விஷ் பண்ணினேன்."

"அந்த அம்மாகூட சொன்னாங்களே... நான் இதைத்தான் சொன்னேன்."

"அதுக்கு முன்னால இவர்தான் வந்து பேசினாருப்பா. அதான் நான்..."

"என்னங்க! இப்ப என்ன பண்றது? அந்த அம்மா தாம்பூலம் மாத்திட்டுப் போயிட்டாங்களே!"

"நாங்க... உள்ளே வரலாமா?" - ஜெயபாலின் தயக்கமான குரலில் அனைவரின் பார்வையும் வாசலுக்குச் சென்றது.

"அடடே! முதலாளி... வாங்க முதலாளி! உள்ளே வாங்க. நீங்களும் வாங்கம்மா." - ராகவன் புன்னகை முகமாய் வரவேற்க... இருவரும் தயக்கமாய் உள்ளே நுழைந்தனர்.

"ஹலோ ஜெயபால் ஸார். வாங்க..."

"ரஞ்சித்! நீ எங்கேப்பா இங்கே?"

"நீங்க என்ன விஷயமா வந்தீங்களோ... அதே விஷயமாத்தான் நாங்களும் வந்திருக்கோம்!" - என்றாள் பிரியங்கா.

"என்னம்மா சொல்ற?"

"எங்க அண்ணனுக்குத் திலோவைப் பெண் கேட்டு வந்தோம். வந்த இடத்தில் உங்க கல்யாண விஷயம் கேள்விப்பட்டோம். திலோதான் எனக்கு அண்ணியா வரணும்னு ஆசைப்பட்டு வந்திருக்கோம்."

"ஸாரிம்மா... அது விஷயமாத்தான் இப்போ வந்திருக்கோம். ராகவா! முதல்ல என்னை மன்னிச்சிடுப்பா..."

"முதலாளி! இது என்ன பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?"

"என் மனைவி செய்த தவறுக்கு நீங்க எல்லாரும் என்னை மன்னிச்சிடுங்க. நான் வெளியூர் போயிருந்ததால



இப்படியெல்லாம் நடந்து போச்சு. திலோ! நீயும் என்னை மன்னிச்சிடும்மா."

"ஐயோ! என்ன ஸார் இது?"

"இப்பத்தான் என் புள்ளை எல்லா விஷயமும் சொன்னான். அவன் ஏற்கெனவே அவனுக்குப் புடிச்ச பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டானாம். எங்ககிட்ட அவன் இதுவரைக்கும் சொல்லவே இல்லை.

"அதான் என் மனைவி தெரியாம அவசரப்பட்டு சம்பந்தம் பேசிட்டா. நல்லவேளையா ஊரைக் கூட்டிச் செய்யாமல் விட்டாள். உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு எல்லாரும் மன்னிக்கணும்."

"பரவாயில்லை முதலாளி! தெரியாம நடந்ததை ஏன் பெரிசுபடுத்தணும்? முதல்ல உட்காருங்க. சகுந்தலா! குடிக்க ஏதாவது எடுத்திட்டு வா."

"வேண்டாம்மா. இருக்கட்டும். நாங்க அவசரமாக் கிளம்பணும்."

"காபி சாப்பிட்டுப் போங்களேன்."

"இல்லைம்மா! மருமகளைக் கூட்டிட்டு வரப் பையனை அனுப்பியிருக்கேன். அவங்க வரும்போது நாங்க வீட்டில இருக்கணும். இன்னொரு நாள் வர்றோம்."

"சரிங்க!"

"ராகவா! உடம்பைப் பார்த்துக்க. உன் உடம்பு எப்ப குணமாகுதோ... உடனே வேலைக்கு வந்திடு. உன் இடம் இன்னும் காலியாத்தான் இருக்கு."

"சரிங்க முதலாளி! ரொம்ப சந்தோஷம்."

"அம்மாடி! உனக்கு நான் ரொம்ப நன்றிக் கடன் பட்டிருக்கேன்ம்மா..."

"ஸார்!"

"அன்னிக்கு நீ எம்புள்ள கிட்ட ஏதோ பேசினியாமே... உன்னை அந்தக் கடவுளா நினைக்கிறான். உன் வார்த்தையை வேதவாக்கா மதிக்கிறான்."

"ஒருத்தருக்கு எந்தத் துறையில ஆர்வம் இருக்கோ அதில அவங்க சாதிக்க நாம ஊக்குவிக்கனும் ஸார். அதைத்தான் நான் செய்தேன். வேற எதுவும் பெரிசா செய்திடலை."

"எப்படியோம்மா... இனிமேலாவது அவன் பொறுப்பா இருந்தா சரி. இப்ப குடும்பஸ்தன் ஆகிட்டானே!"

"அதெல்லாம் அவனுக்கு எப்பவோ பொறுப்பு வந்திடுச்சி ஸார்... உங்ககிட்ட காட்டிக்காம இருந்தான். அவ்வளவுதான்!"

"ரஞ்சித்! என்னப்பா சொல்ற?"

"தனியே வீடு பார்த்து கட்டினவளை உட்கார வெச்சு அவளுக்கு மூணு வேளை சாப்பாடு கொடுத்தானே... அதுவே பொறுப்புதானே?"

"அவனுக்கு ஏது பணம்?"

"வேற ஏது? ஆன்ட்டிகிட்ட சண்டை போட்டு அப்பப்ப வாங்குறதுதான். இல்ல... ஆன்ட்டி?"



"ஓஹோ! இதுக்குத்தான் கொஞ்ச நாளா எப்பவும் பணம் கேட்டுட்டே இருந்தானா? வரட்டும் அவன்...!" - என்ற மனைவியை முறைத்தார் ஜெயபால்.

"அப்போ... நீதான் அவனுக்குத் திருட்டுத்தனமா காசு கொடுத்திட்டு இருந்தியா?"

"நம்ம புள்ளைக்குத்தானே கொடுத்தேன். வாங்க... புள்ளை வர்றதுக்குள்ளே வீட்டுக்குப் போவோம்."

"சரி... சரி. போனது போகட்டும். ராகவா! அப்போ நான் வரட்டுமா?"

"சரிங்க முதலாளி!"

"அப்புறம்... ஒரு சின்ன விஷயம்..."

"சொல்லுங்க முதலாளி!"

"நம்ம பொண்ணை... ரஞ்சித்துக்குக் கேட்டு வந்திருக்காங்களா?"

"ஆமா முதலாளி!"

"சம்மதிச்சிட்டியா?"

"அது..." - தயக்கமாய் மனைவியை ஏறிட்டார் ராகவன். அவளது முகத்தில் இன்னும் கலக்கம் குடி கொண்டிருக்க... பிரியங்கா சகுந்தலாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"அம்மா! நீங்க இன்னும் என்னை நம்பலையா?"

"இல்லை... அப்படியெல்லாம்..."

"உங்க பயம் நியாயமானது அம்மா. ஆனா நீங்க நினைக்கிற மாதிரி அண்ணன் மோசமானவனில்லை. ரொம்ப நல்லவன். நடந்த சம்பவத்துக்கும் அண்ணனுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

"எல்லாம் நானே செய்த பாவம்தான். அண்ணன் எப்பவுமே நியாயத்திற்குக் கட்டுப்பட்டவன்.

"நான் செய்த பாவத்திற்கு அவன்தான் பரிகாரம் செய்திட்டு இருக்கான். திலோ அப்பாவை எப்படியாவது குணமாக்கிடணும்னு முயற்சி பண்றான்."

"என்ன?"

"ஆமாம்மா. அப்பாவுக்கு விஷ்ணுவுக்கு ட்ரீட்மெண்ட் பண்ணினது எல்லாம் இவரோட ஏற்பாடுதான்!"

திலோ சொல்ல... சகுந்தலா ரஞ்சித்குமாரை ஏறிட்டாள்.

அமைதியாய்க் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றவனைப் பார்க்கையில் மனம் கனிந்தது.

"அம்மா! அண்ணன் மனசில திலோ இருக்கான்னு எனக்குத் தெரியும். எனக்காக அண்ணன் கல்யாணமே செய்துக்கலை. நான் வாழப்போற கொஞ்ச நாள்ல என் அண்ணனைத் திருமணக் கோலத்தில பார்க்கணும்னு ஆசைப்படுறேன்.

"திலோவை எங்க வீட்டுல வாழ வைக்கணும்னு ஆசைப்படுறேன்.



அதுக்காக உங்ககிட்ட பிச்சை கேட்டு வந்திருக்கேன்.

"அதுக்காக உங்ககிட்ட திலோவைக் கொடுப்பீங்களா? எங்க அண்ணனுக்குத் திலோவைக் கொடுப்பீங்களா?

"என்னை நீங்க மன்னித்தது உண்மை என்றால் என்னோட கடைசி ஆசையையும் நிறைவேற்றுவீர்களா? திலோ! என் அண்ணனை ஏற்றுக் கொள்வாயா?" - என்ற பிரியங்காவின் தலையை வருடினாள் திலோத்தமா.

"அம்மா! ஏம்மா மௌனமா இருக்கீங்க? ஏதாவது பேசுங்கம்மா..."

"நானா? நான் என்ன சொல்றது? அப்பா எது சொன்னாலும் எனக்குச் சம்மதம்தான். என்னங்க! நீங்க என்ன சொல்றீங்க?"

"திலோம்மா! உனக்கு இதுல... விருப்பம் தானேம்மா..."

"உங்க விருப்பம்தாம்ப்பா முக்கியம்!" - என்றாள் தலை குனிந்தவாறே.

"பிறகென்ன? பெண்ணே தன்னோட விருப்பத்தைச் சொல்லிடுச்சே... ராகவா! இன்னும் என்ன யோசனை? பையன்கிட்ட எதுவும் பேசினியா? கேட்கணுமா?"

"இல்லை. இப்பத்தான் பேசிட்டு இருக்கோம்."

"எதுக்கும் தயங்காதே. பையன் தங்கமான பையன். கண்ணை மூடிட்டுப் பெண்ணைக் கொடுக்கலாம். தைரியமாக் கொடு!" - ஜெயபாலின் வார்த்தையில் ராகவன் நிம்மதியடைந்தார்.

மனதை அழுத்திய குழப்பம் மறையத் துவங்கியது.

"தேங்க் யூ ஸார்!" - என்றான் ரஞ்சித்குமார்.

"இதுல என்னப்பா இருக்கு? சின்ன வயசில இருந்தே உன்னைப் பார்க்கிறேன். உன்னைப் பத்திச் சொல்றதுல எனக்குப் பெருமைதான். அப்படியே உன்கிட்டயும் ஒண்ணு சொல்லணும்."

"சொல்லுங்க ஸார்!"

"ராகவனோட பொண்ணு ரொம்ப அருமையான பொண்ணுப்பா. அற்புதமான பொண்ணு. அதுக்கேத்த மாப்பிள்ளை நீதான். சந்தோஷமா வாழுங்க. கல்யாணத் துக்குச் சொல்லி அனுப்பு."

"கண்டிப்பா ஸார்!"

"சரி! நான் வரட்டுமா? ராகவா! நான் கிளம்புறேன்."

"சரிங்க முதலாளி..." - அனைவரிடமும் விடைபெற்று இருவரும் வெளியேறிவிட...

ரஞ்சித்குமார் திலோத்தமாவைப் பார்த்தான்.

பிரியங்காவிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்த அவளது முகம் உயிரோவியமாய் ஜொலித்தது.

அந்த முகத்தை விட்டுப் பார்வையை விலக்க முடியாமல் தவித்தான்.

என்ன பெண் இவள்! பிரியா செய்தவற்றை எத்தனை சுலபமாய் மறந்து விட்டாள்... இந்த மனம் யாருக்கு வரும்?



ஜெயபால் ஸார் சொன்னது போல் இவள் ஒரு அற்புதமான பெண்தான்.

பார்த்த நாள் முதலாய் இந்த முகத்தை மட்டும் தானே கண்கள் பார்க்க விரும்புகிறது. மனக் கூட்டிற்குள் அழுத்தமாய் வந்து உட்கார்ந்து கொண்டாளே...

எனக்கு ஏற்பட்ட நேசம் இவளுக்குள்ளும் இருக் கின்றதா?

இல்லை, பிரியாவின் மீது உள்ள பரிதாபத்தால் என்னை ஏற்றுக் கொண்டாளா?

உமா வாயால் சொன்ன உண்மைகளை இவளே சொன்னால் நிறைவாய் இருக்குமே... கேட்டு விடலாமா?

"அண்ணா! என்னாச்சு உனக்கு?" - தங்கை தொட்ட பிறகே விழித்தான்.

"என்ன ஸார் கனவா? நான் வந்ததுகூடத் தெரியாமல் திலோவை வைத்த கண் எடுக்காமல் பார்த்திட்டு இருக்கீங்க!" - உமாவின் கலகலப்பான குரலில் புன்னகைத்தான்.

திலோத்தமா பிரியங்காவுடன் உள்ளே சென்று மறைய...

உமாவிடம் திரும்பினான்.

"உமா! உங்களுக்கு நூறு வயசு."

"என்ன ஸார் இது? நான் அவ்வளவு வருஷம் இருந்து கஷ்டப்படணுமா?"

"நல்லவங்க... எப்பவும் கஷ்டப்பட மாட்டாங்க."

"ஓ... தேங்க் யூ. ஆமா என்ன திடீர்னு எனக்கு இவ்வளவு ஐஸ்."

"இப்பத்தான் உங்களை நினைச்சேன். உடனே வந்து நிற்கிறீங்களே!"

"என்ன? என்னை நினைச்சீங்களா? சார்! சத்தமா சொல்லாதீங்க. திலோ கோவிச்சுக்கப் போறா..." - என்றாள் உமா ரகசியமாய்.

"நான் கோவிச்சுக்க மாட்டேம்ப்பா. நான் தப்பிச் சிட்டேன்னு நினைச்சு சந்தோஷப்படுவேன்!" - என்றவாறே கேலியான புன்னகையோடு கையில் காபி ட்ரேயோடு வந்தாள் திலோத்தமா.

"அடிப்பாவி! இதுக்கு என்ன அர்த்தம்?"

"அது புரிய வேண்டியவங்களுக்குப் புரியும்."

"அப்போ... என் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா?" - ரஞ்சித்குமார் கேட்க உதட்டைச் சுழித்தாள்.

"சேச்சே! நான் அப்படிச் சொல்லலையே... உமாவுக்கு ஓ.கே.ன்னா உங்களை அவளுக்குக் கொடுக்கிறதுல எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை."

"திலோ! வேண்டாம்டி. என்னை இக்கட்டுல மாட்டி விட்டுடாதே. நான் கிளம்புறேன்."

"இருங்க உமா! எனக்கு ஒரு உண்மை தெரிஞ் சாகணும்."

"என்ன உண்மை ஸார்?"



"அன்னிக்கு நீங்க சொன்னதெல்லாம் பொய்யோன்னு தோணுது எனக்கு..."

"எது?"

"அதான் அன்னிக்கு ரோட்ல வெச்சுப் பார்த்தோமே... நீங்ககூட..." என ரஞ்சித் ஆரம்பிக்க...

பதட்டமாய்த் தடுத்தாள் திலோத்தமா.

"அ... அது... அதெல்லாம் எதுக்கு இப்போ?"

"அது உண்மையா இருந்தா என்னை யாருக்கோ தூக்கிக் கொடுக்க எப்படி மனசு வரும்? அப்போ அது பொய்தானே?"

"இல்லை... அப்படியெல்லாம் இல்லை."

"அப்போ உண்மையைச் சொல்லு."

"என்ன சொல்லணும்?"

"இங்கே நிறையப் பேர் இருக்காங்க. வா, தனியா போய்ப் பேசலாம்."

"நோ... நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக் கிறேன்..." - என்றான் விஷ்ணு.

"விஷ்ணு!"

"ஒரு சின்னப் பையனை வெச்சிக்கிட்டு என்ன இது விளையாட்டு? திலோ! நீ உள்ளே போ. எதுவா இருந்தாலும் கல்யாணத்துக்கு அப்புறம்தான் பேசணும். ம்... கிளம்புங்க.

"பெரியவங்க பேசிக் கல்யாண நாளைக் குறிக்கட்டும். அதுவரை மூச்!"

விஷ்ணு கண்களை உருட்டி மிரட்ட... திலோ வாயை மூடிக் கொண்டாள்.

"விஷ்ணு! எனக்கு யார் எல்லாம் வில்லனா வருவாங்கன்னு நினைச்சேனோ அவங்க எல்லாரும் ஒதுங்கிட்டாங்க.

கடைசியில நீ ஒரு பொடிப்பய. எனக்கு வில்லனா வருவேன்னு நினைக்கலையே... வாட் எ ஷேம்!" - முகத்தை அஷ்ட கோணலாய் வைத்துக் கொண்டே ரஞ்சித் சொல்ல... பெரியவர்களும் சேர்ந்து சிரித்தனர்.

"அண்ணா! இதைப் பாரேன்..." - உள் அறையில் இருந்து பிரியங்கா குரல் கொடுக்க...

உள்ளே சென்றவனின் விழிகள் விரிந்தன. பிரமித்துப் போனான்.

பெரிய அட்டையில் பிரியங்காவின் உருவம் வரையப் பட்டிருந்தது.

கண்கள், மூக்கு, நெற்றி என வெகு துல்லியமாய் வரைந்திருந்த ஓவியத்தை நடுங்கும் விரல்களால் வருடினாள் பிரியங்கா.

"திலோ! நீயா வரைஞ்ச?"

"ஆமா பிரியங்கா! இன்னும் கொஞ்சம் கலர் பண்ணனும். இதை வரைஞ்சதும் உனக்குக் கொண்டு வந்து கொடுக்கணும்னு இருந்தேன். நீயே வந்திட்டே!"



"தேங்க் யூ திலோ! அப்படியே என்னை மாதிரியே இருக்கு. இதை எப்படி வரைஞ்சே திலோ? என் போட்டோ எதுவும் இருக்குதா உன்கிட்ட?"

"ம்ஹூம். மனசுல பதிந்த உருவத்தைத் தூரிகையில கொண்டு வருவது ரொம்ப சுலபம் பிரியங்கா!" - புன்னகையோடு சொல்லிக் கொண்டே ரஞ்சித்குமாரைப் பார்த்தாள்.

அது சற்றுச் சிறிய அறை. வீட்டுப் பொருட்கள் நிறைந்திருக்க... மூவர் மட்டுமே நிற்கும் அளவிற்குச் சிறிய அறை.

பிரியங்கா ஓவியத்தின் அழகில் மூழ்கியிருக்க...

ரஞ்சித்குமார் மெல்ல நகர்ந்து திலோத்தமாவின் தோளை உரசிக் கொண்டு நின்றான்.

பதறி விலக முயன்றவளை அவனது கரங்கள் பற்றி நிறுத்தின.

அவளுக்கு மட்டும் கேட்கும் தொனியில் குரலைக் குறைத்துக் கொண்டான்.

"ஏன் திலோ! என்னை யெல்லாம் இப்படி வரைய மாட்டியா?"

"ஓ! வரைவேனே..."

"எப்போ?"

"எப்பவோ வரைஞ்சு வெச்சிட்டேன்."

"எங்கே?" - ஆவலாய் அவனது விழிகள் தேட....

சிணுங்கலாய்ச் சிரித்தாள்.

"அது இங்கே தேடினா கிடைக்காது."

"வேற எங்கே இருக்கு?"

"என் மனசுக்குள்ள... பத்திரமா இருக்கு. வேற யாருக்கும் காட்ட மாட்டேன்..." - என்றாள் ரகசியமாய்.

பொன்னாய் ஜொலித்த அவளது பட்டு முகத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான் ரஞ்சித்குமார்.

அவனது உயிரோவியம் வெட்கப் புன்னகை சிந்தியது.